231

T.N.L.C Debates

Official Report

1986

Vol: 222 NO: 1, 2

D
V211,32'N86
N86.222.1-2
143545

231
925/86

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 26, 1986-தொகுதி 222 எண் 1.
Wednesday, 26th March 1986-Volume 222 No. 1.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. G.orge, Madras–600 009.

விலை ரூ. 2.75]

பொருளடக்கம்.


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் i—vi

சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் vii

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட) பட்டியல். ix—xii

1. வினாக்கள்—விடைகள். 1—23

2. 1986–87–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. 23—92

3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். 92—93


143545

143545

D
V211,32'N86
N86.222.1-2

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்.

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், தொல்பொருள் இயல், ஆயத்துறை, மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, பொது நிர்வாகம், வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. வி. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், பொது, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மாவட்டத் துணை ஆட்சி யாளர்கள் மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக் கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி நெசவாலைகள் மற்றும் மதுவிலக்கு.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டுவசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. தா. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம், (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித்துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU
## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA

*Members of the Council of Ministers*

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption, Archaeology, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance in charge of Finance, General Administration, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control. Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMY, Minister for Labour, in charge of Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru RM. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Public, District Revenue Officers, Planning, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

6. The Hon. Thiru K. RAJARAM, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM, Minister for Municipal Administration, in chage of Municipal Adminstration, Panchayat Unions Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.

10. The Hon. Thiru C. PONNAIYAN, Minister for Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Cdits, Deputy Collectors and Molasses.

11. The Hon. Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSWAMY, Minister for Transport, incharge of Transport Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms Textiles and Prohibition.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. The Hon. Thiru T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. The Hon. Thiru N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The Hon. Thiru T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. The Hon. Thiru A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.

23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

**தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்.**

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ஜி. சுவாமிநாதன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திருமதி வி. ஜெயலட்சுமி.
3. திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்.
4. திரு. அ. மயில்சாமி.

மேலவைச் செயலாளர்.

திரு பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்.

திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.

திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

**திரு. பி. கே. சந்திரசேகரன்.**

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன். | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 10. கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 12. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்). | நியமனம் |
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். — தொகுதி.

19. சுப்பிரமணியம், திரு. எம். பி. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
20. சுப்பு, திரு. க. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
21. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்). — தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள்.
22. தாரா செரியன், திருமதி. — நியமனம்
23. தாஸ், திரு. ஏ. ஜே. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
24. பழனிவேல் ராஜன், திரு. பி. டி. — தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள்
25. பாலாஜி, திரு. நெல்லை. — நியமனம்
26. மதுசூதனன், திரு. இ. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
27. மயில்சாமி, திரு. அ. — சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர்கள்
28. மாசிலாமணி, திரு. மு. — நியமனம்
29. மாணிக்கம், திரு. ப. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
30. மீனாட்சிசுந்தரம், திரு. க. — தஞ்சாவூர். திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆசிரியர்கள்
31. முத்துலிங்கம், கவிஞர். — நியமனம்
32. முனுசாமி, திரு. பி. — நியமனம்
33. யூசுப், திரு. யா. சை. மு. (பொதுப் பணித் துறை அமைச்சர்). — மாநிலச் சட்டமன்றப் பேரவை
34. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. — வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள்
35. லீலாவதி, செல்வி ஆ. — சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள்
36. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
37. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்). — மாநிலச் சட்டமன்றப் பேரவை
38. ஜெயச்சந்திரன், திரு. எல். — தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள்



தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். — தொகுதி.

39. ஜெயலட்சுமி, திருமதி வி. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
40. ஜேப்பியார், திரு. — மாநிலச் சட்டமன்றப் பேரவை
41. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). — சென்னை மாவட்டப் பட்டதாரிகள்
42. வெற்றிடம் — மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள்
43. வெற்றிடம். — தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
44. வெற்றிடம் — தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
45. வெற்றிடம் — சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
46. வெற்றிடம் — சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
47. வெற்றிடம் — இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
48. வெற்றிடம் — இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
49. வெற்றிடம் — செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50. வெற்றிடம் — சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51. வெற்றிடம் — கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52. வெற்றிடம் — கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53. வெற்றிடம் — மதுரை உள்ளாட்சிமன்றத் தொகுதி
54. வெற்றிடம் — மதுரை உள்ளாட்சிமன்றத் தொகுதி
55. வெற்றிடம் — திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். தொகுதி.

| | |
|---|---|
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சிமன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சிமன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1986 மார்ச் 26.

(பங்குனி 12, குரோதன—திருவள்ளுவராண்டு-2017)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முதல் இரண்டு வினாக்கள் ஒரே விஷயம் பற்றியதாக இருப்பதால், சேர்த்தே எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம்.

* 111. **வினா—திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பண்ருட்டியில், கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கென, அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

* 112 **வினா—திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பண்ருட்டி கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படும் கிளை நிலையங்களில், உறை விந்து முறையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அம்முறை எப்பொழுது முதல் அறிமுகப்படுத்தப் படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** இரண்டு கேள்விகளுக்கும் பதில்—இல்லை.

**திரு. அ. ப. சிவராமன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டியில் லட்சக்கணக்கான கால்நடைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலே 'இல்லை' என்று சொல்லிவிட்டாரே, ஏன் கேட்கிறீர்கள்?

**திரு. அ. ப. சிவராமன்:** கால்நடைகளின் மேம்பாட்டிற்காக சரியான கட்டிடம் வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கின்றது. இப்போது இருக்கின்ற கட்டிடம் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த கட்டிடமாக இருக்கின்றது. இதற்கென்று தனியாகக் கட்டிடம் கட்ட அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, படிப்படியாக இதுபோன்ற நிறுவனங்களுக்கு என்று சொந்தக் கட்டிடம் கட்டுவது என்பதுதான் அரசினுடைய முடிவு. அந்த வகையிலே அடுத்த கட்டத்தில் அந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

**திரு. அ. ப. சிவராமன்:** தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியில் ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் உறை விந்து எடுத்து அனுப்புகிறார்கள். சில நேரங்களில் அதிகமான எண்ணிக்கையில் பசுக்கள் வருகின்றன. அப்போது அங்கு உறை விந்து இல்லாத காரணத்தினாலேயே, அவைகளைத் திருப்பி அனுப்பவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. 'கன்டெயினர்' மூலம் அந்த உறை விந்து வழங்கப்படுகின்றது. அது ஒரு மாதத்திற்கு இருந்தாலும், பராமரிக்கப்பட்டு பொலிப் பசுக்களுக்குப் போட முடியும் என்பதைக் கருத்திலே கொண்டு, அதுபோன்ற நிலைமைகளுக்கு ஏற்ப நிலைமைகளை உருவாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபடி, இன்றைக்கு அரசு பரவலாக எல்லா இடங்களிலும் 'லிக்குவிட் செமன், பிரி பிரோசன் செமன்' கொடுக்கும் முறைகள் இருக்கின்றன. இன்றைக்கு முதல் கட்டமாக தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விழுப்புரம், திண்டிவனம் தாலுக்காக்கள் ஆகிய மூன்று தாலுக்காக்களில் 84 இடங்களில் இந்த 'பிரி-புரோசன் செமன்'



முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. படிப்படியாகச் செய்யும்போது, தென் ஆற்காடு மாவட்டத்தில் பண்ருட்டிக்கும் முன்னுரிமை தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த 'புரோசன் செமன்', உறை விந்து பொதுவாக சரியாகச் செயல்படவில்லை என்று சொல்கின்றார்கள். அதுவும் குறிப்பாக அந்த கன்டெயினரில் இருக்கும் காஸ்-ல் ஒரு குறிப்பிட்ட டிகிரிக்கு, -5 டிகிரியும் அதற்கும் கீழே வைத்திருப்பார்கள். அதை சரியான முறையில் பயன்படுத்தாததால், ஸ்டோர் பண்ணாததால், அந்த உறை விந்துத் திட்டமானது முழு அளவில் நிறைவேறவில்லை என்று தெரிகிறது. அது உண்மையா? அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது குறை இருந்தால், கவனிக்கப்படும்.

## *Cement Allotment.*

*113. Q.—Thiru K. SUBBU: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the allotment of the imported cement from South Korea was made only against the original plans submitted by the applicants in accordance with the Government Order; and

(*b*) if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) மற்றும் (ஆ) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் சான்றிடப்பட்ட நகலோ அல்லது புகைப்பட நகலோ பெறப்பட்ட பின்பே இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் நுகர்வோருக்கு வழங்கப்பட்டது. பலர் தங்களது உண்மை வரைபடத்தை வங்கிகளிடம் ஈடாக வைத்து கடன் பெற்றிருப்பதாலும் மற்றும் பலர் மின்சாரம், குடிநீர் இணைப்புகளுக்காக சம்பந்தப்பட்ட துறைகளிடம் உண்மை வரைபடத்தை அவர்கள் வேண்டும்போது சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், பலர் கட்டுமான வேலையின்போது பார்வையிட வரும் அரசு அலுவலர்களிடம் காண்பிப்பதற்காக உண்மை வரைபடத்தை அவர்கள் வசமே வைத்துக் கொள்ள

வேண்டியுள்ளதாலும், உண்மை வரைபடத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படவில்லை.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, முதலிலே வட கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட போது 'ஒரிஜினல் பிளான்' வைத்துக்கொண்டு தான் சிமெண்ட் கொடுக்கப்பட்டது. இரண்டாவது முறை தென் கொரியா விலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் வழங்கியபோது, அந்த முறை கேடுகள் விளைந்ததாகத் தெரிகிறது. அப்போது ஒரிஜனல் வரைபடம் இல்லையென்றால், போட்டோ ஸ்டாட் வரைபடம் காபி இருந்தாலும் வழங்கப் பட்டிருக்கின்றது. முதலிலே 2 ஆயிரம் வரைபடங்கள் வந்து, கடைசியிலே அது 10 ஆயிரம் என்ற அளவுக்கு அதிகமாகியது. அப்போதுதான் அந்த சிமெண்ட்டை வழங்கும்போது, முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இதில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கும வழங்கப்பட்டிருக்கின்றது. அதுபற்றி வந்த புகாரின் பேரில் புலன் விசாரணை நடைபெற்று அந்த அறிக்கை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த அறிக்கை பற்றி தகவல் தரப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட அறிக்கை தற்போது என்னிடத்தில் எதுவுமில்லை.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அறிக்கை இல்லாவிட்டால் பரவா யில்லை. போட்டோஸ்டாட் காப்பியை வைத்துக் கொடுப்பதில் ஊழல் இருப் பதாகப் புகார் வந்திருக்கிறதா? அதுபற்றி அரசுக்குத் தகவல் வந்திருக் கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட புகார்கள் என்னி டத்தில் இதுவரை வரவில்லை. வந்தால் கவனிக்கப்படும்.

### தமிழ் நாட்டிற்கு அதிக சிமெண்ட்.

* 114. வினா—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாட்டிற்கு அதிக சிமெண்ட் ஒதுக்கக் கோரி, மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா?



(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) மைய அரசு தற்பொழுது காலாண்டு ஒன்றுக்கு 1,62,700 மெ. டன்கள் லெவி சிமெண்ட் ஒதுக்கீடு செய்கிறது. இவ்வரசு, மைய அரசை காலாண்டு ஒன்றுக்கு 2,52,000 மெ. டன்கள் வீதம் சிமெண்ட் ஒதுக்கீடு செய்யு மாறு வலியுறுத்தி முறையீடு செய்தது. ஆனால் மைய அரசு தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் சிமெண்ட் அளவை உயர்த்த சாத்தியக் கூறு இல்லை என தெரிவித்துள்ளது.

திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே, சிமெண்ட் உற்பத்தியாளர் களை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய அரசு புதிய சிமென்ட் லெவி கொள் முதல் கொள்கையை அறிவித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, லெவி சிமென்ட் தருவதற்கு சில கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்திருக்கிறது. 18—2—1982 அன்று மத்திய அரசு சிமெண்ட் கட்டுப்பாட்டை தளர்த்தி இருக்கிறது. ஆதலால் சிமெண்ட் உற்பத்தியில் 66.6 சதவிகிதம் சிமென்ட் விநியோகத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### போதிய கட்டிடங்கள் இல்லாத பள்ளிகள்.

* 115 வினா—திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங் களிலுள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில், போதிய வகுப் பறைகள், கட்டிடங்கள் இல்லாதவைகள் எத்தனை?

(இ) அக்குறையைப் போக்க, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாவட்டவாரியாகப் போதிய கட்டிடங்கள் இல்லாத அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளின் எண் ணிக்கை வருமாறு :

தஞ்சாவூர் மாவட்டம் :

உயர்நிலைப் பள்ளிகள்—82.

மேல்நிலைப் பள்ளிகள்—14.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் :**

பள்ளிகள்—58.

**புதுக்கோட்டை மாவட்டம் :**

உயர்நிலைப் பள்ளிகள்—37.

மேல்நிலைப் பள்ளிகள்—7.

தமிழகத்தில் பல அரசினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் நிரந்தரக் கட்டிடம் இல்லாமல் கொட்டகைகளிலும், கூரைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இக்குறையைப் போக்க ஒவ்வோராண்டும் போதிய வகுப்பறை மற்றும் கட்டடங்கள் இல்லாத பள்ளிகளின் பட்டியல் பெறப்பட்டு, அரசு ஒதுக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமைப்படுத்தி பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1985-86-ல் இதற்கென அரசு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, தஞ்சை, திருச்சி புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மட்டுமல்லாமல், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு கட்டிட வசதிகள், வகுப்பறைகள் இல்லை. இதற்கான தேவையை அரசு கணக்கிட்டு. 100 கோடி ரூபாய் முதல் 120 கோடி ரூபாய்வரை இதற்குத் தேவைப்படுகிறது என்று மதிப்பீடு செய்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு இதற்காக ஒதுக்கியுள்ளது ஒரு கோடி ரூபாய்தான். எனவே இதில் பெரிய இடைவெளி இருக்கிறதே. மீதி உள்ள பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு ஏதாவது மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, புதிய கல்விக் கொள்கையை நாம் அமுல்படுத்த வேண்டுமென்று பேசி வருகிற நேரத்தில், இந்தப் பிரச்சினையையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிதி ஆதாரங்களைப் பொறுத்தும் அவர்கள் விரிவாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முடிவுகளைப் பொறுத்து, அதற்கேற்ப நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது இதற்கு முன்னாலே இல்லாத நிலைமையாகும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவரவர்களே, தமிழக அரசு பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் தேவையிருந்தாலும், உடனடியாக அதைச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. மாவட்



டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சில நிதிகள் இருக்கின்றன. அந்த நிதியிலிருந்து குறைந்தது 10 பள்ளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கட்டிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையாக இல்லாவிட்டாலும், அவர்களுக்குப் பரிந்துரையாவது செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, பல்வேறு திட்டங்கள் இப்போது அமுல் நடத்தப்படுகின்றன. வேலை உத்திரவாதத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும்போது, அவற்றின்கீழ் பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட முடியுமா என்று ஆலோசித்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. க. அருணாசலம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதையொட்டி பள்ளிகளுக்கு புதுக் கட்டிடங்கள் கட்டுவது பற்றி யோசிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 கோடி ரூபாய் செலவழித்து மாதிரிப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறது. அப்படி இல்லாமல், அந்தப் பணத்தை மத்திய அரசு நமக்குக் கொடுத்தால், அதில் புதிய கட்டிடங்களைக் கட்டி, வசதிகளை ஏற்படுத்த முடியும். அந்த வகையில் அரசு முயற்சி எடுக்குமா, மத்திய அரசை இதில் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாதிரிப் பள்ளிக்கூடம் என்று சொல்லி அதற்காக 1 கோடி அல்லது 2 கோடி ரூபாயை செலவு செய்வதை விட, கிராமங்களில் இருக்கிற பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம் கட்ட நிதி உதவி செய்வதுதான் நல்லது என்பது நம்முடைய கருத்து.

**திரு. அ. மயில்சாமி:** பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்களைக் கட்ட மற்றும் பழுது பார்க்க 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது என்று தான் எல்லோரும் சொல்கிறார்கள். இதற்காக வேண்டி எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் வாங்குகிற முயற்சி இருந்ததே, அது தற்போது எந்நிலையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எல்.ஐ.சி.யிடமிருந்தும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும் கடன் பெற முயற்சி செய்து வருகின்றோம். ஆனால் முன்னுரிமைப் பட்டியலில் கல்வி இடம் பெறவில்லை. அதைச் செய்யக்கூடிய அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. கல்விக்காகச் செய்கின்ற முதலீடு ஒரு சிறந்த முதலீடு என்கிற அடிப்படையில், மாநில அரசு

களுக்கு இவர்கள் கடன் தரலாம் என்று வழிவகை செய்தால்தான், நாம் கடன் பெற முடியும். இதற்கு முன்பு மத்திய நிதியமைச்சரிடமும், பிரதமரிடமும் இன்னும் வேறு பொறுப்புள்ள அமைச்சர்களிடமும் இது பற்றி தெரிவித்துள்ளோம். ஆனாலும் இதுவரை அவர்கள் எந்த முடிவையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** ஊராட்சி மன்றங்களிலுள்ள பள்ளிகளுக்கும் கட்டிடம் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் போன்றவைகளுக்குப் பணம் தேவைப்படுமே, அதுவும் இந்த நிதி ஒதுக்கத்தில்தான் வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஊராட்சி மன்றப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், முதலமைச்சருடைய தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு இடத்திலும் ஒன்று அல்லது இரண்டு வீதம் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு தொடக்கப் பள்ளிகளுக்கு தமிழ் நாட்டில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள பிரச்சினை தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவது பற்றியது ஆகும். அதற்காகத்தான் இப்போது சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தான் இப்போது ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தன்னுடைய சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து 14 லட்சம் ரூபாயை எடுத்து 14 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கின்ற ஒரு நல்ல முயற்சியை எடுத்திருக்கிறார். அதுபோல் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தினால், ஓராண்டு காலத்திற்குள் தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 200 பள்ளிக்கூடங்களுக்கு மேல் நல்ல முறையில் கட்டிடங்கள் கட்டுகின்ற நிலை வருமல்லவா ை இன்னொன்று. தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்திற்கு வருகின்ற லாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை இதற்காக ஒதுக்கினால்கூட, ஏராளமான கட்டிடங்கள் கட்டலாம் அல்லவா? ஆகவே இதுகுறித்தும் பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளாக அந்த நிறுவனம் 3 லட்சம் ரூபாயை இதற்காகச் செலவு செய்துகொண்டிருக்கிறது. அவர்களாகவே தந்துகொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் பல பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. வடாற்காடு



மாவட்ட ஆட்சித் தலைவர் செய்கின்ற முயற்சி வரவேற்கத்தக்கது. வேறு ரோடு போடுவது போன்ற திட்டங்களுக்குச் செலவு செய்வதைவிட பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவது போன்ற திட்டங்களுக்குச் செலவு செய்வது நல்ல பலனைத் தரத்தான் செய்யும். ஆகவே பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுகின்ற முயற்சியைப் பொறுத்தவரையில், வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரைப்போல, மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் முயற்சி எடுக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைநகரங்களில் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து வருகிற லாபத்தில் இரண்டு சதவிகிதத்தை கல்விப் பணிக்காக என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்த இரண்டு சதவிகிதத் தொகையை இதுபோல் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட ஒதுக்க வேண்டுமென்று கூட்டுறவுத் துறையை அறிவுறுத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நல்ல யோசனை. கூட்டுறவு இயக்கத்திலேயே இருப்பவர்கள் இதுபற்றி ஆலோசனை செய்து ஒரு நல்ல முடிவை எடுக்கலாம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** ரோடு போடுதல் இன்னும் பல்வேறு திட்டங்களுக்காக பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பணத்திலிருந்து பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம் கட்டுவது அவற்றை விட சிறந்த பணி என்று அமைச்சர் அவர்கள் சொல்வதால், சாலைகளுக்காக ஒதுக்கிய பணத்திலிருந்து பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம் கட்ட செலவிட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, வேலை உத்தரவாதத் திட்டத்தின் கீழ் இதுபோன்ற அதாவது ரோடு போடுவதற்கான பணத்தை ஒதுக்கவில்லை. வேலை உத்தரவாதம் கொடுப்பதற்கு என்றால், கட்டிடங்கள் கட்டுவதன் மூலம் அதைத் தரலாம். அதற்கு இது பாவாயில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 மார்ச் 26

*Engineering College at Taramani.*

*116. Q.—Thiru L. JAYACHANDRAN (on behalf of Selvi A Leelavathi): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government, to start an Engineeriug College in Madras City, in the Central Polytechnic Campus, Taramani; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) சென்னையிலோ அதன் சுற்றுப்புறத்திலோ தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் சார்ந்த அரசு பொறியியற் கல்லூரி இல்லாமையால், சென்னை மையப் பல்தொழில் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் அரசுப் பொறியியற் கல்லூரி ஒன்றை நிறுவலாமா என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனினும் இதுபற்றிய இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சென்னையில் கட்ட விருக்கும் பொறியியற் கல்லூரியானது, மத்திய அரசின் பார்ட்-2 ஸ்கீமின்கீழ் கட்டப்படுவதாகவும், அதற்காக மத்திய அரசு 15 லட்ச ரூபாய் நமக்குக் கொடுத்திருப்பதாகவும் அறிகிறேன். அந்தக் கல்லூரியை தென்னாற்காடு போன்ற இன்ஜினியரிங் கல்லூரி இல்லாத மாவட்டத்திற்கு மாற்றிக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இதுபோன்ற கல்லூரியை வேறு இடத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்ற யோசனை இல்லை. இதற்கு முன்பு, கிண்டி இன்ஜினியரிங் கல்லூரி அரசிடம் இருந்தது. அண்ணா பல்கலைக் கழகத்திற்கு அது மாறிய பிறகு, இன்றைக்கு மாணவர்கள் தேர்வுகள் எல்லாம் மாநில அளவில் நடக்கின்றன. ஆனால் அரசின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படுகிற மாணவர்கள், சென்னை மாணவர்கள், கோவைக்கு, திருச்சிக்கு, சேலத்திற்கு அல்லது மதுரைக்கு ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். இங்கே அவர்களுக்கு இடம் இருந்தால், இந்தப் பகுதி மாணவர்களுக்கு வசதியாக இருக்கும் என்ற அளவில், இது யோசனையாக இருக்கிறது. அதுதான் பரிசீலனையில் உள்ளது. இருந்தாலும் வேறு பல இடங்களிலும் பல கல்லூரிகள் வந்திருப்பதால், அந்த சிரமங்கள் குறைந்திருக்கின்றன.



1986 மார்ச் 26]

*Students Agitation.*

* 117. Q.—Thiru K. SUBBU (on behalf of Selvi A. Leelavathi): Will tre Hon. the M.nister for Education be pleased to state:

(*a*) whether the students of Central Polytechnic have launched an agitation, for their admission into the Second Year of the B.E. Course; and

(*b*) if so, the action taken thercon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம். இரு ஆண்டுகளுக்கு முன் ஒரு போராட்டம் நடந்தது.

(இ) மாணவர்களின் அக்கோரிக்கையானது தமிழ் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களாலும் பரிசீலிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டுவிட்டது.

*Autonomous Schools System.*

* 118. Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru S. J. Sadiq Pasha) and Thiru K. SUBBU (on behalf of Selvi A. Leelavathi): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the State Planning Commission has recommended Autonomous Schools System in Tamil Nadu; and

(*b*) if so, the steps taken by the Government thereon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு மாநிலத்திற்கு திட்டக் குழுவின் உட்குழு ஒன்று இதுபற்றிய யோசனையைச் சொல்லியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அது இன்னும் என்னுடைய கைக்கு வரவில்லை. அதில் 25 பள்ளிகளுக்கு பரீட்சார்த்தமாக இந்த முறையை வைக்கலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, திட்டக் குழு யோசனை சொல்லியிருந்தாலும், கல்வித் துறையின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, படிப்பு சம்பந்தமான சுயாட்சித் தன்மையை ஒவ்வொரு கல்வி நிறுவனத்திற்கும் தருவது நல்லது என்று கருதுகிறோம். குறிப்பாக மேலை நாடுகளில்

தொடக்கப் பள்ளிகளில் இந்த உரிமையைத் தந்திருக்கிறார்கள். நாம் இங்கே எல்லாப் பள்ளிகளிலும் ஒரேவிதமான பாடத் திட்டங்கள், பாடப் புத்தகங்கள், வைத்து ஒரே நிலையில் பரிட்சையை தமிழ் நாடு முழுவதும் நடத்துகிறோம். இதிலே ஆசிரியர்களுடைய பங்கு என்னவென்று பார்த்தால், அவர்கள் கையில் இருக்கிற பாடத் திட்டத்தை வைத்து மாணவர்களுக்குச் சொல்லித் தருகிற நிலைதான் உள்ளது. அவர்களே யோசித்து, சிந்தித்து, வட்டாரத் தேவைகளை அனுசரித்து, ஒரு மாறுபட்ட நல்ல கல்வியைத் தரக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை. அது இருக்க வேண்டுமானால் இந்த சுயாட்சித் தன்மை இருக்க வேண்டும்.

**திரு. அ. மயில்சாமி:** தலைவர் அவர்களே, தன்னாட்சி உரிமை ஒருசில கல்லூரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரிகள் பெரும்பாலும் தனியார் கல்லூரிகளாகவே இருக்கின்றன. அரசுக் கல்லூரிகள் இல்லை. ஆகவே அரசுக் கல்லூரிகளுக்கு இந்த சுயாட்சித் தன்மையைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது கொடுப்பதாக இல்லை. கொடுக்கிறபோது அந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, சுயாட்சி தருகிற கல்லூரிகளிலும் அதிகமான மாற்றங்கள் இல்லாமல் அதே நிலைதான் இருக்கிறது. பள்ளிகளில் கல்வியில் மாற்றம் ஏற்படுவதற்கும் இந்த சுயாட்சித் தன்மையில் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பல்வேறு யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

### காய்கறி சாகுபடி செய்வோர் கூட்டுறவு சங்கங்கள்.

*119 வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காய்கறி சாகுபடி செய்வோர் கூட்டுறவு சங்கங்களை, தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?



**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) காய்கறி பயிரிடுவோருக்கு அவர்களுடைய காய்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான காய்கள் கிடைக்கவும், தமிழ்நாட்டில் 30-6-1985 வரை, 516 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச்சங்கங்களில் 33,617 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 25,419 பேர் அதாவது 76 சதவிகிதம், சிறு, மற்றும் மிகச் சிறு, உழவர்கள் ஆவர். இச்சங்கங்கள் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, 37,357 மதியச் சத்துணவு மையங்களுக்கு காய்கறி வழங்கியுள்ளன. 31-3-1985 உடன் முடிந்த நிதியாண்டில், மொத்தம் ரூ. 404.70 லட்சம் மதிப்புள்ள காய்கறிகளை இச்சங்கங்கள் விற்பனை செய்துள்ளன. இச்சங்கங்கள் நியமிக்கப்பட்ட குழுக்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சிறு உழவர்களான உறுப்பினர்கள், காய்கறி பயிரிடத் தேவையான, இடு பொருட்கள் வாங்கவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மானிய உதவி வழங்கப்படுகிறது. தமிழகத்தில் காய்கறி பயிரிடுவோருக்கு நன்மை தரும் வகையில், இச்சங்கங்கள் நாளடைவில் வளர்ந்து வலுப்பெற்று செயல்படும்.

(முற்பகல் 10-20)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, காய்கறி சாகுபடி செய்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த எந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன? எந்த எந்த மாவட்டங்களில் அமைக்கப்படவில்லை? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள புள்ளி விவரத்தின்படி, இச் சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஊக்குவிக்கும் அளவிற்கு இப்படிப்பட்ட விற்பனைச் சங்கங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும், அதனால் பொதுமக்களும் காய்கறி பயிரிடுவோரும் பயனடைவதற்கும் உகந்த வகையில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தின் அத்தனை மாவட்டங்களிலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் உறுப்பினர்களை அதிகம் சேர்ப்பதற்கும், மேலும் இவற்றை இலாபகரமாக நடத்துவதற்கும் அதன் மூலம் பயிரிடும் விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைச் செய்வதற்கும் தேவையான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 மார்ச் 26

**திருமதி வி. ஜெயலட்சுமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் காய்கறி சாகுபடி செய்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இரு மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் எங்கள் காமராஜர் மாவட்டத்தைப் பற்றிக் கேட்க ஆசைப்படுகிறேன். அங்கே இந்தச் சங்கங்கள் எந்த எந்த மையங்களில் செயல்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். கொள் முதலை எந்த மிஷினரியைக் கொண்டு செய்கிறார்கள், அவற்றை எவ்வாறு விநியோகம் செய்து வருகிறார்கள், அவற்றிற்குள்ள நியாயமான விலைகளை அவ்வப்போது பட்டியல் போட்டு காண்பிக்கிறார்களா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஏறத்தாழ மூன்று சங்கங்கள் வீதமாக இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நடைமுறையிலே தற்சமயம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலமாக இவை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த மிஷினரி மூலம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். காய்கறிகள் வாங்குவதில் ஒருசில தகராறுகள் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்சமயம் இவற்றின் மூலம் சத்துணவுக் கூடங்களுக்கு மட்டும் காய்கறிகளை வழங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், மிகச் சிறிய அளவுக்கே இவற்றின் மூலம் விநியோகம் செய்ய முடிகிறது என்பதைத் தெவித்துக்கொள்கிறேன். இவற்றின் மூலம் பயிர் செய்யப்பட்ட காய்கறிகளை பெரிய மார்க்கெட்டுகளில் அதிக அளவுக்கு விற்கக்கூடிய நிலைமைகள் வந்தால்தான், இலாபம் வரும். காமராஜர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டோமானால், சீனி விளக்காய், வெண்டைக்காய், கொஞ்சம் தக்காளி பயிராகும். அவ்வளவுதான். எனவே தேவையான காய்கறிகளை வாங்கவேண்டுமானால், பெரிய மார்க்கெட்டுக்குச் சென்றால்தான், வாங்க முடியும். உற்பத்தியாகக்கூடிய இடத்திலே குறைந்த விலைக்கு எல்லாவற்றையும் வாங்கக்கூடிய வசதி தற்சமயம் இல்லை. உற்பத்தியாளர் மத்தியில் ஓரளவுக்குத்தான் வாங்க முடிகிறது. மீதியை வெளி மார்க்கெட்டில்தான் வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் நன்கு பரிசோதித்து முடிவு எடுக்க அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சங்கங்களின் மூலம் பெரிய மார்க்கெட்டுக்கு வரக்கூடிய அளவுக்கு காய்கறிகளைப் பயிரிடும் நிலை வந்தால்தான், குறைந்த விலைக்கு பொருள்களைப் பெற முடியும். இந்தச் சங்கங்கள் தற்போது புதிதாக ஏற்பட்டிருப்பதால், நடைமுறைச் சிக்கல்கள் வருகின்றன. அவற்றைச் சரிபார்த்து இவை சிறப்பாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 மார்ச் 26]

(முற்பகல் 10-25.)

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, காய்கறி சாகுபடி செய்வோர் கூட்டுறவு சங்கங்கள் என்று சட்டப்படி இருந்தாலும் கூட, நடைமுறையில் சத்துணவு மையத்தில் உள்ள சிலர் சங்கம் என்று வைத்துக் கொண்டு, சத்துணவு மையங்களுக்கு தனியாரிடத்திலே காய்கறி வாங்கிக் கூடுதலான விலைக்கு சப்ளை செய்வதாக புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால் அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை அரசாங்கம் செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே சொல்லும்போது, அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் சொன்னேன். அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அதை மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் சத்துணவு மையங்களுக்கு மட்டும் வழங்கிக் கொண்டிருக்கிறோமென்று சொன்னால், வெளிமார்க்கெட்டிலேயும் இந்தக் காய்கறிகளை விற்க புதிய ஒரு சங்கம் வரும் நேரத்தில்தான், தவறுகள் குறையுமென்ற நோக்கத்தோடு அதற்கு மாற்று வழிகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு அதைச் சிறப்பாகச் செய்வோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆர். கோலப்பா:** தலைவரவர்களே, சென்னையில் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதன் மூலமாக காய்கறிகளை விற்பனை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற சங்கங்கள் மூலமாக, கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அந்த நுகர்வோர் சங்கங்கள் மூலமாக இன்றைக்கு நாங்கள் காய்கறிகளை விற்றுக்கொண்டிருக்கிறோம். உறுப்பினர் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறையில் செய்ய முடியுமென்று சொன்னால், அதைப் பார்த்து ஆராய்ந்து செய்யலாம்.

**திரு. அ. ப. சிவராமன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சாகுபடி செய்வோர் கூட்டுறவுச் சங்கம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்தக் கூட்டுறவு அமைப்புகள் மூலம்தான் சத்துணவுக் கூடங்களுக்கு காய்கறி சப்ளை செய்யப்படுகிறது. சத்துணவுக் கூடங்களுக்கு காரட், பீட்ரூட், கோஸ் போன்றவைகள் தவிர அறவே

[1986 மார்ச் 26

சம்பந்தமில்லாத காய்கறிகளைத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தான் சத்துணவுக் கூடங்களிலும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் சாகுபடி செய்வோர் கூட்டுறவு சங்கம் என்று வைத்துக் கொண்டு, வெளி மார்க்கெட்டிலே அவர்கள் காய்கறிகளை வாங்கி அதிக விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் சத்துணவுக் கூடங் களில் பணியாற்றுகிற பணியாளர்கள் துயரத்திற்குள்ளாகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? இதை மாற்றியமைக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தக் காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும், நுகர்வோர்களுக்கு தரமான காய்கறிகளாக, அன்றைக்கே பறித்த காய்கறிகளாகக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடும்தான் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் நடை- முறையில் இந்தக் காய்கறி அதிகமாக உற்பத்தியாகாத காரணத்தாலும், மிகக் குறைந்த அளவுக்கே காய்கறி உற்பத்தியாவதாலும் சிக்கல் ஏற்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, காரட் போன்றவைகள் எல்லாம் நம்முடைய பகுதியிலே உற்பத்தியாகாத காரணத்தாலே, அவைகளை வெளி மார்க்கெட்டிலே இருந்து வாங்கித்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. கூட் டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கொடுக்கும்போது, சத்துணவுக் கூடங்களுக்கு சரியாக அந்தக் காய்கறிகளைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்து கொண்டிருக்கிறோம். நடைமுறையில் தவறு இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அதை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவரவர்களே, இன்றைக்கு சென்னையிலே சத்துணவுக் கூடங்களிலே போடுகின்ற காய்கறிகளிலே பூச்சி, புழுக்கள் இருப்பதாகக் ‘கம்ப்ளெய்ன்ட்’ வருகிறது. சென்னையிலே இன்றைக்கு கூட்டுறவு காய்கறி சங்கங்கள் இல்லையென்று சொல்கிறார்கள். சென்னையில் காய்கறிகளை விநியோகிக்க கூட்டுறவு காய்கறி சங்கம் அமைக்கப்படுமா ? அதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சென்னையில் சத்துணவுக் கூடங்களுக்கெல்லாம், இங்கு இருக்கிற மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலமாகக் காய்கறிகளை வாங்கிக் கொண்டிருக்கிறோம். புழு, பூச்சி இருப்பதாகச் சொன்னார்கள். புழு,



1986 மார்ச் 26]

பூச்சி இல்லாத அளவுக்கு நாங்கள் பார்த்துக்கொள்வோம். அப்படி இருப்ப தாகத் தகவல் இல்லை. அப்படி இருந்தால், அந்தப் புழுப் பூச்சிகளைக் களைவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, இது நல்ல நோக்கத்தோடு தொடங்கப் பட்டிருந்தாலும், சாகுபடியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் இல்லை, நுகர்வோர்களுக்குத் தரமான பொருள் கிடைக்கவும் இல்லை. இது கூட்டுறவு என்ற அடிப்படையிலே தொடங்கப்பட்டு, கமிஷன் வாங்கும் அடிப்படையிலே முடிந்திருக்கிறது. அப்படிச் சில இடங்களிலே, குறிப்பாக இராஜபாளையம், ஆண்டிப்பட்டி போன்ற இடங்களில் சாகுபடி செய்யக்கூடியவர்கள் மார்க் கெட்டிலே இருக்கக்கூடிய காய்கறிகளை, மோசமான காய்கறிகளைக் குறைந்த விலையில் வாங்கி, சத்துணவுக் கூடங்களுக்கு அதிக விலைக்குக் கொடுத்திருக் கிறார்கள். அவர்களும் வெளியிலே வாங்க முடியாமல் போகிறது. அப்படிப் பட்ட இடங்களிலாவது அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை கலைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஒரு கொள்கை அடிப்படையில் ஒரு சங்கத்தை ஆரம்பிக்கும் நேரத்தில், எப்படியாவது குறைகளை நிவர்த்தி செய்து சரி செய்வதற்குரிய முயற்சிகளை இன்றைக்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதுபோல, இது சாகுபடியாளர் கூட்டுறவு சங்கம்தான். அவர்கள் மொத்தமாக இங்கே வந்து காய்கறிகளைக் கொடுப்ப தற்கும், அவைகளை அங்கே வாங்கிவைத்து திருப்பி விற்பதற்கும் தேவையான பைனான்ஸ் பொசிஸன் தகராறு இருக்கிறது. அதையெல்லாம் நடை முறையில் கொஞ்சம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக உறுப்பி னர்கள் சொல்லியதுபோல, அந்தச் சங்கங்களைக் கலைக்காமல், அவர்கள் எல்லாம் பாராட்டும் அளவுக்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட கூடங்கள் சென்னையில் இருந்தால் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். புரசவாக்கம், வெள்ளாளத் தெருவில் இருக்கின்ற டி.யூ.சி.எஸ்.-ல் காய்கறி விற்பனைக் கூடத்திலிருந்து மாநகராட்சிப் பள்ளிக்கு விற்ற காய்கறிகளை வைத்து சாம்பார் வைத்ததில், அதை குழந்தைகள் எல்லாம் கறிக் குழம்பு என்று

கருதிச் சாப்பிட்டு, கடைசியில் கத்தரிக்காயில் இருந்த புழுக்கள்தான் அப்படி இருந்தன என்று ஒரு தகவல் இருக்கிறது. அது குறித்து அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30.)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, காய்கறிகளில் அவ்வளவு பெரிய புழு இருப்பதாகத் தகவல் இல்லை. அப்படி ஏதேனும் தவறு இருந்தால், அதைப்பற்றி உறுப்பினர் சுட்டிக் காட்டினால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இனி அப்படி இல்லாத அளவுக்கு அரசு பார்த்துக் கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி:** தலைவர் அவர்களே, இரண்டு மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவு காய்கறி சாகுபடி சங்கங்கள் செயல்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்தில்தான் காய்கறி உற்பத்தி அதிகம். அங்கே உள்ள சாகுபடியாளர்கள் தங்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை என்று நினைத்து, அங்கே கூட்டுறவுச் சங்கங்கள் தேவையில்லை என்று கருதுகிறார்களா? அங்கேயும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த அரசு ஏதாவது முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே உள்ள மார்க்கெட்டிங் சொசைடி மிகவும் வலிவுடன் இருப்பதால், அதன் மூலம் காய்கறி உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இருப்பினும் அங்கே உள்ள விவசாயிகள் நடைமுறையில் அதை விரும்பினால், மற்றும் பொதுமக்களிடத்தில் அதற்கு ஆதரவு இருந்தால் அரசு அதைப்பற்றி ஆலோசிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு சாகுபடி சங்கங்கள் விநியோகம் செய்கிற காய்கறிகள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால், வெளி மார்க்கெட்டில் காய்கறி வாங்குவதில் சிக்கல் இருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். இந்த நிலையில் மார்க்கெட்டில் எந்தக் காய்கறி இடைக்கவில்லையோ அதையெல்லாம் மார்க்கெட்டில் வாங்குவதைவிட தோட்டப் பயிர் செய்கிற இடங்களிலிருந்து அல்லது தோட்டப் பயிர் செய்யும் நிலங்களை •வைத்திருப்போரிடமிருந்து முன்கூட்டியே ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு வாங்கினால், சகாயமாக இருக்கும் அல்லவா? அவர்களுக்குக் கடன் உதவி வழங்கி அதன் மூலமாகக் காய்கறிகளைக்



குறைவான விலைக்குப் பெறலாம் அல்லவா? எனவே இந்த வகையில் முயற்சியை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியுள்ள கருத்தை ஏற்று, நடைமுறையில் சிக்கல் இல்லாதவாறு எவ்வளவு சாதகமாக இருக்கும் என்று பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. மாசிலாமணி:** தலைவர் அவர்களே, காய்கறி சாகுபடி செய்வோர் கூட்டுறவு சங்கம் மூலமாக சத்துள்ள காய்கறிகளைத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதிலும் கீரை வகைகளை —அதாவது முருங்கைக் கீரை, பசலைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை போன்றவற்றையும் சேர்த்து மாணவர்களுக்குத் தந்தால், முதலமைச்சர் சத்துணவு சாப்பிடும் மாணவர்களின் கண் பார்வை, கை கால் முடங்கலின்றி நன்றாக இருக்கும் என்று வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்படுவதால், அவற்றையும் சேர்த்து அளிப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இப்போதே சத்துணவுக் கூடங்களில் மாணவர்களுக்குக் கீரையும் சேர்த்துத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** காய்கறிகள் பற்றிய இந்த வினாவில் 12 உறுப்பினர்கள் துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள். எல்லோருமே சைவ உணவாளர்கள் என்று நினைக்கிறேன் (சிரிப்பு).

### வீடு கட்ட கடன்.

* 120 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வீடு கட்டுவதற்காக வழங்கப்படும் கடன் தொகையின் உச்ச வரம்பை, நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் ரூ. 30,000-லிருந்து, ரூ. 50,000 என உயர்த்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதனை ரூ. 75,000 ஆக உயர்த்தும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** (அ) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் தனது உறுப்பினர்களுக்கு வீடு கட்டுவதற்கும் மனை வாங்கி அதில் வீடு கட்டவும், கட்டிய வீடு/அடுக்கு வீடு வாங்கவும், அதிகபட்சமாக ரூ. 40,000 வரை கடன் வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** இப்போது சாதாரணமாக வீடு கட்ட வேண்டுமென்றால், ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 75,000 வரையாவது கொடுப்பதற்கு அரசு கூட்டுறவுச் சங்கங்களை அனுமதிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** ஏற்கெனவே இந்தத் தொகையை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற கருத்துரு அரசாங்கத்தின் யோசனையில் இருந்து வருகிறது. ஆனால் இதில் பிரச்சினை என்னவென்றால், நாமே ரூ. 75,000 அல்லது ரூ. 60,000 என்று நிர்ணயித்துக் கொடுத்துவிட்டால், அந்த வங்கிகளில் கடன் கேட்கிறவர்கள் எல்லோரும் ரூ. 60,000 கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்து விடுவார்கள். இப்போது ரூ. 40,000 என்று வைத்திருக்கிறோம். வங்கிகளுக்குப் பண வசதி இருந்தால், ரூ. 50,000 அல்லது ரூ. 60,000 கொடுக்கலாம். அதுபற்றி அரசுக்குக் கருத்துரு அனுப்பினால், அரசு ஏற்றுப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** அண்மையில் வந்த மத்திய அரசின் பட்ஜெட்டில் புதிதாக வீடு கட்டுகிறவர்களுக்கு வருமான வரிச் சலுகையிலிருந்து விலக்கு கொடுக்க முடியாது என்று அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே அப்படிப்பட்ட வரி விலக்கு அவர்களுக்கு இருந்து வந்தது. இப்போது சாதாரண கடைநிலை ஊழியர்கள்கூட வருமான வரி கட்டுகிற அளவுக்குச் சம்பளம் பெறுகிறார்கள். அந்த அளவுக்கு அவர்களின் ஊதியம் உயர்ந்திருக்கிற நிலையில், மாநில அரசு மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு ஏற்கெனவே இருந்த வரி விலக்கை மீண்டும் அமுல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இதைக் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். எனவே தனியாகக் கேள்வி கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



கூறிய கருத்தின் அடிப்படையில் வரி இல்லாமல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி அவர்கள்தான் முடிவு செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-35)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** முன்பு மைய சர்க்கார் வீடு கட்டுவதற்காக ஒருவர் வாங்கிய கடனைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அதற்கேற்ப வருமான வரியைக் குறைத்தது. இப்போது அறிவித்துள்ள திட்டத்தின்படி, இந்த வீடு கட்டும் கடனை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது என்று அறிவித்துள்ளார்கள். இதனால் சாதாரண கடைநிலை ஊழியர்கள்கூட வருமான வரி செலுத்த வேண்டிய அளவிற்கு வந்துவிட்டார்கள். ஆகவே கூட்டுறவுத் துறையின் மூலமாக வீடு கட்ட கடன் வாங்கிய தொழிலாளர்களுக்கெல்லாம் வரி கட்டுவதிலிருந்து சலுகை அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** வீடு கட்டுவதற்காக வழங்கப்படும் கடனை கூட்டுறவுத் துறையின் கடன் என்று சொல்ல முடியாது. இது அர்பன் வங்கி கொடுக்கும் கடன். வீடு கட்டிக்கொள்வதற்காக தொழிலாளர்களுக்குக் கடன் கொடுக்கிறோம். அதிலே எவ்வளவு தூரம் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப்போல செய்ய முடியும் என்பது தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் அதற்கு முயற்சி எடுக்கும்.

**திரு. அ. ப. சிவராமன்:** கூட்டுறவு வங்கிகளில் வீட்டை அடமானம் வைத்துக் கடன் வாங்கும்போது, அதற்கு நகரங்களில் 1.25 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. அதுவும் கூட்டு வட்டியாக வசூலிக்கப்படுகிறது. இதை ஒரு சதவீதமாகக் குறைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இந்த வட்டியை அதிகப்படுத்தும் யோசனைதான் அரசாங்கத்தினிடத்திலே இருக்கிறது, வட்டியைக் குறைக்கும் யோசனை அரசாங்கத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** இந்த வங்கிகளின் மூலம் வீடு கட்டுவதற்காக வழங்கும் 40 ஆயிரம் ரூபாய், சென்னையைப் பொறுத்தவரையில், போதவில்லை என்று இந்த வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்கள் சொல்லு

இறார்கள். இந்த 40 ஆயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியவில்லை, அவர்கள் சிரமத்திலே இருக்கிறார்கள், ஆகவே பாதியிலேயே நிறுத்திவிட்டிருக்கிறார்கள். ஆகவே அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போலவே தங்களுக்கும் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சென்னை நகரத்திலே உள்ள ஊழியர்களுக்கு இதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** நகர்ப்புற அர்பன் வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுப்பது பற்றியது மூலக் கேள்வி. உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதில் தற்போது என்னிடமில்லை. நகரங்களிலே உள்ள அர்பன் வங்கிகளின் மூலமாக வீடு கட்டுவதற்காக வழங்கும் கடனை தாராளமாகக் கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இருக்கிறது. அதற்கு வேண்டிய முடிவை அரசாங்கம் விரைவிலே எடுக்கும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வீடு கட்ட கடனாக 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் வீடு கட்டுவதற்காக வழங்கப்படும் கடன் தொகையை அண்மையில் 60 ஆயிரம் ரூபாயிலிருந்து 70 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். தமிழகத்திலேயுள்ள மற்ற வீடு கட்டும் சங்கங்கள் எல்லாம் 60 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தியிருக்கும்போது தமிழக அரசின் ஒரு பகுதியான நகர கூட்டுறவு வங்கியில் 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 80 ஆயிரம் ரூபாய் அல்லது 75 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உயர்த்தலாம் அல்லவா? அது போன்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** நகர்ப்புற வீடு கட்ட கடன் வழங்கும் சங்கம் வேறு, அர்பன் வங்கிகள் வேறு. அர்பன் வங்கியில் வீடு கட்டுவதற்கு மட்டுமல்லாமல், எல்லாவற்றுக்கும் கடன் கொடுக்கிறார்கள். ஆகவே கூட்டுறவு வங்கிகளில் அவரவர்களுக்குள்ள நிதி நிலைமையைப் பொறுத்து, 40 ஆயிரம், 60 ஆயிரம், 70 ஆயிரம் கொடுக்கும் அளவிற்கு வசதியிருக்குமானால், அப்படிக் கொடுக்கும் அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

**திரு. அ. ப. சிவராமன் :** இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியவர்களுடைய பதவியையே தகுதியாகக் கொண்டு அவர்களுக்கும் கடன் வழங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பதவியை மட்டும் தகுதியாக வைத்துக்கொள்ளமாட்டோம். ரீபேமென்ட்டை தகுதியாக வைத்துக் கொண்டு, நிச்சயமாக கடன் கேட்டால், கொடுப்போம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் —தொடர்ச்சி.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையிலே வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள்தான் பொதுவாக நிதிநிலை அறிக்கையிலே வருமென்று கூறுவார்கள். ஆனால் ஆளுநர் உரை பஞ்சாயத்துத் தேர்தலையும், நகராட்சித் தேர்தலையும் மனதிலே கொண்டு தயாரிக்கப்பட்டது போல, பல்வேறு திட்டங்கள் அதிலே தெரிவிக்கப்பட்டிருந்தன. மிகப் பெரிய பாதிப்பு அந்தத் தேர்தலில் ஏற்பட்ட பிறகு வெளி வந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை மிகப் பெரிய ஏமாற்றத்தைத் தருகிறது

(முற்பகல் 10-40)

என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுவதற்கு இடையிலே நடந்த ஒரு மிகப் பெரிய தேர்தல் ஜனநாயகத்தினுடைய ஆணிவேராக இருக்கின்ற, நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல். அப்படிப்பட்ட தேர்தல்கள் பல ஆண்டுக் காலமாக நடைபெறாமல் இருந்து, பல வற்புறுத்தல்களுக்குப் பிறகு, கோரிக்கைகளுக்குப் பிறகு அந்தத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. அதன் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. அதற்குப் பின்னர்தான் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கின்றது. இந்த பட்ஜெட் உரையிலே அப்படிப்பட்ட மிகப் பெரிய தேர்தலை நடத்தியதற்காக, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கலாம். ஜனநாயகத்தின் ஆணிவேராக இருக்கக்கூடிய ஒரு பெரிய தேர்தலை நடத்தியிருக்கின்றார்கள். அந்தத் தேர்தல் நடைபெறுமா என்ற அளவிலே இருந்து, நாம் எதிர்பாராத அளவுக்கு

தேர்தல்கள் நடந்து, முடிவுகள் வெளியான நிலைமையில் நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அவர்களுக்கு நான் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல்களிலே யார் வெற்றி பெற்றார்கள், யார் வெற்றி பெறவில்லை என்ற அடிப்படையிலே அல்ல. ஜனநாயக முறையில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முடிவெடுத்து தேர்தல் நடத்தியதற்கு பட்ஜெட் உரையிலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவில்லை என்றாலும், நான் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கவர்னர் உரை. அந்த உரை தேர்தல்களுக்கு முன்னாலே இங்கே நிகழ்த்தப்பட்டது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆத்திரத்தோடு சில கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தத் தேர்தல் முடிவுகளை வைத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, கடுமையான விமரிசனங்களைச் செய்தார்கள். அரசினுடைய அணுகுமுறை சரியாக இல்லை. அரசினுடைய திட்டங்கள் மக்களை ஏமாற்றுகின்ற திட்டங்களாக இருக்கின்றன. இதன் காரணமாகத்தான் மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்ற உண்மையை மறந்துவிட்டு எங்களுடைய தலைவரைப்பற்றிக் கேவலமாகப் பேசுகின்றார்கள். ஆத்திரம் ஊட்டுவதற்காக அவருடைய பெயரை, தனியாகப் பெயரைச் சொல்லி அழைத்தார்கள். நான் சொன்னபோதுகூட, மனதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும், 'மாண்புமிகு' என்று எண்ணத்திலே வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்கள். நாங்களும் அதுபோன்ற பாணியிலே போகமாட்டோம். நாங்களும் இந்த அவையில் அமர்ந்திருக்கும் தலைவர் அவர்கள் தலைமையிலே பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றதற்கு மிகுந்த பெருமையோடு இருக்கின்றோம். நாங்களும் முதலமைச்சர் அவர்கள் பெயரை மட்டும் சொல்லிப் பேச எங்களுடைய தலைவர் அவர்கள் எங்களை அனுப்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். மக்கள் எதற்காக வாக்களிக்க வில்லை? தேர்தலை எப்படி சந்தித்தோம்? பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்னாலே எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் என்ன? அதே பாணியிலே தான் செயல்பட்டிருக்கின்றார்கள். பத்திரிகைகளிலேகூட பார்த்தோம். இது மக்களைச் சந்திக்கின்ற தேர்தல், பொதுத் தேர்தலைவிட மிகப் பெரிய தேர்தல், அரசியல் ரீதியாக நடைபெறுகின்ற தேர்தல் என்றெல்லாம் சொல்லப் பட்டது. அரசியல் காரணங்களைக் காட்டி மீதி மூன்று தேர்தல்களில் வெற்றி பெற்றோம் என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதே





பாணியைத் தான் பின்பற்றியிருக்கின்றார்கள். அதே இரட்டை இலைச் சின்னம்தான். அதே உதய சூரியன் சின்னம்தான். மக்கள், கீழ்த்தளத்திலே இருக்கின்ற மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றார்கள். அந்த உணர்வு களுக்குப் பின்னாலே இப்படி தேர்தல் முடிவுகள் வந்திருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்தத் தேர்தல் நல்ல தேர்தல். அரசினுடைய அணுகு முறை சரியில்லை என்பதை உணர்த்துகின்ற ஒரு தேர்தல். இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கின்றன. சிறந்த முறையில் ஆண்டு மீண்டும் பெறுகின்ற வாய்ப்பைப் பெறலாம். மக்கள் மத்தியிலே பேசி மீண்டும் வெற்றி பெறலாம். ஜனநாயகத்தில் நாங்கள் தான் வெற்றிபெறுவோம் என்று சொல்லமாட்டோம். அல்லது நீங்கள் வெற்றிபெற முடியாது என்று சொல்லமாட்டோம். அந்த அடிப்படையில் அல்ல. ஆக இந்த நிலைமைகளை உணர்ந்து, இதையே சாதனமாக வைத்துக்கொண்டு, இந்த அணுகுமுறையை வைத்துக்கொண்டு செயலாற்றவேண்டுமே தவிர, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பெயரைச் சொல்லி அழைப்பதால், அவரை அப்படிப் பேசுவதாலே சிறுமைப்படுத்தி விடலாம் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கக்கூடாது, உறுப்பினர் களுக்கும் இருக்கக்கூடாது என்பதை எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

பட்ஜெட்டிலே சொல்லியிருக்கின்றார்கள். கவர்னர் உரையிலே சொல்லி யிருக்கின்றார்கள். ஒரு 27 பக்கங்களைப் படித்து கவர்னர் அவர்கள் உரை யாற்றியிருக்கின்றார்கள். அந்த கவர்னர் அவர்கள் உரையிலே கொட்டை எழுத்திலே இருக்கின்றது அந்தச் செய்தி. கவர்னர் அவர்கள் உரை 27 பக்கம் இருந்தாலும்கூட, அதிலே ஒரு பாராவிலே கொட்டை எழுத்திலே செய்தி வந்திருக்கின்றது. பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்னாலே என்கின்ற அடிப்படையிலே, வாக்காளர்களுடைய வோட்டுக்களை பெறவேண்டுமென்ற அடிப்படையிலே, எப்படியாவது பெறவேண்டும் என்ற அடிப்படையிலே, அந்த உரையை வாசித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் வாசித் திருக்கின்றார்களே தவிர, நாட்டு மக்களுடைய நலனைக் கருதி கவர்னர் உரை ஆற்றப்படவில்லை. நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே கவர்னர் உரை அமைய வேண்டுமே தவிர, ஏமாற்றி வோட்டுக்களைப் பெற வேண்டுமென்கின்ற அடிப்படையிலே கவர்னர் அவர்கள்

(முற்பகல் 10-45)

உரை இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் உரையிலே, 23 ஆம் பக்கத்திலே கொட்டை எழுத்திலே வந்திருப்பது வீட்டு வசதித் திட்டம் பற்றியதாகும். அதிலே சொல்லுகிறார்கள், "மக்கள் நல்ல முறையில் வாழ வேண்டுமாயின் வீட்டு வசதி இன்றியமையாததாகும். இந்த

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 மார்ச் 26

அடிப்படை வசதி, ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உறுதியாகக் கருதுகிறது. வீடில்லாதோருக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் பெரியதொரு திட்டமொன்றை அடுத்த நிதி ஆண்டில் செயற்படுத்த அரசு கருதுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். போதிய வீட்டு வசதியின்றி அல்லலுறும் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக் குறவர் ஆகியோருக்காக ஐந்து இலட்சம் வீடுகள் கட்டப்படும். அதேபோன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங் களுக்கும் ஐந்து இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இந் நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்ற பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டி முடித்து விட வேண்டுமென்பதுதான் இத் திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்"—இது கொட்டை எழுத்தில் வந்திருக்கிறது. மற்றவை சாதாரண எழுத்துக்கள்தான். மூன்று ஆண்டுகளில், 30 லட்சம் மக்களுக்கு, வருடம் 10 இலட்சம் வீடு என்ற முறையில் உறுதியாகக் கட்டித் தருவோம் என்று ஒரு திட்டத்தை அரசு சொல்லியிருக்கிறது. இது சாத்தியமான திட்டமா, மக்களுக்கு அவ்வாறு கட்டிக் கொடுக்க முடியுமா, அதற்குப் போதிய நிதி இருக்கிறதா என்றெல்லாம் யோசிக்காமல், பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித் தேர்தல்களை மனதிலே வைத்துக்கொண்டு இது போன்று விளம்பரங்களைச் செய்து, மக்களிடம் ஓட்டு வாங்கலாம் என்று நினைத்து, ஒரு திட்டத்தைச் சொல்லிவிட்டு, இன்றைக்கு, அந்தத் தேர்தல்களில் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்த பிறகு, நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் போது, வேதனையாக இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆண்டுக்குப் பத்து இலட்சம் வீடுகள் என்ற அடிப்படையில் பார்த்தால், இந்த 26 கோடி ரூபாயில் 10 இலட்சம் வீடுகளுக்கு பள்ளம் வெட்டலாம், அஸ்திவாரம்போட பள்ளம் வெட்டலாம். அதுதான் செய்ய முடியும். முழுவதுமாகக் கட்ட வேண்டுமென்றால், 5,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். இங்கே ஒரு வினா கேட்கும்போது, 40,000 ரூபாய் வீடு கட்டக் கடன் கொடுப்பது போதாது என்று சொல்லுகிறார்கள்.

**திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, அரசாங்கம் செய்கிற காரியங்களை 'கிரிட்டிசைஸ்' பண்ணுவது என்பது எங்கும் இருக்கிறது. ஆனால் 'மக்களை ஏமாற்றுவதற்கு' என்று சொல்லுவது நீக்கப் படக்கூடிய வார்த்தையா• என்று அறிய விரும்புகிறேன். சொன்னார்கள், செய்யவில்லை என்று பேசுவதுதான் முறை என்று கருதுகிறேன்.

The Government is not there to cheat the people. No govern-



1986 மார்ச் 26] திரு. எஸ். இராகவானந்தம்]

அதனால் அந்த வார்த்தைகளை 'எக்ஸ்பஞ்ச்' பண்ண வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா ஆர். கணேசன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** ஆளுநர் உரையில் தெளிவாக குறிப்பைக் கொடுத்துவிட்டு, அதைப்பற்றி எதுவும் நிதிநிலை அறிக்கையில் சொல்லவில்லை. பத்து இலட்சம் வீடுகள் கட்டுவது என்ற அடிப்படையில் பல்வேறு நிறுவனங்களை இழுத்திருக்கிறார்கள். எல்.ஐ.சி. இதற்கு உதவ முன்வர வேண்டும், வீட்டு வசதி வாரியம் போன்ற மத்திய, மாநில நிறுவனங்கள் எல்லாம் சேர்ந்து உதவ வேண்டும் என்று சொல்லி, அரசாங்கம் 26 கோடி ரூபாய் அளிக்கிறதென்ற கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். ஆளுநர் அவர்கள் உரையிலே இந்தத் திட்டம், தெளிவாக, கொட்டை எழுத்திலே இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'ஏமாற்றுவது' என்று சொல்லுவது 'அன்பார்லிமென்டரி' வார்த்தை என்று சொல்ல நான் தயாராக இல்லை. ஆனால் அப்படிச் சொல்கிறபோது, மற்றவர்களுடைய மனது புண்படாமல் சொல்லலாம். நேற்றைய தினம் இப்படி ஒரு பிரச்சினை வந்தபோதுகூடச் சொன்னேன். கருத்துக்கள் சொல்வதிலே எந்தவிதத் தப்புமில்லை. ஆனால் சொல்லும்போது, கடுமையான வார்த்தைகளைப் பயன் படுத்தும்போது, உறுப்பினர்களின் மனது புண்படுவதாக இருக்கிறது. நேற்றைய தினம் ஆளுங் கட்சி உறுப்பினர் ஒருவர் எதிர்க் கட்சி உறுப்பினரைத் தாக்கிப் பேசும்போது, அந்தக் கருத்தைச் சொன்னேன். அந்த அடிப்படையிலே சொல்கிறேன். அவையின் கண்ணியத்திற்கு உகந்த வார்த்தையாக இல்லாமல் இருந்தால், அதைப் பிரயோகிக்காமல் இருந்தால் நல்லது.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** துணைத் தலைவரவர்களே, தங்களுக்கு நன்றி.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, 'ஏமாற்றுவது' என்ற வாசகம் இந்த அவையிலே பல முறை பேசப்பட்டு, ரிக்கார்ட் செய்யப் பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சந்தர்ப்பத்தைப் பொறுத்து இருக்கிறது. அந்த வார்த்தை 'அன்பார்லிமென்டரி' வார்த்தையல்ல வார்த்தையை உபயோகிக்கலாம். அது அந்த வார்த்தையை உபயோகிக்குப்

சந்தர்ப்பத்தைப் பொறுத்து இருக்கிறது. உறுப்பினர்களின் மனதைப் புண்படுத்துவதாக அல்லது கண்ணியக் குறைவாக இருந்தால், அதை உபயோகப்படுத்தாமல் இருந்தால் நல்லது.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** துணைத் தலைவரவர்களே, ஒரு அரசு ஏமாற்றுகிறது என்று சொல்லுவதே, இந்த அவையிலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களை இவ்வளவு தூரம் புண்படுத்துகிறது என்றால், எங்கள் தலைவரை, அவர் இங்கே உறுப்பினராக இருக்கும்போது, வெறும் பெயரைச் சொல்லி, அதோடு மட்டுமல்லாமல் இப்படிக் கூறுகிறீர்களே, இது நடைமுறைக்கு ஒத்ததா, கண்ணியத்திற்கு ஒத்ததா என்று கேட்டபோது, "சொல்லும்போது தவறில்லை, மனதிலே 'மாண்புமிகு' என்று எண்ணிக் கொள்ளுங்கள்" என்று சொன்னபோது, எங்கள் மனது எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. எஸ். ஆர். இராதா :** இதைப்பற்றி பதில் சொல்வதற்காக இடையிலே குறுக்கிட வேண்டாமென்று இருந்தேன். அன்றைக்கு இதுபற்றிப் பேசும் போது, மற்றவர்கள் வருத்தப்பட்டபோது, நானும் வருத்தப்பட்டேன். மாண்புமிகு கலைஞர் என்று சொல்வதில் நான் கூச்சப்படவில்லை. 'மாண்புமிகு' என்பதை அவர் என்றைக்கும் இழக்கவில்லை. நான் அன்றைக்குப் பேசியது நடவடிக்கைக் குறிப்பிலே கூட தெளிவாக 'மாண்புமிகு கலைஞர்' என்று இருக்கிறது. இவ்வளவு நடந்த பிறகும் அதுகுறித்து இன்றைக்கும் உறுப்பினர் வருத்தப்படுகிறேன் என்று சொல்வது சரியில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு முன்னாலே எனக்குத் தெரிந்த தலைவர் என்ற முறையிலே அவரிடம் எனக்கு என்றைக்கும் தனிப்பட்ட முறையில் மதிப்பு உண்டு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் தயவுசெய்து வருத்தத்தை மாற்றிக்கொண்டு, கொஞ்சம் நல்லமுறையில் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அந்த அடிப்படையிலே மிகப் பெரிய திட்டமாக 10 லட்சம் பேருக்கு வீடு கட்டித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பத்து லட்சம் பேருக்கு வீடு கட்டித் தருவோம் என்று சொல்லிவிட்டு இதற்காக வெறும் 26 கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஓட்டு பெறுவதற்காக, மக்களுடைய கவனத்தை திசை திருப்புவதற்காக இப்படியெல்லாம் சொல்லக்கூடாது.





**திரு. க. சுப்பு :** பட்ஜெட் அலொக்கேஷனை வைத்துத்தான் பணிகளைச் செய்கிறார்கள் அல்லது கட்டிடம் கட்டுகிறார்கள் என்பதல்ல. பட்ஜெட்டில் ஒதுக்கியிருப்பது இவ்வளவுதான். ஆனால் அதற்கு மேல் நிதி நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் பல்வேறு வகையில் வருகின்ற நிதியிலிருந்தும் வீடுகளைக் கட்டக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிச் செய்கின்ற முறை ஏமாற்றுதல் முறை அல்ல.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல நிதி குறிப்புகள் பட்ஜெட்டில் இல்லை. உறுதியாக "நாங்கள் ஆண்டுதோறும் 10 லட்சம் வீடுகள் கட்டித் தருவோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு திட்டங்கள்பற்றிச் சொல்லும்போது விளக்கமாக அத்திட்டங்கள் அரசின் கவனத்தில் இருக்கின்றன, முயற்சி எடுக்கப்படும், இன்னின்ன வகையில் நிதி திரட்டப்படும் என்றெல்லாம் சொல்லியிருப்பார்கள். ஆனால் இதுபற்றி அப்படி ஒரு சிறு குறிப்பு கூட இல்லை. சில நிதி நிறுவனங்களிடமிருந்து இதற்காக வேண்டி மேலும் தேவைப்படும் நிதியைத் திரட்டுவோம் என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. நான் சொல்கிறேன். வாக்காளர்களுக்காக, நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களை மனதிலே வைத்து, எப்படியாவது மக்களுடைய ஓட்டுக்களைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் இதுபற்றி திட்டவட்டமாகத் தெரிவித்தவர்கள் தேர்தலுக்குப் பிறகு இந்த நிதிநிலை அறிக்கை வருகின்ற நேரத்தில், வெறும் 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், இதுபற்றி எண்ணிப் பார்க்கிறேன். இதை வைத்து ஒவ்வொரு இடத்திலும் பள்ளம் தான் தோண்ட முடியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முதல் ஆண்டிலே 10 லட்சம் மக்களுக்கும் மூன்று ஆண்டு காலத்திலே 30 லட்சம் மக்களுக்கும் என்று தான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அப்படியே பார்த்தாலும், இந்தத் தொகையைக் கொண்டு 30 லட்சம் வீடுகளைக் கட்ட முடியாது. இந்த அடிப்படையில் பார்த்தால், 30 லட்சம் பள்ளங்களைக் கூட தோண்ட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** வீடு கட்ட மத்திய அரசு அலொக்கேஷன் பண்ணுகிறது. அதுபோல் மாநில அரசு நிதி ஒதுக்குகிறது. இதைத் தவிர பல்வேறு நிதி நிறுவனங்கள் எல்லாம் பணம் தருகின்றன. இப்படி வருகின்ற தொகைகளை எல்லாம் வைத்துத்தான், திட்டமிட்டபடி அரசாங்கம் வீடு கட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 மார்ச் 26

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** இதுவரை இருந்த எந்த முதல்வர்களாலும் செயல்படுத்தப்படாத புரட்சிகரமான திட்டம் இது. ஆதி திராவிடர்கள், மீனவர்கள், கள்ளர்கள் போன்றவர்களுக்குத் தான் இதற்கு முன்பு வீடுகள் கட்டித் தந்துள்ளோம். ஆனால் இப்போது பிற்படுத்தப்பட்ட அடித்தள மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற அருமையான திட்டத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு ஒதுக்குகின்ற பணத்திற்கு மேலாக பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்தும் பணம் பெறப்பட்டு இதுபோன்ற திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு

(முற்பகல் 10-55)

வருகின்ற நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆரம்பத்திலே சத்துணவுத் திட்டம் வருகிறபோது அது செயல்பட முடியாது என்றார்கள். இப்போது 210 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி வருகிறோம். இதுபோன்ற பல திட்டங்களை புரட்சித் தலைவர் ஆட்சி நிறைவேற்றி வருகிறது. யாரும் ஏமாற்றவில்லை; பொறுத்திருந்தால், நிச்சயமாக வீடு கட்டித் தருவார்கள்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** எனவே அந்த அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை தேர்தல் பாதிப்பை வெளிப் படுத்துகிற ஒரு அறிக்கையாகத்தான் இருக்கிறது. இது அரசுக்கு நல்ல பாடம் கூட. அவர்களுடைய அணுகுமுறை மக்களிடத்தில் எடுபடவில்லை சரியில்லை. இனி வரும் ஆண்டுகளிலாவது மக்களுக்குத் தேவையான திட்டங்களை மக்களே தேர்ந்தெடுக்கலாம். ஜனநாயகத்தில் எதுவும் நடக்கலாம். அன்று கூட இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் கூறினார். பஞ்சாயத்துத் தேர்தல் முடிவுகள்பற்றி பலர் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள், தோல்விக்கான காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால், அடிப்படையில் அவர்களுடைய திட்டங்கள் செல்லுபடியாகவில்லை. திட்டங்கள் சரியான முறையில் அணுகப்படவில்லை. பல காரணங்களைத் தேடி அலையக்கூடாது. சிலர் "எங்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது இல்லவே இல்லாத பல நகராட்சிகள், பல ஊராட்சி ஒன்றியங்கள் எங்களுக்கு இந்தத் தேர்தலால், கிடைத்திருப்பது ஒருவகையில் லாபம்தான்" என்கிறார் கள். அவர்கள் பேசிய பேச்சு மை அடிக்கப்பட்டு, அந்த மை காயும் முன்பே, மீண்டும் தோல்வி அவர்களைத் தழுவியது. நான் தவறாகச் சொல்லவில்லை, தோற்றுவிட்டார்கள் என்று பேசவில்லை. இங்கே அவையில் இருந்துவந்த இரண்டு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தோல்வியை அடைந்திருக்கிறார்கள் நான் அவர்களைத் தாழ்வாகச் சொல்லவில்லை. அவர்கள் பேச்சால் இருப்பதையே இழந்திருக்கிறார்கள்.



1986 மார்ச் 26]

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். உறுப்பினர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்குமென் பதற்காகச் சொல்கிறேன். "இருப்பதை இழந்திருக்கிறீர்கள்" என்று திரு. மிசா கணேசன் சொன்னார். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இருந்ததை இழக்கவில்லை. துணைத் தலைவரே சுயேச்சையாக ஜெயித்து வந்து, பின்பு இக்கழகத்தில் இணைந்தார்கள். அப்படித்தான் செல்வி லீலாவதி அவர்களும் தனிப்பட்ட முறையில் ஜெயித்து வந்து, பிறகு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வில் இணைந்து கொண்டார்கள். இழந்தது ஒன்றே ஒன்றுதான். கோவைப் பட்டதாரித் தொகுதியில் மட்டும் ஒன்றே ஒன்றைத்தான் இழந்தோம் என்பதை மட்டும் நினைவு கூர்கிறேன்.

**திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு நன்றி. நானும் அதைத்தான் சொல்கிறேன். உங்கள் கட்சி விலாசம் போட்டாலே தோல்விதான் வருகிறது. இங்கே கூட உறுப் பினராக இருந்த திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் மதுரையில் தேர்தலில் நின்றார். அவர் ஆசிரியர்களுக்காக நிரம்ப பாடுபட்டவர். . .

(திரு. ஆர். டி. சீத்தாபதி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடிக்கடி உறுப்பினர்கள் குறுக்கிடுவதைத் தவிர்ப்பது நல்லது. முக்கால் மணி நேரம் பேசிய பின், மணியடித்தால், "நான் அதிகம் பேசவில்லை, குறுக்கிட்டவர்கள்தான் அதிகம் பேசினார்கள்" என்று அவர்கள் சொல்லக்கூடும். ஆகவே உறுப்பினர் அவர்கள் குறுக்கிடாமல் இருப்பது நல்லது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அப்படியல்ல. அப்படி குறுக்கிடக் கூடிய அளவுக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். எங்களுடைய விலாசத்தைப் போட் டாலே தோல்விதான் என்று சொல்கிறார். நான் இதை மாண்புமிகு உறுப் பினர் திரு. மிசா. கணேசனிடம் எதிர்பார்க்கவில்லை. எத்தனை தோல்விக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வெற்றியைப் பெற்றது என்று எனக்கும் தெரியும். அவருக்கும் தெரியும். வெற்றி, தோல்வி என்பது வேறு விஷயம். எங்களுடைய பெயரைச் சொன்னாலே தோல்விதான் என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அப்படி, திரு. பா. ரா. தாமஸ் போன்றவர்கள் ஆசிரியர்களுக்காகக் கடுமையாகப் [illegible] யவர். ஆசிரியர்கள் பிரச்சினையை வைத்து அரசை எதிர்த்து அ[illegible]

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** இதுவரை இருந்த எந்த முதல்வர்களாலும் செயல்படுத்தப்படாத புரட்சிகரமான திட்டம் இது. ஆதி திராவிடர்கள், மீனவர்கள், கள்ளர்கள் போன்றவர்களுக்குத் தான் இதற்கு முன்பு வீடுகள் கட்டித் தந்துள்ளோம். ஆனால் இப்போது பிற்படுத்தப்பட்ட அடித்தள மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற அருமையான திட்டத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு ஒதுக்குகின்ற பணத்திற்கு மேலாக பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்தும் பணம் பெறப்பட்டு இதுபோன்ற திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு

(முற்பகல் 10-55)

வருகின்ற நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆரம்பத்திலே சத்துணவுத் திட்டம் வருகிறபோது அது செயல்பட முடியாது என்றார்கள். இப்போது 210 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி வருகிறோம். இதுபோன்ற பல திட்டங்களை புரட்சித் தலைவர் ஆட்சி நிறைவேற்றி வருகிறது. யாரும் ஏமாற்றவில்லை; பொறுத்திருந்தால், நிச்சயமாக வீடு கட்டித் தருவார்கள்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** எனவே அந்த அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை தேர்தல் பாதிப்பை வெளிப் படுத்துகிற ஒரு அறிக்கையாகத்தான் இருக்கிறது. இது அரசுக்கு நல்ல பாடம் கூட. அவர்களுடைய அணுகுமுறை மக்களிடத்தில் எடுபடவில்லை. சரியில்லை. இனி வரும் ஆண்டுகளிலாவது மக்களுக்குத் தேவையான திட்டங்களை மக்களே தேர்ந்தெடுக்கலாம். ஜனநாயகத்தில் எதுவும் நடக்கலாம். அன்று கூட இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் கூறினார். பஞ்சாயத்துத் தேர்தல் முடிவுகள்பற்றி பலர் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள், தோல்விக்கான காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால், அடிப்படையில் அவர்களுடைய திட்டங்கள் செல்லுபடியாகவில்லை. திட்டங்கள் சரியான முறையில் அணுகப்படவில்லை. பல காரணங்களைத் தேடி அலையக்கூடாது. சிலர் "எங்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது இல்லவே இல்லாத பல நகராட்சிகள், பல ஊராட்சி ஒன்றியங்கள் எங்களுக்கு இந்தத் தேர்தலால், கிடைத்திருப்பது ஒருவகையில் லாபம்தான்" என்கிறார் கள். அவர்கள் பேசிய பேச்சு மைப் அடிக்கப்பட்டு, அந்த மை காயும் முன்பே, மீண்டும் தோல்வி அவர்களைத் தழுவியது. நான் தவறாகச் சொல்லவில்லை, தோற்றுவிட்டார்கள் என்று பேசவில்லை. இங்கே அவையில் இருந்துவந்த இரண்டு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தோல்வியை அடைந்திருக்கிறார்கள் நான் அவர்களைத் தாழ்வாகச் சொல்லவில்லை. அவர்கள் பேச்சால் இருப்பதையே இழந்திருக்கிறார்கள்.





**திரு. ஆர். டி. சீத்தாபதி :** துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். உறுப்பினர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்குமென் பதற்காகச் சொல்கிறேன். "இருப்பதை இழந்திருக்கிறீர்கள்" என்று திரு. மிசா கணேசன் சொன்னார். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இருந்ததை இழக்கவில்லை. துணைத் தலைவரே சுயேச்சையாக ஜெயித்து வந்து, பின்பு இக்கழகத்தில் இணைந்தார்கள். அப்படித்தான் செல்வி லீலாவதி அவர்களும் தனிப்பட்ட முறையில் ஜெயித்து வந்து, பிறகு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வில் இணைந்து கொண்டார்கள். இழந்தது ஒன்றே ஒன்றுதான். கோவைப் பட்டதாரித் தொகுதியில் மட்டும் ஒன்றே ஒன்றைத்தான் இழந்தோம் என்பதை மட்டும் நினைவு கூர்கிறேன்.

**திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு நன்றி. நானும் அதைத்தான் சொல்கிறேன். உங்கள் கட்சி விலாசம் போட்டாலே தோல்விதான் வருகிறது. இங்கே கூட உறுப் பினராக இருந்த திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் மதுரையில் தேர்தலில் நின்றார். அவர் ஆசிரியர்களுக்காக நிரம்ப பாடுபட்டவர். . .

(திரு. ஆர். டி. சீத்தாபதி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடிக்கடி உறுப்பினர்கள் குறுக்கிடுவதைத் தவிர்ப்பது நல்லது. முக்கால் மணி நேரம் பேசிய பின், மணியடித்தால், "நான் அதிகம் பேசவில்லை, குறுக்கிட்டவர்கள்தான் அதிகம் பேசினார்கள்" என்று அவர்கள் சொல்லக்கூடும். ஆகவே உறுப்பினர் அவர்கள் குறுக்கிடாமல் இருப்பது நல்லது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அப்படியல்ல. அப்படி குறுக்கிடக் கூடிய அளவுக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். எங்களுடைய விலாசத்தைப் போட் டாலே தோல்விதான் என்று சொல்கிறார். நான் இதை மாண்புமிகு உறுப் பினர் திரு. மிசா. கணேசனிடம் எதிர்பார்க்கவில்லை. எத்தனை தோல்விக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வெற்றியைப் பெற்றது என்று எனக்கும் தெரியும். அவருக்கும் தெரியும். வெற்றி, தோல்வி என்பது வேறு விஷயம். எங்களுடைய பெயரைச் சொன்னாலே தோல்விதான் என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அப்படி, திரு. பா. ரா. தாமஸ் போன்றவர்கள் ஆசிரியர்களுக்காகக் கடுமையாகப் போராடி யவர். ஆசிரியர்கள் பிரச்சினையை வைத்து அரசை எதிர்த்து அவர் தன்

[திரு. மீசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 மார்ச் 26

பதவியையே ராஜிநாமா செய்தவர். அவர் மதுரை மாவட்டத்தில் போட்டியிட்ட போது, ஓர் அமைச்சர் அவரிடம் சென்று "உங்களுக்கு நாங்கள் ஆதரவு தருகிறோம்" என்று சொன்னபோது, "உங்கள் தொடர்பே வேண்டாம்" என்று கூறி கூறித்து கையெடுத்துக் கும்பிட்டார். "உங்கள் விவகாரமே வேண்டாம்" என்று கூறினார்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கட்சியின் சார்பில், சமீபத்தில் அவர் களுக்கு எதிர்பாராமல் கிடைத்த, அவர்களே அதிர்ச்சி அடையத்தக்க வெற்றி பெற்ற காரணத்தால், அந்த அதிர்ச்சியின் காரணமாகவும், மகிழ்ச்சியின் விளைவாகவும் எந்தக் கருத்தையும் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் இந்த அவையில் இல்லை.

(முற்பகல் 11-00)

திரு. தாமஸ் அவர்களிடத்திலே யாரோ அமைச்சர் சொன்னார் என்று சொல்கின்ற அந்தக் கருத்தும் இவருக்கு நேரடியாகத் தெரியாது. என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில், அவையில் இல்லாதவரைப்பற்றி, அவையில் நடக்காத விஷயத்தைப்பற்றி, வெளியில் வராத செய்திகளைப்பற்றி, கேட்ட செய்திகளை யெல்லாம் தொகுத்து ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் தந்துகொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு இதை மறுக்க வேண்டுமென்பதால் மறுப்பைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. தாமஸ் அவர்கள் இந்த அவையின் உறுப்பினராக இருந்தவர். உறுப்பினராக இருந்தவரைப்பற்றி அவர் இல்லாதபோது பேசுவது என்பது நியதி இல்லை. அப்படி அவரைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னால், முதலிலேயே தலைவர் அவர்களிடத்திலே தெரிவித்து, தலைவர் அதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த பிறகுதான் பேச வேண்டும் என்பது நியதி. இந்த நியதி இல்லாவிட்டால், தாங்கள் இல்லாதபோது தங்களைப்பற்றி இன்னொரு உறுப்பினர் பேசுவார். தாங்கள் குறிப்பிடும் உறுப்பினரும், தற்சமயம் அவையில் இல்லை, அமைச்சரும் இல்லை என்கிற கருத்தைச் சொல்கிறார்கள். எனவே இவ்வாறு சொல்கிற கருத்தை தலைவர் அவர்களிடத்தில் முதலிலேயே தெரிவித்தால், பரிசீலித்துச் சொல்வதற்குத் தலைவர் அவர்களுக்கு வாய்ப்பு இருக்கும்.



1986 மார்ச் 26]

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் "திரு. தாமஸ் அவர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள், தற்சமயம் அவையில் இல்லை" என்று குறிப்பிட்டார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாதிருக்கிற உறுப்பினர்களைப்பற்றி அவர்கள் இல்லாதபோது பேசுவதென்பது நியதி இல்லை என்று குறிப்பிடுகிறீர்கள். அவர்கள் அவையில் இருக்கின்றபோதுதான் பேச வேண்டுமென்கிற நிலை இருந்தால், யாருமே பேச முடியாது. வெளியில் இருப்பவர்கள்பற்றி அவைக்கு வர முடியாதவர்கள்பற்றிப் பேசக்கூடாது என்றால், இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி என்றால் யாருமே பேச முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையில் இருக்கிற உறுப்பினர் ஒரு கருத்தைத் தெரிவித்தால், அந்தக் கருத்தை எதிர்த்து உறுப்பினர்கள் சொல்லலாம். அந்தக் கருத்துக்கு மாறுபாடாகச் சொல்லலாம். ஆனால் தனிப்பட்ட முறையிலே இந்த அவையில் இருக்கிற உறுப்பினரைப் பற்றி ஏதாவது பேசி, அவர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கு மானால், "அந்த உறுப்பினரைப்பற்றிப் பேசப் போகிறேன்" என்று தலைவரிடத்தில் கூறி, அனுமதி பெற்று பேசுவதுதான் சட்டமன்றத்தினுடைய பாரம்பர்யம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** உங்கள் தீர்ப்பை வரவேற்கிறேன். இப்போது பேசுவது திட்டமிட்டுப் பேசுவதல்ல. உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டு ஒரு கருத்தைச் சொல்கிறார். அப்போது அதற்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் வருகிறது. அப்போது எப்படி முன் அனுமதி கேட்டுவிட்டுப் பேச முடியும்? அவர் பேசுவதற்கு கருத்து மாறுபாடு இருந்தால், அதை எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் எந்த உரிமையோடு இடையிலே குறுக்கிட்டுப் பேசுகிறார் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் இப்போது பேசிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீசா கணேசன். அவருடைய கருத்துக்கு மறுப்பை நான் தெரிவித்திருக்கிறேன். நீங்களும் தீர்ப்பு போன்ற ஒரு கருத்தை வழங்கியிருக்கிறீர்கள். ஆகவே இதைப்பற்றிக் கருத்து தெரிவிக்க வேண்டிய உறுப்பினர் திரு. மீசா கணேசன் அவர்களே தவிர, அவருக்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி

சுந்தரம் அவர்கள் வக்காலத்து வாங்கவேண்டிய அவசியமில்லை. எனவே இடையிலே எழுந்து கருத்து தெரிவிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா. கணேசன் அவர்களுக்குத்தான் உரிமை இருக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரத்திற்கு இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா. கணேசன் அவர்கள் இதில் என்ன கருத்தைத் தெரிவிக்கிறார் என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இவருடைய பேச்சுக்கு நான் பதில் சொல்லவில்லை. ஒரு நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும்போது, அது அவை மரபுக்கு மாறாக இருக்குமென்று ஓர் உறுப்பினர் கருதினால், அதைப்பற்றிக் கருத்து தெரிவிப்பதற்குக்கூட ஓர் உறுப்பினருக்கு உரிமை இல்லையா? "அவர்கள் எப்படி எந்த உரிமையின்கீழ் இடையிலே தலையிடுகிறார்கள்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். இந்த அவையிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளின்போது, சட்டத்திற்கு மாறாகவோ மரபுக்கு மாறாகவோ யாராவது நடந்துகொள்கிற சந்தர்ப்பம் ஏற்பட்டால், மேலவையில் "கிளாரிபிகேஷன்" கேட்பதற்கு ஓர் உறுப்பினருக்கு உரிமை இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி தலையிடுவதற்கு உரிமை இல்லை என்று சொல்கிறார் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஓர் உறுப்பினர் பேசுகிறபோது அவர் பேசுவதில் ஏதாவது சந்தேகமிருந்தால் இன்னொரு உறுப்பினர் அந்த உறுப்பினரிடத்திலே கேட்கலாம். அந்த உறுப்பினர் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அதில் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' ஏற்பட்டு அதிலே இன்னொரு உறுப்பினர் தலையிட்டு அதற்காக எழுந்து பேசலாம். ஆனால் ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, இன்னொரு உறுப்பினர் எழுந்து பேசுவது மரபாகாது.

(முற்பகல் 11-05)

திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். இதே பிரச்சினையைக் குறித்து தேர்தலுக்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே இந்த அவையிலே விவாதம் நடந்துகொண்டிருந்தபோது, "மதுரையிலே இருக்கின்ற திரு. பி. ஆர். தாமஸ் அவர்களை நாங்கள் ஆதரிக்கிறோம்" என்று ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர்





திரு. சித்தாபதி அவர்கள் தெரிவித்தபோது, பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் எழுந்து, "இல்லை இல்லை, ஆளும் கட்சியின் ஆதரவு அவருக்குக் கிடையாது" என்று சொல்லி, அது இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது. மூன்று நாட்களுக்கு முன்னால் எங்களுடைய கட்சியிலே பொருளாளராக இருக்கிற திரு. சாதிக் பாட்சா அவர்கள்கூட எழுந்து "யார் யார் அந்தத் தொகுதியிலே எங்களுடைய வேட்பாளராகப் போட்டியிடுகிறார்கள்" என்ற கருத்தைச் சொன்னார்கள். எனவே அந்த அடிப்படையிலே. . .

திரு. ஆர். டி. சீத்தாபதி : நான் சொன்னது, மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களிடத்திலே திரு. தாமஸ் அவர்கள் பேசும்போது, பத்திரிகையிலே வந்த செய்தி என்றுதான் சொன்னேனே தவிர, கேட்டதாகச் சொல்லவில்லை.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, வரவு-செலவுத் திட்டத்தில் விவாதம் நடைபெறுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் ஆளும் கட்சியிலே உள்ளவர்களும், எதிர்த் தரப்பிலே உள்ளவர்களும் தேர்தல் பிரதாபங்களையும், கட்சியின் விவகாரங்களையும் பேசிக்கொண்டிருப்பது மக்களுக்குத் தேவையில்லாதது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : துணைத் தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலே இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் கூட "இல்லை, இல்லை" என்று தெரிவிக்கக்கூடிய அளவுக்கு ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்டுகிறேன். எனவே இன்று அதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, இப்படிப்பட்ட திட்டங்களை கவர்னர் உரையிலே சொல்வது, அதற்குப் பின்னாலே நிதிநிலை அறிக்கை என்று வரும்போது அதில் மாற்றம் செய்வது என்பது ஒரு சரியான அணுகுமுறையாக இருக்காது என்பதற்காகத்தான் இவ்வளவு கருத்துக்களையும் சொன்னேனே தவிர, ஏதோ எங்களுடைய தேர்தல் பிரதாபங்களையும் அல்லது கட்சி வீரர்கள் அடைந்த வெற்றியையும் சொல்வதற்காகச் சொல்கிறேன் என்று தயவுசெய்து எண்ணிக்கொள்ள வேண்டாம். அப்படி நேரத்தை வீணாக்குகிற நிலைமையில் நாங்கள் இல்லை. ஒரு விவாதத்தை ஒரு மாதிரியாக ஆரம்பித்து வைத்ததற்குப் பின்னாலே அதற்கு சில பதில்களை நாங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. பிறகு அவர்கள் சொல்லும்போது அதைத்தான் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் பேசும்போது மாண்புமிகு

உறுப்பினர்தான் சொன்னார், "நாங்கள் ஒன்றும் இழந்துவிடவில்லை, புதிதாகப் பெற்றிருக்கிறோம்" என்று சொன்னார். அதற்காகத்தான் நான் சொன்னேன். புதிதாகப் பெற்றிருக்கிறோமென்று சொல்லி, அதை டைப் அடித்த இங்க் காய்வதற்குள்ளே இங்கு பதவியை இழந்திருக்கிறார்களே. . . அதுவல்ல. . . இன்றைக்கு மக்களுடைய மனதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றம். . . அரசுக்கு . . . ஒரு நல்ல கருத்தின் அடிப்படையிலேதான் சொன்னேன். நாங்கள் எல்லாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற அடிப் படையிலே அல்ல. அரசு திருத்திக் கொள்வதற்காகத்தான் சொன்னேன். அரசு உண்மையாக மக்களுக்குப் பயன்படத்தக்க திட்டங்களாக நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்து, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அன்றைக்குக் கூடச் சொன்னார்கள். சிறந்த முறையில் ரோடுகள் இருப் பதாக கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ரோடுகள் போடும் திட்டத்திலே நாங்கள் முன்னணியில் இருக்கிறோம். சிறப்பாக ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரோடுகள் போடுவதில் தமிழக அரசு சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் அதில் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கியது. அந்தத் துறைக்கு ஒரு சீப் என்ஜினியர் இல்லை. இந்தத் துறையில் இருந்த திரு. ராமநாதன் என்பவர் கடந்த டிசம்பர் 31 ஆம் தேதியன்று வேலையிலிருந்து ஓய்வு பெறவேண்டிய நேரத்தில் நள்ளிரவில் சஸ்பென்ட் செய்யப்பட்டார். அதற்குப் பின்னாலே இரண்டு மாதங்களாக அந்த ஃபைல் நடவடிக்கை எடுக்கப்படாமல் இன்னொரு சீப் என்ஜினியர் போட முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. அந்தப் பத்து கோடி ரூபாயில் குறுகிய காலத்தில் செலவிடவேண்டிய 1½ கோடி ரூபாயை நாம் இழந்து விட்டோம். இப்போது 8 கோடி ரூபாய் இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையில் ஒரு சீப் என்ஜினியர் கையெழுத்துப் போட்டு ஒரு பாலத்தை ரிப்பேர் செய்ய வேண்டும். அதற்காக உத்தரவு போட வேண்டிய, கையெழுத்துப் போட வேண்டிய ஒரு சீப் என்ஜினியர் இல்லாத காரணத் தால், அந்த 1½ கோடி ரூபாய் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டது. நாம் வேறு எங்கும் போக வேண்டாம். சென்னைக்கு அருகே இருக்கிற வில்லி வாக்கத்திற்கு வந்து பார்த்தால் தெரியும். அரசாங்கத்தின் அனுமதியோடு, அரசாங்கத்தின் திட்டத்தோடு குடியிருப்பு வசதிகள் உருவாக்கப்பட்ட அந்த வீட்டு வசதித் திட்டத்தில் ரோடே கிடையாது. நாம் அந்த இடத்திற்குப்





போகவேண்டியிருக்கிறது. ரோடு அமைப்பதற்காக மக்கள் வரி செலுத்து கிறார்கள். வில்லிவாக்கத்தில் உள்ள ரோடு மிகவும் பயங்கரமான நிலையில் இருக்கிறது. அரசாங்கத்தின் அனுமதியோடு உருவாககப்பட்ட அந்தக் குடியிருப்புகளில் உள்ளவர்கள்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள்—நோய்வாய்ப்பட்டால் அந்தப் பகுதிக்கு டாக்ஸி, ஆட்டோ அங்கு வர முடியாது. அங்கு ரோடே கிடையாது. ஒரு இணைப்புச் சாலை கிடையாது. பாதை வசதி கிடையாது. மழை பெய்தால் 'ஸ்கேட்டிங்'கில்தான் போக வேண்டும். அப்படிப்பட்ட நிலையில், இங்கே நிதிநிலை அறிக்கையில் ரோடுகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள்.

அதற்கு அடுத்தபடியாக நீதித் துறையைப்பற்றிச் சொல்கிறார்கள். வழக்குகளை விரைவில் முடிப்பதற்காக நாகபட்டணத்திலும், இராமநாத புரத்திலும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள் ஏற்படுத்த அரசு

(முற்பகல் 11-10)

முடிவு செய்துள்ளது. இது மிகவும் நகைச்சுவைக்குரிய விஷயமாக இருக் கிறது. வெறும் நீதிமன்றங்களைக் கட்டிவிடுவதன் மூலமாக நாம் வழக்கு களை முடித்துவிட முடியாது. அதற்கு மிகவும் முக்கியமான தேவை நீதிபதிகள். நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்டிவிட்டு இது நாகப்பட்டினம் முதல் வகுப்பு நீதிமன்றம், இது இராமநாதபுரம் முதல் வகுப்பு நீதிமன்றம் என்று சொல்லிவிட்டால் போதாது. அங்கெல்லாம் நீதிபதிகள் இருக்க வில்லை என்றால், வக்கீல்களுக்கு வேலை இருக்காது. வழக்குகளும் முடி வடையாது. இன்றைக்குத் தேவையான நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக் கிறார்களா என்றால். இல்லை என்பதை இங்கே நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். நீதிபதிகள் நியமனத்தில் இந்த அரசு எவ்வளவு சரியற்ற முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பாக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ் நாடு முழுவதுமாகப் பார்த்தால், மாவட்ட அளவிலான 252 நீதிபதிகள் இடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றன. அதாவது டிஸ்ட்ரிக்ட் முன்சீப், ஜுடிஷியல் பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்ஸ், ஜுடிஷியல் செகண்டு கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்ஸ் என்று இருக்கிற அடிப்படை யில் மொத்தம் 252 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. இதில் தமிழ் நாடு முழுவதும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகள் மட்டும் 100 காலி யாக இருக்கின்றன.

(திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்) [1986 மார்ச் 26

இதன் வேடிக்கை என்னவென்றால், 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் காலியாக இருக்கிற 100 இடங்களில் சுமார் 33 இடங்களுக்கு மட்டும் தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் விண்ணப்பங்களை 'கால் பார்' செய்தது. அதாவது இன்டர்வியூவுக்கு 33 இடங்களுக்கு மட்டும் ஆட்களை அழைத்தது. இந்த இன்டர்வியூ எப்போது நடந்தது என்றால், 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. இதற்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல்வேறு வழக்கறிஞர்கள்—பல மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தகுதியின் அடிப்படையிலே விண்ணப்பித்து வந்திருந்தார்கள். இதற்குத் தகுதி என்றால் 7 ஆண்டுகள் 'பார் எக்ஸ்பீரியன்ஸ்' என்று வைக்கலாம். அப்படித் தகுதி உள்ளவர்கள் எல்லாம் நேர்முகத் தேர்வுக்கு 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலே தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன் வந்தார்கள். அப்படி இன்டர்வியூ நடந்து முடிந்த பிறகும், பலர் இன்றுவரை நடந்து கொண்டிருந்தும் இன்னும் யாரும் நியமிக்கப்படவில்லை. இதுதான் நிலைமை.

இப்படிக் கால தாமதம் ஆகிற நிலையைக் கருத்திலே கொண்டு, காலியாக உள்ள இடங்களுக்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்று கோரி, சென்னை உயர்நீதி மன்றத்திலே ஒரு ரிட் பெட்டிஷன் போடப்பட்டது. நீதிபதிகள் இல்லாமல் பல கோர்ட்டுகளில் வேகன்சிஸ் இருக்கின்றன. அதன் காரணமாக பல வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று நீதிபதிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள நிலைமையைக் குறிப்பிட்டுக் காட்டி, உடனடியாக இந்தக் காலியாக உள்ள இடங்களிலெல்லாம் நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டு, தமிழ் நாட்டிலுள்ள பார் கவுன்சில் சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்தது.

அந்த வழக்கு போடப்பட்ட பிறகு 1985 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி உயர்நீதிமன்றத்தின் நீதிபதி ஜஸ்டிஸ் இராமானுஜம் அவர்கள் இந்த வழக்கை விசாரித்து அரசாங்கத்திற்கு ஒரு டைரெக்ஷன் கொடுத்தார்கள். அதாவது 1985 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதியிலிருந்து 4 மாத காலத்திற்குள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இந்த மாவட்ட முன்சீப்புகளின் தேர்வுகளை நடத்தி காலியாக இருக்கிற இடங்களில் நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அதற்காக 4 மாதம் அவகாசம் நீதிபதியாலே கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை உயர்நீதி மன்றத்தின் உத்தரவிற்கு இணங்க நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை



[திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]
1986 மார்ச் 26]

இன்றைக்கு அதன் காரணமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், இவ்வாறு உயர்நீதி மன்றத்தின் ஆணையை அரசு நிறைவேற்றாததன் காரணமாக பார் கவுன்சில் அதற்காக ஒரு 'கன்டெம்ப்ட் அப்ளிகேஷன்' போட இருக்கிறது. அதாவது 4 மாத காலத்திற்குள்ளாக மாவட்ட நீதிபதிகளை அரசு நியமிக்கவில்லை என்று சொல்லி அதற்காக ஒரு 'கன்டெம்ப்ட் பெட்டிஷன்' போட இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. தமிழ் நாடு பார் கவுன்சிலும் பாண்டிச்சேரி மாநில பார் கவுன்சிலும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன. அதாவது வரும் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கு இணங்க மாவட்ட நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை என்றால்—வரும் 23 ஆம் தேதி முதல் இன்டெபனிட் ஸ்டிரைக்கை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இது ஒன்றும் திடீர் என்று எடுக்கப்பட்ட முடிவல்ல. நீதிபதி அவர்கள் ஆணையிட்டு 4 மாதங்களாகியும்கூட அரசு காலியாக இருக்கிற மாவட்ட நீதிபதிகளின் பதவிக்கு தேர்வை முடித்து நியமிக்கவில்லை. எனவேதான் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள்ளாக நியமிக்கவில்லை என்றால், 23 ஆம் தேதி முதல் 'இன்டெபனிட் ஸ்டிரைக்' என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன் இந்த நீதிபதிகள் நியமனத்தில் என்ன கோளாறு? அதன் பின்னணி என்ன? ஏன் நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை? தமிழகத்திலே தகுதியான வழக்கறிஞர்கள் இல்லையா? சர்வீஸ் கமிஷனாலே தேர்ந்தெடுக்கப்படுவதிலே என்ன கஷ்டம்? 7 ஆண்டு 'பார் எக்ஸ்பீரியன்ஸ்' அல்லது 10 ஆண்டு அல்லது 5 ஆண்டு 'பார் எக்ஸ்பீரியன்ஸ்' என்று போட்டு தேர்ந்தெடுக்க முடியாதா? 3 ஆண்டுகள் எக்ஸ்பீரியன்ஸ் இருந்தாலே போதும் என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் 7 ஆண்டுகள் என்றுகூட வைத்துக் கொள்ளுங்கள். அப்படிச் சாதாரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இந்த நீதிபதிகள் இது வரை தேர்ந்தெடுக்கப்படாததற்கு என்ன காரணம்? அதன் பின்னணி என்ன? அதிலே என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அது எதற்காகத் தடைப்படுகிறது? இந்த நிலையிலேதான் நாகப்பட்டினத்திற்கும் இராமநாதபுரத்திற்கும் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றன என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படுகிறது. நான் கேட்கிறேன் நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்டிவிட்டால் மட்டும் போதுமா? நீதிபதிகளை நியமிக்க வேண்டாமா? இவ்வளவு பெரிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகும் ஏன் உங்களாலே நீதிபதிகளை நியமிக்க முடியவில்லை? இன்றைய

[திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

[1986 மார்ச் 26

தினம் இரண்டு பார் கவுன்சில்களும் தீர்மானம் போட்டிருக்கிறார்களே, 'கன்டெம்பட் அப்ளிகேஷன்' போடப் போகிறார்களே, என்ன செய்யப் போகிறீர்கள்? தமிழ் நாட்டினுடைய பார் கவுன்சில் என்பது

(முற்பகல் 11-15)

ஒரு பொது அமைப்பு. நீதிபதிகள் இல்லாமல் பல கோர்ட்டுகளில் வழக்குகள் நடைபெறவில்லை. அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இருக்கக்கூடிய நீதிபதிகள் பலபேர் டெம்பரரியாக இருக்கிறார்கள். 170 டிஸ்ட்ரிக்ட் முன்சீப்களில் 13 பேர்தான் பெர்மனென்ட். அரசாங்கத்தின் தேர்வு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 13 பேர்தான். மற்ற இடங்களில் உள்ளவர்கள் டெம்பரரி. என்றைக்குத்தான் அவர்களை பெர்மனென்ட் செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அடுத்து வரும் இரண்டாண்டுகளில் கிட்டத்தட்ட 60 டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜஸ் ஓய்வு பெறப் போகிறார்கள். இந்த 60 பேர் ஓய்வு பெறும் போது டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவியிலிருந்துதான் பதவி உயர்வு பெற்று டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக வேண்டும். அப்படியானால் இந்த டெம்பரரி டிஸ்ட்ரிக்ட் முன்சீப்தான் டெம்பரரி டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாகப் போகிறார், அந்த டெம்பரரி டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்தான் ஐக்கோர்ட் ஜட்ஜாக மாறப் போகிறார். இந்த முறையை மாற்ற வேண்டாமா? அப்படி இல்லாமல் நீதிமன்றக் கட்டிடங்கள் இரண்டைக் கட்டினோம். என்று சொல்லி வழக்குகள் தீர்ந்து விடும் என்று சொல்வது கேலிக்குரிய விஷயம், மக்களை திசை திருப்பும் விஷயம். அந்த அளவிற்கு நீதித் துறை பயங்கரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

உயர்நீதிமன்றத்திலேகூட கிட்டத்தட்ட ஏழு இடங்கள் காலியாக இருக்கின்றன. உயர்நீதிமன்ற நீதிபதி திரு. நடராஜன், உச்சநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட பிறகு, எற்கெனவே ஆறாக இருந்த காலியிடங்கள் ஏழாக உயர்ந்துவிட்டன. இப்படி நீதித் துறையில் எந்தவிதமான நிகழ்ச்சியும் நடைபெறாமல் உள்ள நிலைமையை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கான காரணங்களை பல்வேறுவிதமாகப் பேசுகிறார்கள். நீதிபதிகளை நியமிப்பதிலே என்ன தடை? அதிலே சில எதிர்பார்ப்புகளை எதிர்பார்த்து, சரியான முறையில் அவர்களுக்கு வந்து சேரவில்லை என்ற அடிப்படையிலே காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றன என்ற கருத்து இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி உடனே நீதிமன்றங்களிலே நீதிபதிகளை நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டும். கட்டிடம் கட்டியதோடு நீதிமன்றங்களின் பிரச்சினை முடிந்துவிட்டதாக இந்த அரசு கருதக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26]

[திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சூசகமாகச் சொல்லியிருக்கிறார்கள். கள், சாராயக் கடைகள் இல்லையென்று வந்தால், 60 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும், அதை அடிப்படையாக வைத்து இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி தெரிவித்திருக்கக் கூடாது. எண்ணம் உறுதியாக இருந்தால், "நிச்சயமாக 1987 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் கள், சாராயக் கடைகளை நீக்குவோம். இதனால் அரசாங்கம் 60 கோடி ரூபாயை இழக்கும். அதை ஈடுகட்ட இன்னின்ன திட்டங்களை வகுத்திருக்கிறோம்" என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆளுநர் உரையில் தெளிவாகச் சொல்லப்பட்ட வீட்டு வசதித் திட்டமே காற்றாய் பறக்கும்போது, இப்படி சூசகமாகச் சொல்லும்போது, எங்களுக்குச் சந்தேகம் வருகிறது. சாதாரணமாக எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அமைச்சர்களாகட்டும். உறுப்பினர்களாகட்டும், அவர்கள் பேசும்போது "புகழ் எல்லாம் புரட்சித் தலைவரைத்தான் சாரும். எங்களுக்கு இல்லை" என்று சொன்னார்கள். "எங்களுக்குப் புகழ் சேராது" என்று சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "நான் சொல்லியபடி" என்று ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1987 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் நாள் முதல், நான் ஏற்கெனவே கூறியபடி கள், சாராயக் கடைகள் மூடப்படும் என்று அவர் குறிப்பிட்டிருப்பதைப் படிக்கும்போது சந்தேகம் வருகிறது. "நான்தானே சொன்னேன், புரட்சித் தலைவர் சொல்லவில்லையே" என்று பிறகு மாற்றக்கூடும். அப்படி இருக்கக் கூடாது. மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது என்று சொல்லுகிறவர்கள், புகழ் சேர்ந்தால் அது அவருக்குத்தான், எங்களுக்கல்ல என்று சொல்லுகிறவர்கள் நிதிநிலை அறிக்கையில் இப்படிக் குறிப்பிடுவதால் எங்களுக்குச் சந்தேகம் வருகிறது. நான் மாண்புமிகு நிதியமைச்சரைக் குறைவாக மதிப்பிடவில்லை. அவர் அப்படிச் சொல்லுவதற்கு அதிகாரம் உண்டு. அப்படிச் சொல்லுகிற இடத்திலேதான் அவர் இருக்கிறார். இருந்தாலும் இப்படிச் சொல்லுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. 1987 ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் மீண்டும் சாராயக் கடைகளை நடத்தும்போது, 'கள் சாராயக் கடைகளை மூடுவோம்' என்பது நான் சொன்னது, புரட்சித் தலைவர் சொன்னது அல்ல என்று சொல்லக்கூடிய அளவிற்கு வேறு மாதிரியான கருத்தைக் கொண்டு வந்துவிடுவோ என்று சந்தேகிக்கிறோம். ஆகவே தெளிவாக இருக்க

வேண்டும். "1987 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் நாள் மதுக்கடைகள், கள்,
சாராயக் கடைகளை மூடுவோம் என்று சொன்னோம், இதை நிறைவேற்று
கிறோம், இதனால் அரசுக்கு 60 கோடி ரூபாய் இழப்பு" என்று தெளிவாக
விவரங்கள் இல்லை. அதைப் போலவே நிதிநிலை அறிக்கையில் பொதுவாக
இந்த அரசாங்கத்தின் மொத்த வருமானம், மொத்தச் செலவு, உபரி அல்லது
துண்டு என்று பொதுவாக தெளிவாகப் போட்டிருக்கும். அப்படி இந்த
நிதிநிலை அறிக்கை இல்லை. நாமே கற்பனை செய்து கொண்டு இரண்டா
யிரம் சொச்சம் கோடி அது, இது என்று கூட்டி, கழித்து எவ்வளவு
வருமானம் என்று நாமே நிதிநிலை அறிக்கையை கையிலே வைத்துக்கொண்டு
தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிறது.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, அதிலே தெளிவாக இருக்
கிறது. நிதியாண்டு என்பது மார்ச் 31ஆம் தேதி வரை இருக்கிறது. சனவரி
யிலேயிருந்து கள்ளுக் கடைகளை மூடுவதாக இருந்தால், சனவரி, பிப்ரவரி,
மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்கு இழப்பான 60 கோடி ரூபாயை மனதிலே
வைத்து இந்த நிதிநிலை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாக
அறிக்கை சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே என்ன சூசகம் இருக்கிறது?

(முற்பகல் 11-20)

திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : மாண்புமிகு மேல
வைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே வந்திருக்கின்ற
நிதிநிலை அறிக்கைகளைப் பார்க்கின்றபோது, அதிலே வரவு இவ்வளவு,
செலவு இவ்வளவு, துண்டு இவ்வளவு என்று கடைசியிலே ஒரு கட்டம்
இருக்கும். அதிலே இந்த விவரம் தெளிவாக இருக்கும். வேறு பக்கம்
எதுவும் புரட்ட வேண்டாம். அந்தக் கருத்தைத் தெரிவித்துக்கொள்வார்கள்.
இன்றைக்கு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை அப்படி இல்லை என்பதை
நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, 'மாஸ் ராபிட் டிரான்சிட் சிஸ்டம்' என்று சொல்லியிருக்கின்
றார்கள். விஸ்தரிக்கும் பணியில் மிகப் பெரிய பாலங்களைக் கட்டிக்கொண்டி
ருக்கின்றார்கள். அதற்கு மத்திய அரசு 20 கோடி ரூபாய் என்று தெரிவித்
திருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் 4 உறுப்பினர்கள்
பேசவேண்டியதாக இருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் 40 நிமிடங்களாகப்
பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.



திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : இந்த ரெயில்
திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது
ரெயில்வே பட்ஜெட்டில் மத்திய அரசு ரூ. 3½ கோடி ஒதுக்கியிருக்கின்றது.
அதைப்பற்றி இந்த பட்ஜெட்டிலே சொல்லவில்லை. அங்கேயுள்ள அமைச்சர்
அவர்கள், இதிலே மாநிலத்தின் பங்கும் உண்டு என்று சொல்லியிருக்கின்
றார்கள். சென்னை பீச்சிலிருந்து கொண்டு செல்கின்ற இந்த ரெயில்
திட்டத்திற்கு மாநில அரசுக்கும் பங்கு உண்டு என்று அவர்கள் குறிப்பிட்
டிருக்கின்றார்கள். எனவே அதற்கு நம் மாநில அரசு என்ன செய்ய இருக்
கின்றது? மிகப் பெரிய திட்டம் இது. தமிழகத்தில் உள்ள சென்னை
நகரத்தில் நிறைவேற்றவேண்டிய மிகப் பெரிய திட்டம். லஸ்-லேயிருந்து
பீச்-க்கு ரெயில் திட்டம். அதற்கு மொத்தத்திலே பட்ஜெட்டிலே ரூ. 3½
கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிச் சொல்லும்
போது அதிலே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாநில அரசினுடைய
பங்கு என்ன என்று தெரியவில்லை. அதிலே மாநில அரசு என்ன செய்ய
இருக்கின்றது? மாநில அரசு அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்
கின்றது என்பதைப்பற்றி, நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பிறகு பதில்
அளிக்கும்போது, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க
வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கேகூட
நான் பேசுகின்றபோது நான் ஏதோ பிறரைப் புண்படுத்துவதற்காக பேச
வில்லை. ஆரம்பத்தில் தலைவர் பெயர் சொல்லி பேசியதைப் பற்றிச் சொன்
னேன். அதுபோல் நானும் பேச விரும்பவில்லை. எங்கள் தலைவர்
அவர்கள் திருச்சியிலே நடந்த ஒரு பொதுக் கூட்டத்திலே ஒவ்வொரு உறுப்
பினரும் அவர்கள் மேசைகளிலே, அலுவலகங்களிலே வைத்திருக்கவேண்டிய
ஒரு வாசகத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த வாசகத்தைக் கொடுத்து
அவர்கள் எங்களை வழியனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, பெரிய அதிர்ச்சிக்
குள்ளாகி நாங்கள் இருக்கவில்லை. அதிலே அளவுகடந்த மகிழ்ச்சி அடைந்து
விடவில்லை. ஜனநாயகத்திலே எதுவும் நடைபெறலாம். மக்கள்தான்
நமக்கு. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசுகின்றபோது
சொன்னார்கள். இந்தத் தேர்தல் முடிவை வைத்துக்கொண்டு, எங்களுடைய
தலைவர் பெயரைச் சொல்லிக்கொண்டு, அவர்கள் நாற்காலியிலே வந்து
உட்கார்ந்துவிடலாம் என்று கனவு காணவேண்டாம் என்றுகூட சொன்
னார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடியது அல்ல.

மக்கள்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடியதல்ல. அதற்கு அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. மக்கள் பார்த்துச் செய்தால் சரி. அது அவர்கள் தரவேண்டிய தீர்ப்பு. அவர்கள் பார்த்துச் செய்தால் நாம் உட்கார்ந்துகூட போகலாம். இருந்தாலும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அடக்கத்தோடு சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய தலைவரால் எங்களுக்கு அளிக்கப்பட்ட வாசகத்தைச் சொல்கிறேன். அதை மேஜை மேலே வைத்துக் கொள்ளலாம். அலுவலகத்திலேயே வைக்கக் கூடிய அளவுக்கு ஒரு போர்ட் மாதிரி இருக்கிறது. அதைக் கொடுத்திருக்கின்றார்கள். அதில் சொல்லியிருக்கின்றார்கள். 'உடன் பிறப்பே, அடக்கமும் பொறுப்புணர்வுடனும் செயலாற்றும் ஆர்வமும், அனுபவமும் நேர்மையும் தவறாத, நிர்வாகமும், வேண்டியவர் வேண்டாதவர் என்கின்ற விருப்பு வெறுப்பு காட்டாத கண்டிப்பும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற தளராத உள்ளத்துடனும், எளிய முறையில் வாழ்வும், இனிய இயல்பும், மக்கள் பிரச்சினைகளை உடனுக்குடன் அணுகி தீர்த்து வைக்கக்கூடிய துடிப்பும் கொண்டு தொண்டாற்றுவோம்' என்ற வாசகத்தைப் போட்டுக் கொடுத்திருக்கின்றார்கள். நீங்கள் உங்களுடைய டேபிளிலே வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். நாம் அங்கே இருந்து பணியாற்றும் போது அந்த வாசகம் அங்கே இருக்கும்.

இன்னொன்றும் சொல்லியிருக்கின்றார்கள். 'ஓய்வு இன்றி உழைத்திடு, ஒரு களங்கமும் இன்றி கடமையாற்றிடு, மக்களின் பார்வை உன் மீது' என்று தந்திருக்கின்றார்கள். மக்கள் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். மக்களுடைய தேவைகளை நாம் தீர்த்துவைக்க வேண்டும். அந்த மக்களுக்குப் பயந்து நாம் நடக்க வேண்டும். மக்களுக்காக நாம் நடக்க வேண்டும். நாம் அப்படி நடந்தால் எந்தப் பிரச்சினையையும் சமாளித்து விடலாம். வீட்டிற்காக என்ற அடிப்படையிலே இல்லாமல், நாட்டிற்காக நிதிநிலை இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே நிதிநிலை அறிக்கை இல்லை. கவர்னர் அவர்கள் உரையிலிருந்து மாறியிருக்கின்றது. தேர்தல் பாதிப்பிற்குப் பின்னாலே வந்த நிதிநிலை அறிக்கை நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி, அமருகிறேன்.

(முற்பகல் 11-25)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்ததற்காக நன்றியைத் தெரி





வித்துக்கொள்கிறேன். அடுத்த தேர்தலை நினைப்பவன் அரசியல்வாதி, அடுத்த தலைமுறையை நினைப்பவன் அரசியல் ஞானி என்று சொன்னார்கள். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் நடைபெற்று முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை மனதிலே வைத்துக்கொண்டு ஆளுநர் உரை கொடுக்கப்பட்டதாகவும், அதற்குப் பின்னாலே அந்தத் தேர்தலிலே ஏதோ அசம்பாவிதம் ஏற்பட்டு, தோல்வி ஏற்பட்டதால், அதை மனதிலே வைத்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை கொடுக்கப் பட்டதாகவும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காக ஒரு கருத்தை அவர்களுடைய உரையிலே சொன்னார்கள். மூன்று ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் என்ற வகையில், முதலாண்டு 10 லட்சம் வீடுகள் கட்டுவதாக ஆளுநர் அவர்கள் உரையிலே சொன்னார்கள், ஆனால் நிதி நிலை அறிக்கையில் அப்படிப்பட்ட நிலை இல்லையே, அந்த வீடுகளை எப்படிக் கட்டப் போகிறார்கள் ? மக்களைத் திசை திருப்புவதற்காக இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை ஆளுநர் உரையில் தேர்தலுக்காகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லி, அதை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு கடந்த கால சில நினைவுகளை இப்போது எடுத்துச் சொன்னால், அதிலிருந்து அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே மதிய சத்துணவுத் திட்டம் என்ற திட்டத்தை அமுலாக்கினார்கள். அதை சத்துணவுத் திட்டம் என்று சொல்லிய நேரத்தில், இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினருடைய தலைவர் அவர்கள் "இது பிச்சைக்காரத் திட்டம், இந்தத் திட்டம் நடைபெற முடியுமா, ஒழுங்காக இந்தத் திட்டம் நடக்குமா, வெற்றி பெறுமா"? என்று சொல்லி, ஒரு சந்தேகக் கேள்வியை அன்றையதினம் எழுப்பினார்கள். ஆனால் அன்றைக்கு முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் அவர்கள் "நிச்சயமாக இந்தத் திட்டம் வெற்றி பெறும், அப்படி வெற்றி பெறுவதற்குண்டான நிலைகளை அரசு மேற்கொள்ளும்" என்று சொல்லி, அதற்கு வலுவூட்டும் வகையிலே நடைமுறைகளைச் செம்மைப்படுத்தினார்கள். அப்படி அப்போதுகூட நிதிநிலை அறிக்கையில் பணம் ஒதுக்கவில்லையே, ஒதுக்காத நேரத்தில் எப்படி இந்தத் திட்டம் நடைபெறும் என்று சொன்ன தலைவர்தான் கடந்த தேர்தலில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவில் இருந்த அந்த இடைப்பட்ட காலத்தில் ஒன்றைச் சொன்னார்கள். பிச்சைக்காரத் திட்டம் என்று எந்தத் திட்டத்தைச் சொன்னார்களோ, எந்தத் திட்டம் வெற்றி பெறாது போய்விடுமென்று விமர்சனம் செய்தார்களோ, அந்தத் திட்டத்தை நாங்கள் வந்தால் இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்வோம் என்று சொல்லி, அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை கடந்த காலத்தில் இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பின

ரவர்கள் உணர்ந்திருப்பார்கள். அதைப்போல இது ஏதோ தேர்தலுக்காக வந்த வீடு கட்டும் திட்டம் என்றால், நிச்சயமாகச் சொல்வேன், அப்படியல்ல. இந்த நாட்டிலே விடுதலை பெற்றதற்குப் பின்னாலேகூட, காலந்தொட்டு பல ஆண்டுகளாக இருப்பதற்கு இடமில்லாமல் இருக்கும் ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து, அவர்கள் தங்குவதற்கு ஓரிடம் கொடுக்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தை முன்னோடியாக ஆளுநர் அவர்கள் உரையிலே அறிவித்திருக்கிறார்கள். எனவே படிப்படியாக, நிச்சயமாக வருகிற காலங்களில் நிறைவேற்றக்கூடிய நல்ல திட்டமாக அது செயல்பட இருக்கிறது. அப்படிச் செயல்படுத்திக் கொடுப்பார்கள் என்று இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

இதைப்போல சீருடை வழங்கும் திட்டத்தைக்கூட கொச்சைப்படுத்தினார்கள். இந்த அரசால் முடியுமா என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டதற்குப் பின்னாலே, இன்றையதினம் நாடு தழுவிய அளவுக்கு அனைத்து மக்களும் வரவேற்கும் அளவுக்கு அந்தத் திட்டம் செயல்பட்டு வரும் காட்சியை உறுப்பினரவர்கள் உணருவார்கள். அதைப்போல அனைத்து ஒன்றியங்களும் வளர்ச்சி பெற வேண்டுமென்று சொல்லி, தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்தபோது, இவர்கள் சந்தேகத்தைக் கிளப்பினார்கள். 'அந்தத் திட்டம் நடைபெறுமா, அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியுமா' என்ற சந்தேகத்தைக் கிளப்பியபோது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக இந்தத் திட்டம் நடக்குமென்று உத்திரவாதம் அளித்தார்கள். இப்படி எதை எடுத்தாலும் சந்தேகத்தோடு பார்க்கும் பார்வை பெற்றிருக்கிறோம். இருந்தாலும், எதையும் வெற்றிகரமாக முடித்துக் கொடுக்கும் அரசியல் ஞானியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டின் முதல்வராக இருக்கிறார்கள். நடந்து முடிந்த தேர்தலைப் பற்றிப் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். விலாசத்தைச் சொன்னாலே வெற்றிகள் வருவதில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன், விலாசம் இல்லாதவர்களுக்கு விலாசம் தந்தவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்று அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, திட்டங்களைத் தருகிற தலைவராகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

எனவே எங்களுக்குத் தோல்வி புதிதாக ஏற்பட்டது போலவும், நாங்கள் தோல்வியைக் கண்டு துவண்டு போனது போலவும் இங்கே தெரிவித்த மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள



படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, அவர்களுக்கு 16க்கு 16 இடங்களும் எங்களுக்கு இரண்டு இடங்களும் கிடைத்தவுடன் 'பார்த்தீர்களா பார்த்தீர்களா மக்கள் எல்லாம் மதி மயக்கத்திலிருந்து தெளிவுபடைந்து விட்டார்கள், அறிவாளிகளாக மாறிவிட்டார்கள்' என்று நாடு பூராவும் எடுத்துச் சொன்னார்கள். வால்போஸ்டர் கூட ஒட்டினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைவர் மரியாதைக்குரிய கலைஞர் அவர்களையும் அந்த வால்போஸ்டர் படத்திலே போட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு விரல்களை காட்டுவதுபோல் போட்டு "பார்த்தீர்களா எம்.ஜி.ஆருக்கு இரண்டே இரண்டு இடங்கள்தான்" என்று சொல்லி வால் போஸ்டர் போட்டு, தமிழ்நாடு பூராவும் அதனை ஒட்டி பெருமிதம் அடைந்தார்கள். அப்போதும் எங்களுடைய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுமையாகத்தான் இருந்தார்கள். வெற்றி அடைந்தவுடன் பெருமிதம் கொள்வதும், தோல்வியடைந்தவுடன் துவண்டு விடுவதும் போன்ற நிலைமை என்றைக்கும் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடையவே கிடையாது. அப்போது இவர்கள் என்ன சொன்னார்கள்? "மக்கள் எல்லாம் தெளிவு பெற்றுவிட்டார்கள். மதிமயக்கத்திலிருந்து மக்கள் தெளிவு பெற்று விட்டார்கள். அதனால்தான் 16-க்கு 16 இடங்களிலும் நாம் வெற்றி பெற்றுவிட்டோம்" என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் கொஞ்சம் நாட்கள் கழித்து சட்டமன்றத் தேர்தல் வந்தது. இங்கே முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினருடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே மிகப் பெரிய கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அவர்கள் துரதிருஷ்டம் என்னவென்றால், மக்களுடைய கணிப்பு வேறாக இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு இரண்டு இடங்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். "வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் சட்டமன்றத் தொகுதிகள் அனைத்திலும் மக்கள் முழுமையாக நம்மைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்", என்றும் ஏதோ முதலமைச்சர் நாற்காலி அவர்களுடைய கையில் இருப்பது போலவும் கனவுலகில் மிதந்து கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல புரட்சித் தலைவர் அந்தத் தேர்தலில் வரப்போவதில்லை, அவர் கேட்டால் வேண்டுமென்றால் ஒன்றிரண்டு இடங்கள் தருவோம் என்கிற முறையில் அறிவித்தார்கள். அது மட்டுமல்ல. திருத்தணியிலிருந்து தேரை ஏற்பாடு செய்து, அதில் 16 குதிரைகள் பூட்டப்படுவது போல் வால்போஸ்டர் எல்லாம் அடித்தார்கள். மேலும் 'இன்றுபோல் என்றும் வாழ்க' என்றும் அதிலே சொல்லியிருந்தார்கள். அதோடுகூட பார்த்தீர்களா பார்த்தீர்களா மக்கள் மதிமயக்கத்திலிருந்து தெளிவு பெற்று விட்டார்கள், மக்கள் தெளிவு பெற்று அறிவாளிகளாக மாறிவிட்டார்கள் என்

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1986 மார்ச் 26

றெல்லாம் சொன்னார்கள். அதே அடிப்படையில் இன்றைக்கும் மக்களை ஏமாற்றுகிற முயற்சியை பரம்பரையாகச் செய்து வருகிற அடிப்படையில், மக்களைத் திசை திருப்புகிற வகையில், சமீபத்தில் நடைபெற்ற தேர்தலைப் பயன்படுத்தி, மக்கள் மதிமயக்கத்திலிருந்து தெளிவுபெற்று விட்டார்கள் என்கிற வகையில் கருத்துக்களைச் சொல்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, ஒன்றைச் சொல்வேன். பதவிக்கு வந்து அதன்மூலம்தான் மக்களுக்குத் தொண்டு செய்ய முடியும், புகழ் பெற முடியும் என்ற அவசியம் எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்றைக்கும் இருந்தது கிடையாது. எங்கே இருந்தாலும் புரட்சித் தலைவர் புரட்சித் தலைவர்தான். அவர்கள் என்றைக்கும் மக்கள் தலைவர்தான். மக்களை நம்பியிருக்கிறவர் அவர், அதுபோல் மக்கள் நம்பி இருக்கிற தலைவரும் அவர் ஒருவர்தான். அந்த அடிப்படையில் என்றைக்கும் எங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மக்களுக்குத் தொண்டாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் முடிவைக் கண்டு நாங்கள் எல்லாம் துவண்டு விட்டோம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துவண்டு விட்டது என்கிற நிலையில் எங்கள் புரட்சித் தலைவர் என்றைக்கும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினருக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன், விலாசம் தெரியாதவர்களின் விலாசத்தை எல்லாம் தெரியப்படுத்தியவர்கள் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினருடைய தலைவர் களைக் கேட்டாலே சொல்வார்கள். அந்த அளவிலே இருக்கிற எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெருமையைப்பற்றி நான் இங்கே சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பது இல்லை, இந்த நாட்டு மக்கள் எல்லோரும் இதை உணர்ந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவூட்டி தேர்தல் பிரச்சினையை இத்துடன் முடித்துவிடுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் வரவு-செலவுத் திட்டத்தை இந்த நாட்டிலுள்ள ஏழைகள் எல்லாம், நல்லவர்கள் எல்லாம், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்கள் எல்லாம் போற்றி பாராட்டியிருக்கிறார்கள். மத்திய அரசு கொண்டு வருகின்ற திட்டங்களை எல்லாம், குறிப்பாக மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்த 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களின் நிலையை மேம்படுத்த அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை நல்ல முறையில் இந்தியாவிலேயே நிறைவேற்றிய மாநிலம் எது என்று கேட்டால், அது நம்முடைய தமிழகம்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

(முற்பகல் 11-35)

மற்ற வடபுலத்து மாநிலங்களைக் காட்டிலும் 52 சதவீத வறுமைக்கோட்டு எண்ணிக்கையை 40 சதவீதமாகக் குறைத்துக் காட்டிய ஒரு அரசு இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிதான். நிர்வாகத்தைச் சீராக்கி அப்படி சீராக்குகிற காரணத்தால் அரசின் திட்டங்கள் நாட்டு மக்களிடம் போய்ச் சேருகிற நிலையில், நியாயமாக எடுத்துக்காட்டாக இருக்கிற அரசு புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை நாம் மறுக்க முடியாது. அது போலவே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு ஒதுக்கப்பட்ட தொகையான 960 கோடி ரூபாய் போதாது என்று சொல்லி வாதாடி 1069 கோடி ரூபாயாக உயர்த்தி வாங்கியதும் இந்த அரசுதான் என்பதையும் மறுக்க முடியாது. அதன் காரணமாக பல முன்னோடித் திட்டங்கள் இங்கே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். அதேபோல, 1986-87 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு 1153 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கினாலும், அங்கே வாதாடி அதை 1,200 கோடி ரூபாயாக உயர்த்திப் பெற்றதும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சில பேர் இன்றைக்குப் பேசுகிறார்கள். நகராட்சித் தேர்தல்களில் பெற்ற வெற்றிக்குப் பின்னாலே, இந்த வெற்றியைப் பார்த்து ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனே நடுங்கி ஓடி ஒளிந்து கொண்டிருப்பதைப்போல ஒரு மயக்கத்தை இங்கே ஏற்படுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் தேர்தல் நேரத்திலே ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி அறிக்கை விடவில்லை, கூட்டணிக் கட்சிகளிடம் அதுபற்றிப் பேசவில்லை. அப்படிப் பேசியிருந்தால், கூட்டணி கலகலத்துப் போயிருக்கும். அதை மூடி மறைத்துவிட்டார்கள். ஆனால் இப்போது தேர்தலுக்குப் பிறகு ஜெயவர்த்தனே ஓடி ஒளிவதாகச் சொல்கிறார்கள். இந்த வெற்றி ஏதோ சந்தர்ப்பவசத்தால் பெற்ற வெற்றிதான். வெற்றி பெற்றுவிட்டதாக ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீலங்காவில் இன்றைக்கும் அடிபட்டுக் கொண்டிருக்கிற, நசித்துக்கொண்டிருக்கிற தமிழர்களுக்கு, இங்கே தமிழன், தமிழன் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள், தனது பையிலிருந்து ஒரே ஒரு பைசா செலவழித்தார்களா? அங்கே கற்பிழந்து கதறிக்கொண்டிருக்கும் தமிழச்சிக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை சொன்னார்களா, ஒரு பைசா அனுப்பினார்களா? இன்றைக்கு தி.மு.க. போய் 'டெசோ' என்ற அமைப்பு வந்திருக்கிறது. இது ஒரு மயக்கம்தான். ஸ்ரீலங்கா தமிழர்கள் பற்றி வாய் நிறைய இப்போது பேசுகிறார்களே, அவர்களுக்காக என்ன உதவிகள் செய்தார்கள்? இந்த சம்பவங்களை வைத்துக் கொண்டு அரசியல் லாபம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1986 மார்ச் 26

திரு. இராதா கூட ஒன்றைச் சொன்னார். அங்கே அடிபட்டுக் கொண்டிருக்கிற தமிழர்கள் பிரச்சினை பற்றிப் பேச "தமிழ் நாட்டுத் தமிழர்களே, ஒன்றுபடுங்கள்" என்று இங்கே ஒரு கருத்துச் சொல்லப்பட்டபோது, "இல்லை இல்லை, நாங்கள் தனியாகத்தான் பேசுவோம், தனி ஊர்வலம் நடத்துவோம், தனிப் போராட்டம் நடத்துவோம்" என்றுதான் சொன்னார்களே தவிர, ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக இங்கேயுள்ள தமிழர்களே ஒன்று சேரவில்லை என்பதைக் காண்கிறோம். இப்படி இங்கே அரசியல் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை மைய அரசுக்கு எடுத்துக் காட்ட ஒன்று திரளுவோம் என்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. அப்படி அழைத்த நேரத்தில் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தவர்கள் சொல்கிறார்கள். "இன்றைக்கு ஜெயவர்த்தனே ஒளிந்துகொண்டார், ஓடி விட்டார்" என்று. இது கனவில் வேண்டுமானால் வரலாம், நடைமுறையில் வராது என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

தமிழ் நாட்டில், அடிக்கடி வெள்ளம் அல்லது வறட்சி வந்துகொண்டிருப்பதைப் பற்றிப் பேச விரும்புகிறேன். மழை பெய்தும் கெடுக்கிறது, பெய்யாமலும் கெடுக்கிறது. கடற்கரையோரப் பகுதிகளில் மழை பெய்து வெள்ளத்தை சமீபத்தில் ஏற்படுத்திய நேரத்தில், எங்கள் பெரியார், கோவை போன்ற மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவுகிறது. இப்போதே 300, 350 அடிக்குக் கீழே தண்ணீர் போய்விட்டது. அப்படிப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இந்தக் கடுமையான பிரச்சினையைத் தீர்க்க 1986-87 ஆம் ஆண்டுக்கு 45 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. 1972-ல் எங்களுடைய கட்சி தோன்றிய நேரத்தில் எங்களுடைய தலைவர், "இந்த நாட்டு மக்கள் குளிப்பதற்காகத் தண்ணீர் கேட்கவில்லை, குடிப்பதற்காகக் கேட்கிறார்கள். அதைத் தீர்க்க எங்கள் இயக்கம் பாடுபடும்" என்றார்கள். இயற்கையின் காரணத்தால், இயற்கையின் வஞ்சனையால் எங்கள் மாவட்டத்தில் மிக மோசமான நிலையில் நிலத்தடி நீர் கீழே போய்க்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11-40)

எனவே அந்த நிலைகளை மாற்றுவதற்காக ஏறத்தாழ 45 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், அதை நாம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இந்த நேரத்தில் மத்திய அரசின் கவனத்திற்குக் ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். கங்கையும் காவிரியும் இணையுமா, இணையுமா என்று



1986 மார்ச் 26] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

நிச்சயமாக முடியாது. இப்போது அவ்வாறு கங்கையும் காவிரியும் இணைய வேண்டிய அவசியமும் இல்லை. வேண்டுமானால் கங்கையைச் சுத்தம் செய்யலாம். கங்கை நீரை இங்கே கொண்டுவரக் கூடிய நிலை தற்போது இல்லை. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, நாட்டில் ஓடுகிற நதிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்கெங்கு தண்ணீர் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம், எங்கெங்கு தண்ணீர் மிதமிஞ்சி இருக்கிறதோ அங்கிருந்து தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய உரிமையை மத்திய அரசு எடுத்துக்கொண்டு, தண்ணீரைப் பரவலாக்கி தண்ணீரின் தேவையை அனைவருக்கும் சமமாக்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை மத்திய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு இதனை மனதிலே கொண்டு, நதிகளைத் தேசிய மயமாக்கி, காய்ந்து போகிற இடங்களுக்கு அதிகத் தண்ணீர் உள்ள இடங்களிலிருந்து தண்ணீரைத் திருப்பிவிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பெரியார் மாவட்டத்திலேதான் லோயர் பவானி அணை இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டம் டெல்டா பகுதிக்குத் தண்ணீர் விடுவதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எங்களுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் லோயர் பவானியில் தண்ணீர் இருக்கிற நேரத்தில் இரண்டு முறையோ அல்லது மூன்று முறையோ பாசனத்திற்குத் தண்ணீர் விட முயற்சி செய்தால், நிலத்தடி நீர் அதிகரித்து அப்பகுதி மக்களுக்கு இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், அதற்கு அரசு முனைப்பாக முயற்சி எடுத்து லோயர் பவானி தண்ணீரை, தண்ணீர் இருக்கிற சமயங்களில் ஒரு முறையாவது விட்டு, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் வறட்சி இருந்தாலும், வெள்ளம் இருந்தாலும், குறுவை விளைந்தாலும், சம்பா விளையாமல் போனாலும், நாட்டிலே விலைவாசி ஏறாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய அரசு டாக்டர் புரட்சித் தலைவர் அரசுதான். இதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். 1972-73-ல் ஒரு கிலோ அரிசி பத்து ரூபாய்க்கு விற்ற பெருமை குச்சிக் கிழங்கு மாவு கூட கிலோ 3½ ரூபாய், 4 ரூபாய்க்கு விற்ற பெருமை இந்த மண்ணுக்குத்தான் உண்டு. இந்தியாவில் கிலோ பத்து ரூபாய்க்கு அரிசி விற்ற அருமை பெருமை எல்லாம் இந்த மண்ணுக்குத்தான் உண்டு. அப்போதும் அரிசி விளைந்தது. ஆனால், விளைந்த அரிசி எப்படி எங்கே போயிற்று?

அவர்களைத்தான் கேட்க வேண்டும். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில் கடந்த எட்டு ஆண்டுக் காலத்தில் விநியோக முறையைச் சீராக்கி இருக்கிறோம். 600 குடும்ப கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று ஏற்படுத்தி, அங்கே அரிசியிலிருந்து அனைத்து இன்றியமையாப் பண்டங்களும் கிடைக்கக்கூடிய பொது விநியோக முறையைச் சீராக ஆக்கி, தமிழ் நாட்டில் சிறப்பான முறையில் விநியோக முறையை நடத்திக் கொண்டிருக்கிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசாகும்.

தொழில் வளர்ச்சியைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். தொழில் வளரவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிலிருந்து சுமார் 84 தொழில்களைத் தொடங்குவதற்கு மாநில அரசு, மத்திய அரசிடம் அனுமதி கோரியிருக்கிறது. ஆனால் இதுவரை அங்கிருந்து ஒரு பதிலையும் காணோம். அனுமதி கேட்டு அனுப்புகிற மனுக்கள் எல்லாம் இங்கே மாநில அரசிடமே குவிந்து விட்டது போலவும், அதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் சிலர், ஆலோசனை சொல்கிறார்கள். சுமார் 84 தொழிலுக்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டு எழுதி, இதுவரை அவர்கள் பதில் இல்லை என்று சொல்கிற அளவுக்குத்தான் மத்திய அரசு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதைப்பற்றி இங்கே விமர்சனம் செய்கிறவர்களும் மத்திய அரசுப் பொறுப்பிலே இருக்கும் கட்சியினைச் சேர்ந்தவர்கள்தான். இங்கே விமர்சனம்

(முற்பகல் 11-45.)

செய்கிறவர்கள், மத்திய அரசிலே பொறுப்பிலே இருக்கிறவர்களை அணுகி அந்த 84-ல் 10 அல்லது 15 ஆவது ஒரு ஆண்டுக்கு தொழில் உருவாவதற்கு அனுமதி வழங்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல 1967-க்குப் பின்னால் தமிழ் நாட்டில் மைய அரசு ஒரு பெரிய முதலீடு செய்து தொழில் ஆரம்பித்ததாக இதுவரை இல்லை. என்றாலும் கூட ஒரு பெரிய மூலதனமிட்டு தொழில் தொடங்க மைய அரசு முன்வரவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வேன். மத்திய அரசை, இங்கே இருக்கிற இந்திய தேசிய காங்கிரசைச் சார்ந்த பெரியவர்கள் சார்பாக, உறுப்பினர்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்வேன். சேலம் உருக்குத் தொழிற்சாலையை விரிவுபடுத்த நாம் ஆண்டுக்காண்டு எழுதிக் கொண்டிருக்கிறோம்; வற்புறுத்தி வருகிறோம். அதை விரிவுபடுத்துவதால் நட்டம் கிடையாது ; அதனால் லாபம்தான் வரும். வட்புலத்திலே இரும்புத்





தொழிற்சாலைகளிலே நட்டம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு அப்படியல்ல. அது லாபம் தரும் தொழில். அதை மத்திய அரசு எடுத்துக்கொண்டு அதை விரிவுபடுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும் போது, தென்புலத்தில் எப்படியெல்லாம் ஆபத்து வர இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். சைனாவும், பாகிஸ்தானும் இன்று ஸ்ரீலங்காவின் கூடிக் குலாவி தமிழர்களை அழிப்பதற்கு முனைந்து கொண்டிருக்கிறார்கள்; அமெரிக்காவினுடைய பார்வை தென்கோடியிலே உச்சகட்டப் பார்வையாக அமைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். எனவே தென் புலத்திற்கு ஒரு பாதுகாப்பு வர வேண்டுமென்று சொன்னால், தென் பகுதி சேதுசமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு விரைவாக எடுத்துக் கொள்ள வேண்டும். அது 120 ஆண்டுக் காலமாக, அதற்கு ஆலோசனை சொல்வது, பிறகு அதைக் கிடப்பிலே போடுவதுமாக அந்தக் காலம் தொட்டு கிடப்பிலே கிடந்து வருகிறது. மத்திய அரசுக்கு நம்முடைய இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்த பெரியவர்கள் எல்லாம் ஆலோசனையாக, வேண்டுகோளாக—எங்களை தேர்தல் நேரத்திலே விமர்சனம் செய்யுங்கள். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை—சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழில்களுக்குரிய விண்ணப்பங்கள் எல்லாம் அங்கே தூங்குகின்றன. அந்த 84 விண்ணப்பங்களை மத்திய அரசு தயவுசெய்து அனுப்பினால், அது சிறப்பாக இருக்கும். அதோடு சேது சமுத்திரத் திட்டத்தையும் மைய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைச் செய்யக்கூடிய சூழ்நிலையை காங்கிரசு கட்சி உறுப்பினர்கள் உருவாக்க வேண்டும். அந்த சேதுசமுத்திரத் திட்டம் வருவதற்கு அவர்களால் ஆன உதவிகளை அவர்கள் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்னொரு மிகப் பெரிய திட்டம். இரயில் பெட்டி தொழிற்சாலையை விரிவுபடுத்துவது கிட்டத்தட்ட 30 அல்லது 35 ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. இங்கே இருக்கிற ஐ.சி.எப். தொழிற்சாலை இந்தியாவிலே ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அது லாபம் பெறக்கூடிய ஒரு தொழிற்சாலையாக இருந்து வருகிறது. அந்தத் தொழிற்சாலையைக் கூட இன்றையதினம் வடபுலத்திலே இருக்கிற வேறு இடத்திற்கு மாற்றப் போவதாக அல்லது புதிதாக ஆரம்பிக்கப்போவதாக ஒரு நிலை இருந்து வருகிறது. (குறுக்கீடு . . .எங்கே). வடபுலத்திலே கபுர்தலாவில்

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1986 மார்ச் 26

புதிய இரயில் பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்; அதைக் குறை சொல்லவில்லை. ஆனால் இங்கே இருக்கிற அந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசுக்கு ஏன் மனம் வரவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. மைய அரசு அதில் முனைப்பாக இருந்து அதைச் செய்ய வேண்டும். நம்முடைய மாநில அரசு அதற்கு ஒத்துழைப்பு தருகிறது. மத்திய அரசு கேட்பதை எல்லாம் தருகிறோம். இப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, மைய அரசு அதைப் புறக்கணிக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கு வந்து தொழில் இல்லை, தொழில் இல்லை என்று சொல்வதைக் காட்டிலும், இந்த மாநில அரசுக்குச் செய்ய வேண்டியதை அங்கே இருந்து நீங்கள் எங்களுக்கு தயவுசெய்து செய்யுங்கள், வேகப்படுத்துங்கள், முனைப்பாக நில்லுங்கள் என்று தமிழ் சமுதாயத்தின் சார்பாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு தொழில்கள் இங்கே வரட்டும். அவைகள் வந்தால் துணைத் தொழில்கள் எல்லாம் இங்கே உருவாகக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த நிலையிலே காங்கிரஸ் உறுப்பினர்கள் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல திட்டங்களை, சமுதாயத்திலே வாடிக்கொண்டிருக்கிற, வதங்கிக் கொண்டிருக்கிற ஏழைகளுக்காக இந்த அரசு தந்திருக்கிறது. அதையெல்லாம் உறுப்பினர்கள் பாராட்டாவிட்டாலும் நல்லவைகளை எடுத்துச் சொல்லும் அளவுக்கு அவர்கள் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று தஞ்சை டெல்டா பகுதியில் இயற்கை வாயு கணிசமான அளவுக்கு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அது ஆய்வில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே பூமிக்கு அடியில் கிடைக்கிற எண்ணெய் வளமானதாகவும், தரமானதாகவும், அது பயன்படுத்தக்கூடிய அளவில் சிறப்பானதாகவும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம். மத்திய அரசு அதைப் பயன்படுத்தி, ஏற்படுத்துகிற தொழிற்சாலையை கொஞ்சம் விரைவுபடுத்துங்கள்; ஆகட்டும் பார்க்கலாம் என்ற நிலையிலே இல்லாமல், மத்திய அரசு அதை விரைவுபடுத்துமேயானால், தஞ்சைத் தொகுதியைப் பொறுத்த வரையில், அங்கு வாழ்கிற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். தஞ்சை டெல்டா பகுதி, எங்கு பார்த்தாலும் விவசாயத்தைத் தவிர, வேறு எதுவுமே இல்லாத பகுதி. அதுவும் நெல் மட்டும் விளையும் பகுதியாக அது இருக்கிறது. பணப் பயிர்கள் என்று சொல்கின்ற கரும்பு, மஞ்சள்



1986 மார்ச் 26] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

போன்ற பயிர்கள் விளைச்சல் இல்லாத, நெல்லை மட்டும் பயிரிடுகிற பகுதியாக இருக்கிறது. அதுவும் 6 மாதம் வேலை, 6 மாதம் சும்மா இருக்கும் சூழ்நிலைதான் தஞ்சையில் இருக்கும் அத்தனை பேர்களுக்கும் இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஒரு உறுதுணையாக, ஒரு வரப்பிரசாதமாக அவர்களுடைய வறுமையை நீக்குகிற வகையிலே புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். இன்று நாடு பூராவும், உலகம் பூராவும் எண்ணெய் வளம் குறைந்து கொண்டிருக்கும் நேரத்தில் தஞ்சைத் தரணியில் கிடைக்கும் அந்த எண்ணெயை வெளியே கொண்டுவந்து அதற்குரிய தொழிற்சாலையை தயவு செய்து மத்திய அரசு அங்கு உருவாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அப்படிப்பட்ட பெருந்தொழில்கள் எல்லாம் மைய அரசின் பார்வைக்கு வாராமல் மக்களுக்கும் பயன்படாமல் முடங்கிக் கிடைக்கின்றன அவற்றையெல்லாம் விரைவில் வெளியே கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே பல வரிகளை நீக்கியிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பல சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் இருந்தாலும்கூட சிலர் இங்கே கடந்த தேர்தல் முடிவுகளைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களையும் நான் ஒன்றை மட்டும் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "1969-க்குப் பின்னால் 1976 ஆம் ஆண்டு வரை ஒரே ஒரு அகவிலைப்படிக்காக இந்தக் கோட்டை மதிலை சுற்றிச் சுற்றி வந்து முழக்கமிட்டு ஒரு அகவிலைப் படி வாங்குவதற்கு எவ்வளவு துன்பப்பட்டீர்கள், எவ்வளவு துயரப்பட்டீர்கள், எவ்வளவு வேதனைப்பட்டீர்கள்? இன்றைக்கு நிலைமை என்ன? மைய அரசு ஒரு அகவிலைப் படி உயர்வை அறிவித்த உடனே நாங்களும் கொடுப்போம் என்று எங்கள் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு வாரி வழங்கவில்லையா? இப்படிப்பட்ட புரட்சித் தலைவர் அரசா உங்களுக்கு தவறு இழைக்கும் என்று நினைக்கிறீர்களா? எனவே எதிர்காலத்திலாவது உங்களுடைய மனதை மாற்றிக்கொள்கிற சூழ்நிலையை, உருவாக்கிக்கொள்ளுங்கள்" என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்ந்து கிடக்கிற மக்களை, வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களை வாழ்க்கையின் மேலே கொண்டு வருவதற்காகச் செயல்படுவது எங்கள் புரட்சித் தலைவரின் அரசு. ஏழை எளிய மக்களின் எண்ணத்தை

யெல்லாம் திட்டமாக வடிவம் கொடுத்து செயல்படுத்துகிற அரசு எங்கள் புரட்சித் தலைவர் அரசு. அடுத்த அரசியல் தலைமுறையினர் வியப்போடு எண்ணிப் பார்க்கிற ஒரு அரசியல் ஞானியாக இருக்கிற தலைவர் எங்கள் புரட்சித் தலைவர் என்பதைச் சொல்லி, எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும் நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில் பங்கு கொள்வதற்காக காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னை அழைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை முதலிலிருந்து நன்றாக ஊன்றிப் படித்தால், ஒரு செயல்படுகிற அரசின் நிதிநிலை அறிக்கையாக இது தெரியவில்லை. இதைப் படிக்கிறபோது ஒரு மனநிறைவு ஏற்படுவதாக இல்லை என்பதைப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ ஒரு நிர்வாக அறிக்கையைப் படிப்பதைப்போல்தான் இருக்கிறதே தவிர, ஒரு ஆரோக்கியமான, செயல்படுகிற அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தைப் படிக்கிறோம் என்ற மன நிறைவை அளிப்பதாக இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில் இதில் குறிப்பிடப்பட்டுள்ள வரிச் சலுகைகளையும் நான் வரவேற்கிறேன். ஆனாலும் ஒரு சில வரிச் சலுகைகள் எவ்வாறு சும்மா ஏமாற்று வித்தையாக இருக்கின்றன என்பதையும் நான் அவைக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு 10 இனங்களின் மீது அறவே விற்பனை வரி நீக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். அதைப்போலவே அதில் உள்ள ஒரு சில குறைபாடுகளையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதோ தாய்க்குலம், தாய்க்குலம் என்று சொல்லிக்கொண்டே இருந்தாலும், தினமும், "கொண்டு வந்த வரதட்சணை போதாது, போட்டுக்கொண்டு வந்த நகை போதாது, இன்னும் கொஞ்சம் வாங்கிக் கொண்டு வா" என்று அக்கினிப் பிரவேசம் செய்து கொண்டிருக்கிற தாய்க் குலத்திற்கு ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று நினைத்து "மெட்டிக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது" என்று கருதுகிறேன். இந்த மெட்டி ரூ. 30 பெறுமானமுள்ள மெட்டி. இது என் காலில் போடப்பட்டு 3 ஆண்டுகளாகின்றன. இன்னும் 3 வருஷத்திற்குக் குறைவில்லாமல் உழைக்கும். இந்த 30 ரூபாய் பெறுமானமுள்ளதற்குத்தான் விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருக்கிறார்கள்.





(மாண்புமிகு திரு. ஆர். டி. சீத்தாபதி குறுக்கிட எழுந்தார்)

தயவுசெய்து என்னுடைய பேச்சில் யாரையும் குறுக்கிட அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதாவது அவர்கள் சொல்ல வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் பேசும்போது சொல்லட்டும். என்னுடைய நேரத்தை அவர்கள் எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி (உட்கார்ந்தபடியே): குறுக்கிட விரும்பவில்லை.

திருமதி வி. ஜெயலட்சுமி: I am not yielding இந்த மெட்டியின் மீதான விற்பனை வரியை எடுப்பதைக் காட்டிலும் ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் எல்லாம் காது மூக்கில் போடுகிற கம்மல், மூக்குத்திகளுக்கு உள்ள விற்பனை வரியை நீக்கியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். அவற்றின் மீது தற்போது 5 சதவீதம் விற்பனை வரி நகைக் கடைகளில் போடப்படுகிறது. அதை எடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். ஆயிரத்திற்கு 52½ ரூபாய் வரி, அதற்கு மேலே சர்சார்ஜ், சேதாரம், கூலி என்று எல்லாமாகச் சேர்த்து ரூ. 100 ஆகிவிடுகிறது.

(முற்பகல் 11-55)

இந்த ஒரு இனத்தின்மீது விற்பனை வரி விலக்கு அளித்திருந்தால், 'தாய்க் குலத்திற்கு மன நிம்மதியை, சந்தோஷத்தை அளித்திருக்க முடியும். அதிலேயும் தவறிவிட்டிருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் விதைக்க சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகள், அதற்கடுத்தாற்போல் கோழித் தீவனங்கள் ஆகியவற்றுக்குள்ள வரி ஐந்து சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது மன நிறைவு அளிப்பதாக இருந்தாலும், கோழித் தீவனத்தின் மீதான வரியை அடியோடு நீக்கியிருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் 2 சதவீத வரி என்பதால் பெரிய வருமானம் ஒன்றும் வந்துவிடாது. மேலும் வேலையில்லா பட்டதாரிகள்தான் கிராமப்புறங்களில் உள்ள 75 சதவீதம் கோழிப் பண்ணைகளையும், கறவை மாடுகளையும் வைத்திருக்கிறார்கள். கோழித் தீவனத்திற்கு வரியைக் குறைத்ததைப் போல மாட்டுத் தீவனத்தின் மீதான வரியையும் குறைத்திருந்தால், தமிழ் நாட்டில் பால்வளம் அதிகமாகப் பெருகியிருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1986 மார்ச் 26

சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகளுக்கு வரிவிலக்கு அளித்திருக்
கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதைப் போலவே விவசாயிகளுடைய
ஷ்டங்களைப் போக்கக்கூடிய நிவாரண நடவடிக்கைகள் ஏதும் இல்லை
ன்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விவசாயிகள்
வைத்துள்ள பம்ப்செட்டுகளுக்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்றிருப்
பதை 50 ரூபாயாகக் குறைக்க வேண்டும் என்று பல முறை இந்த மன்றத்
திலேயும், சொல்லியிருக்கிறோம்; முனுஆதி கமிட்டியிலேயும் விவசாயிகள்
தூதுகோஷ்டியின் மூலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால்
இதுவரை இந்தக் கோரிக்கை கவனிக்கப்படவில்லை. இந்த நிதிநிலை
அறிக்கையிலாவது விவசாயிகளுக்கு நிவாரணம் வருமா என்று பார்த்தால்,
அதுவும் இல்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுள் என்னுடைய
பகுதியும் ஒன்று. அங்கே அறவே இறவைப் பாசனத்தை இரண்டு மாத
காலமாக நிறுத்திவிட்டோம். இறவைப் பாசனம் இருந்தாலும், இல்லா
விட்டாலும், கட்ட வேண்டிய கட்டணத்தைக் கட்டியே ஆக வேண்டுமென்று
மின்சார இலாக்காவினர் கெடுபிடி செய்து வசூலித்துக் கொண்டிருக்கின்றனர்.
அப்படி கட்டவில்லையென்றால், மின்இணைப்பைத் துண்டிக்கும் நிலைமை
அங்கே இருக்கிறது. ஆகவே வெள்ள நிவாரணப் பணிகளைப்பற்றிச்
சொல்லும்போது, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப்பற்றியும் சொல்லி
யிருப்பார்கள் என்று இந்த நிதிநிலை அறிக்கையின் முதலிலிருந்து கடைசி
வரையில் தேடிப் பார்த்தேன். ஓரிடத்திலும் அப்படிச் சொல்லப்படவில்லை.
காமராஜர் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவிலும், மதுரை மாவட்டம்,
திருமங்கலம் தாலுக்காவிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர்
தாலுக்காவிலும் மற்றும் பல பகுதிகளிலும் வறட்சி கடுமையாக உள்ளது
என்பதை நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன். சாயல்குடி பகுதியில் அல்லிகுளம், தோப்பம்பட்டி ஆகிய கிராமங்
களில் தொடர்ந்து கடந்த மூன்றாண்டுக்காலமாக குடிநீர் கிடைக்காத நிலை
மையில் மக்கள் ஊரைவிட்டு வெளியேறும் நிலைமை இருக்கிறது. திரு. இராஜ
சேகரன், எம். பி. வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க
வேண்டுமென்று சொல்லி, போராட்டம் நடத்தத் தயாராக இருந்தார்கள்
என்பதை பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்தேன். அதே சமயத்தில்



1986 மார்ச் 26] [திருமதி வி. ஜெயலட்சுமி]

ரெவின்யூ போர்டைச் சேர்ந்த ஹரிபாஸ்கர் குழுவினர் காமராஜ் மாவட்டத்
திலேயுள்ள சிவகாசி, சாத்தூர் போன்ற பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணி
களைப் பார்க்கச் சென்றிருந்தார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது.
அவை முன்னவர் மூலமாக இதைப்பற்றி ஒன்றை நான் அறிய விரும்புகிறேன்.
ஹரிபாஸ்கர் கமிட்டி, வறட்சி நிவாரணப் பணிகளைப்பற்றி ஏதாவது
அறிக்கை சமர்ப்பித்திருக்கிறதா? அறிக்கை சமர்ப்பித்திருக்கிறதென்றால்,
அதன் அடிப்படையில் வறட்சி நிவாரணப் பணிகளை ஆரம்பித்து, முக்கிய
மாக குடிநீர் கிராமப்புற மக்களுக்கு தடையில்லாமல் வழங்க ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், இந்த நிதிநிலை அறிக்கையில் பாப்புலிஸ்ட்
ஸ்கீம்கள் முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சத்துணவுத் திட்டம், இலவச
சீருடைத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், நலிந்த பிரிவின
ருக்கு வேட்டி, சேலை கொடுக்கும் திட்டம் ஆகிய இத்தகைய திட்டங்
களுக்குத்தான் 75 சதவீத வருவாய் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரி
விக்க விரும்புகிறேன். இதனால் மட்டும் நாட்டிலே வறுமை ஒழிந்து
விடுமா? காலாகாலத்திற்கு இத்தகைய திட்டங்களை வைத்துச் செயல்பட
முடியுமா? இதைவிட இதற்குச் செலவழிக்கும் தொகையை நிரந்தரமான,
தொலைநோக்கோடு கூடிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து வேலை
வாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழில் கொள்கைகளை வகுத்தால், நன்மை
பயக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் தொழில் வளர்ச்சியை நாம் எடுத்துக்கொண்டோமானால், மற்ற
மாநிலங்களிலே, அயல்நாட்டிலே வசிக்கும் இந்தியர்கள் தங்களுடைய
முதலீட்டை வைத்து அங்கே தொழில்களை ஆரம்பிக்கத் தயாராக இருக்கின்
றார்கள். அதே நேரத்திலே தமிழகத்திலே மட்டும் அவ்வாறு ஏன் வர
வில்லை என்பதைப்பற்றிக் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இங்கே நிதிநிலை அறிக்கையிலே பதிவு செய்த தொழில்களின் வளர்ச்சி
8.1 சதவிகிதம் என்று அறிக்கையில் சொல்லியிருக்கின்றார்கள். நான் ஒன்றை
வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே தொழில்
வளர்ச்சி இல்லை என்று பேசினால், திருடர்களும் மூடர்களும் சொல்கின்
றார்கள் என்று சொல்கின்ற அளவுக்கு, தொழில் வளர்ச்சியைப் பற்றியும்
நிதிநிலை அறிக்கையைப் பற்றியும் பேசினால், விமர்சனம் செய்யக்கூடிய
அளவுக்குத்தான் இங்கே நிலைமைகளை உண்டாக்கியிருக்கின்றார்கள்.

ஆனால் நாம் அதிகாரபூர்வமாக இருக்கின்ற ஆடிட்டர்-ஜெனரல் அவர்
களுடைய ரிப்போர்ட்டையும், பைனான்சியல் ரெவ்யூவின் ரிப்போர்ட்டையும்
வைத்துப் பார்த்தோமானால், தமிழகத்தில் தொழில்கள் எப்படி இயங்கிக்
கொண்டிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஆளுநர் அவர்கள் உரையிலே நான் பேசும்போது சுட்டிக் காட்டினேன்.
1983-84 ஆவது ஆண்டு கம்ட்ரோலர் அண்டு ஆடிட்டர்-ஜெனரல் அவர்களின்
ரிப்போர்ட்டின்படி, பொது நிறுவனங்களில் 33 நிறுவனங்கள் நஷ்டத்தில்
ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளைப் பொதுத் துறையிலிருந்து தனி
யாருக்கு மாற்றிவிடலாம் என்று அவர்கள் சிபாரிசு செய்து கொண்டிருக்கின்
றார்கள். அப்படி, நாடு முழுவதும் நலிந்த தொழில்களும் மூடிய நூற்பாலை
களும் இருக்கும்போது, 8.1 சதவிகிதம் வளர்ச்சி எவ்வாறு வந்திருக்கின்றது
என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். புள்ளிவிவரங்கள் கொடுக்கும்
நிபுணர்கள் ஆளுக்கு ஆள் வேறுபட்ட புள்ளிவிவரங்களைக் கொடுக்கின்றார்
களா என்று தெரியவில்லை. ஆளுங்கட்சிக்கு ஒரு புள்ளிவிவரம், பத்திரிகை
யிலே ஒரு புள்ளிவிவரம் என்று சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல புள்ளி
விவரங்களைக் கொடுக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். இது உண்மை
யான புள்ளிவிவரமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவை மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த கஷ்டப்பட்டு
புள்ளி விவரங்களைச் சேகரித்து தமிழகத்திலே தொழில் துறை பின்தங்கி
இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பேசிக்கொண்டிருக்கின்
றார்கள். ஆடிட்டர்-ஜெனரலுடைய ரிப்போர்டில் பொது நிறுவனங்கள்
எப்படி இயங்குகின்றன என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்று சொல்கின்
றார்கள். தொழில் வளர்ச்சி என்பது வேறு, அந்தத் தொழில்கள் லாபம் ஈட்டு
கின்றனவா அல்லது நஷ்டத்தில் நடக்கின்றனவா என்பது வேறு. பொது
நிறுவனங்கள் நஷ்டத்திலே இயங்குகின்றன என்பது தமிழகத்திலே மாத்திர
மல்ல, இந்தியா முழுவதிலும் இருக்கின்ற நிலைமைதான். மத்திய சர்க்காரின்
சார்பிலே எத்தனையோ ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் பொது நிறுவ
னங்கள் நடைபெறுகின்றன. அந்தப் பொது நிறுவனங்கள் எவ்வளவு பெரிய
இழப்பிலே இருக்கின்றன என்பது மத்திய அரசினைச் சார்ந்த காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. ஆக
தொழில் வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு தொழிற்சாலை தோன்றி, அங்கே
வேலைவாய்ப்புகள் வழங்கப்பெற்று, அவர்களுக்குத் தொழில் செய்ய வாய்ப்பு
ஏற்படுகிறது என்பதுதான் தொழில் வளர்ச்சி. வேலை வாய்ப்புகள் எல்லாம்





கொடுத்து, சம்பளம் கொடுத்து, செலவினங்கள் செய்யப்பட்டுவிட்ட பிறகு,
நஷ்டம் வருகிறதா லாபம் வருகிறதா என்பது வியாபாரக் கணக்கு. ஆக
உறுப்பினர் அவர்கள் இங்கே வியாபாரக் கணக்கைத்தான் சொல்லிக்கொண்
டிருக்கின்றார்கள். அது தமிழகத்திலே மாத்திரமல்ல, நாடு முழுவதும் இருக்
கின்ற, பொதுத் துறை நிறுவனங்கள் பற்றிய ஒரு நிலை. ஆகவே அதையும்
இதையும் தயவுசெய்து இணைத்துப் பேசவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்
கொடுத்த விளக்கத்திற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன். மற்ற மாநிலங்களிலே பொதுத் துறைகளிலே உள்ள நிறுவனங்கள்
எல்லாம் நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை அங்கேயுள்ள
உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிக்கொண்டிருப்பார்கள். இங்கே நான் அதைச்
சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. நம் தமிழகத்திலே உள்ள உறுப்பினர்
என்ற முறையிலே நான் இதை உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, இங்கே சுட்டிக்காட்டுவது தவறு என்று சொல்லவில்லை.
தொழில் நிறுவனங்கள் நஷ்டத்திலே நடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி,
அந்த நஷ்டத்திற்கு என்ன காரணம், அதைப் போக்குவதற்கு என்ன
நடவடிக்கை எடுக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதை
நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதை நான் தவறு என்று சொல்லவில்லை.
நஷ்டத்திலே நடைபெறுகின்ற நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, தொழில்
வளர்ச்சி இல்லை என்று தெரிந்தே சொல்கிறார்களா, தெரியாமல் சொல்
கிறார்களா அல்லது தெரிந்தும் தெரியாததுபோல சொல்கின்றார்களா
என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத்தான் நான்
சுட்டிக்காட்டினேன். உறுப்பினர் அவர்கள் குறைகளைச் சுட்டிக்காட்டு
வதை, நஷ்டத்திலே இயங்குகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதை நான்
தவறு என்று சொல்லவில்லை.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களே, குறைகளைச் சுட்டிக் காட்டிய பின்பு அது எவ்வாறு செயல்படவேண்டு
மென்பதைச் சொல்லலாம் என்றுதான் இருந்தேன். அதை அவர்களே
சொல்லிவிட்டார்கள். நான் ஏதோ அரசைக் குறை சொல்ல வேண்டும் என்ப
தற்காகச் சொல்லவில்லை. பொதுத் துறை நிறுவனங்கள், நாம் எவ்வளவு

முயன்று பார்த்தாலும், நஷ்டத்திலேதான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அது ஏன் என்று கேட்டால், 'சோசியல் ஆப்ளிகேஷன்' என்பார்கள். சமுதாயத்தில் ரெயில்வே துறையை எடுத்துக்கொள்ளுங்கள். அதுபோன்று நம்முடைய போக்குவரத்துக் கழகங்களை எடுத்துக்கொண்டால், எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், செலவுகளை ஈடு கட்ட முடியவில்லை. வருமானத்திற்கும் செலவிற்கும் ஈடு கட்ட முடியாத நிலைமைதான் இருக்கின்றது.

(பிற்பகல் 12-05)

காரணம் என்னவென்றால், பொது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களில் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்றுதான் மத்திய அரசும், மாநில அரசுகளும் இயங்கிக்கொண்டு வருகின்றன. ஆனால் எல்லாத் தொழில் துறைகளிலும் இந்த மாதிரி நினைத்துக்கொண்டு விடுவோமானால், பின்னால் நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு எங்கேயிருந்து முதலீடுகளைத் தேடப் போகிறோம் என்பதைச் சொல்வதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டினேன். மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், மக்களுடைய வரிப் பணம்தான் செலவாகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த விவாதத்தில் நான் பங்கு எடுத்துக் கொள்கிறேன்.

நேற்று சட்டமன்றப் பேரவையிலே நடந்த விவாதத்தில் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களும், இதே மாதிரி பேசியிருக்கிறார்கள். இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்களும் அதையேதான் சொன்னார்கள். தொழில்கள் தொடங்க அனுமதி கோரி மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பினால், அங்கேயிருந்து ஃபைல்கள் நகருவதில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். 1983-84-லே புதிய தொழில்கள் தொடங்க 'லெட்டர் ஆஃப் இன்டென்ட்' கோரியதில் 344 தொழில்கள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. அதில் 142 லெட்டர் ஆஃப் இன்டென்ட்டை உபயோகப்படுத்தி இருக்கிறோம். மீதி, உபயோகப்படாமல் வீணாகியிருக்கிறது. ஒரு தடவை மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அனுமதி கொடுத்ததில் 142 தொழில்களுக்கான லெட்டர் ஆஃப் இன்டென்ட்டை வீணாக்கி இருக்கிறார்கள். "ஏன் அவற்றைச் செயல்படுத்தாமல் இருக்கிறீர்கள் ?" என்று கேட்டால், அதில் கட்சிக் கண்ணோட்டத்தைப் புகுத்தாதீர்கள் என்று சொல்ல விரும்புகிறேன். சரியான பரிசீலனை இல்லாமல், யார் யாரிடமிருந்து தொழில்கள் துவங்க விண்ணப்பம் வருகிறதென்பதை தமிழக அரசு பரிசீலனை செய்யாமல், அவற்றை ஒட்டுமொத்தமாக மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்கிறதா? அல்லது வேறு யாரும் இங்கே தொழில்கள் தொடங்கக்



கூடாது என்ற முறையில் திட்டமிட்டு செய்து கொண்டு வருகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். ராஜ்ய சபையில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் கேட்டபோது, விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர் கேள்வி கேட்டபோது, பதில் அளித்திருக்கிறார்கள். அனுமதி ஏன் மறுக்கப்பட்டது என்று கேட்டபோது, இத்தனை தொழில்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம், ஏன் செய்யாமல் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்திலே 1967-க்குப் பின்னாலே மத்திய அரசு எந்தத் தொழிலிலும் முதலீடு செய்யவில்லை என்று சொன்னார்கள். மெட்ராஸ் ரிபைனரியில் 300 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை கையிலே வைத்துக் கொண்டு, அது குறித்து மாநில அரசிடம் பல முறை அணுகியும் இன்னும் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்று அங்கேயுள்ள டைரக்டர்கள் வேதனையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 300 கோடி ரூபாய் திட்டம் தயாராக இருக்கிறது. மாநில அரசிடம் நிலம், மின்சாரம், அதற்குரிய உபகரணங்கள் கேட்டும், இன்னும் சரியான தொடர்பு இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையா . . . .

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்)

மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லட்டும். வார்த்தைக்கு வார்த்தை மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிட்டால், என்னுடைய நேரம் வீணாகும்.

ஆகவே அத்தகைய குறைபாடுகளை எல்லாம் அரசு களைய வேண்டும். ஒட்டுமொத்தமாக மத்திய அரசுதான் தொழில்களைத் தொடங்கவில்லை என்று குற்றம் சாட்டக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். திருவெறும்பூர் பக்கத்தில் துப்பாக்கித் தொழிற்சாலையில் இரண்டாம் கட்ட விரிவாக்கம் ஆரம்பித்து, ஆயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு; இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை விரிவாக்கம் நடக்க இருக்கிறது. திருச்சியில் இன்னொரு இரயில் பெட்டித் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது. அதற்கு 500 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அது அதிகார்பூர்வமான தகவலாக இல்லாததால், அதை ஆணித்தரமாக நான் சொல்லத் தயாராக இல்லை. இந்த நிலையில் தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்று பேசினால், எல்லாவற்றையும் நாங்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்க முடியாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையில் மத்திய அரசிடமிருந்து வந்த உதவிகள்

குறைவாக வரவில்லை. உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், 45,000 டன் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா அகதிகளுக்கு உதவுவதற்காக 45 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 66 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., எம்.ஆர்.டி.பி. போன்ற மூன்று திட்டங்கள் வாயிலாக மாநில அரசுக்கு கோடிக்கணக்கில் மத்திய அரசால் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டங்களின் மூலம் ஏழையெளியவர்களுக்கு உதவித் தொகைகள் போய்ச் சேர்கின்றனவா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஐ.ஆர்.டி.பி. திட்டத்தைப் பொறுத்தவரையில், அவை கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழையெளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டங்களாகும். அப்படி என்கிற திட்டத்தின்கீழ் அந்த ஏழையெளியவர்களுக்கு முழுப் பலனும் போய்ச் சேர்கிறதா என்று பார்த்தால், உள்ளபடியே நடந்திருப்பது குறித்து நான் வேதனைப்படுகிறேன். நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பேட்டா பூராசிங்குக்கு அதிலிருந்து பணத்தை எடுத்து உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதுபோல் சேலம் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் கழிவு நீர் குட்டை ஏற்படுத்த 4.69 லட்சம் ரூபாய் எடுத்திருக்கிறார்கள். ஆனால் 27,130 ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். இதுபற்றிக் கேட்டால் "சிமெண்ட் கிடைக்கவில்லை. ஆகவே தொடர்ந்து வேலை செய்யவில்லை" என்று சொல்கிறார்கள். அதுபோல் பால் குளிர்படுத்துதல் மற்றும் பதப்படுத்துவதற்காக 4.98 லட்சம் ரூபாய் எடுத்து செலவு செய்திருக்கிறார்கள். இதுபற்றிக் கேட்டால், "எந்தத் திட்டமானாலும் வேலைவாய்ப்புதானே திட்டத்தின் குறிக்கோள், ஆகவே இதற்காகச் செலவு செய்தது ஒன்றும் தவறு இல்லை" என்று சொல்கிறார்கள். வேறு திட்டங்களிலிருந்து இப்படிச் செலவு செய்தால்கூட பரவாயில்லை. ஆனால் ஐ.ஆர்.டி.பி. என்கிற திட்டம் இருக்கிறதே, அது கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற ஏழையெளிய மக்களுடைய வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மாபெரும் திட்டமாகும். அதனால்தான் பல்வேறு துறைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் பணத்தை ஒதுக்கினோம். ஆனால் இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டம் எந்த வகையில் முறையாக நிறைவேற்றப்படுகிறது என்பதையும் பார்க்க வேண்டும். இங்கே சொல்கிறார்களே. நான் கேட்கிறேன், மத்திய அரசு ஒன்றுமே கொடுக்கவில்லையா?





மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா. கணேசன் இங்கே ஒன்றைத் தெரிவித்தார். மத்திய அரசால் தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் 8.5 லட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற 1½ லட்சம் ரூபாயை மத்திய அரசு கொடுக்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. காரணம் இப்படிப்பட்ட திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்றால், தலைமை என்ஜினியர் இருக்க வேண்டும். ஒரு சி.இ. இருக்க வேண்டிய இடத்தில் ஒரு டி.சி. உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவர் சம்பளப் பட்டியலில் கையெழுத்து போடுகின்ற பணி ஒன்றைத்தான் செய்ய முடியும். அங்கே சி.இ. இல்லாத நிலையில், மற்ற பல திட்டங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அதுபோல் ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட், வீட்டு வசதி வாரியம் போன்ற நிறுவனங்களிலும் சி.இ. பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அப்படி என்றால், திறமையுள்ள பொறியாளர்கள் கிடைக்கவில்லையா? ஏன் ரொம்ப காலமாக இப்பணியிடங்களை நிரப்பவில்லை?

அடுத்து, பாம்பன் பாலம் கட்டும் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அது எத்தனை வருடங்களாக நிலுவையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். எப்போது அது முடிவடையும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதுபோல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட், முனிசிப் போன்ற பதவிகள் ரொம்ப காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இப்படிப்பட்ட பல பதவிகள் நெடு நாட்களாக நிரப்பப்படாமல் இருப்பதால், பல கோர்ட்டுகள் செயலற்ற நிலையில் இருக்கின்றன. சபார்டினேட் நீதிபதி பதவிகள் பல இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து குறைகளைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் வீடுகள் வீதம் 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுப்போம் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டது. அதைத் தொடர்ந்து வரக்கூடிய நிதிநிலை அறிக்கையில் அதற்கான நிதி ஆதாரத்தை எவ்வாறு பகிர்ந்தளிப்பது, எந்தெந்த வகையில் அதற்கான பணத்தைத் திரட்டுவது என்பதுபற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லி அத்திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லுவார்கள் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

(பிற்பகல் 12-15)

ஆனால் பத்து லட்சம் வீடுகள் கட்ட ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 26 கோடி தான். இந்த 26 கோடி ரூபாயில் பத்து லட்சம் வீடு கட்ட முடியுமா? இந்த நிதி ஒதுக்கீடு பற்றாவிட்டால், ஹட்கோ, எல்.ஐ.சி., என்.ஆர்.ஜி.பி., எச்.எஃப்.டி.சி., ஆர்.இ.எல்.ஜி.பி. போன்ற நிறுவனங்களிலிருந்து நிதியாதாரங்களைத் திரட்டி கட்டி முடிக்கப்படும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே வைத்துக்கொண்டாலும், அனைத்துத் துறைகளுமே இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைத்தாலும், ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்பதைச் செயலாக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் முழு மனதோடு இதற்கு ஆதரவு கொடுக்கிறோம். ஆனால் நிதி ஆதாரங்கள் எவ்வாறு திரட்டப் போகிறோம்? ஒரு வீட்டுக்கு பத்தாயிரம் ரூபாயாவது கொடுத்தால்தான், குடியிருக்க முடியும். அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களின்போது, பல்வேறு ஆதி திராவிடக் காலனிகளுக்குச் சென்று நாங்கள் பார்த்தபோது, ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பார்த்தோம். 6,000 ரூபாய் ஒதுக்கப்பட்ட வீடுகளைப் பார்த்தால், நிலை மட்டம்தான் வந்திருக்கிறது. மேலே கூரை போட அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. "நீங்களாவது அரசாங்கத்திடம் சொல்லி எங்களுக்கு அதிகமாகப் பணம் வாங்கித் தாருங்கள்" என்று கேட்டார்கள். அப்படி நிலைமை இருக்கும்போது, குறைந்தது பத்தாயிரம் ரூபாயாவது ஒரு குடியிருப்புக்கு ஒதுக்கினால்தான். குடியிருக்க முடியும். அந்தக் கணக்கில் பார்த்தால், 10 லட்சம் வீடுகளுக்கு 1,000 கோடி ரூபாய் வேண்டுமே, இந்த ஆயிரம் கோடி ரூபாயை எத்தனை நிறுவனங்களிடமிருந்து திரட்டப் போகிறார்கள்? இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து முடிந்த அளவுக்குச் சொல்லியிருக்கலாம். கிராமப்புறத்தில் ஒரு பழமொழி உண்டு. "குறையச் சொல்லி, நிறைய அளந்து விடு" என்று விவசாயிகள் சொல்வார்கள். இது போன்று அரசு "குறிப்பிட்ட அளவுக்குச் செய்து முடிக்கிறோம்" என்று சொல்லி, அதையாவது முழுமையாக நிறைவேற்றினால், எங்களைப் போன்ற தோழமைக் கட்சிகளும் பாராட்ட முடியும். நாங்கள் உங்களுக்கு மாற்றுக் கட்சியாக இருந்தாலும், உங்களோடு தோழமை கொண்டவர்கள். ஆனால் உங்களைக் குறை சொல்ல வேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிற கட்சிகள், இந்த மாதிரி திட்டங்களைப் பார்த்து குறை சொல்ல வாய்ப்பு நீங்களே அளிப்பதாக இருக்கிறது. அவர்களுக்கு வெறும் வாயை மெல்லுவதைவிட சீனி போடுவதைப்போல 'பல திட்டங்களைச் சொல்லிவிட்டு, அவைகள் செயல்படாமல் இருந்தால், நிச்சயமாக இந்த அரசுக்கு நல்ல பெயர் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





சாலைப் பராமரிப்புக்காக ரூ. 3.05 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
ள்ளிக் கட்டிடங்கள் கட்ட ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
டந்த ஆண்டும் பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்
பட்டது. நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறையின் சீர்திருத்தங்களைப்
பற்றி நிறைய சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பள்ளிக் கட்டிடங்களுக்காக
தொகை ஒதுக்கியிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்கு நிறைய
நிதி ஒதுக்க வேண்டும். அதோடு சாலைப் பராமரிப்புக்கும் குறைவான
தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் அதிகரிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடுகள் யானைப் பசிக்கு சோளப் பொறியாகத்தான்
இருக்கிறது. மேலும் இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுப்பு அவர்கள் பேசும்போது, ஸ்ரீலங்கா அகதிகள் பற்றி ஒன்றைச்
சொன்னார்கள். ஆனால் வங்காள தேச அகதிகளுக்கும், காஷ்மீர் அகதி
களுக்கும், பாகிஸ்தான் அகதிகளுக்கும் மத்திய அரசு அதிக நிதி உதவி
செய்து, ஸ்ரீலங்கா அகதிகளுக்குக் குறைவான தொகை அளிப்பதாகச் சொன்
னார்கள். திரு. சுப்பு அவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும், நியாயமாகப்
பேசுவார்கள் என்றுதான் இத்தனை நாளும் நினைத்துக் கொண்டிருந்தோம்.
ஆனால் உண்மைக்கு மாறாக இங்கே அவர்கள் பேசினார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி
அவர்கள் பேசுகிறபோது, திரு. சுப்பு அவர்கள் தவறான தகவல்கள் கொடுத்த
தாகச் சொல்லுகிறார்கள். ஸ்ரீலங்கா அகதிகளைக் கவனிக்க, அவர்களுக்கு
வசதிகள் செய்து கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்
ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் உதவிகள் செய்கிறார்கள்.
அவர்கள் செய்த சிபாரிசுகளை டெல்லிக்கு அனுப்பினார்கள். ஆனால்
அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பாகிஸ்தானிலிருந்து சிந்தி
பேசும் அகதிகள், குருக்ஷேத்திரத்தில் வைக்கப்பட்டு, குடும்பம் ஒன்றுக்கு
அவர்களுக்கு 15 லட்சம் ரூபாய் உதவித்தொகை அளிக்கிறார்கள். அதேபோல்,
பங்களாதேஷ் அகதிகளை அந்தமானில் குடியேற்றி, அவர்களுக்கு 20 ஏக்கர்
நிலமும், 85 ஆயிரம் ரூபாய் பணமும் அளிக்கிறார்கள். ஆனால் ஸ்ரீலங்கா
அகதிகளுக்கு எவ்வளவு தருகிறார்கள்?

[திரு. சி. இராமலிங்கம்] [1986 மார்ச் 26

(பிற்பகல் 12-20)

அந்த அடிப்படையில்தான் மத்திய அரசு கொடுக்கிறது. இவ்வாறு தமிழர்களுக்குப் பாரபட்சம்தான் காட்டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எம்.பி.-ஆக இருந்தவர். எல்லா மாநிலங்களையும் சுற்றியவர்கள். அவர்களே உண்மைக்குப் புறம்பாகப் பேசுவது என்பது வருத்தத்தை அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தமானில் குடியமர்த்துவதற்கு வேறு சட்டதிட்டங்கள் இருக்கலாமோ என்னவோ தெரியாது. ஆனால் அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகளில் எல்லா இடத்திலும் ஒரேவிதமான அளவில்தான் இருக்கின்றன; வேறுபாடு எதுவும் காட்டப்படவில்லை என்பதை எனக்குக் கிடைத்த புள்ளி விவரங்களை வைத்துக் கூறுகிறேன்.

**திரு க. சுப்பு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அகதிகளைப் பொறுத்தவரையில், பங்களா தேஷ் அகதிகளுக்கு வழங்கப்பட்ட அளவிற்குப் பணம் ஸ்ரீலங்கா தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படவில்லை. அதேமாதிரி பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு வழங்கப்பட்ட பணம் அதிகம். அந்த அளவுக்கு ஸ்ரீலங்கா தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படவில்லை. அந்தமானில் குடியமர்த்தப்படுபவர்களில் வங்காளிகளுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அளவுக்கு தமிழர்களுக்குக் கிடையாது. இவர்களுக்கும் அந்த அளவுக்கு அதிகத் தொகை கொடுத்தால், இவர்களும் அதிக ஊக்கத்தோடு செயல்படுவார்கள் என்பதற்காகத்தான் இவற்றைக் கூறுகிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் நேற்று பேசுகிறபோது "Repatriates" என்று சொல்லவே இல்லை. "Refugees" என்றுதான் சொன்னார்கள்.

**திரு. க. சுப்பு:** "Refugees" ஆக பங்களாதேஷிலிருந்து வந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட அளவுக்கு சலுகைகள் ஸ்ரீலங்கா தமிழ் அகதிகளுக்கு இல்லை. அதேபோல் குடியமர்த்துவதிலும் வேறுபாடு இருக்கிறது. இரண்டையும்தான் சொல்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "Repatriates" குறித்து மாறுபாடு இருக்கலாமோ என்னவோ? ஆனால் "Refugees"ஐப் பொறுத்தவரை, இவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை இந்தியா முழுவதற்கும் ஒரே அளவில்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வயது வந்தவர்களுக்கு 110 ரூபாய், குழந்தைகளுக்கு



1986 மார்ச் 26] [திருமதி வி. ஜெயலட்சுமி]

52 ரூபாய், ஒரு ஜோடி துணிகள், பாய், படுக்கை வசதிகள், சமையல் பாத்திரங்கள், ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 12 கிலோ அரிசி அல்லது கோதுமை, அரிசிக்கு லிட்டருக்கு 57 பைசா, கோதுமை என்றால் லிட்டருக்கு 51 பைசா என்று இந்தியா முழுவதும் ஒரே அளவில்தான் கொடுக்கிறது. இந்தத் தொகையை மாநில அரசுகளுக்கு மத்திய அரசு ஈடு கட்டி விடுகிறது என்கிற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. க. சுப்பு:** யார் கொடுத்த புள்ளிவிவரம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நானும் இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் வந்தபோது, அங்கு இருந்தேன். அப்போது அங்கே கொடுக்கப்பட்ட விவரங்களை எல்லாம் படித்துப் பார்த்தேன். அதனால்தான் கேட்கிறேன். யார் கொடுத்ததென்றால், எது சரியென்று பார்த்து வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** இது எனக்கு இங்கிருக்கிற அகதிகள் மறுவாழ்வு இயக்குநரால் கொடுக்கப்பட்டவையாகும். அவரே சொல்லியிருக்கிறார். இந்தியா முழுவதும் ஒரேவிதமாகத்தான் உதவி செய்யப்படுகிறது என்றும், பாரபட்சம் இதில் கிடையாது என்றும் சொல்லியிருக்கிறார். இதை நான் நிரூபிப்பதற்கு வேண்டுமானாலும் தயாராக இருக்கிறேன். ஆனால் குடியமர்த்துபவர்களைப் பொறுத்தவரை, என்னிடம் விவரம் இல்லை. பின் இன்னொரு முறை விவாதம் வருகிறபோது, நானும் தகவலுடன் வந்து விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள்கூட பஞ்சாயத்துக் களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டிய அவசியம்பற்றிக் கூறினார்கள். மற்ற மாநிலங்களில் நான்கு கட்ட அமைப்பு (four tier set-up) இருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால் இங்கே மூன்று கட்ட அமைப்புதான் இருக்கிறது. நான்கு கட்ட அமைப்பு என்றால், வலுவான மத்திய அரசு, அதன் கீழ் மாநில அரசு, அதன் கீழ் ஜில்லா பரிஷத், அதன்கீழ் பஞ்சாயத்து சமிதி என்பவைகளாகும். ஆனால் நம் மாநிலத்தில் 3 கட்ட அமைப்புதான் வைத்திருக்கிறோம்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். காலம் காலமாக அதற்காகப் போராடிக்கொண்டு வருவது போலவும், மத்திய அரசு கொடுப்பதற்குத் தயாராக இல்லை என்பது போலவும் பல வாசகங்கள் நிதிநிலை அறிக்கையில் காணப்படுகின்றன.

ஓரிடத்தில் 'தன்னாட்சி' என்று இருக்கிறது; ஓரிடத்தில் 'தனி ஆட்சி' என்று இருக்கிறது. ஓரிடத்திலே 'இணைப்பு ஆட்சி' என்று இருக்கிறது.

(பிற்பகல் 12-25)

இத்தனை ஆட்சி முறைகளையும் சொல்லி, மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் கிடைக்கவில்லை, அதனால்தான் நாங்கள் இங்கே செயலாற்ற முடியவில்லை என்று சொல்லியிருக்கி-ார்கள். அதே சமயத்தில் . . . . . . (குறுக்கீடு) இணைப்பு ஆட்சி . . .

**திரு. க. சுப்பு:** துணைத் தலைவரவர்களே, இணைப்பு ஆட்சி என்பது "ட்ருலி பெடரல்" என்ற ஆங்கில வார்த்தையை மொழி பெயர்த்ததால் வந்தது என்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** துணைத் தலைவரவர்களே, தனி ஆட்சி என்று எங்கேயும் இல்லை. இணைப்பு ஆட்சி என்பது 'பெடரல் செட் அப்' என்று சொல்கிறோம். இணைப்பு ஆட்சி என்பதற்கு ஆங்கிலத்தில் 'பெடரல் கவர்ன்மென்ட்' என்பது சரியான மொழி பெயர்ப்பு.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** நாங்கள் சமஷ்டி ஆட்சி என்று சொல்கிறோம். 'இணைப்பு ஆட்சி' என்று அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாநிலத்திற்கு அதிக அதிகாரங்களைக் கேட்கும்போது, அடிமட்டத்திலே அன்றாடம் பொது மக்கள் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்கிற பஞ்சாயத்துக்களுக்கு நாம் எவ்வளவு அதிகாரங்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்பதை தயவுசெய்து இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள், பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொண்டால், அது இன்றைக்கு இயக்குநர் அலுவலகத்திற்கு சென்றுவிட்டது. மருத்துவத்தை எடுத்துக் கொண்டால், மகப்பேறுகளைப் பார்க்கின்ற அந்த ஆயாக்களைக்கூட இந்த மருத்துவத் துறையிலே நேரடியாகப் பார்த்துக் கொள்ளலாமென்று சட்டமன்றப் பேரவையிலே ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவ இலாகா சம்பந்தப்பட்ட அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று அதற்கு ஒரு மசோதாவும் வந்திருக்கிறது. குடிநீர் விநியோகத்தை எடுத்துக் கொண்டால், குடிநீர் வாரியம் கவனித்துக்கொள்கிறது. சாலைகள் பாராமரிப்பை எடுத்துக் கொண்டால், ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் கவனித்துக்கொள்கிறது. சத்துணவுத் திட்டம் இதுவரை பஞ்சாயத்துக்களின் பொறுப்பில் இருந்தது. அதற்கும்கூட தனியாக ஒரு டைரக்டர் போட்டு நல்லவிதமாகச் செயல்படுகிறதா என்று





பார்வையிடுவதற்காக ஆவன செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு
அதிகாரங்கள் இருந்த அந்தப் பஞ்சாயத்துக்களில் அந்த அதிகாரங்களை
எல்லாம் எடுத்துவிட்டு, இன்று அந்தப் பஞ்சாயத்துக்கள்—நிச்சயமாகவே
எனக்கு ஒரு ஆச்சரியமாகவே இருக்கிறது—அதிகாரங்களே இல்லாமல் இருக்
கின்றன. அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் அங்கே போய்
உட்கார்ந்துகொண்டு என்ன செய்யப் போகிறார்கள்? அதற்கு இவ்வளவு
போட்டி போடுகிறார்களே என்று நான் தேர்தல் சமயத்திலே அங்கு வந்த
திரு. சுப்பு அவர்களிடம் சிரித்துக்கொண்டே கேட்டேன். என்ன அதிகாரம்
இருக்கிறது என்றும், பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு இவ்வளவு போட்டி
போடுகிறோம் என்றும், நான் நகைச்சுவையாக அவரிடம் சொல்லிக்கொண்
டிருந்தேன். அந்த அளவுக்கு பஞ்சாயத்து ஒன்றியத் தலைவருக்கோ,
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கோ எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல்
முடக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன். இங்கே மாநில அரசு அதிகாரத்தைக் கேட்கும்போது, அதே
சமயத்தில் அதற்குக் கீழே உள்ளவர்களுக்கும் நமது அரசினுடைய அதிகாரங்
களைப் பகிர்ந்து கொடுக்கும் பெருந்தன்மை வர வேண்டுமென்று கூறி, அதற்கு
அரசு ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மேலும் நேற்று இந்த அவையில் கொடுக்கப்பட்ட தகவலைப் பார்க்கும்
போது, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் நெய்வேலி
லிக்னைட் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாக்கி ரூ. 39.91
கோடி என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்
கிறது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் சேர்மன் திரு. தொண்டன்
அவர்கள் பத்திரிக்கையாளர்களை அழைத்துச்சொன்னபோது, 88 கோடி
ரூபாய் அசலாகவும், பிறகு வட்டியும் வர வேண்டியிருக்கிறது என்றார். அந்தப்
பணம் வராத காரணத்தால்தான், அவர்களுடைய சீரமைப்புப் பணிகளைச்
செய்ய முடியாமல் இருப்பதாக அவர்கள் சொன்னதாக எனக்கு ஞாபகம்.
அவர் சொன்னது 88 கோடி ரூபாய். ஆனால் அமைச்சர் அவர்கள் சொன்னது
39.91 கோடி ரூபாய். இதிலே தமிழக அரசின் கணக்கிற்கும், நெய்வேலி
லிக்னைட் கார்ப்பரேஷன் கணக்கிற்கும் எந்த வகையிலாவது, எந்த இடத்தி
லாவது ஒத்துப் போகுமா? எவ்வாறு அந்தப் பணத்தை அரசு செட்டில்
செய்யப் போகிறது என்பதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் மேலவைக்கு
இந்த விவாதத்தின்போது, ஒரு பதிலைக் கொடுத்தால், நிச்சயமாக திருப்தி
கரமாக இருக்கும். ஏனென்றால் இங்கு நடக்கும் நடவடிக்கைகளை
அன்றாடம் பொது மக்கள் கணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், படித்துக்
கொண்டுதான் இருக்கிறார்கள். மத்திய அரசைச் சார்ந்த நிறுவனம் ரூ. 88

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1986 மார்ச் 26

கோடி கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, மாநில அரசு ரூ. 39 கோடி தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. இதில் இந்தக் கணக்கை யார்தான் திருடி விட்டார்கள் என்ற முறையில் அவர்கள் பேசக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் ஏற்படுத்திவிடக் கூடாது. இது நிர்வாகக் கோளாறாகவும் இருக்கலாம்; இதில் ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் போட்டபோது சரியாகக் கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஆகவே தயவுசெய்து உண்மையான கடன் எவ்வளவு; அந்தக் கடன் எத்தனை மாதங்களுக்குள் திருப்பிக் கொடுக்கப் படும் என்பதையும் இந்த அரசு திட்டவட்டமாகச் சொல்ல வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

மேலும் பொதுவாக காமராசர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அது காலம் காலமாக வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதியாக இருக்கிறது. இப்போதுகூட ஹரிபாஸ்கர் கமிட்டி வந்துவிட்டுச் சென்றது என்று சொன்னால், உடனே கிராமப்புறங்களுக்கு இனிமேல் குடிநீர் விநியோகத்திற்காக ஆழ்துளைக் கிணறுகளைப் போட பைப்புகளைப் போடுவார்கள்; நிவாரணப் பணிகளை எல்லாம் ஆரம்பித்து விடுவார்கள் என்ற ஆவலோடு மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வறட்சிப் பணிகளை எல்லாம் தயவுசெய்து அரசு விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலம் காலமாக சிவகாசி நகரத்தில் மக்கள் குடிநீருக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது ஒரு திட்டத்தை சிவகாசிக்குப் போட்டிருப்பார்களா என்று துருவித் துருவிப் பார்த்தேன். ஒரு இடத்திலேகூட சிவகாசியைப்பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. இப்போது 50 ஆயிரம் ஜனத்தொகை அங்கே இருந்தாலும் கூட, ஆங்காங்கே தொழில்களுக்காக வருபவர்களையும் சேர்த்து ஜனத்தொகை ஒரு லட்சத்தையும் தாண்டிவிட்டது.

(பிற்பகல் 12-30)

ஒரு லட்சம் ஜனத்தொகையைத் தாண்டிவிட்ட அந்த நகரில் குடிதண்ணீருக்காக அந்த மக்கள் படுகிற கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஒரு குடம் குடிதண்ணீர் 50 பைசாவிற்கு விற்கிறது. ஒரு வண்டி தண்ணீர் ரூ. 15 முதல் 20 ரூபாய் வரை விற்கிறது. அதையும் வெகு தொலைவிலிருந்து ஆற்றுக் கிணறுகளிலிருந்தும் விவசாயக் கிணறுகளிலிருந்தும் கொண்டுவர வேண்டியிருக்கிறது. "விவசாயத்திற்கே எங்களுக்குத் தண்ணீர் போதவில்லை என்று கஷ்டப்படுகிற நிலையிலும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கொடுக்காத பாவி என்ற பெயர் வந்துவிடக் கூடாதே" என்று கிராமங்களில் நிலங்களில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் கொடுத்து வருகிறார்கள். எனவே சிவகாசி,



1986 மார்ச் 26] [திருமதி வி. ஜெயலட்சுமி]

விருதுநகர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய 3 நகரங்களிலும் குடிதண்ணீர்ப் பிரச்சினை மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சிவகாசியைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 18 கோடி ரூபாய் விற்பனை வரி மூலமாகவும் இதர வணிக வரிகள் மூலமாகவும் அரசுக்குக் கிடைக்கிறது. இவ்வளவு வருவாயை அரசுக்குத் தருகிற நகரத்திலே காலம் காலமாக சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்பதையும் அங்கே உள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகூட செய்து தரப்படவில்லை என்கிற காரணத்தால் அங்கே உள்ள நகரமே சீரழிந்து கொண்டு வருகிறது என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இராமநாதபுரம் மாவட்டம் காம்போசிட் மாவட்டமாக இருந்தபோது, டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் சென்டர் ஒன்று மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அந்த டி.ஐ.சி. இன்றைக்கும் மதுரையில் இருந்துகொண்டுதான் செயல்படுகிறது. பழைய இராமநாதபுரம் மாவட்டம் 3 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதை அடுத்து மாவட்ட அளவிலான அனைத்து அரசு அலுவலகங்களும் பிரிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றாலும்கூட, டி.ஐ.சி.-யைப் பொறுத்தவரையில், 3 மாவட்டங்களுக்கும் சேர்ந்து மதுரையில் தான் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் எங்கே இருக்கிறது, இராமநாதபுரம் மாவட்டம் எங்கே இருக்கிறது, காமராசர் மாவட்டம் எங்கே இருக்கிறது? இந்த மூன்று மாவட்டங்களும் பைபர்கேட் செய்யப்பட்ட பிறகும்கூட, இந்த 3 மாவட்டத்திற்கு மாகச் சேர்ந்து ஒரே ஒரு டி.ஐ.சி. மதுரையில் இருந்துகொண்டு செயல்படுவது என்பது எப்படி நியாயமாகும்? ஏற்கெனவே அவர்கள் தங்களுக்கு அதிகமான வேலைப் பளு வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். எங்களாலே வேலை செய்ய முடியவில்லை என்று அங்கே இருக்கிற அலுவலர்கள் சொல்லுகிறார்கள். "எங்களுடைய பகுதிக்கு என்று தனியாகப் பிரித்துக் கொடுத்தால், நன்றாக இருக்கும்" என்று நினைக்கிறார்கள். எனவே 3 மாவட்டத்திற்கும் ஒன்றாக இருக்கிற டி.ஐ.சி.-யை மூன்று மாவட்டத்திற்கும் தனித் தனியாக மாவட்ட வாரியாகப் பிரித்து அமைத்து செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான், அந்த டி.ஐ.சி. உண்மையிலேயே தொழில் வளத்திற்கு உறுதுணையாக இருக்க முடியும் என்று சொல்லி, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்ட நல்ல அம்சங்களை வரவேற்று அதில் உள்ள குறைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1986 மார்ச் 26

றாலும், உண்மையாகவே ஒரு தோழமைக் கட்சி என்ற உணர்வோடுதான்
அந்தக் கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறோம் என்பதை மட்டும்
இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். காரணம்

“இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்,
கெடுப்பார் இலானும் கெடும்”

என்ற திருவள்ளுவர் பெருந்தகையை மேற்கோளாகக் காட்டி ஆளுகிற
கட்சிக்கு ஒரு நல்ல ‘கன்ஸ்ட்ராக்டிவ் ஆப்பொசிஷன்’ என்ற முறையில்
சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி மற்றவற்றிற்கு ஆதரவு உண்டு என்ப
தையும் சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி
அம்மையார் அவர்கள் பேசுகிறபோது, நான் குறுக்கிட வேண்டாம் என்று
இருந்தேன். இறுதியில் ஒரு விளக்கத்தைச் சொல்லலாம் என்று கருதி
னேன். அந்த வகையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அவர்கள் பேசும்போது, மத்திய அரசு மாநில அரசுக்குத் தேவையான
தொழில்களையெல்லாம் எப்படி ஒதுக்கியிருக்கிறது என்று பட்டியல் போட்டுச்
சொன்னார்கள். அதிலே ஒன்று நீலகிரியில் உள்ள இந்துஸ்தான் போட்டோ
பிலிம் தொழிற்சாலை. 300 கோடி ரூபாய் செலவில் அதன் விரிவாக்கத்
திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று இங்கே மகிழ்ச்சியோடு தெரி
வித்தார்கள்.

(திருமதி வி. ஜெயலட்சுமி எழுந்தார்கள்).

மாண்புமிகு உறுப்பினர் மெட்ராஸ் ரிபைனரீஸ் பற்றியும் குறிப்பிட்டு,
எப்படி மாநில அரசு அதைக் கவனிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள்.
அது வேறு விஷயம். நான் அதைச் சொல்லவில்லை. இந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிட்டார்கள். நான்கூட
ஆளுநர் உரையின் விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது, மகிழ்ச்சியோடு
அந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தேன். சுற்றுப்புறச் சூழ்நிலைக் கட்டுப்
பாட்டுத் துறையினால் அந்த விரிவாக்கத் தொழிற்சாலையும் ஏற்றுக்
கொள்ளப்பட்டது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட உடனடி
யாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். நானும்
இப்படி வந்துவிட்டது என்று கருதித்தான் இந்த அவையிலேயேகூட நன்றி
தெரிவித்தேன். **ஆனால் சமீபத்தில் தமிழகத்தைச் சார்ந்த மத்திய தொழில்
துறை துணை அமைச்சர் மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள் ஒரு**



1986 மார்ச் 26] (திரு. இராம. வீரப்பன்)

தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்
திருக்கிறது. ஊட்டி பிலிம் தொழிற்சாலை விரிவாக்கம்பற்றி முடிவு எடுக்கப்
பட்டு விட்டதா என்று கேட்டபோது, இன்னும் முடிவு செய்யப்படவில்லை
என்கிற ஒரு அபாய அறிவிப்பைத் தெரிவித்திருக்கிறார். ஆகவே அந்த
அபாய அறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த
உறுப்பினர்கள், விரைவில் நீக்குவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினரும் இன்றையதினம் இங்கே இடம் பெற்று எனக்கு முன்னாலே உரை
ஆற்றிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் தாங்கள்
அவையில் இல்லாத நேரத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் கால்
மெட்டிக்கு விதிக்கப்பட்ட விற்பனை வரியை நீக்கியதுபற்றிக் குறிப்பிட்டு
உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். உரையாற்றும்போது நான் குறுக்கிட
முயன்றேன். அவர்கள் “நாட் யீல்டிங்” என்று சொல்லிவிட்டதால் கடைசி
யாக விளக்கம் பெறலாம் என்று இருந்துவிட்டேன். மெட்டி என்றால் பல
ருக்கும் இங்கே தெரியாது . . .

(பிற்பகல் 12-35.).

சென்னையிலே காலாய் என்று சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர்
அதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வரும் நேரத்தில், தான் போட்டு நடக்கின்ற
அந்த மெட்டி மூன்று வருடங்களாகியும் இன்னும் தேயவில்லை என்று சொன்
னார். நாங்கள் வரி விலக்கு அளித்திருப்பது செருப்புப் போடுகிற காலுக்குப்
போடுகிற காலாய்க்கு அல்ல. செருப்பு இல்லாமல் கூலி வேலை செய்கிற
அந்தத் தாய்மார்கள் அணிகிற அந்தக் காலாய்க்கு விலக்கு அளித்திருக்கி
றோம், அதற்கு நன்றி தெரிவித்திருக்கிறோம்.

ஆனால் இந்த அவையில் எந்தப் பொருளை எடுத்துக்காட்ட வேண்டு
மென்றாலும், தலைவருடைய அனுமதியைப் பெற வேண்டும். இதுதான்
மரபு. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அனுமதி பெற்றார்களா என்பதை
நான் அறிய விரும்புகிறேன். அப்படி மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்
காட்டியது அவைக்கு உகந்ததுதானா என்பதைத் தாங்கள் தெரிவிக்க
வேண்டும். அப்போதே நான் ‘பாயின்ட் ஆஃப் ஆர்டர்’ என்று கேட்டிருக்க
லாம். இதைக் கேட்பதற்காகத்தான், நான் மாண்புமிகு உறுப்பினர் பேசும்
போது, குறுக்கிட வேண்டுமென்று நினைத்தேன். ஆனாலும் அவர்கள்
பேசும்போது நான் குறுக்கிடுவதில்லை என்று வாக்குறுதி அளித்திருந்த கார
ணத்தால், அப்போது குறுக்கிடாமல் இருந்துவிட்டேன்.

[1986 மார்ச் 26

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, நான் என் கால் மெட்டியை எடுத்துக் காட்டியது உண்மைதான. பத்திரிகையில் வந்திருந்த குறிப்புகளை அல்லது ஏதாவது தகவல்களைக் காட்ட வேண்டுமென்றால்தான், தலைவரின் அனுமதியை வாங்க வேண்டியிருக்கும் என்று நினைத்திருந்தேன். அதனால் தான் தங்களுடைய அனுமதியைப் பெறாமல் இருந்தேன். நான் அப்படி அனுமதி பெறாதது இந்த அவையின் மரபை மீறியதாக இருந்தால், நான் அதற்காக வருந்துகிறேன். தயவுசெய்து மன்னித்து விடுங்கள்.

இன்னுமொரு விளக்கம் சொல்லுகிறேன். காலில் செருப்பு போட்டுக் கொண்டு நடக்கிற தாய்மார்களுக்கு அல்ல, கழனியில் வேலை செய்கிற தாய்மார்களுக்காக அறிவித்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். கழனியில் வேலை செய்யும் தாய்மார்கள் கம்பி மெட்டியைத் தான் உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் வேண்டுமானால் வெள்ளி மெட்டியைப் போடலாம். இதற்குப் போய் வரியைக் குறைத்திருக்கிறார்களே, இதைப் பயன்படுத்துபவர்கள் மிகக் குறைச்சல் ஆயிற்றே என்று சொன்னேன். ஒரு ஜோடி காலாயை வாங்கிப் போட்டுவிட்டால், குறைந்தது ஏழு வருடங்களுக்கு உழைக்கும். கொஞ்சம் முரட்டுத்தனமாகப் பயன் படுத்துபவர்கள், கழனியில் வேலை செய்பவர்கள், ஆகியவர்களுக்குக் குறைந்தது நான்கு வருடங்கள், மூன்று வருடங்களுக்கு உழைக்கும் என்ற வகையில் இந்த வரியைக் குறைத்ததைவிட காதில் போட்டுக்கொள்கிற தோடு, மூக்கில் போடுகிற மூக்குத்தி போன்ற பொருள்களுக்கு தற்போது விதித்து வரும் ஐந்து சதவீதத்தைக் குறைத்தால், அது தாய்க்குலத்தை சந்தோஷப் படுத்தும் என்று தகவலுக்காகச் சொன்னேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** என்னுடைய மனைவிக்குக்கூட மெல்லியதாக காலாயை வாங்கித் தந்திருக்கிறேன்.

Mr. DEPUTY CHAIRMAN: Decorum and etiquette demands that no article or object should be produced before the House either during the debate or otherwise. The hon. Lady Member should not have produced any object before the House during the debate.

Thirumathi V. JAYALAKSHMI: Hereafter I shall not do it, Sir.

**திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கூறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர் பேசும்போது ஒரு தகவல் சொல்ல ஆரம்பித்தேன். என்னுடைய



1986 மார்ச் 26] [திரு. எஸ். ஆர். இராதா]

குறுக்கீட்டை அங்கீகரிக்கமாட்டேன் என்று சொன்னார்கள், பரவாயில்லை. ஆனால் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் குறுக்கிட்டபோது, அங்கீ கரித்தார்கள். வயதின் காரணமாக அவரை அங்கீகரிக்கிறார்கள் என்று நான் சும்மாயிருந்துவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, தகவலுக்காக ஒருவருடைய கருத்தை மற்றொருவர் பரிமாறிக் கொண்டிருந்தால், அதிலிருந்து பல தகவல்கள் வரும் என்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கால் மெட்டியை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவ்வாறு கழட்டுவது அபசகுணம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பேசும் உறுப்பினர் அனுமதி கொடுத்தால் குறுக்கிடலாம். ஓர் உறுப்பினர் அவ்வாறு அனுமதி கொடுக்க வில்லையென்றால், மற்ற உறுப்பினர் குறுக்கிட முடியாது.

**திரு. எஸ். ஆர். இராதா:** துணைத் தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். இது எல்லோருக்கும் பொருந்தும் அல்லவா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது.

**திரு. எஸ். ஆர். இராதா:** என்னை குறுக்கிடுவதற்கு அனுமதிக்காமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவர் குறுக்கிடும்போது மாண்புமிகு உறுப்பினர் அனுமதித்தார், அவர் குறுக்கிட்டார். தாங்கள் குறுக் கிடும்போது அவர் அனுமதிக்கவில்லை. அதற்கு நான் என்ன செய்வது?

அடுத்து கவிஞர் முத்துலிங்கம்.

**கவிஞர் முத்துலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாத் தரப்பு மக்களுக்கும் மகிழ்ச்சி யளிக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை இந்த நிதிநிலை அறிக்கை. துன்பக் கடலில் பத்திரமாக கரை சேர்க்கக்கூடிய படகோட்டியாக புரட்சித் தலைவர் இருக்கிறார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஏழையெளிய மக்க ளுக்கு வெளிச்சம் தருகிற ஒளி விளக்கு, கரை காட்டுகிற கலங்கரை விளக்கு இது. மத்திய அரசின் வரிவிதிப்புக் கொள்கையால் தமிழகத்தில் பொருள்களின் விலையேறும் பாதகமான நிலை இருந்தும், தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டு எந்தெந்தப் பொருள்களின் மீது வரியைக் குறைக்க முடியுமோ அந்தந்தப் பொருள்களின் மீதான வரியைக் குறைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியும்போது, நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

[கவிஞர் முத்துலிங்கம்] [1986 மார்ச் 26

(பிற்பகல் 12-40)

மத்திய அரசு சமையல் எரிவாயு, மசல், பெட்ரோல், ஏழையெளிய மக்கள் உபயோகப்படுத்துகின்ற மண்ணெண்ணெய் போன்றவற்றிற்கு எல்லாம் அதிக வரி போட்டிருக்கின்றது. அதாவது 1,200 கோடி ரூபாய் கூடுதல் வரி விதித்திருக்கிறது. இந்த 1,500 கோடி ரூபாய் வரி விதித்தும்கூட 3,500 கோடி ரூபாய் அளவுக்குத் துண்டு விழுந்திருக்கின்றது. அந்த மாதிரி பட்ஜெட்டைத்தான் தந்திருக்கின்றது. ஆனால் தமிழக அரசு 12 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுந்தாலும், பட்ஜெட்டிலே புதிய வரிகள் விதிக்கவில்லை. புதிய வரிகள் போட்டால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காகவே, துண்டு விழுந்தாலும் பரவாயில்லை, என்று கருதி புதிய வரிகள் இல்லாத வகையிலே பட்ஜெட் போட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புது வரிகள் விதிக்கவில்லை. அப்படி புதிய வரிகள் இல்லாத நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதற்காகவும் தி.மு.க. உறுப்பினர்கள் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் பாராட்டமாட்டார்கள். நல்லவர்களை அவர்கள் பாராட்ட மாட்டார்கள்.

மத்திய அரசு மசல் விலையை ஏற்றியதன் காரணமாக நமது மாநில அரசு போக்குவரத்துக் கழகம்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பல போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் 9,600 பேருந்துகள் இருக்கின்றன. இன்றைக்கு ஆண்டுதோறும் மத்திய அரசு மசல் விலையை ஏற்றிவிட்ட காரணத்தினாலே, 4 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். சென்னையைப் பொறுத்தவரையில், பல்லவன் போக்குவரத்தை எடுத்துக்கொண்டால், இதற்கு மட்டும் 60 லட்சம் ரூபாய் கூடுதலாக தமிழக அரசு செலவழிக்க வேண்டியிருக்கும். அதிகமாகச் செலவழிக்கக்கூடிய நிலைமைகள் இருந்தால், நாம் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும். 4 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும். அப்படி பஸ் கட்டணத்தை உயர்த்தினால்தான், நஷ்டத்தை சரிக்கட்ட முடியும். ஆனால் ஏழையெளிய மக்கள், பஸ் கட்டணத்தை உயர்த்தினால், பாதிப்புக்குள்ளாவார்கள் என்ற நிலைமையின் காரணமாக புரட்சித் தலைவர் அவர்கள் அந்த பஸ் கட்டணத்தை உயர்த்தாமல், நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று கருதி இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மின்சார உற்பத்திக்காக என்று 30 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறோம். மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிடும் போது, நாம்தான் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று நான் நினைக்கி



1986 மார்ச் 26] [கவிஞர் முத்துலிங்கம்]

றேன். மின்சாரம் அதிகமாக உற்பத்தியானால், நாட்டின் வளம் பெருகும் என்ற நோக்கத்தோடு, அந்த மின்சாரத்திற்காக சலுகைகள் எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் வரவேற்கிறேன். நாம் பெரும்பாலும் நெய்வேலி, கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்துதான் தொழில்களுக்கு மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நெய்வேலியில் 3-வது சுரங்கத் திட்டத்தை மத்திய அரசு விரிவுபடுத்தினால், தமிழகத்தில் மின்சக்தி பற்றாக்குறை முழுமையாக நீங்கிவிடும். தமிழகத்திலே இருக்கக்கூடிய நெய்வேலியில், கல்பாக்கத்தில் உற்பத்தியாகி இருக்கக்கூடிய மின்சாரத்தையெல்லாம் மற்ற மாநிலங்களுக்கும் நமக்கும் மத்திய அரசு விற்கிறது. அப்படி விற்கும்போது வரக்கூடிய லாபத்தில் மத்திய அரசு நமக்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் மாநிலத்தில் இரண்டு நிலையங்களும் இருக்கின்றன. நம் மாநிலத்தில் இந்த மின் நிலையங்கள் இருக்கின்ற காரணத்தினால், இங்கேயிருந்து உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்கு விற்றாலும், அதிலே வரக்கூடிய லாபத்தை நமக்கும் கொடுக்க வேண்டும் என்பதை மீண்டும் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். அசாமிலே எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறுகளைத் தோண்டியெடுக்கின்ற உரிமை மத்திய அரசுக்குத்தான் இருக்கின்றது என்றாலும், அசாம் மாநிலத்திலே அந்த எண்ணெய்க் கிணறுகளில் எண்ணெய் எடுக்கும்போது, அந்த மாநிலத்திலே அந்தக் கிணறுகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கேயிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தாலும் எங்களுக்குரிய பங்கை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று அசாம் மாநில மக்களும், மாணவர்களும் போராடினார்கள். அதன்படி அவர்களுடைய பங்கைப் பெற்றிருக்கின்றார்கள். அதைப்போல நாமும் நமது பங்கைப் பெற வேண்டும். நம் மாநிலத்திலே மின் நிலையங்கள் இருப்பதால், நமக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப் போனால், நியாயமாகப் பார்த்தால், மத்திய அரசுக்குச் சொந்தமாக எந்த நிலமும் இல்லை. மத்திய அரசுக்கு நிலம் வேண்டும் என்றால், மாநில அரசுதான் அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டும். ஆகவே மத்திய அரசு மாயத் தோற்றம். அதை நாமாக ஏற்படுத்திக்கொண்டோம். என்று, மத்திய அரசு அந்தந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இங்கே தொழில் வளர்ச்சி இல்லை, தொழில் வளர்ச்சி இல்லை என்றெல்லாம் கூறுகின்றார்கள். மத்திய அரசிலிருந்து வருகின்ற அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் அப்படிக் கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்களும் கூறியிருக்கின்றார்கள். கடந்த மாதம் 9—2—1986 அன்றுகூட காட்பாடிக்கு அருகிலே ஒரு வெடிமருந்து தொழிற்சாலை ரூ. 22 கோடி செலவில் தொடங்கப்பட்டிருக்கின்றது

(பிற்பகல் 12-45)

200 ஏக்கர் பரப்பிலே தொடங்கப்பட்டுள்ள அந்தத் தொழிற்சாலையில் 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நிலை இருக்கிறது. மாண்புமிகு நாவலர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே அதைச் சேர்க்கவில்லை. அதைச் சேர்க்காததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

சென்ற ஜூன் மாதம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை விரிவாக்கத் திட்டத்தை பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள். அதனால் பல்லாயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். 28 இலட்சம் டன் எண்ணெயை சுத்திகரித்துக் கொண்டிருந்த அந்த நிலையம் இப்போது 56 இலட்சம் டன் எண்ணெயை சுத்திகரிக்கும் நிலைமைக்கு வந்திருக்கிறது. இதெல்லாம் தொழில் வளர்ச்சி இல்லையா? நேற்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கருங்கல்லுக்கு மெருகேற்றும் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார்கள். அதைப்போல திருச்சிக்குப் பக்கத்திலே புகளூரிலே 100 கோடி ரூபாய் செலவிலே காகித ஆலைத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் தொழில் வளர்ச்சியைக் காட்டவில்லையா? தொழில் வளர்ச்சி இல்லை, இல்லை என்று கூறுகிறார்களே; மத்திய அரசு தொழில்கள் தொடங்க உரிய அனுமதியைக் கொடுக்கிறதா? இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் பேசினார்கள். கிருஷ்ணா நதி நீர் திட்டம்பற்றிப் பேசினார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்கள் தொடங்கி வைத்த திட்டம் அது. மூன்று மாநிலங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகிற திட்டம், அப்படிப்பட்ட திட்டத்தை உருவாக்கிய தமிழக முதல்வரவர்களை வாழ்த்துகிறேன் என்று சொல்லி, திருமதி இந்திரா காந்தி தொடங்கி வைத்த திட்டம் அது. அதற்கு ஏன் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை? இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்காக வாதாடி இருக்கிறார்களா என்றால் இல்லை. இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள்





சேலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், சென்னையிலேதான் இருக்கிறார். கிருஷ்ணா நீர் [illegible] வந்தால், [illegible], அவருக்கு [illegible] தண்ணீர் வராது. அவர் போகவிட்டாலும், அவர் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே எடுத்துச் [illegible]. மற்ற மாவட்டங்களிலிருந்து சென்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் [illegible] சொல்லவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களின் உதவியால் வெற்றி பெற்று தென் சென்னையிலிருந்து [illegible] காங்கிரஸ் எம்.பி. சென்றாரே, அந்த [illegible] திருமதி வைஜயந்திமாலா அவர்களாவது [illegible]? இந்தத் திட்டத்திற்கு அவர்கள் அனுமதி கொடுத்திருந்தால் . . .

திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சற்று முன்புதான் இந்த அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசுவது மரபல்ல என்று பேசப்பட்டு, ஒரு முடிவுக்கு வந்தது [illegible] இருந்தும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேதோ [illegible] எல்லாம் கொடுத்து, ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப்பற்றிப் பேசுகிறார்கள், அதுவும் தாய்க்குலத்தை நாங்கள் எவ்வளவோ மதிக்கிறோம், போற்றுகிறோம் என்று சொல்லக்கூடிய ஒரு கட்சியிலிருந்து வரும் உறுப்பினரவர்கள் இவ்வாறு பேசுகிறார்கள் [illegible]. அதுவும் தவிர [illegible] ஜெயித்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். [illegible] மூலமாக ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். "[illegible] ஜெயித்தேன், என்னாலே நீ ஜெயித்தாய்; உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்" என்று யாருமே பேசக்கூடாது என்று சொல்லி [illegible] நோக்கிலே, இந்த மாதிரிப் பேசலாமா? அது நிச்சயமாக நன்றாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் பற்றிப் பேசக் கூடாது என்பதல்ல. Accusations and allegations செய்யக்கூடாது என்பதுதான். ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பற்றியோ அல்லது அவையில் உள்ள உறுப்பினரைப் பற்றியோ பேசலாம்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, defend பண்ண ஆளில்லையே.

சேலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், சென்னையிலேதான் இருக்கிறார். கிருஷ்ணா நீர் வரவில்லை என்றால், நமக்கு மட்டுமல்ல, அவருக்கும் குடி தண்ணீர் வராது. அவர் பேசாவிட்டாலும், அவர் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே எடுத்துச் சொல்ல வேண்டும். மற்ற மாவட்டங்களிலிருந்து வென்ற காங்கிரஸ் உறுப்பினர்களைக்கூடச் சொல்லவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களின் உதவியால் வெற்றி பெற்று தென் சென்னையிலிருந்து ஒரு காங்கிரஸ் எம்.பி. சென்றாரே, அந்த நாள் [illegible] கவர்ந்த கலைராணி திருமதி வைஜயந்திமாலா அவர்களாவது இதை எடுத்துப் பேசக்கூடாதா? இந்தத் திட்டத்திற்கு அவர்கள் அனுமதி கொடுத்திருந்தால் . . .

திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சற்று முன்புதான் இந்த அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசுவது மரபல்ல என்று பேசப்பட்டு, ஒரு முடிவுக்கு வந்தது விஷயம். அப்படி இருக்கும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேதோ அடைமொழிகள் எல்லாம் கொடுத்து, ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப்பற்றிப் பேசுகிறார்கள். அதுவும் தாய்க்குலத்தை நாங்கள் எவ்வளவோ மதிக்கிறோம், போற்றுகிறோம் என்று சொல்லக்கூடிய ஒரு கட்சியிலிருந்து வரும் உறுப்பினரவர்கள் இவ்வாறு பேசுகிறார்கள் என்றால் உண்மையிலே மிக வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அதுவும் தவிர இன்னும் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களால் ஜெயித்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். அதை முன்னவர் அவர்கள் மூலமாக ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். "உன்னாலே நான் ஜெயித்தேன், என்னாலே நீ ஜெயித்தாய்; உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்" என்று யாருமே பேசக்கூடாது என்று சொல்லியுள்ள நேரத்திலே, இந்த மாதிரிப் பேசலாமா? அது நிச்சயமாக நன்றாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் பற்றிப் பேசக்கூடாது என்பதல்ல. Accusations and allegations செய்யக்கூடாது என்பதுதான். ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பற்றியோ அல்லது அவையில் உள்ள உறுப்பினரைப் பற்றியோ பேசலாம்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, defend பண்ண ஆளில்லையே.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தாலும், பேரவையில் உறுப்பினராக இருந்தாலும் பேசலாம். அதில் தப்பு இல்லை. தனிப்பட்ட முறையில் அவர்மீது குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. Accusations and allegations சொல்லக்கூடாது என்பதுதான் நான் சொன்னது.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** அடைமொழி கொடுத்துப் பேசலாமா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவர் கவிஞர். "வசந்த கலா ராணி" என்ற அடைமொழி கொடுத்தார். அது நல்ல அடைமொழியா, இல்லையா என்று அவர்தான் சொல்ல வேண்டும். குறைபாடுள்ள அடைமொழியாக இருந்தால், அதைச் சொல்லக்கூடாது. என்ன அடைமொழி என்பதற்கு அவர்தான் விளக்கம் சொல்ல வேண்டும்.

**கவிஞர் முத்துலிங்கம் :** அவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நான் சொன்னேன். நான் சொன்னது, அவருடைய அழகைப் பெருமைப் படுத்துவதுதான். வசந்தம் என்றால் அழகு. எனவே தமிழ் புரியவில்லை அல்லது இதனால் மாண்புமிகு உறுப்பினர் மனம் வருத்தப்படுமானால், அதை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வசந்த கலா ராணி என்பதை அழகுள்ள ஆடல் அரசி என்ற அடிப்படையிலேதான் அவர் சொன்னார். அது தவறாக எடுத்துக்கொள்ளப்படுமானால், அதை வாபஸ் பெறலாம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** 'ஆடலரசி' என்பதில் தவறில்லை. அண்மையில் பிரதமர் அவர்கள் முன்னாலே ஆடியிருக்கிறார்கள். அதில் தவறு ஒன்றுமில்லை.

(பிற்பகல் 12-50)

**கவிஞர் முத்துலிங்கம் :** அந்த அம்மையார் அழகானவர் என்று நான் கூறினேன். அப்படிக் கூறாதீர்கள் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினால், நான் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். இத்துடன் இப்பிரச்சினையை விட்டு விட்டு அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன்.

அடுத்து, மத்திய அரசு நாம் கேட்கின்ற திட்டங்களுக்கு எல்லாம் அனுமதி கொடுத்துவிட்டு, நாங்கள் அவற்றை நிறைவேற்றவில்லையென்றால், அவர்கள் எங்கள் மீது குற்றச்சாட்டு கூறினால், அது நியாயம் என்று கூறுவோம். ஆனால் திட்டங்களுக்கான அனுமதியைக் கொடுக்காமல், தொழில்களுக்கான

அனுமதியைக் கொடுக்காமல், திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்று குற்றச்சாட்டு சொன்னால், என்ன பொருள்? அப்படி என்றால், குற்றம் சாட்டிப் பேச வேண்டும் என்பதற்காகவே மாநில அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று நான் குற்றம்சாட்டிக் கூறுகிறேன்.

அடுத்து, புதிய கல்விக் கொள்கை வந்திருக்கிறது. தொழில் வளர்ச்சியைப் பெருக்க புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருவதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதுபற்றிய விவரங்கள் இங்கே இருக்கிற பல மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கே தெரியாது. அது அவையில் வைக்கப்பட வேண்டும். புதிய கல்விக் கொள்கை தொழில் வளர்ச்சிக்காகக் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னால், அதை நாங்களெல்லாம் ஏற்றுக்கொள்வோம். ஆனால் அது ஒரு மொழியின் திணிப்புக்கு என்றால், தமிழ் நாடு அரசு நிச்சயமாக அதை எதிர்க்கும். இன்றைக்கு இதுபற்றி நாடு பூராவும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் வீதம் செலவிட்டு மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன. அப்படி இப்பள்ளிகள் எல்லாம் தொடங்கப்படும்போது, தமிழக அரசின் கல்விக் கொள்கை என்னவோ அது தான் மாதிரிப் பள்ளிகளிலும் இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அல்லது அந்தப் பள்ளிகளிலும் தமிழக அரசின் கல்வித் கொள்கையான தமிழையும், ஆங்கிலத்தையும் பரப்புவதற்காகப் பயன் படுத்தலாம். இன்றைக்கு நாம் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நிலைமை என்ன என்று பார்க்கிறோம். இன்றைக்கு சென்னையிலே ஆங்கிலப் பள்ளிகளின் எண்ணிக்கை தான் அதிகம். இன்னும் இரண்டு தலைமுறை சென்றால், தமிழ் பேசுகிறவர்கள் இருப்பார்களா என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு ஆங்கிலப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதிலும் இப்போது வருகின்ற மாடல் பள்ளிகளில் இந்தி திணிக்கப்படுகிறது என்றால், நிச்சயமாக நான் சொல்கிறேன் தமிழுக்கு ஆபத்து ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலை எந்த ரூபத்தில் வந்தாலும் நிச்சயமாகத் தமிழுக்கு ஆபத்து ஏற்படும் என்ற அடிப்படையில்தான், நாவலர் சோமசுந்தர பாரதியார். தமிழ் அறிஞர் திரு. வி. க. போன்றவர்கள் எல்லாம் அந்தக் காலத்திலேயே கடுமையாக எதிர்த்தார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் தமிழக அரசின் கல்விக் கொள்கையை இந்த மாடல் ஸ்கூல்களில் எல்லாம் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேறிஞர் அண்ணா அவர்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டும் தான் எங்கள் இரு மொழிகள் என்று சொன்னார். அப்போது என்.சி.சி.-யைக்கூட எடுத்து விட்டார்கள். அதில் நான்கு இந்தி சொற்கள் இருந்தன. அப்போது பேரறிஞர்

[கவிஞர் முத்துலிங்கம்] [1986 மார்ச் 26

அண்ணா அவர்களைப் பார்த்து இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் "அண்ணா, என்.சி.சி.-யில் நான்கு இந்தி வார்த்தைகள் தானே இருக்கின்றன, இது இருப்பதால் தமிழுக்கு என்ன ஆபத்து?" என்று கேட்டார்கள். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் "நான்கு வார்த்தைகள் தானே, அதை எடுத்துவிடுவதால் இந்திக்கு என்ன ஆபத்து?" என்று திருப்பிக் கேட்டார்கள். ஆக, அந்த வகையில் மொழிக் கொள்கையில் அவர்கள் அன்றைக்கும் உறுதியாக இருந்தார்கள். அந்த இயக்கத்தில் வந்த நாமும் இதிலே உறுதியாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உயிர் காக்கும் மருந்துகளுக்கு எட்டு சதவிகிதம் என்று இருந்த வரியை நான்கு சதவிகிதமாக நம்முடைய அரசு குறைத்திருக்கிறது. ஏழை யெளியவர்களுக்கு வரப்பிரசாதம் அளிக்கக் கூடிய திட்டமாதலால், நான் அதை வரவேற்கிறேன்.

அடுத்து, நகராட்சி தியேட்டர்களில் சினிமாவுக்கான கேளிக்கை வரியை 10 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். காரணம் இன்றைக்கும் நாம் பார்க்கிறோம், ஐந்து ரூபாய்க்கான டிக்கெட்டை பிளாக்கில் 10 ரூபாய், 15 ரூபாய் கொடுத்து வாங்கி சினிமா பார்க்கிறார்கள். இரண்டு வேளை, மூன்று வேளை சாப்பாடு இல்லாமல் பட்டினியிருந்தாவது சினிமா பார்க்க வேண்டுமென்ற நிலை இருப்பதையும் நாம் பார்க்கிறோம். இரவு சாப்பாடு சாப்பிடாமல் அந்தப் பணத்தைக் கொண்டு தூங்காமல் இரவுக் காட்சி பார்க்கிறவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் சொல்வேன், இந்தக் கேளிக்கை வரியை இன்னும் உயர்த்தலாம். இதனால் நகராட்சிகளுக்கு எல்லாம் கூடுதலான வருவாய் வரும். எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் நகராட்சிகளில் அதிகமாக தலைவர்களாக இருக்கிற நிலையில், இந்த நல்ல காரியத்தை நம்முடைய அரசு செய்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். வேறு ஒரு முதலமைச்சர் என்றால், மாற்றுக் கட்சிக்காரர்கள் இருக்கின்ற நகராட்சிகளில் வருமானம் அதிகமாக வரக்கூடிய அளவுக்கு இம்மாதிரி நல்ல காரியங்களை நிச்சயமாகச் செய்திருக்கமாட்டார்கள். ஆனால் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், யார் அதிகாரத்தில் இருந்தாலும், உள்ளபடியே மக்களுக்கு அதன் பலன் போய்ச் சேர வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், இதனைச் செய்திருக்கிறார்கள். இத்தகைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பரந்த மனப்பான்மையை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் எல்லாம் பாராட்ட வேண்டாமா?



1986 மார்ச் 26]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒரு மணிக்குள் உறுப்பினர் பேசி முடிக்க வேண்டும்.

**கவிஞர் முத்துலிங்கம்:** இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அடுத்து, ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்பு

(பிற்பகல் 12-55)

கிறேன். ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி திரு. சுப்பு அவர்கள் அழகாகச் சொன்னார்கள். பொற்கோயிலில் அரசாங்கம் நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் நேர்ந்த காரணத்தால்தான், அங்கே இராணுவம் நுழைந்தது. அதைப்போல ஒரு கட்டாயம் ஸ்ரீலங்கா பிரச்சினையிலும் வந்திருக்கிறது என்று சொன்னார். இன்றைக்கு மத்திய அரசின் அணுகுமுறை ஸ்ரீலங்கா பிரச்சினையில் முன்பு இருந்ததைவிட நமது நோக்கத்திற்கு இறங்கி வந்திருக்கிறது என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசின் வெளி விவகாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, ஸ்ரீலங்கா இந்தச் சிக்கலைத் தீர்க்காவிட்டால், அது ஸ்ரீலங்காவிற்கே ஒரு பெரிய சிக்கலாகிவிடும் என்று சொல்லியிருக்கிறார். அதன் காரணமாக நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுகிறது. நமது இந்திய அரசு சொல்வதையெல்லாம் ஸ்ரீலங்கா அரசு அலட்சியப்படுத்துவதற்குக் காரணம், அதற்கு அமெரிக்கா பக்கபலமாக இருப்பதுதான். அதுலத் முதலி ஆறு மாதத்திற்கு முன்பு என்ன சொன்னார் என்றால், இந்தியா இராணுவத்தை அனுப்பினால், ஸ்ரீலங்கா அதைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகச் சொன்னார். அப்படிக் கூறியதற்குக் காரணமே பின்னணியில் அமெரிக்கா இருப்பதுதான். பாகற்காய் பக்கத்தில் இருக்கிற தைரியத்தில் சுண்டைக்காய் வெண்டைக்காயை சவாலுக்கு அழைத்தது போல, (சிரிப்பு) அமெரிக்கா தனக்குப் பின்னணியில் இருக்கிற துணிச்சலில் இந்திய இராணுவத்தைச் சந்திப்போம் என்று அதுலத் முதலி கூறுகிறார். திரிகோணமலையில் அமெரிக்காவுக்குப் படைத்தளம் அமைக்க இடம் கொடுத்தால், அது இந்தியாவுக்கு பல வகையிலும் ஆபத்து, வடக்கே இமயமலைக்கு அப்பால் சீனப்பாம்பு எப்போது இந்தியாவை விழுங்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறது. மேற்கே காஷ்மீரத்தைக் கபளீகரம் செய்து கொண்டு இந்தியாவுக்குள் எப்போது ஊடுருவலாம் என்று பாகிஸ்தான் என்ற புலி அங்கே பதுங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் திரிகோணமலையில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்துகொண்டால், இந்தியாவை நோக்கி மூன்றாவது ஆபத்து வந்ததாகத்தான் பொருள். முன்பு இரண்டு வழியில்தான் ஆபத்து இருந்தது. இப்போது மூன்று திசையிலும் அதற்கு ஆபத்து இருக்கிறது. ஆகவே அமெரிக்கா அங்கே வந்துவிட்டால், அது ஆசிய

நாடுகளுக்கே ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஆசிய நாடுகள் அவர்கள் பாதுகாப்புக்காகவாகிலும் ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையை தங்கள் பிரச்சினையாக நினைத்து, அதிக அக்கறை காட்டி, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதலிலே வடக்கேயிருந்து பகை வந்தது. இப்போது தெற்கேயிருந்து பகை வந்தால், அதை இந்தியா தாங்க முடியாது. ஏனென்றால் தெற்கேயிருந்து வரும் பகை கடுமையாக இருக்கும். அமெரிக்காகாரன் பின்னணியில் இருந்து ஸ்ரீலங்காவைத் தூண்டிவிட்டால், ஸ்ரீலங்கா நிச்சயமாக இந்தியா மீது படையெடுக்கும். இப்படிப் படையெடுக்கும்போது, முதலில் அழிவது தமிழ் நாடாகத்தான் இருக்கும். பாதிக்கப்படுவது தமிழர்கள்தான். அப்படி ஒரு சூழ்நிலை இருந்தால், தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து துண்டித்து விடக்கூடிய நிலைமை அமெரிக்காவால் ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், ஸ்ரீலங்கா தமிழர்கள் அவர்கள் விரும்புகிற ஒரு நாட்டை ஏற்படுத்திக் கொடுக்க மத்திய அரசும், பிரதமரும் முன்வர வேண்டும். அதுதான் இந்தியாவுக்குப் பாதுகாப்பு. ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு அது பாதுகாப்பு என்ற முறையில், அதைச் செய்து விடலாம். இந்தியாவுக்கு அதுதான் பாதுகாப்பாக இருக்குமென்று கருதி பிரதமர் செய்ய வேண்டும். என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்கு இந்து மகா சமுத்திரத்தில் தமிழ் ஈழ நாடு பிறக்கத்தான் போகிறது. ஆனால் அந்தக் குழந்தை சுலபமாக இயற்கையாகப் பிறக்காது. அறுவை சிகிச்சை செய்து தான் எடுக்க வேண்டும். அறுவை சிகிச்சை செய்கிற மருத்துவராக இருக்க வேண்டியவர் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்தான். அவர் கையில் இருக்கவேண்டிய ஆயுதங்கள் பீரங்கிகளும், விமானத்திலிருந்து பொழியும் குண்டுகளுந்தான். இன்றைக்கு ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கிற அகதிகளுக்கு நிறைய நன்மைகள் செய்திருக்கிறோம். ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்தபோது, குட்டிமணி, ஜெகன் போன்றவர்களைப் பிடித்து ஸ்ரீலங்காவிற்கு அனுப்பினார்கள். அவர்களுடைய குடும்பங்கள் இங்கே வாழ வீடு கொடுத்து, அவர்கள் பிள்ளைகள் படிக்க பள்ளியில் இடமளித்து, பணம் கொடுத்து ஆதரவளித்தவர் புரட்சித் தலைவர் ஆவார்கள். ஆகவே எந்தெந்த வகைகளில் ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டுமோ அந்தந்த வகைகளில் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் உதவிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தி.மு.க.-வினரும் மற்ற எதிர்க்கட்சிகளும் மேடையில் பேசுவதோடு சரி. ஆக்கபூர்வமாக எதுவும் அவர்களுக்காகச் செய்யவில்லை. புரட்சித் தலைவர்தான் செய்கிறார். கலைஞர் ஆட்சியில் இருந்தபோதும், ஸ்ரீலங்காவில் இனப்படுகொலை [illegible] நடந்தது. அப்போது ஸ்ரீலங்கா [illegible]



தலைவர் செல்வநாயகமும், திரு. அமிர்தலிங்கமும் அவர் மனைவியார் மங்கையர்க்கரசியும் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் மகேசன் அவர்களும் தமிழகத்திற்கு வந்தார்கள். அப்போது அவர்களுக்கு நாங்கள் கோகலே ஹாலில் வரவேற்பு கொடுத்தோம். அப்போது திருமதி மங்கையர்க்கரசி பேசினார்கள். "பங்களா தேஷிலிருந்து அகதிகள் வெளியே வர தரை மார்க்கம் இருக்கிறது. ஆனால் சிங்கள வெறியர்களிடமிருந்து நாங்கள் ஓடிவர எங்களுக்கு தரை மார்க்கம் கிடையாது, கடலில்தான் விழ வேண்டும்" என்று சொன்னார்கள். "ஆகவே தமிழர்கள் எங்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். "மத்திய அரசிடம் எங்களுக்காகப் பேசி எங்களுக்குத் தனி நாடு பெற்றுத் தரவேண்டும் அல்லது தனி மாநிலம் பெற்றுத் தர வேண்டும்" என்று சொன்னார்கள். நான் அப்போது 'முரசொலி' பத்திரிகையில் துணை ஆசிரியராக இருந்தேன். அவர்கள் சொன்னார்களே என்று இலங்கை பூமி எப்படி தமிழர்களுக்குச் சொந்தமான பூமி என்றும், அவர்களுக்கு அந்த நாட்டைப் பிரித்துக் கொடுத்தால், ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை தீரும், இல்லாவிட்டால் போராட்டம் நடக்கும் என்றும் ஒரு கட்டுரை எழுதினேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

**கவிஞர் முத்துலிங்கம் :** ஒரு கட்டுரை எழுதினேன். உடனே கலைஞர் சொல்லி அதை அவர்கள் போடாமல் நிறுத்திவிட்டார்கள். முரசொலி மாறன் அவர்கள் என்னிடம் வந்து "நாம் ஆட்சியில் இருக்கின்றோம்; நாம் ஆட்சியில் இருக்கின்றபோது இன்னொரு நாட்டிலே இருக்கின்ற ஒரு பிரச்சினையிலே தனி நாடு வேண்டும் என்றோ அல்லது தனி நாடு கொடுப்பதற்கு மத்திய அரசு உதவ வேண்டுமென்றோ சொல்வது நமக்குச் சிக்கலை உண்டாக்கும். ஆகவே அப்படி எல்லாம் எழுதக்கூடாது" என்று கூறி, அந்தக் கட்டுரையை வெளியிடாமல் நிறுத்தி விட்டார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது, ஸ்ரீலங்கா பிரச்சினையில் ஒரு நிலை எடுத்தார். அவர் ஆட்சியில் இல்லாதபோது, வேறொரு நிலை எடுப்பதென்பது அவரது வாடிக்கையாக இருக்கிறது. ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் அன்று முதல் இன்றுவரை முன்னுக்குப்பின் முரணாக நிலை எடுத்து, இரட்டை வேடம் போடக்கூடிய தலைவராக கலைஞர் இருக்கிறார் என்று நான் இந்த மன்றத்தின் மூலமாகக் குற்றம் சாட்டுகிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் ஏதோ பத்திரிகையில் பணியாற்றியபோது, அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் மாறன் அவர்கள் அவர் கருத்தை வெளியிடவில்லை என்கிற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அவர் இவ்வாறு எந்த அடிப்படையில் சொல்கிறார்? அந்தக் கட்டுரை எழுதியது யாருக்குத் தெரியும்? எனவே இதை அனுமதிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பொதுவாக ஒரு கொள்கையைப்பற்றிச் சொல்கிறார்கள், அதை மறுத்துப் பேசுவதாக இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் அதை மறுத்துச் சொல்லலாம். அதைத் தாங்கள் தங்கள் கட்சியின் சார்பாக மறுக்கலாம்.

**கவிஞர் முத்துலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்போது அங்கே பணியாற்றிய அனைத்து நண்பர்களுக்கும் தெரியும். இப்போது யாரும் அங்கே இல்லை. மனச்சாட்சி இருந்தால், மாறன் அவர்களையே கேட்டுப்பாருங்கள்; ஒத்துக்கொள்வார். ஆக, இந்த ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையிலே இரட்டை வேடம் போடக்கூடியவராக, கலைஞர் இருக்கின்றார் என்கிற குற்றச்சாட்டை இந்த மன்றத்தின் மூலமாக நான் மீண்டும் சொல்கிறேன். அவர் எதை எடுத்தாலும், தன்னலம் கருதித் தான் செய்வார். தன்னலத்தின் அடிப்படையிலேதான் பொது நலத்தையேகூட பார்ப்பார்.

நேற்றுகூட தொலைக்காட்சி நிலையத்திற்கு முன்பு ஒரு போராட்டம் நடத்தினார்கள். எதற்காக? தன்னுடைய பேச்சை ஒளிபரப்பவில்லை என்பதற்காகப் போராட்டம். தொலைக்காட்சியிலே இந்தியைத் திணிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அதை எதிர்த்துப் போராட்டம் என்றோ, ஈழத் தமிழர்களுக்கு எதிர்ப்பான செய்தியைச் சொல்கிறார்கள் என்பதற்காகவோ . . . . .

**திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைக்குத் தொலைக்காட்சியை எதிர்த்து போராட்டம் ஏதோ அவர்கள் கலைஞர் பேச்சை ஒளிபரப்ப மறுத்துவிட்டார்கள் என்பதற்காக மட்டுமல்ல, பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கி நடைபெற்றது. போராட்டத்தின் வாசகங்கள், இன்றையப் பத்திரிக்கைகளைப் பார்த்திருந்தால்கூடத் தெரியும். தொலைக்காட்சியில் டில்லியினுடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது. இந்தியைத் திணிப்பதற்கு அதை ஒரு சாதனமாகப் பயன்படுத்தக்கூடாது என்கிற பல்வேறு கருத்துக்களின் அடிப்படையிலேதான் அப்போராட்டம் நடைபெற்றது. இரண்டாவதாக ஏதோ கலைஞர் போய் தொலைக்காட்சி நிலையத்தார் தன் பேச்சை ஒளிபரப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளவில்லை. மாறாக அவர்களே வலியவந்து கலைஞர் அவர்களுடைய பேச்சை வாங்கிக்கொண்டு, ஒளிபரப்புகிறோம் என்று சொல்லிச் சென்றார்கள். 'நியூஸ் லைன்' என்கிற நிறுவனம் அதை வாங்கிச் சென்றது. ஆனால் பின்னாலே, பெறப்பட்ட கலைஞர் பேச்சை ஒளிபரப்பாமல் தடைசெய்துவிட்டார்கள். அது ஒன்றை மட்டும் வைத்து இப்போராட்டம் நடைபெறவில்லை. இன்றைக்கு வந்திருக்கக்கூடிய எதிர்ப்புக் குரல் வாசகங்களைப் பார்த்தாலே தெரியும். பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அதில் ஒன்று கலைஞர் பேச்சை ஒளி பரப்பாதது என்கிற அடிப்படையில்தான் அந்தப் போராட்டம் நடந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**கவிஞர் முத்துலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானும் அதை அறிவேன். ஆனால் கலைஞர் அவர்களுடைய பேச்சை மட்டுமே ஒளிபரப்பவில்லை, அதற்காக அந்தப் போராட்டம் என்றால் தன்னை மற்றவர்கள் தவறாகக் கருதுவார்களே என்று எண்ணி, மற்றவைகளையெல்லாம் இடைச் செருகல்களாக அவர்கள் சேர்த்துச் செய்திருக்கிறார்கள். கலைஞருடைய இராஜதந்திரம் எங்களுக்குத் தெரியாதா? இன்றைக்கு உங்களுக்கு அவர் தலைவராக இருப்பதைப்போலத்தான் எனக்கும் இங்கே இருக்கின்ற பல உறுப்பினர்களுக்கும் ஒரு காலத்தில் தலைவராக இருந்தார். நீங்கள் இருக்கக்கூடிய இடத்தை விட இன்னும் கொஞ்சம் நான் நெருங்கியே இருந்தேன். அவர் கண் அசைவுக்கு என்ன அர்த்தம், கால் அசைவுக்கு என்ன அர்த்தம் என்று எல்லாவற்றிற்கும் எங்களுக்கு அர்த்தங்கள் தெரியும். நான் இங்கே பேசும்போது எப்போதாவது இங்கே அவையிலே அவர் இருப்பார், சில விஷயங்களைப் பேசலாம், அவர் பதில் சொல்வார் என்றெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் அவருக்கும் என்னைப்போன்ற ஒரு சிலருக்கும் தெரிந்த சில அரசியல் விஷயங்கள் இருக்கின்றன. ஆகவே, இனிமேலாவது நான் பேசும்போது, அவர் வந்து அமரட்டும். நான் சொன்னேன் என்று அவரிடம் சொல்லுங்கள். அவர் வருவார்.

**திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் அவைக்கு சில நேரங்களில் வருகிறார். இன்றைக்கு 'டெசோ'வினுடைய கூட்டம் இருப்பதால், அவரால்

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 மார்ச் 26

வர இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பேசுவார் என்று எதிர்பார்த்து அந்த நேரத்திலே அவர் இங்கிருக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி ஒரு கணக்கை வைத்துக்கொண்டால், நானும் கேட்கலாம். இரண்டு ஆண்டுகளாக நான் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரண்டே இரண்டு நாள் ஐந்து நிமிடங்கள் வந்து அமர்ந்திருந்தார்கள். கூட்டுப் பொறுப்பு என்று சொன்னாலும்கூட, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுப் பொறுப்பு இல்லாமலேயே இந்த அவை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர் இருக்கும் போது பேச எனக்கும் சில விவகாரங்கள் தெரியும். எனவே நான்கூட கேட்கலாம். முதலமைச்சரே இல்லாமல் இந்த அவை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் கூட்டுப் பொறுப்பு என்று சொன்னால், இரண்டு ஆண்டுகளாகவா என்று கேட்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குமா என்று கேட்கிறேன். அப்படித் தந்துவிட முடியுமா? இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். சிறந்த முறையில் கருத்துக்களைச் சொல்வார் என்கிற அடிப்படையில்தான் நான் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-05)

கலைஞர் அவர்கள் இருந்தால்தான் பேசுவேன்; அவர் இல்லையே என்கிற போது, அவர் இந்த அவைக்கு வராமல் இருப்பது பத்திரிகையில் வரும். நாங்கள் கூட சொல்லலாம். இந்த அவைக்கு முதல்வர் அவர்கள் வருவதும், அவர்கள் மணிக் கணக்காகப் பேசுவார் என்றும் பத்திரிகையிலே செய்தியை நாங்கள் படிப்பதுண்டு. அப்படிப்பட்ட நிலையில் நாங்களும் இங்கே வந்திருக்க மாட்டோமா? ஏதோ அவர்களுக்குத்தான் பேசத் தெரியுமென்றால், நாங்களும் பேச முடியாதா? எனவே கலைஞர் அவர்கள் இந்த அவைக்கு வருகிறார்கள். அவர்கள் வருகின்ற நேரத்திலே சில வேலைகள் இருக்கக் கூடும். அவர் இருந்தால், தனது பேச்சு வேறு மாதிரியாக இருக்குமென்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் பெருந்தன்மையோடு உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் சொல்கிறார்.

திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: அதே பெருந்தன்மையோடு தான் நானும் சொல்கிறேன். அவரை நான் ஒன்றும் குறைவாகச் சொல்லிவிடவில்லை. நான் இந்தப் பேச்சிலே உங்களை ஒன்றும் சொல்லவில்லை. அவர் சொன்ன காரணத்தினாலே, நான் சொன்னேன்.

திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவரவர்களே, விவாதத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் குறைவாக . . . . .



1986 மார்ச் 26]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் சொன்னதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**கவிஞர் முத்துலிங்கம்:** புரட்சித் தலைவர் அவர்கள் பொது நலத்திற்காக, சமுதாய மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு செயல்படாத அரசு என்றெல்லாம் இங்கே உறுப்பினர்கள் குற்றம் சாட்டிக் கூறினார்கள். செயல்படாது இருந்த நகராட்சிகளை எல்லாம், செயல்பட வைத்திருக்கின்ற இந்த அரசை செயல்படாத அரசு என்று கூறியிருக்கிறார்கள். அப்படி எதை வைத்து செயல்படாத அரசு என்று சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த அரசு வரி விலக்கு கொடுத்திருக்கிறது. இதைவிட வேறு என்ன செய்ய முடியும்? இதைவிட எப்படிச் செயலாற்ற முடியும்? ஒருவேளை அவர்கள் செயல்படாத அரசு என்று கூறியது, இப்படி இருப்பதற்காகச் சொல்கிறார்களோ என்று தெரியவில்லை. கலைஞர் ஆட்சியில் இருந்தபோது, அவருடைய ஆட்சியை விமர்சித்த பத்திரிகைகள் எல்லாம் அன்றைக்கு அடித்து நொறுக்கப்பட்டன. குமுதம் பத்திரிகை தாக்கப்பட்டது. மக்கள் குரல் மூன்று முறை தாக்கப்பட்டது. ஆனந்த விகடன் அடித்து நொறுக்கப்பட்டது. அதைப்போலவே புரட்சித் தலைவர் ஆட்சியை விமர்சனம் செய்யக்கூடிய பத்திரிகைகள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவே, அந்த வகையில் இந்த ஆட்சி செயல்படாமல் இருக்கிறதோ; ஆதலால் செயல்படாத அரசாக இருக்கலாமென்று இவர்கள் கூறுகின்றார்களோ என்று நான் நினைக்கிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** நான் பேசுகின்ற ஆட்சியில் கோயம்புத்தூரில் தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் பேசுவதற்கு, உறுப்பினர் திரு. மிசா. கணேசன் பதில் சொல்கிறார். உறுப்பினர் திரு. இராதா அவர்கள் உட்கார வேண்டும். உங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** புரட்சித் தலைவர் போது கூட திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசியதற்கு ஏன் அவர் வக்காலத்து வாங்குகிறார் என்று கேட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதையே தான் நான் சொல்கிறேன். உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் நிதிநிலை அறிக்கையில் கொஞ்சம் பேசவேண்டும். ஓர் உறுப்பினர் பேசும்போது இன்னொரு உறுப்பினர் பதில் அளிக்கிறார். இதில் மூன்றாவது உறுப்பினர் எழுந்து பேசுவதற்கு என்ன இருக்கிறது ? (திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் எழுந்தார்.) உறுப்பினர் திரு. இராதா அவர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் முடிக்கப் போகிறார்.

**கவிஞர் முத்துலிங்கம் :** ஆகவே தமிழக மக்களுக்கு எந்தெந்த வகையில் நன்மை செய்ய வேண்டுமோ அந்தந்த வகையில் நன்மைகளை எல்லாம் உள்ளடக்கி இந்த நிதிநிலை அறிக்கையை நாவலர் அவர்கள் இந்த அவையில் சமர்ப்பித்ததற்காக நன்றி தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி, போற்றிப் புகழ்ந்து அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 27—3—1986 வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும்.

(பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.)

(பிற்பகல் 1-08.)

**3. அவை முன் வைக்கப்பட்ட தாள்கள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

185. பொதுத்துறையின் (காவல்) 20—11—1985 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அறிவிக்கைக்குத் திருத்தம் ஒன்றைச் செய்வது தொடர்பாக, வணிக வரிகள்—அறக்கட்டளைத்துறையின் 1004 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10(4)ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

186. மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



187. சேரன் பொறியியல் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (தமிழ்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

188. சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619(ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

189. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

190. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பணி குறித்த ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 வது பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

191. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பணி குறித்த ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் இல்லை.**

10301 [illegible] (281)

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 27, 1986-தொகுதி 222 எண் 2.
Thursday, 27th March 1986-Volume 222 No. 2.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை: ரூ. 2.75]

பொருளடக்கம்.


பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள் .. .. ... 95—104

2 அறிவிப்புகள்—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி .. ... 105

(2) பேரவையிலிருந்து செய்தி .. ... 105

3 கவன ஈர்ப்பு—

வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைப் பேராசிரியர்களுக்கு மற்ற பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப் பட்டதுபோல் நிர்ணயிக்கப்படாதது குறித்து 105—106

4 அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986) .. .. .. 107—108

(2) தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986) .. .. .. 108—109

5 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் .. 109—183

6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. ... 184—191



143545

D

V2:11,32'N86

N86.222.1—2

D S.C 9—1

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வியாழக்கிழமை, 1986 மார்ச் 27,

பங்குனி 13, குரோதன, திருவள்ளுவராண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திருவாரூர்-வேதாரண்யம் பேருந்து வசதி.

* 121 வினா—திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவாரூரிலிருந்து, தலைஞாயிறு வழியாக வேதாரண்யத்திற்கு ஓடிக்கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப் பட்டதால், தனியார் துறை பேருந்துக்கு இலாபமும், அரசுக்கு இழப்பும் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மீண்டும் அப்பேருந்தை விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. முத்துசாமி: (அ) மற்றும் (இ) திருவாரூர்-தலைஞாயிறு வழியாக வேதாரண்யத்திற்கு ஓடிக்கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து தொடர்ந்து நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்தமையால், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. எனினும், பொதுமக்களின் நலன் கருதி மீண்டும் 1984ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் இப்பேருந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

## கிழக்குக் கடற்கரைச் சாலை

* 122 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் திரு. அ. மயில்சாமி (திரு. எல். ஜெயச்சந்திரன் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையை, தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்து, அச்சாலையை மேம்படுத்த வேண்டும் என்று, மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், இது குறித்து மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தகவல் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம், சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மேம்படுத்தக் கோரி தமிழ் நாடு அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது.

(இ) மத்திய அரசு நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இத்திட்டத்திற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு இக்கோரிக்கையை நீண்ட காலமாகவே மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு நீண்டகாலமாகவே வலியுறுத்தி வந்தும்கூட, கிழக்குக் கடற்கரைச் சாலையான இந்தச் சாலையில் சென்னையையும் கன்னியாகுமரியையும் இணைக்கக் கூடிய நிலையில் பல இடங்களில் மிகவும் குறுகலான பாதை இருப்பதால், மகாபலிபுரம், பாண்டிச்சேரி, சிதம்பரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருச்செந்தூர் போன்ற முக்கியமான நகரங்களையும் இணைக்கும் நிலையில் மிகவும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சாலை குறித்து மத்திய அரசு ஏன் ஏற்க மறுக்கிறது ? அவ்வாறு ஏற்க மறுப்பதற்கான சங்கடங்கள் என்ன என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சாலையின் முக்கியத்துவம் என்ன, இதன் சாத்தியக்கூறுகள் என்ன, இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லித்தான் நாம் மத்திய



அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். இதன் முக்கியத்துவத்தை மத்திய அரசு நன்கு புரிந்துகொண்டிருந்தாலும் கூட, அதன் நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாகத்தான் பல நேரங்களில் இப்படிப்பட்ட திட்டங்களை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை அதற்கு ஏற்படுகிறது. இருந்தாலும்கூட, நம்மைப் பொறுத்தவரை, இதைக் கண்டிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில், தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதன் அடிப்படையில்தான் மாநில அரசும் தன்னுடைய பொறுப்பிலேயே ஏறத்தாழ 392 லட்சம் ரூபாய் செலவில் 38 இடங்களில் பாலத்தைக் கட்டியிருக்கிறது. மேலும் 17 பாலங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நமக்கு மத்திய அரசிடமிருந்து ரூ. 261 லட்சம் கடனாகக் கிடைத்திருக்கிறது. இந்த நிலையில்தான் அதனை தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசு ஏற்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்தச் சாலை மத்திய அரசால் தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக் கொள்ளப்படுகிற வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், missing links என்கிற வகையில் 38 இடங்களில் பாலங்களை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் ஒரு 17 இடங்களில் இந்த 'மிஸ்ஸிங் லிங்க்கு'-களை இணைக்கும் வகையில் பாலங்களை அமைக்க வேண்டியிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில், நமது மாநிலத்தில் Fisheries scheme என்ற பிரிவு ஒன்று இருக்கிறது. அந்த 'ஃபிஷரீஸ் ஸ்கீமில்' இந்தச் சாலையைச் சேர்த்து தற்காலிகமாக இப்போது மிஸ்ஸிங் லிங்க்குகளாக இருக்கிற இடங்களிலும் பாலங்களைக் கட்ட அரசு முன்வருமா ? இது கடற்கரையை ஒட்டிய சாலையாக இருப்பதன் காரணமாக, மீன்வளத் துறைக்கும் இதில் முக்கியத்துவம் இருக்கிறது. எனவே அந்த அடிப்படையில் இடைக்கால ஏற்பாடாக தமிழக அரசே—இதை மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கின்ற வரையிலாவது—தன்னுடைய பொறுப்பில் இந்த மிஸ்ஸிங் லிங்க்குகள் உள்ள இடங்களில் பாலங்களைக் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எந்தத் துறையின் கீழ் எடுத்துக் கொள்கிறோம் என்பதல்ல முக்கியம். எப்படியாவது வேலை நடக்க வேண்டும். எந்தத் துறையில் எடுத்துக் கொண்டாலும், நாம்தான் அவற்றைச் செய்வது என்றால், தமிழக அரசுதான் இதற்காகப் பணம் ஒதுக்க வேண்டும். மீனளத்

துறையானாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையானாலும் சரி இதுதான் நிலைமை. இப்போதும் படிப்படியாக நெடுஞ்சாலைத் துறையினர் அந்த வேலையைச் செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

(பிற்பகல் 4-05)

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை தேசிய நெடுஞ்சாலை ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதோடு சேர்ந்ததுதானா இது, அல்லது தனிப்பட்ட பாதையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தனிப்பட்ட பாதையாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நவீன பேருந்து நிலையம்.

* 123 வினா.—திரு. க. சுப்பு (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூரில், உக்கடம் பகுதி வாலாங்குளத்தில் நவீன பேருந்து நிலையம் அமைக்கும் கருத்துரு, தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சேரன் போக்குவரத்துக் கழகம் உக்கடத்திலுள்ள வாலாங்குளம் பகுதியில் நவீன பேருந்து நிலையம் அமைக்க 10 ஏக்கர் நிலத்தை தன்வசப்படுத்தியுள்ளது. நிலமட்ட அளவுகள் எடுக்கப்பட்டுவருகிறது. நவீன பேருந்து நிலையம் அமைக்க வரையறுக்கப்பட்ட கட்டிட நிபுணர்களிடமிருந்து தேசிய அளவிலான பலதரப்பட்ட வரைபடத் திட்டம் பெற்று விரைவில் பணிகள் தொடங்க இருக்கிறார்கள்.

உதகை-மேட்டுப்பாளையம் சாலை

* 124 வினா.—திரு. க. சுப்பு (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை-கோத்தகிரி-மேட்டுப்பாளையம் சாலையை அகலப்படுத்தும் பணி, தொடங்கப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முடிவடையும்?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) உதகை-கோத்தகிரி-மேட்டுப்பாளையம் சாலை வேலை தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

(இ) இப்பணியின் அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

* 125 வினா.—திரு. ஆர். டி. சீத்தாபதி (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1983-84 ஆம் நிதி ஆண்டில், சென்னையில் குடிசை மாற்று வாரியம் சார்பில், கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை?

(இ) 1—4—1985 அன்றுள்ளவாறு, இதில் எத்தனை வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்?

(உ) இந்தத் திட்டத்தை, சென்னை தவிர வேறு நகரங்களுக்கு விரிவாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. த. நல்லுசாமி: (அ) 1,010.

(இ) 914.

(உ) 42 நகரங்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

* 126 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகள் எத்தனை உள்ளன?

(இ) இக்குடியிருப்புகளுக்கு மாத வாடகையாக எவ்வளவு தொகை வசூல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. த. நல்லுசாமி: (அ) 45,720 குடியிருப்புகள்.

(இ) (i) வாடகை குடியிருப்புகளுக்கு மாத வாடகை ரூ. 20 முதல் ரூ. 25 வரையிலும்.

(ii) தவணை முறை குடியிருப்புகளுக்கு மாத வாடகை ரூ. 30 முதல் ரூ. 45 வரையிலும்.

(iii) குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளுக்கு மாத தவணை ரூ. 85-ம் வசூல் செய்யப்படுகிறது.

[1986 மார்ச் 27

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** சென்னையிலே குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வளவு வாடகை இப்போது வருகிறது என்பதை அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** குடிசை மாற்று வாரியத்தின் வாடகை இப்போதுள்ள நடைமுறைக்கேற்றவாறு கேட்பு ரூபாய் 2,18,31,430. வசூலாகியுள்ள தொகை 14, 81,000 ரூபாய். பாக்கி 2,03,50,430 ரூபாய்.

**திரு. மு. மாசிலாமணி:** சென்னை நகரத்திலே உள்ளவர்கள் இருக்க இடமின்றி அவதிப்பட்டு மேலே தாம்பரம், முடிச்சூர், பெருங்களத்தூர், படப்பை போன்ற பகுதிகளுக்குச் சென்று குடியேறுகிறார்கள். அந்த மக்களுக்கு வசதி செய்யும்பொருட்டு, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டித் தரும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** சென்னை நகரத்திற்குள் பல்வேறு இடங்களில் எந்தெந்த இடங்களில் வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கணக்கெடுத்து, எத்தனை குடிசைகள் இருக்கின்றன, அதிலே எத்தனை ஆண்டுக் காலமாக மக்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்து குடிசை வாசிகளின் பட்டியலைத் தயார் செய்து, அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் வீடுகள் கட்டி வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதிகளில், இருக்கின்ற நிதி நிலைமையை அனுசரித்து முடிவு செய்யப்படும்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** உலக வங்கி தருகிற பணத்திலே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித் தருகிறோம். இப்படி வசூல் செய்யவில்லை என்றால், மேலும் கட்டிடம் கட்ட இயலாமல் போய் விடும். அதிகாரிகளால் வசூல் செய்ய முடியவில்லையா அல்லது அங்கே குடியிருக்கின்ற பொதுமக்கள் வாடகையைத் தர மறுக்கிறார்களா? இதிலே எது உண்மை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** அதிகாரிகளைப் பொறுத்தவரையில், மாதம் ஒருமுறை சென்று, அங்கேயுள்ள குடிசைவாசிகளிடம் கேட்டு வருகிறார்கள். அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லி, உரிய நேரத்தில் பணம் கட்டுவதில்லை. அதற்கு வேறு வழி இருக்கிறதா என்பது ஆராயப்பட்டு வருகிறது. அதுபற்றி பிறகு விரிவாகத் தகவல் தரப்படும்.



1986 மார்ச் 27]

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** குடிசை மாற்று வாரியம் ஆரம்பித்த காலத்திலேயிருந்து இந்தத் தகராறு இருக்கிறது. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே அதிகாரிகளிடம் நானே விசாரித்திருக்கிறேன். இதற்கு ஒரு தக்க பரிகாரம் காணப்பட வேண்டும். தயவு தாட்சண்யம், அரசியல் தலையீடுகள் ஆகிய காரணங்களாலே வசூல் செய்ய முடியவில்லை என்று அதிகாரிகள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே சொல்லுகிறார்கள். அது உண்மையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** இப்பொழுது இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில், வாடகை கொடுக்காதவர்களைக் காலி செய்ய உரிமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்து அவசியம் மனதிலே கொள்ளப்படும். வேறு வகையில் ஒரு குழுவின் பரிந்துரையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரின் நியாயமான எண்ணங்கள் அதிலே வருவதற்கு இருக்கின்றன.

### செருப்பு தைப்போருக்கு பெட்டிக்கடைகள்.

*** 127 வினா—திரு. சி. இராமலிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்):** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1983-84 ஆம் ஆண்டுகளில், தென்னாற்காடு மாவட்டத்தில், செருப்பு தைக்கும் தொழிலாளிகளுக்கு, தொழில் செய்ய தரப்பட்ட பெட்டிக் கடைகள் எத்தனை ?

(இ) இதைக் கூடுதலாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்:** (அ) 1983-84 ஆம் ஆண்டுகளில் தென்னாற்காடு மாவட்டத்தில் செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு தரப்பட்ட பெட்டிக் கடைகளின் எண்ணிக்கை 45.

(இ) இல்லை.

(பிற்பகல் 4-10)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்த 45 தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு தொழிலாளிக்கும் எவ்வளவு தொகை நிதியுதவி செய்யப்பட்டது ? அப்படித் தொடங்கப்பட்ட பெட்டிக் கடைகளை இந்தத் தொழிலாளர்கள் சரியான முறையில் நடத்தி வருகின்றார்களா ?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு கடைக்கும் ரூ. 7,000 என்று ஒதுக்கப்பட்டது. 1981-82-வது ஆண்டில் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டது. தற்போது அது ரூ. 3,500 ஆக உயர்த்தப்பட்டு ஒதுக்கப்படுகிறது. அந்த பங்க் கடைகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பங்க் கடைகளை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றார்களா என்பதைப் பற்றிய விவரம் தற்போது விளக்கமாகக் கொடுக்கப்படவில்லை. அப்படி யாராவது சரியாக நடத்தவில்லை என்று குறிப்பிட்டுக் கேட்டால், அவர்கள் நடத்துகின்றார்களா இல்லையா என்பதைப்பற்றிக் கேட்டறிந்து விளக்கம் தரலாம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, இது தென்னாற்காடு மாவட்டம் பற்றிய கேள்வியாக இருந்தாலும், மற்ற மாவட்டங்களில் அப்படி எவ்வளவு இருக்கின்றன என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் ரூ. 36,50,000 செலவிலே 500 பங்க் கடைகள், பெட்டிக்கடைகளுக்காக என்று ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1986-87-வது ஆண்டு, நடப்பு ஆண்டுக்கு ரூ. 63,75,000 செலவில் 750 பெட்டிக் கடைகள் கொடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பழங்குடி மக்கள்.

*** 128 வினா—திரு. க. சுப்பு (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்) :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நீலகிரி வாழ் பழங்குடி மக்கள் நலத்திற்கு என தமிழக அரசால் ஏதேனும் புதிய திட்டங்கள் திட்டப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. அ அருணாசலம்:** இல்லை.



### வெள்ள நீர்.

*** 129 வினா—திரு. சி. இராமலிங்கம் (திரு. காடுவெட்டி கண்ணப்பன் சார்பில்):** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆறுகளில் வரும் வெள்ள நீரை, அருகிலுள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் நிரப்ப வகை செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) & (இ) ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது நீரின் பெரும்பங்கானது புதிய கண்மாய்களுக்கு திருப்பப்பட்டும் பழைய கண்மாய்கள் மூலமாக பாசன வசதிகள் சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டுக்கான ரூ. 91.62 இலட்சம் மதிப்பீட்டில், 6 சிறப்பு சிறு பாசன திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ஏரிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மணியாச்சி பாசன திட்டம்.

*** 130 வினா—திரு. க. சுப்பு (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்):** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரியார் மாவட்டத்தில், மணியாச்சி பாசன திட்டம், தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

(இ) அதன் தாமதத்திற்குக் காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) & (இ) இத்திட்டம் பொருளாதார ரீதியில் சாத்தியப்படாத திட்டமாகக் கருதப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 19—3—1986 அன்று ஒத்திவைக்கப்பட்ட வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**வேலையில்லா பட்டதாரிகளுக்கு பயிற்சி.**

* 77 வினா—திரு. அ. மயில்சாமி (திரு. எல். ஜெயச்சந்திரன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேளாண்மைத் துறையில், பூச்சி மருந்து தெளித்தல், உரமிடுதல் போன்ற பயிற்சிகள் தற்போது ஆசிரியர்களுக்கு அளிப்பதற்கு பதிலாக, வேலையில்லா பட்டதாரிகளுக்கு அளிக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை.

**திண்டிவனம் நகராட்சிக்கான குடிநீர் வழங்கும் திட்டம்.**

* 78 வினா—திரு. சி. இராமலிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—.

(அ) திண்டிவனம் நகராட்சி பகுதிக்கு, குடிநீர் வழங்கும் புதிய திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் நகராட்சி, செஞ்சி மற்றும் அனந்தபுரம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று ரூ. 1,150 லட்சம் மதிப்பீட்டில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, நீர் பயன்படுத்தல் தொடர்பான குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இவ்வொப்புதல் கிடைக்கப்பெற்றபின், தொழில் நுட்பக் குழுவின் அனுமதி மற்றும் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று இத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, இந்த 3 இடங்களுக்கு பொது குடிநீர்த் திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற குடிநீரை எங்கேயிருந்து எடுப்பதாக திட்டமிடப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு பெண்ணையாற்றிலிருந்து நிலத்தடி நீரை எடுக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





**2. அறிவிப்புகள்.**

**(1) ஆளுநரிடமிருந்து செய்தி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

1. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு.

2. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு.

**(2) பேரவையிலிருந்து செய்தி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986).

2. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986).

(பிற்பகல் 4-15)

**3. கவன ஈர்ப்பு.**

**வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைப் பேராசிரியர்களுக்கு மற்ற பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டது போல் நிர்ணயிக்கப்படாதது குறித்து.**

திரு. அ. மயில்சாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

“1—12—1977-லிருந்து 31—12—1980-க்குள் நியமிக்கப்பட்ட வேளாண்மை பல்கலைக் கழகத் துணைப் பேராசிரியர்களுக்கு, மற்ற

பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டதுபோல் நிர்ணயிக்கப்படாதது குறித்து''.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கையும் அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. அ. மயில்சாமி:** தலைவரவர்களே, விவர அறிக்கையில் 'தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்வித் துறையிடம் கலந்து பரிசிலிக்கலாம் என்று இருக்கிறது. இன்றைக்கு கல்வித் துறையில் இயங்கி வரும் பல்கலைக் கழகங்களில் எல்லாம் புதிய ஊதிய விகிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் துணைப் பேராசிரியர்கள் நீண்ட காலமாக இந்தக் கோரிக்கைகளை வைத்து, பல்வேறு கட்ட நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, 'தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது' என்று இருப்பதை இவ்வளவு காலம் என்று சொல்லி, அதற்குள் பரிசீலித்து உடனடியாக அவர்களுக்கு அந்த ஊதியங்களை நிர்ணயம் செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மற்ற பல்கலைக் கழகங்களைப் போலவே வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றக் கூடிய உதவிப் பேராசிரியர்களின் ஊதிய விகிதம் இருக்க வேண்டுமென்று தக்க பரிந்துரை அனுப்பி, கல்வித் துறையிடம் கருத்து கேட்டிருக்கிறோம். வெகு விரைவிலே அதற்கான ஆணை பிறப்பிக்கப்படும்.

**திரு. அ. மயில்சாமி:** தலைவரவர்களே, மற்ற பல்கலைக் கழகங்களைப் போல் அல்ல. இது தொழில் நுட்பப் பல்கலைக் கழகம். மற்ற பல்கலைக் கழகங்களில் 60 வயதுவரை பணியாற்றலாம் என்று இருக்கிறது. ஆனால் இதில் 58-வரை என்று இருக்கிறது. அந்த அடிப்படையிலே 'விரைவில் பரிசீலித்து' என்று சொல்வதைவிட, உடனடியாக அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலித்து, அவர்களுடைய நீண்ட கால கோரிக்கையைப் பரிசீலித்து, அவர்களெல்லாம் மகிழ்ச்சி அடையும் வகையில் ஆணை பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, 'விரைவிலே' என்பதற்கும், 'உடனடியாக' என்பதற்கும் பொருள் ஒன்றுதான்.

---

@ 184 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 185–188 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1986) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு,, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

---

@ 188-191 ஆம் பக்கங்களில் இணைப்பு $II_1$ ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 4-20)

5. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் 1986-87 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை பற்றிய விவாதத்திலே கலந்து கொள்ள வாய்ப்பு அளித்ததற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை வெவ்வேறு கோணங்களிலே எடுத்து வைத்தார்கள். கருத்துக்களை எடுத்துப் பேசி விட்டு முடிவாக அமரும்போது, "இதிலே ஒன்றும் இல்லை, வெறும் காகிதமாக இருக்கிறது" என்று பேசி அமர்ந்தவர்களும் இருக்கிறார்கள். "இதிலே நல்லபல நிலைமைகள் இருக்கின்றன, நல்லபல திட்டங்கள் இருக்கின்றன" என்று போற்றி பாராட்டு தெரிவித்தவர்களும் இருக்கிறார்கள். பொதுவாக இதிலே பல்வேறு நல்ல அம்சங்கள், மக்களுடைய தேவைகளைப் புரிந்து செய்கிற வகையில் நல்லபல திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூட நல்லபல திட்டங்கள்பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அத்திட்டங்கள் எல்லாம் செயல்வடிவம் பெறும் அளவுக்கு செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இதிலே கூறப்பட்டிருக்கும் ஒன்றுபற்றி முதலில் சொல்கிறேன்.

[திரு. ஜேப்பியார்] [1986 மார்ச் 27

இதிலே ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழர்கள் வாழ்கிறவரை இந்தப் பிரச்சினைபற்றிப் பேசப்படத்தான் வேண்டுமா, இதற்கு ஒரு முடிவே இல்லையா என்கிற கேள்விபற்றி இன்றைக்கு தமிழர்கள் அல்லாத், தமிழைப் பேசாத இந்தியர்கள் எல்லாம் ஒன்றுபட்டுப் பேசுகிற அளவுக்கு பிரச்சினை வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றமும், இந்த அரசும் உணர்ந்துதான், எப்படியாவது இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். பொதுவாக ஸ்ரீலங்கா பிரச்சினையை ராஜ தந்திர முறையிலே திர்ப்பதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கடந்த ஓராண்டாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உலக அரங்கிலே ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றிக் கருத்துக்களை எடுத்துப் பேசி வருகிறார்கள். உலகத்திலே இருக்கிற பல்வேறு நாடுகள் எல்லாம் இப்பிரச்சினையைப்பற்றி மிக உன்னிப்பாகக் கவனிக்கிற வகையிலே பாரதப் பிரதமர் அவர்கள் செல்கிற இடங்களிலே எல்லாம், கேள்வி கேட்கிற நேரம் எல்லாம் இதற்கு மிகுந்த முக்கியத்துவத்தைத் தந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்தப் பிரச்சினை விரைவில் முடியப் போகிறது. பிரச்சினையை இந்தியப் பேரரசின் பிரதமரான மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள் எப்படியும் தீர்க்கப்போகிறார்கள் என்கிற நிலைமை இருக்கும் போது — தீரும் என்ற நம்பிக்கையில் பிரச்சினை இருக்கும்போது —சில பேர் பிரச்சினை விரைவிலே தீரும் என்கிற காரணத்தாலே, " நாங்களே இந்தப் பிரச்சினையை ஆரம்பிக்கிறோம். எங்களாலே தான் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் " என்று சொல்லி பிரச்சினையை வளர்க்கிற அளவுக்கு சூழ்நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். " அகில உலகத்திலே இருக்கிற தமிழர்கள் எல்லாருக்கும் சேர்ந்து தமிழ் நாட்டிலே ஒரு தலைவர் இருக்கிறார், தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் ஓர் ஒட்டுமொத்தமான காண்டிராக்டராக இருப்பது இவர்தான் "—உலகத் தமிழர்களுக்கு எல்லாம் தமிழ் இனத் தலைவராக இருக்கிற இவர் ஒரு கம்பெனி நடத்துவதுபோல அதற்காக ஒரு பெயர் கூட வைத்திருக்கிறார், அதுவும் தமிழில் பேசுகிறவர் ஆங்கிலத்தில் அதன் பெயரை வைத்து, தமிழிலே அந்தப் பெயரைச் சொல்ல முடியாமல் இன்றைக்கு திணறிக்கொண்டிருக்கிறார்—தமிழர்களுக்கு எல்லாம் அவர்தான் தலைவர், அவரால்தான் பிரச்சினை தீரும். அவர்கள்தான் பிரச்சினையை முடிக்கப் போகிறார்கள் " என்கிற வகையிலே, மக்கள் மத்தியிலே கருத்துக்களைப் பரப்பி உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். எப்போதுமே எடுத்தேன், கவிழ்த்தேன் என்கிற நிலைமையில் இருப்பவர் களுக்கு இதுதான் நிலைமை. ஆனால் பாரதப் பிரதமர் அவர்களுக்கு இணையாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆழ்ந்து ஆராய்ந்து



1986 மார்ச் 27] [திரு. ஜேப்பியார்]

பல்வேறு நாடுகளுக்கு இதுபற்றி எடுத்துச்சொல்லி, கடைசியிலே எல்லா நாடுகளும் ஒத்துக்கொள்கிற சூழ்நிலையை உருவாக்குகிறபோது, கண்டிப்பாக பிரச்சினை தரும் என்கிற நம்பிக்கை வருகிறது, பிரச்சினை விரைவிலே தீரும் என்கிற திடமான நம்பிக்கை எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. அதனால்தான் அங்கிருந்து வருகிற அகதிகளின் எண்ணிக்கை நாளும் குறைந்துகொண்டு வருகிறது. அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று மேடையிலேதான் பேசுகிறோம். தனி ஈழம் வந்தே தீரும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் தனி ஈழம் வந்தே தீரும் என்று சொல்கிறாரே, அந்தக் கருத்தை ஆளும் கட்சி ஏற்றுக்கொள்கிறதா என்பதற்கு விளக்கம் தேவை.

(பிற்பகல் 4-25)

திரு. ஜேப்பியார் : தனி ஈழம் கண்டிப்பாக வந்தே தீர வேண்டும் என்பதிலே ஆளும் கட்சிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. தனி ஈழம் கிடைக்கத்தான் போகிறது. இது அரசியல் தீர்வாக, இந்தியத் துணைக் கண்டம் எடுக்கிற முடிவு. அதன்படி கிடைக்கிற நாடுதான் தமிழ் ஈழம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளைக்குக் கூட " நானே படகில் போகிறேன், நாட்டைப் பிடிக்கிறேன் " என்று அறிக்கை விடலாம். பத்திரிகை யிலும் 8 காலம் செய்தியாக வரும். ஆனால் அரசியல் ரீதியாக, பல்வேறு நாடு களின் உதவியோடு அது வந்தால்தான், அங்கே இருக்கிற நிலைமை மாறும். அந்த நிலைமையைத்தான் பிரதமரும், முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவரும் விரும்புவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு பிரதமர் அவர்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். " ஐயோ பாவம் வருகிறார்கள், அனாதையாக வருகிறார்கள், அவர்களைப் பார்ப்பதற்கே ஆள் இல்லை " என்று மேடையிலே பலர் சொன்னார்கள். ஆனால் அந்தக் கட்சி எத்தனை லட்சம், கோடி ரூபாய் செலவு செய்கிறது? எத்தனையோ கோடி களைத் தேடுகிறது. ஆனால் தனுஷ்கோடித் தீவுக்கு ஒரு நாளாவது சென்று, "எங்கள் கட்சி சார்பாக ஒருநாள் சாப்பிடுங்கள் " என்று தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அனாதையாகிவிட்டார்களே என்று அவர்களுக்கு வேட்டியும், புடவையும் கொடுக்கவில்லை. மாறாக, அவர்கள் பெயரைப் பயன் படுத்தி, பல இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்தி கட்சியை வளர்க்கிற நிலையில்தான் நாட்டில் பலர் இருக்கிறார்கள். ஆழமாகச் சென்று அவர் களை விசாரித்ததாக நமக்குத் தெரியவில்லை. ஈழம் கிடைக்கும், ஈழத்தை

அடைவோம், ஆனால் அரசியல் ரீதியாகவும், நாட்டு மக்கள் ஒத்துக்கொள்கிற வகையில் என்பதை நான் பெருமையோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இதிலே முழுமூச்சோடு ஈடுபட்டு, ஒரு அமைதிப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு ஆர்ப்பாட்ட அரசியல் தெரியாது.

இன்னொன்றைச் சொன்னார்கள். பஞ்சாயத்துத் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்று சொன்னபோது, ஒரு அரசியல் கட்சி, அதனுடைய தலைவர், நம்முடைய மன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார், அவர் ஒரு கருத்தை பஞ்சாயத்துத் தேர்தல் நேரத்தில் சொன்னார், "தேர்தல நடப்பதற்கு முதலமைச்சர் தடையாக இருக்கிறார். நீதி மன்றங்கள் மூலம் தேர்தல் நடக்க விடாமல் தடையுத்தரவை வாங்குவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். தமிழக மக்களே, அப்படியொரு சந்தர்ப்பம் வருமானால் தேர்தல் அறிவிப்பை நானே செய்வேன்" என்று இந்த மாமன்றத்தில் இருக்கிற ஓர் உறுப்பினர், ஜனநாயக முறைப்படி முதலமைச்சராக ஏழாண்டுக் காலம் இருந்தவர், ஜனநாயக முறைப்படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட ஒருவர் ரோட்டில் நின்று சொல்கிறார். "தேர்தல் நடத்துவதற்கு யார் தடையாக இருந்தாலும், முதலமைச்சர் நீதி மன்றத்தை அணுகி அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தினால், நானே தேர்தலை நடத்து வேன்" என்று சொன்னார். எங்கோ உட்கார்ந்துகொண்டு காலிஸ்தான் எங்கள் நாடு, அந்த நாட்டை துப்பாக்கி முனையில் பெறுவோம் என்று சொல்கிற அந்த சக்திகளுக்கும், நாட்டுப்பற்று இல்லாத அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்று தெரியவில்லை. அப்படி மாண்புமிகு முதலமைச்சரையும், உச்ச நீதிமன்றத்தையும் பேசுகிற அளவுக்கு இருப்பவர்கள் ஏழாண்டுக் காலம் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்தவர், மீண்டும் கோட்டையைப் பிடிப்போம் என்று கனவு கண்டு கொண்டிருப்பவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களது கருத்தை பொது இடத்தில் பேசுவதனால், அவருடைய தேசப் பற்றும், ஜனநாயகத்தில் நம்பிக்கையும் சந்தேகிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, தேர்தல் முடிந்துவிட்டது. "நாடு எங்கள் பக்கம். கோட்டை உங்கள் பக்கம்" என்று கூடப் பேசினார்கள். இது சினிமா வசனம் எழுதினால் கேட்க நன்றாக இருக்கும். அல்லது பத்திரிகையில் எழுதி வெளி யிட்டால், படிப்பதற்கு நன்றாக இருக்கும். இப்படி, அரசியலிலே முதிர்ச்சி பெற்றதாகச் சொல்பவர், உலகத்தில் உள்ள தமிழர்களுக்கு தன்னை தலைவனாகச் சொல்லிக் கொள்பவர், கீழே இறங்கிவந்து நின்று சண்டை



போடுகிறார். ஆனால் கோட்டை என்பது நாட்டை ஆளும் இடம். அந்த நாடு கோட்டைக்குள்தான் இருக்கிறது என்பதை மிகுந்த அறிவாளியாக இருப்ப வருக்கு, நான் சொல்லிக்கொள்கிறேன். காரணம் அவர் வயதானவர். அறிவிலே முதிர்ந்தவர். அனுபவசாலி என்று சொல்லிக்கொண்டிருப்பவர். கோட்டை — நாடு என்று சொல்கிறார்.

(பிற்பகல் 4-30)

(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

எந்த முக்கிய உத்தரவாக இருந்தாலும், கோட்டையிலிருந்து தான் போக வேண்டும். பஞ்சாயத்தைக் கலைக்க வேண்டுமென்றாலும், இங்கிருந்துதான் உத்தரவு போக வேண்டும். 1972 இல் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மக்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்கள். அவர் மக்களைப் பார்த்து, "சாதாரணமாக இருந்தவர்கள் மக்களைப் பாதுகாப்பதற்காக வந்ததற்குப் பிறகு, இவ்வளவு வசதி வாய்ப்புக் களைப் பெற்றிருக்கிறார்கள். இது எப்படி?" என்று கேட்டார்கள். "இவ்வாறு கேட்டவுடனே என்னை வெளியே அனுப்பிவிட்டார்கள். நான் ஆதாரத்தோடு தான் இதனைச் சொல்கிறேன்" என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டுக்குப் பிரகடனப்படுத்தினார்கள். தேர்தல் வந்தது. மக்கள் இந்தக் கோட்டையை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் கையிலே ஒப்படைத்துவிட்டார்கள்.

நாங்கள் அந்தச் சமயத்தில் கிராமப் பக்கத்திலே தவறு நடந்ததாகச் சொல்லவில்லை. ஊராட்சி மன்றங்கள் பற்றியெல்லாம் எங்களுக்குத் தெரிய வில்லை. மக்கள் விவரம் தெரிந்தவர்கள். கோட்டையிலே தவறு என்று சொல்லியபோது, கோட்டையிலே உண்மையிலேயே ஊழல் இருந்திருக்கிறது. "நீங்கள் போய் கோட்டையிலே உட்கார்ந்து அதைச் சரி செய்யவேண்டும்" என்று எங்களை கோட்டைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்தப் பொறுப்பை வேறு கட்சிக்குத் தந்திருப்பதன் நோக்கம், "இங்கே சுத்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள், இந்தப் பக்கமும் தவறு நடந்திருக் கிறது, இங்கேயும் வாருங்கள், என்று வாய்ப்பை மக்கள் உருவாக்கித் தந்திருக் நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தலை நடத்திக் காட்டியதற்காக அநேகமாக எல்லாக் கட்சியினரும் பாராட்டினார்கள். ஆனால் எதிர்க் கட்சியாக இருக்கிறவர்கள் இன்னும் பாராட்டவில்லை. "மிக்க நன்றி. நடக்காது என்று நினைத்தோம். நடத்தி விட்டீர்கள். நடத்தியதற்கு நன்றி" என்று இதுவரை சொல்லாத சூழ் நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பலர் பேசினார்கள். வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். உடனே "வீடுகள் எப்படிக் கட்ட முடியும்?" என்று கேலி பேசினார்கள். "சிமெண்ட் எங்கே இருக்கிறது? பணம் எங்கே இருக்கிறது" என்று பிரச்சாரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படித்தான் சத்துணவு போடும் திட்டத்தைக் கொண்டுவந்தபோதும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை மனதிலே வைத்துக்கொண்டு, "இது என்ன நூறு நாள் ஓடுகிற படமா? அல்லது 50 நாள் ஓடுகிற படமா? இதோடு முடிந்துவிட்டது." என்று ஆரம்பித்தவுடனேயே பேச ஆரம்பித்தார்கள். "இதற்குப் பணம் எங்கே இருக்கிறது? எப்படிப் போட முடியும்? நடத்த முடியுமா?" என்று கேட்டனர். ஆனால் இவ்வாறு கேட்ட அதே வாய்கள் தேர்தல் வந்தவுடனே, தேர்தல் நேரத்திலே "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சத்துணவை இப்போது தட்டிலே போடுகிறார்கள். நாங்கள் வாழை இலையிலே போடுவோம்"...

திரு. நெல்லை பாலாஜி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "நாங்கள் வந்தால் இலையிலே போடுவோம்" என்று சொன்னார்கள். பிறகு அவர்களே அதை மாற்றிக்கொண்டார்கள். அந்தக் கருத்துக்களும் இருக்கின்றனவென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார்: ஆக இலையிலே சோறு போடுவோம் என்று சொன்னார்கள். இவ்வாறு இவர்கள் வேண்டாம் என்று சொன்ன திட்டத்தை நாங்கள் நடத்தினோம். முடியாது என்று அவர்கள் சொன்ன திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டிலே நடத்திக் காட்டினார்கள். அதைப்போலவே இன்றைக்கு வீடுகள் கட்டும் திட்டத்தைச் சொல்லியதையும் கேலி செய்கிறார்கள். வீடுகளை எப்படிக் கட்ட முடியும்? மக்கள் சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் தேர்தல் மூலம் மக்கள் எங்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கிராமப்புற மக்களுக்கு முக்கிய பிரச்சினைகளாக இருப்பவை மூன்றாகும். குடி இருப்பதற்கு வீடு, குடிப்பதற்குத் தண்ணீர், போக்குவரத்திற்கு சாலை—இவை மூன்றும்தான் அவர்களுக்கு வேண்டும். இங்கே பேசுகிற நண்பர்களில் பலர் கிராமப் பக்கமே போயிருக்க மாட்டார்கள். எங்களுக்குத் தேன் வேண்டும், பால் வேண்டும் என்று அவர்கள் கேட்பதில்லை, "இருப்பதற்கு இடம், குடிப்பதற்குத் தண்ணீர், போய் வருவதற்கு போக்குவரத்து





வசதி. இவை மூன்றையும் செய்து தாருங்கள்" என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். மக்கள் உணர்வுகளை மதிப்பது இந்த அரசின் கடமை. எனவேதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இம்மூன்றையும் அளிக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கித் தந்திருக்கிறார்

(பிற்பகல் 4-35)

கள். சில பேருக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். அவர்கள் அரசியல் கட்சியைத் தோற்றுவித்தபோது இப்படித்தான் சொன்னார்கள். இவரா, அரசியலாவது, கட்சியாவது, நடத்துவதாவது என்று பேசினார்கள். ஆனால் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலேதான் "ஓஹோ, இவருக்கும் விவரம் தெரியும், இவராலும் ஆளமுடியும்" என்று அவர்களே ஒத்துக் கொண்டார்கள். அந்தச் சூழ்நிலையில்தான் இன்றைக்கு வீடு கட்டித் தருகின்ற சரித்திரத்தை இந்த அரசு உருவாக்கிக் காட்டியிருக்கிறது. இதை ஒத்த கருத்தைத்தான் பாரதப் பிரதமர் அவர்கள்கூட இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் நலனில் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வீடு கட்டும் திட்டம் மிகச் சாதாரணமான திட்டமல்ல, காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் அணைகள் கட்டினார்கள். அந்த அணைகள் கட்டியதனால்தான் நமக்கு இன்றைய தினம் வேலை குறைந்திருக்கிறது. அதனாலே நாம் தொழிற்சாலையைக் கட்டினோம். தொழிற்சாலைகள் கட்டியதற்குப் பின்னாலே இன்றைக்கு வீடு கட்ட வருகிறோம். ஒவ்வொரு ஆட்சியிலும் ஒரு திட்டத்தைச் சொல்வார்கள். அது நிறைவேறியதற்குப் பின்னாலே அந்தத் திட்டத்தினுடைய பயனை வைத்துத்தான் அடுத்த திட்டத்தை உருவாக்குவார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அணைகள் கட்டினார்கள். அதற்குப் பின்னாலே நாம் ஆலைகளைக் கட்டினோம். இன்றைக்கு மக்களுக்குத் தேவையான சுயதேவைப் பூர்த்திகளை நிறைவேற்றுகிற இடத்திற்கு வந்திருக்கிறோம். அவர்கள் அணைகள் கட்டியதையும் நாம் உணர்ந்தாக வேண்டும். அதை அவர்கள் (தி.மு.க.) மறுக்கிறார்கள். நாங்கள் செய்யும் காரியங்களையும் அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஆண்ட நேரத்தில் என்ன செய்தார்களோ, அதுதான் சிறந்த காரியம் என்று வாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு, எதிர்காலத்திற்காகச் சிந்திக்கும் திறன் வரவில்லை. ஆக இந்த நிதிநிலை அறிக்கையில், நமது சகோதரர், மன்னிக்க வேண்டும், மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. பீசா கணேசன் அவர்கள் — படித்தவர், பட்டம் பெற்றவர், அனுபவம் உள்ளவர் — நிறையச் சொல்லுவார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அந்த வட்டத்திற்குள்ளேதான் நின்று கொண்டிருந்தார். இந்தத் திட்டம் சரியில்லை என்று சொன்னால், மாற்றுத் திட்டம் என்ன என்றுகூட

அவர் சொல்லவில்லை. நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆறு ஆண்டுகளாக சபைக்கு வந்து அந்தப் புத்தகத்தை வைத்துப் படித்து, "இது சரியில்லை, சரியில்லை, ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை" என்று சொல்லி விட்டுப் போகிறார்களே தவிர, இதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றும் சொல்லவில்லை. "இந்த அரசு கொண்டு வந்திருக்கிற திட்டம் சரியில்லை. எனவே நான் ஒரு திட்டம் சொல்கிறேன்" என்று சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை மறுநாள் பேச இருக்கும்போது சொல்வார்கள் என்று கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. இரண்டு, மூன்று தினங்களுக்குள்ளாக மெட்டிப் பிரச்சினை பெரிதாக்கப்பட்டது. நான் அதற்குள்ளே போகவில்லை. ஏழை எளிய மக்களுடைய பிரச்சினைகளை மனதில் வைத்து 20 கோடி ரூபாய்க்கு வரி நீக்கம் செய்திருக்கிறது இந்த அரசு. அதை இங்கே யாரும் பாராட்டா விட்டாலும் கூட, ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் எப்படிப் பாராட்டுகிறார்கள் என்பதை நாம் வெளியிலே சென்று பார்த்தால்தான் தெரியும்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைகளைப் பற்றியது அது. அந்த நிறுவனத்தின் பிரதிநிதி இங்கே இல்லாததால், நான் அந்தப் பத்திரிகையின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. காரணம், ஜனநாயக முறைப்படி, ஒரு பத்திரிகையின் பெயரைச் சொன்னால், அதற்கு இந்த மாமன்றத்திலே வந்து பதில் சொல்கிற பிரதிநிதி இருந்தால் சொல்லலாம். ஆகவே நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அந்தப் பத்திரிகைக்கு அறிவுரை சொல்லும் அளவுக்கு ஆற்றல் இருக்கிறது. சி பத்திரிகைகள் தலையங்கம் எழுதுவதும், சில பத்திரிகைகள் படம் போட்டுக் காட்டுவதும், சில பத்திரிகைகள், அரசியல் வாதி ரோட்டிலே நடந்து சென்றால்கூட அவர் எப்படி நடக்கிறார் என்று அதற்குக் கண்ணும் மூக்கும் வைத்து எழுதுவதும் சிலருடைய தலையாய கடமையாக இருக்கிறது. சென்னை அண்ணா சாலையில் ஒரு பத்திரிகை அலுவலகம் இருக்கிறது. அது ஒரு வாரப் பத்திரிகை. தமிழ் நாட்டு மக்களாலே சுதந்திரப் போராட்டக் காலத்திலேயிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரிகை. அதற்குச் சொந்தமான ஒரு இடம் இருக்கிறது. அது 95 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு லீஸுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர்கள் ஆயிரக் கணக்கானவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து, அந்த வீடுகளை வாங்குபவர்களுக்கு அதை விலைக்கும் கொடுத்துவிட்டு அது அமைதியாக இருக்கிறது. அந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஊரில் ரொம்ப நல்லவர். அவர் தன்னுடைய பத்திரிகையிலே — அவர் தன்னுடைய ஆபீஸில் இணைப் பத்திரிகையும் ஆரம்பித்து — அங்கே பார்வையிடச் சென்ற இவர் யார் என்று படம் போட்டுக் காண்பிக்கிறார்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து திராவிட இயக்கத்தினர் பத்திரிகை உலகத்தில் தலைசிறந்தவர்கள். பத்திரிகையில் எப்படி எழுத வேண்டும், எந்தக் கோணத்தில் எழுதினால் யாரைப் பிடிக்க முடியும் என்பதை நாங்கள் அண்ணா அவர்களிடம் கற்றுக்கொண்ட மாணவர்கள். ஆனால் இன்றைக்கு பத்திரிகைகள் எங்கள் பக்கம் இல்லாததால், பத்திரிகை வைத்திருப்பவர்கள் படம் போட்டுக் காட்டுகிறார்கள். 95 ஆண்டுகளுக்குக் குடியிருக்கலாம் என்று சொல்லி அந்த இடத்தை விலை பேசி விற்றுவிட்டு, இன்றைக்கு அவர்கள், நல்லவர்கள் போல் நடிக்கிறார்களே, இவர்களை யார் என்று நாட்டிற்கு அடையாளம் காட்ட முடியுமா என்ற வேதனை எனக்கு இருக்கிறது. அவர்கள் எழுதுவதைக் கொண்டு, சட்டமன்ற மேலவையிலே, பேரவையிலே, இதோ எழுதியிருக்கிறேன் பார்த்தீர்களா என்று அவர்களை முதன்மைப்படுத்தி, அவர்களைப் பெரிதுபடுத்தி, உலகத்தில் அவர்கள் சிறந்த அறிஞர்கள், அறிவாளிகள், ஞானிகள், தவறே செய்யாத உத்தமர்கள் என்று அவர்களை அடையாளம் காட்டிப் பேசும் அளவுக்கு நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இன்னொரு பத்திரிகை அண்ணா சாலை மையத்தில் இருக்கிற ஆங்கிலப் பத்திரிகை. அது நூற்றுக் கணக்கான ஏக்கர்களை வளைத்துப்போட்டு, தேவையில்லாமல் தன்னகத்தே வைத்துக்கொண்டு ஊருக்கு உபதேசம் சொல்கிறது. இதோ பார், இந்த நிலத்தை இவர் எடுத்துக் கொண்டார், இந்த நிலத்தை அவர் எடுத்துக் கொண்டார் என்று அவர்கள் சொல்வதை நாடு ஒத்துக்கொள்ள வைக்கிறது. இந்த நிலத்தைப் பாருங்கள்,

(பிற்பகல் 4-40)

இவர் எடுத்துக் கொண்டார் என்று அந்தப் பத்திரிகைகள் சொல்லுவதை நாடு இன்றைக்கு ஒப்புக்கொள்கிற நிலை இருக்கிறது. ஆனால் அவர்கள் செய்கிற தவறுகளைப்பற்றி நாம் நாட்டில் இன்னும் எடுத்துச் சொல்வதற்கு முன்வரவில்லை. அப்படி வந்தால்தான், தவறு செய்பவர்கள் பத்திரிகைகளின் பேராலே எப்படித் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொது மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பத்திரிகை என்று பெயரைச் சொல்ல வேண்டாம். இடத்தையாவது குறிப்பாகச் சொல்லலாமே. இடத்தைத் தெரிந்து கொண்டால் தானே, எந்தப் பத்திரிகை என்று புரிந்துகொள்ள முடியும்? அண்ணா சாலை என்று சொல்லி விட்டால் எப்படி புரியும்?

[1986 மார்ச் 27

**திரு. ஜேப்பியார் :** நான் ஏற்கெனவே குறிப்பாகத்தான் சொன்னேன். சென்னையில் அண்ணா சாலையில் காயிதே மில்லத் கல்லூரிக்குப் பக்கத்தில் ஒரு ஆங்கிலப் பத்திரிகை நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தைச் சுற்றி வளைத்துப் போட்டிருக்கிறது. அது இன்னும் அரசினுடைய பார்வைக்கு வராமலேயே இருக்கிறது. அப்படிப்பட்ட பத்திரிகைகள்தான் தமிழக அரசின் வீட்டுவசதி வாரியத்தில் ஏதாவது ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்யப் போனால், "ஐயோ பாவம், இது என்ன அநியாயம்?" என்றெல்லாம் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் நாம் இன்றைக்குப் பேச முன் வந்தால் தான், அரசியல் வாதிகளாக இருப்பவர்கள் மக்களுக்காகச் சேவை செய்ய வந்திருப்பவர்கள், மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டு சட்டமாக்க வந்திருப்பவர்கள், நியாயத்திற்காகப் பாடுபடுகிறார்கள் என்பது புரியும். அப்படிப்பட்டவர்கள் பத்திரிகைகளை வைத்திருப்பதால் தங்களைத் தப்பித்து வைத்துக்கொள்ள முடிகிறது. நாட்டிற்கே உபதேசம் செய்ய முன் வருகிற நிலைமைகளை நான் பார்க்கிறேன்......

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிற எந்தப் பக்கத்தின் அடிப்படையில் இதையெல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** வரவு செலவுத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதற்கு ஆதாரமாகச் சிலவற்றைப் பேசத்தான் வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே நான் ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்துப் பேசினேன். அப்படி இவ்வொரு பிரச்சினையாகத்தான் இங்கே பேசிக்கொண்டிருக்கிறேன்.

அடுத்து, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னுடைய தந்தையின் பெயராலே ஒரு நிலத்தை வாங்கினார் ....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரின் கேள்வி மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதுதான்.

**திரு. ஜேப்பியார் :** நான் நிதிநிலை அறிக்கையின்மீதுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னுடைய தந்தையின் பெயராலே ஒரு நிலத்தை வாங்கினார். அதற்குப் பத்திரிகையில் ஒரு விமர்சனமே, விளக்கமே வந்தது. "பாருங்கள் பாருங்கள், பினாமியைப் பாருங்கள்" என்று பிரச்சினையை உருவாக்குகிறார்கள். எனக்கே ஆச்சர்யமாக இருக்கிறது. பெற்ற தகப்பனாரையே இல்லை என்கிறான். கட்டிய மனைவியையே இல்லை என்கிறான். பிறந்த குழந்தையையே இல்லை



[திரு. ஜேப்பியார்]

1986 மார்ச் 27]

என்கிறான். பெற்றெடுத்த தகப்பனையே கூட இல்லை என்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் தங்கள் தகப்பனார் பெயரில் நிலம் வாங்கினால்கூட "பாருங்கள், பாருங்கள், பினாமி பேரிலே நிலம்" என்கிறார்கள். இப்படி அவர்கள் சொல்லுவதற்குக் காரணம் அரசியல்வாதிகள் அவர்களைப்பற்றி விமர்சிப்பதில்லை. அவர்களைப் பற்றி உலகத்திற்குத் தெரிவிப்பதில்லை.

அடுத்து, நிதிநிலை அறிக்கையின்மீது நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அம்மையார் அவர்கள் இங்கே ஒரு புள்ளி விவரத்தைத் தந்தார்கள். அவையிலே படித்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்தை யார் கொடுத்தார்கள், அது எங்கேயிருந்து வந்தது என்றுகூட யாருக்கும் தெரியாது. தலைவர் அவர்கள் அதை அனுமதித்து விட்டார்கள். அவர்கள் பேசும்போது, கோடி கோடியாகப் பணம் மத்திய அரசிலேயிருந்து உங்களுக்கு வரவில்லையா என்று கேட்டார்கள். 66 கோடி ரூபாயை மத்திய அரசு மாநில அரசுக்கு வெள்ள நிவாரணத்திற்குக் கொடுக்கவில்லையா, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கோடிக் கணக்கான ரூபாயை மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுக்கவில்லையா என்றெல்லாம் கேட்டார்கள். ஆமாம், தந்தார்கள். நாங்கள் ஒன்றும் இல்லை என்று மறுக்கவில்லை. மத்திய அரசு எங்கேயிருந்து எப்படித் தருகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே இருந்து கொண்டு போகிற பணத்தைத்தான் அவர்கள் நமக்கு மீண்டும் திருப்பித் தருகிறார்கள். இந்த உண்மை அந்த அம்மையார் அவர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். எங்கெங்கே உள்ள மாநிலங்களிலிருந்து வசூலிக்கிற பணத்தை எடுத்து டெல்லியிலே வைத்துக் கொண்டு தமிழக அரசு கேட்ட உடனே, "சரி இந்தாருங்கள், உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று யாரும் கொடுத்து விடுவதில்லை. இங்கேயிருந்து பெறுகிற பணத்தைத்தான் நாம் மீண்டும் பெறுகிறோம். நாம் சத்தம் போட்டுக் கேட்பதாலேதான் அந்தப் பணமும் வருகிறது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** அது தமிழக அரசு கொடுக்கிற பணமாக இருந்தாலும் சரி, மத்திய அரசு கொடுக்கிற பணமாக இருந்தாலும் சரி, மக்களுடைய வரிப் பணத்தைத்தான் இரண்டு பேருமே தருகிறார்கள். இதிலே பெரிய வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இதற்கு ஒரு பெரிய விளக்கம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி அம்மையார் அவர்கள் கோடிக் கணக்கில் கொடுத்தார்கள் என்று சொன்னதால் சொல்கிறேன். நாம் கேட்கிறபோது, அதுவும் சத்தம் போட்டுக் கேட்கிறபோதுதான் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில்,

எங்களோடு சேர்ந்து நீங்களும் கேளுங்கள், இந்த மாநிலத்தின் மீது அக்கறை கொண்டு கேளுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். தற்போது ரூ. 66 கோடி தந்திருப்பது போதாது, ரூ. 120 கோடி கொடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் இருப்பவர்களும் கேட்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

(பிற்பகல் 4.45)

இங்கே மதுக்கடைகளை மூட வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே பேசிய திரு. தாஸ் அவர்கள், காந்தி பிறந்த நாளில் மதுக்கடைகளை மூட வேண்டும் என்று சொன்னார்கள். நல்ல திட்டம்தான். தமிழ் நாட்டிற்கு என்று தமிழ் நாடு காங்கிரஸ்காரர்கள் ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள். ஆந்திராவில் மதுக் கடைகளை மூடச் சொல்லவில்லை; பாண்டிச்சேரியில் மூடச் சொல்லவில்லை; வேறு எங்கேயும் அப்படி மதுக் கடைகளை மூடச் சொல்லவில்லை. இங்கு மட்டும் ஏன் சொல்கிறார்கள்?

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சனவரி 1 ஆம் தேதி மூடப் போகிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள் என்பதால், அதற்கு முன்னதாக காந்தி பிறந்த தினத்தில் மூடினால் நலமாக இருக்கும் என்று யோசனைதான் கூறினேன்.

**திரு. ஜேப்பியார்:** சென்ற ஆண்டு இதே மாமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசினார். ரொம்ப நேரம் பேசினார்கள். வாணிபக் கழகத்தின் மூலமாகக் கடைகளை ஒதுக்குகிற பிரச்சினை வந்தபோது 15 நிமிடங்கள் அதற்காகச் செலவு செய்தார்கள். "வேறு யாருக்கும் கொடுக்காதீர்கள், நீங்களே நடத்துங்கள், உங்களுக்கு நிறைய பணம் வரும், வேறு யாருக்காவது கொடுத்தால் வேறு கண்ணோட்டம் வரும்" என்று பேசினார்களே தவிர, "நீங்கள் மதுக்கடைகளை மூடுங்கள்" என்று அவர் பேசவில்லை. ஏன் பேசவில்லை என்றால், அதை அவர் ஆதரிக்கிறார். ஏன் ஆதரிக்கிறார் என்றால், அதிலே எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் வியாபாரிகளாக இருக்கிறார்கள். அது அவருக்குத் தெரியும். ஆகவே மூடச் சொல்லிவிட்டால், பெருவாரியான நண்பர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்று கருதி, சாடையாகச் சொல்லி, "நடத்துங்கள், ஆனால் யாருக்கோ கொடுத்துவிடாதீர்கள், நீங்கள் நடத்துங்கள்" என்ற கொள்கையை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்தார்கள். எந்த நேரத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் இது தேவையற்றது என்று அவர் சொன்னதே இல்லை. வெளியே நிறைய பேசுகிறார்கள், அங்கே வேறு யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். வெளியேதான் சட்டம்



பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே அப்படிச் சொல்லவில்லை. ஆக இந்தத் திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வும், அதனுடைய கட்சி ஆள்கிற அமைச்சரவையும் எடுக்கிற முடிவு கள்தான் நம்முடைய முடிவு. ஆனால் இதை ஆதரித்தவர்கள் "மூடு பார்க்க லாம்", "மூடு பார்க்கலாம்" என்று சொல்லி இதிலேயே கவனம் செலுத்து வதற்குக் காரணம் தங்கள் பக்கம் இழுப்பதற்காக. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். ஒரு படத்திலே வசன மாக எழுதிச் சென்றிருக்கிறார்கள். "சாலையோரத்தில் உள்ள வேலை யற்றவர்கள் நெஞ்சிலே விபரீத எண்ணங்கள் தோன்றி, அவர்கள் கேள்வி கேட்கும்போதுதான், நாட்டிலே பிரச்சினை உருவாகும்" என்று சொன்னார்கள். சாலையோரத்தில் இருப்பவர்கள் தங்கள் பக்கம் இருக்க வேண்டும், அவர்கலைத் தங்கள் பக்கம் இழுக்கலாம் என்று கருதி, இந்தத் தந்திரத்தைக் கையாண்டார்.

சென்ற தடவை மீனவர் பிரச்சினை வந்தபோதுகூட, அமைச்சர்களும் அதிகாரிகளும் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வைத்து ஒரு வாரம் பேசினார்கள். இரண்டு மூன்று இடங்களை ஒதுக்கி, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்று சொல்லி அவர்களிடம் கையெழுத்து வாங்க எல்லாம் தயாரானது. காலையில் பேசி மாலையில் கையெழுத்து வாங்க எல்லாம் தயாரானது. யாரைக் கையெழுத்துப் போட தயார் செய்தோமோ அவரை பாண்டிச்சேரிக்கு கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அதுவும் கையெழுத்தாகும் நேரத்தில் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களே நேரிடையாகச் சென்று பார்த்து "எங்களுக்குத் தொழில் செய்ய இரண்டு பகுதிகளை ஒதுக்கித் தாருங்கள்" என்று கேட்டு, மற்ற இடத்தை அழகு படுத்துவதற்காக தர ஒத்துக்கொண்டு சென்றவர்களை கையெழுத்தாகும் நேரத்தில் கடத்திக்கொண்டு சென்றுவிட்டார்கள். இதற்கிடையில் வழக் கறிஞர்களைப் பார்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குப் போட்டார்கள். பாதிக்கப் பட்ட மீனவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவில்லை. மூன்றாவது ஒருவன் டெலகிராம் அனுப்பினான் என்பதற்காக அதற்கு விளக்கம் கேட்கிறார்கள். அழகுபடுத்துவது நல்ல திட்டம் என்று அவர்கள் ஒத்துக்கொண்டு சென்ற பிறகு, பல இலட்சக்கணக்கான ரூபாய்களை நோட்டாக மாற்றி, யார் யார் பாதிக்கப்பட்டார்களோ அவர்களுக்குத் தர வேண்டுமென்று ஒதுக்கப்பட்டு அந்தப் பணம் இந்தக் கோட்டைக்குக் கொண்டுவரப்பட்டு, அதிகாரிகளை வைத்து கையெழுத்துப் போடும்போது, கடத்தப்பட்டார்கள். அவர்களைக் கடத்திய கடத்தியவர்கள் யார்? சமூக விரோதிகள் அல்ல. அவர்களைக் கடத்திய வர்கள் கொள்ளையடிப்பவர்கள் அல்ல. அவர்களைக் கடத்தியவர்கள் இந்த

நாட்டை ஏமாற்றுகிறவர்கள் அல்ல. "இந்த நாட்டை நாங்கள்தான் மீண்டும் ஆளுவோம், எங்களுக்குத்தான் மக்கள் சக்தி" என்று தினமும் கனவு கண்டு கொண்டிருக்கிறவர்கள்தான்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆதாரபூர்வமான கருத்துக்களைச் சொன்னால், நன்றாக இருக்கும். கடத்தப்பட்டது யார், எங்கே கடத்தப்பட்டார், எப்போது கடத்தப்பட்டார் என்று சொல்ல வேண்டும். ஒருவர் கடத்தப்பட்டார் என்றால், மற்றவர்களை வைத்துக் கையெழுத்து வாங்கியிருக்கலாமே? மற்றவர்கள் அவர்கள் பக்கம்தானே இருந்ததாகச் சொல்கிறார்? அவர்களிடம் ஏன் கையெழுத்து வாங்கவில்லை? அவர்களுக்குப் பணம் கொடுக்க ஏன் ஏற்பாடு செய்யவில்லை? அபாண்டமான, தவறான கருத்துக்களை இங்கே சொல்வது சரியில்லை. கடைசியில் சுப்ரீம் கோர்ட்டில் போய்த்தானே விவகாரம் முடிந்தது?

(பிற்பகல் 4.50)

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் வழக்கறிஞர். சுப்ரீம் கோர்ட்டுக்கு அவர்கள் போகவில்லை என்பதைப்பற்றிக் கூறினார். போனவர்கள் வேறு. போனவர்கள் சமூக விரோதிகள், கட்டுப்பாட்டைக் குலைப்பவர்கள் என்று சொல்லி தன்னை முதன்மைப்படுத்திக்கொண்டிருக்கின்றார்களே அவர்கள்தான் போனார்களே தவிர வேறல்ல. அதை வேண்டுமானாலும் ஆதாரத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடத்தப்பட்டவர்கள் பாண்டிச்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்று சொல்லி இந்தப் பிரச்சினையைப்பற்றிச் சொல்வதை முடித்துக்கொள்கிறேன்.

மாநகரத்தில் உள்ள துறைமுகத்தில் ஒரு நல்ல மீன்பிடித்துறை கட்டப்பட்டிருக்கின்றது. அதைக் கட்டி 3, 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதிலே பொதுவுடைமைக் கட்சிக்குத் தலைவர், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர், திரு. ம. வெ. சிங்காரவேலர், அவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதி அனுப்பப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ஆகின்றது. எல்லா அரசியல் கட்சிகளாலும் பேரறிஞர் அண்ணா அவர்களாலேயும் புகழப்பட்டவர். தொழிற் சங்கங்களை நடத்தியவர். காங்கிரஸ் பேரியக்கத்திற்கு மிகமிக வேண்டியவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர். அப்படிப்பட்டவருடைய பெயரை அந்தத் துறைமுகத்திற்கு வைக்க வேண்டும் என்று கடிதம் எழுதி 3 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்தத் துறைமுகத்திற்கு அந்தப் பெயரை வழங்கவில்லை. அதற்கு என்ன காரணம்? அதற்கு என்ன அடிப்படை? டாக்டர் அம்பேத்கார் பெயரை



வைக்க வேண்டும் என்று சில பேர்கள் கேட்டார்கள். மீன்பிடித் துறைமுகம், அந்த சமுதாயத்திலே வந்தவர்கள் அவருடைய பெயரை வைத்தால் முறையாக இருக்கும் என்று கருதினார்கள். அங்கே வாழ்கின்ற மீனவர் பெருமக்கள் பல பேர்கள் கையெழுத்து போட்டு அனுப்பி பிறகு தமிழக அரசும் பரிந்துரை செய்திருக்கின்றது. ஆனால் இதுவரையில் பதில் வரவில்லை. அம்பேத்கார் பெயரை வேண்டாமென்றா சொல்கின்றார்கள்? அந்தப் பெயரையாவது வைக்கலாம் அந்தத் துறைமுகத்திற்கு. இதுவரை இல்லை.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைக்க வேண்டும் என்று பல தடவைகள் கோரிக்கை வந்திருந்தும், அதை இந்த அரசு கவனிக்கவில்லை. இந்த அம்பேத்கார் பெயரிலே ஒரு மாவட்டத்தை இந்த அரசு அமைக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தமிழ் நாட்டிற்கு மட்டும் சொந்தமானவர் என்பதல்ல. அவர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே அவர் பிறந்த மாநிலத்திலே ஒரு மாவட்டத்திற்கு அவர் பெயரை வைத்தால், அதற்கு இங்கேயிருந்து நாங்கள் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அவர் பிறந்த மாநிலத்திலே அவ்வாறு செய்யவில்லை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற அளவில், அவர்களுக்கு நான் ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பிறந்தது மகாராஷ்ட்டிர மாநிலம். ஆனால் அவர் கான்ஸ்ட்டிடியன்ட் அசெம்பிளிக்கு மேற்குவங்க மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிட மக்கள் முஸ்லீம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டவர்.

**திரு. ஜேப்பியார் :** வங்காளத்திலும் மகாராஷ்ட்டிராவிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவர் பெயரை வைக்கும் நிலை உருவானால், நாங்கள் துணை நிற்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிக்கு ரூ 3 கோடி அளவிலே பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எனக்கு இருக்கின்ற வருத்தம் இந்த சென்னை நகரத்திலே இருக்கின்ற அத்தனை சாலைகளையுமே நெடுஞ்சாலைப் பராமரிப்பிலே கொண்டுவரவில்லையே என்பதுதான். அப்படிக் கொண்டுவந்தால் நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, காங்கிரஸ் கட்சி ஆளுங்கட்சியாக கோட்டையிலே

இருந்தது. தி.மு.க. மாநகராட்சியைப் பிடித்த உடனே ஒரு கோஷத்தை வைத்தது. அந்த கோஷம் என்னவென்றால், "மாநகராட்சி எல்லைக்குள் எல்லாப் பேருந்துகளும் வந்துவிடுகின்றன. அதனாலே கோடிக்கணக்கான பணம் வருகிறது. ஆகவே மாநகராட்சி நகரத்தில் உள்ள சாலைகளைப் பராமரிக்க மூன்றில் ஒரு பங்கு டேக்சேஷனிலிருந்து எங்களுக்குத் தரவேண்டும். நாங்கள்தான் சாலைகளைப் பாதுகாக்கிறோம்" என்ற ஒரு வாதத்தை வைத்தது. மாநகராட்சியின் மேயராக அப்போது திரு.அ. பொ. அரசு அவர்கள் இருந்தார்கள். அப்போது இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். 1967-ல் சொல்லிய கட்சி ஆட்சிக்கு வந்தது. அந்தப் பிரச்சினை அத்தோடு

(பிற்பகல் 4-55)

முடிந்துவிட்டது. 1967-லிருந்து 1976 வரை ஆட்சி செய்தபோது, அது அப்படியே நின்று விட்டது. இன்றைக்கு நான் சொல்கிறேன், சென்னைப் பெரு நகரம் வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், இந்தத் திட்டம், அதாவது வரி வசூலிப்பதில் மாநகராட்சிக்கு ஒரு பங்கு தர வேண்டும் என்ற திட்டம் ஏற்கப்பட வேண்டும். மாநகராட்சி கேட்கும்போதெல்லாம் மானியமாக 5 கோடி, 8 கோடி, 10 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு, இதை மட்டும் கொடுக்காமல் இருப்பதால், அவர்கள் காரணம் சொல்கிறார்கள். எங்களுக்கு வருமானம் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். அதனால் நாம் பணம் கொடுக்காமல் இருக்கிறோமா? கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அதிகாரிகளுடைய நிலைமையை கவனிக்கும் துறைக்கு அமைச்சராக மத்தியில் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள் இருக்கிறார்கள். நிர்வாகத்திலே ஒரு சீர்திருத்தம் வர வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். சென்னை மாநகராட்சிக்கு காலை 10 மணிக்கு தொலைபேசி மூலம் கான்டாக்ட் செய்தால், எல்லோரும் மீட்டிங்கில் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். மாலை 3 மணிக்குப் பேசினால், அப்போதும் மீட்டிங்கில் இருக்கிறார்கள். 5 மணிக்குப் பேசினால் எல்லோரும் போய்விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதிகாரிகள் எந்த நேரமும் மீட்டிங்கில் இருப்பதால், கீழே இருக்கும் அதிகாரிகள் ஒழுங்காக அவர்கள் பணிகளைச் செய்ய இவர்கள் துணையாக இருக்கிறார்களா என்றால் இல்லை. காலையிலே இன்ஸ்பெக்ஷன், 10 மணிக்கு மேலே மீட்டிங், 5 மணிக்கு மேலே வீட்டுக்குப் போய் விடுகிறார்கள். எனவே நெம்பர் 1 அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம் தங்கள் சம்பந்தப்பட்ட துறை மீட்டிங்குகளை நடத்த வேண்டுமென்றால், 'ஆப்டர் ஆஃபீஸ் அவர்ஸ்' நடத்த வேண்டும். அப்படி, நடத்தினால், கீழே பணியாற்றும் நபர்கள் சுறுசுறுப்பாகப் பணியாற்ற சந்தர்ப்பம் ஏற்படும். எப்போது கேட்டாலும், எந்தத் துறையில் கேட்டாலும், மீட்டிங் என்று சொல்லு



கிறார்கள். இதன் காரணமாக பொதுமக்களின் பிரச்சினைகளை பாதிப்பதால், அவர்கள் புகார் சொல்லுகிறார்கள் என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தலைமைச் செயலகத்தில் 33 பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது குறித்து சபையிலே பேசினார்கள். வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களுக்கு, போராட்டம் நடத்திய அந்தக் குழுவுக்கு ஊழியர்கள் ஒரு மாதம் சம்பளம் கொடுத்தார்கள். 12,000 ரூபாய் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு கொடுக்கவில்லை. எங்களுக்காகப் போராடியதற்கு என்று சொல்லி ஒரு மாதம் கொடுத்தார்கள். 33 பேர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சபையில் இருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு போராட்டம் இங்கே நடந்தது. நம்முடைய மனதைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். அப்படிப் போராட்டம் நடந்தபோது, 500-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் கடைசியில் பேச்சு வார்த்தை நடந்தது. அப்போது முதலமைச்சராக இருந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஆவார்கள். அவர்கள் பேச்சு வார்த்தைக்கு அனுமதித்தார்கள் பணியாளர்கள் சார்பிலே, "பெண்கள் எல்லாம் வெளியிலே இருக்கிறார்கள், கண்ணீர் வடிக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னபோது, முதலமைச்சரவர்கள் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து வைத்து எங்கள் வீட்டுப் பெண்களும் கண்ணீர் வடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது ஒரு துண்டுப் பிரசுரம், முதலமைச்சரவர்களையும், அவருடைய மனைவியையும்; அன்றைக்கு இருந்த தலைமைச் செயலாளரையும், அவருடைய மனைவியையும் இணைத்து 'வாடகைக்குத் தயார்' என்று அச்சடித்திருந்தார்கள். அதை எடுத்துக் காட்டி, "அந்தப் பெண்கள் மட்டுமா கண்ணீர் வடிக்கிறார்கள், எங்கள் வீட்டுப் பெண்களும் கண்ணீர் வடிக்கிறார்கள்" என்று சொன்னபோது, இந்தச் சங்கம் அங்கே மன்னிப்பு கேட்ட வரலாற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், இந்த அரசையும் உண்ணாவிரத நேரத்தில் யார் கடுமையாக விமர்சனம் செய்தார்களோ அவர்கள் பாக்கெட் பாக்கெட்டுகளாக இத்திப்புகளை இந்தத் தலைமைச் செயலகத்தில் விநியோகம் செய்த காட்சியை நீங்கள் பார்க்க மறுத்திருப்பீர்கள். உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பிறகு இங்கே ஓடி வந்து, 'முடிந்து விட்டது கதை' என்று சொல்லி, இந்த வளாகத்திற்குள் ஸ்வீட் கொடுத்தார்கள். அவர்களுக்காகப் பேசவதில் நான் மாறுபட்டிருக்கிறேனா என்றால் இல்லை. அவர்களுக்கு வேலை தர வேண்டும். அரசு

சொல்லும் கருத்துக்களை ஏற்று அவர்கள் வந்தால், அவர்களுக்கு வேலை தர வேண்டும். அதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை.

அடுத்து, பொதுவாக தொலைக் காட்சி நிலையத்தில் உலகத்திலேயே சிறந்த அறிவாளி, அதை விட்டால் வேறு அறிவாளி இல்லை என்று அங்கே உள்ள சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அறிவாளிகளுக்கு எல்லாம் அறிவுரை சொல்ல ஒரு கட்சி நடைப்பயணம் மேற்கொண்டது. எனக்குக் கிடைத்த தகவல்களை இந்த மாமன்றத்திற்கு வைக்க விரும்புகிறேன். ஒரு தனிப்பட்ட நிருபர் ஒரு அரசியல் கட்சி தேர்தலில் வெற்றி தோல்வி அடையும்போது கருத்துக்களைக் கேட்க வந்திருக்கிறார். தனிப்பட்ட நிருபர் அவர். தொலைக் காட்சியின் நிரந்தரப் பணியாளர் அல்ல. அல்லது தொலைக் காட்சி நிலையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் அல்ல. ஒரு பெண் நிருபர் ஒருவரைப் பேட்டி காண்கிறார்.

(பிற்பகல் 5-00)

"தேர்தலிலே வெற்றி பெற்றிருக்கிறீர்களே, உங்கள் செய்தி அதுகுறித்து என்ன ?" என்று கேட்டபோது, அவரும் அதற்கு பதில் தந்தார். அந்தப் பெண் அவரிடமிருந்து பதிலைப் பெற்ற பிறகு, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவரும் சுற்றுலா மற்றும் அறநிலைத் துறை அமைச்சராகவும் இருக்கிறார்களே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களைப் பேட்டிகாண வந்தார்கள். அவர்கள் 7, 8 கேள்விகளைத் தயார் பண்ணி வைத்துக்கொண்டு கேள்விகளைக் கேட்டார்கள். "நீ யார் ?" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டபோது, "நீங்கள் சொல்கிற பதிலை டெலிவிஷனில் ஒளிபரப்புகிறோம், அதற்காகத்தான் உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்" என்று சொன்னபோது, அவர்கள் கொடுத்த கேள்வித்தாளை குப்பையிலே போட்டுவிட்டு, அவர்களை வெளியே அனுப்பிவிட்டார்கள். காரணம் அவர்கள் விவரம் தெரிந்தவர்கள், வித்தகர். அதனால் அவர்கள் பேட்டி தரவில்லை. ஆனால் இவர்களோ, "இந்தியா பூராவும் தொலைக் காட்சியில் எங்கள் தலைவருடைய பேட்டியை ஒளிபரப்பப் போகிறார்கள்" என்று காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அது ஒளிபரப்பப்படவில்லை. ஏன் ஒளிபரப்பப்படவில்லை ? ஒளிபரப்புவோம் என்று சொல்லியும் ஏன் ஒளி பரப்பவில்லை?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முதல் நாள் டெலிவிஷனில்கூட அந்தச் செய்தி ஒளிபரப்பப்படும் என்று சொல்லி பெயரையும் அறிவித்தார்கள்.

திரு. ஜேப்பியார் : அதனால் தான் நான் முன்பே சொன்னேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அறிவாளி, விவரம் தெரிந்தவர். அந்தப் பெண்ணை வெளியே போகச் சொல்லி அனுப்பிவிட்டார். என்னைப்





பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசிலே பணியாற்றிக்கொண்டு, அதே சமயத்திலே ஒரு கட்சியின் உறுப்பினராகவும் இருக்கிற சிலர் இம்மாதிரி வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஸ்பான்சர்' செய்த ஒன்றை ஒளிபரப்பவில்லை என்பதற்காக அந்த டெலிவிஷன் நிலையத்தையே ஒழிப்போம் என்று சொல்லி, ஊர்வலம் நடத்துவதைவிட இன்றைக்கும் இந்தியில் 'தூர்தர்சன்' என்று சொல்கிறார்களே அந்நிலையை ஒழிப்போம் என்று சொல்லி போராட்டம் நடத்தினால், எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அதை வரவேற்றிருப்போம். அதுபோல் மவுண்ட் ரோடு என்பதை இவர்கள்தானே அண்ணா சாலை என்று மாற்றினார்கள். 1969 ஆம் ஆண்டு அண்ணா சாலை என்று மாற்றப்பட்டது இன்றைக்கும் 'மவுண்ட் ரோடு' என்றுதான் டி.வி.யில் சொல்லப்படுகிறது. அந்நிலையை அகற்ற போராடியிருந்தால், பாராட்டியிருப்பேன். தந்தை பெரியார் சாலை என்கிற பெயர் என்றைக்கும் நிரந்தரமாக நிலைத்திருப்பது. அதை சாதாரணமாக பூந்தமல்லி சாலை என்று இன்றைக்கும் டி.வி.யிலும் ரேடியோவிலும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லக்கூடாது, விளம்பரம் கொடுப்பவர்களும் அப்படிக் கொடுக்கக் கூடாது என்று சொல்லி, போராட்டம் நடத்தினால், அது நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இனப் பற்று, தன்னை வளர்த்தவர்கள்பால் இருக்கிற பற்று. ஆனால் இவர்கள் செய்ததோ தன்பற்று. 'ஸ்பான்சர்' செய்த நிகழ்ச்சியை எப்படி ஒளிபரப்பாமல் இருக்கலாம், ஒரு பெண் எப்படி அமைச்சரின் வீட்டுக்கு வந்து கேள்வி கேட்கலாம் என்பது பற்றியெல்லாம் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு மேல் இதற்குள்ளே அதிகமாக நான் பேச விரும்பவில்லை.

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த டி.வி. நிகழ்ச்சியில் மின் துறை அமைச்சர் அவர்களுடைய பேட்டியை ஒளிபரப்பினார்களே, அவர் எப்படி ஒத்துக்கொண்டு பேட்டி அளித்தார் ?

திரு. ஜேப்பியார்: ஒருவேளை டி.வி. நிலையத்திலிருந்து டைரக்டாக ஒளிபரப்பியிருக்கலாம்.

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: 'நியூஸ்லைன்' என்று குறிப்பிடப்பட்டுச் சொல்கிற அந்த நிகழ்ச்சியில் முன் அறிவிப்பு இல்லாமல் மின் துறை அமைச்சர் அவர்கள் ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி பேட்டியளித்தது 5 நிமிடம் காட்டப்பட்டதே, அப்படி என்றால் அவை

முன்னவர் அவர்கள் விவரம் தெரிந்தவர்கள், அறிவாளி, ஆகவே அவர்கள் அந்தப் பெண்ணை அடித்துத் துரத்தி விட்டார்கள் என்று குறிப்பிட்டார்களே, அப்படியானால் மின் துறை அமைச்சர் விவரம் தெரியாதவரா?

திரு. ஜேப்பியார்: ஸ்ரீலங்கா பிரச்சினை என்பது நாட்டுப் பிரச்சினை, முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினை. ஆகவே ஒளிபரப்பியிருக்கலாம்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் எழுந்தார்).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: யாராவது ஒருவர் உட்கார வேண்டும்.

திரு. ஜேப்பியார்: உறுப்பினரின் கேள்வி நியாயமான கேள்வி என்பதை மறுக்கவில்லை. ஸ்ரீலங்கா பிரச்சினை பற்றி யார் சொன்னாலும், உடனடியாக ஒளி பரப்பப்பட வேண்டும். காரணம் அது உரிமைப் பிரச்சனை. கட்சிப் பிரச்சினை சம்பந்தப்பட்டதல்ல.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 50 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் 10 நிமிடம் பேசுகிறபோது ஒரு மணி நேரம் ஆகும். எப்போது உறுப்பினர் முடிக்கப் போகிறார்? இன்னும் 4 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

(பிற்பகல் 5.05)

திரு. ஜேப்பியார்: அப்படிப்பட்ட நியாயமான உணர்வுகளுக்காக நீங்கள் போராடினால், நாங்கள் உள்ளபடியே பாராட்டுவோம். அறிஞர் அண்ணா பெயரையும், தந்தை பெரியார் பெயரையும் டெலிவிஷன்காரர்கள் சொல்ல மறுக்கிறார்கள். அதை எதிர்த்துப் போராட நாங்கள் தயாராக இருக்கிறோம், நீங்கள் வருவீர்களா? நான்கூட ரிசர்வ் பேங்குக்குக் கடிதம் எழுதினேன், "சென்னையில் அண்ணா சாலையில் உள்ள பாங்குகளின் கிளைகளில் எல்லாம் 'மவுண்ட் ரோடு கிளை பிராஞ்ச்' என்றே போடுகிறார்கள், அதை அண்ணா சாலை கிளை என்று மாற்றுங்கள்" என்று கடிதம் எழுதினேன். ஒரு அரசாங்கமே தீர்மானம் போட்டதை அவர்கள் ஏற்க மறுக்கிறார்களா என்று தெரியவில்லை. அல்லது மாநகராட்சி அதிகாரிகள் அவர்களுக்கு இந்த மாற்றம்பற்றி தெரிவிக்கவில்லையென்றும் நினைக்கிறேன். ஒரு சாலையின் பெயர் மாற்றப்பட்டால், போஸ்டாபீஸ் உடனடியாக அங்குள்ள





வங்கிகள் மற்ற நிறுவனங்களுக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டும். இன்ன காலத்திற்குள் போர்டுகளை மாற்றியமைக்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்ல வேண்டும். இன்னமும் 'மவுண்ட் ரோடு' என்றுதான் போர்டு போடுகிறார்கள். அவர்களுக்கு தக்க அறிவுரையை இங்கேயிருந்து செய்ய வேண்டும். சில இடங்களில் தாய்மொழியை முதலில் போட்டுத்தான் பிற மொழியில் எழுதுகிறார்கள். சில பேர் மொழி தெரியாமல் எழுதிவிடுகிறார்கள். அதற்காக இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியாக வேண்டும். ஒரு கட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது. காமராஜர் சாலை, ராஜாஜி சாலை என்றெல்லாம் சொல்கிறார்கள், அண்ணா சாலை, பெரியார் சாலை என்று ஏன் சொல்வதில்லை? இன்றைக்கு மிகப் பெரிய பத்திரிகைகளாக இருக்கும் 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகளே 'மவுண்ட் ரோடு' என்றுதான் போடுகிறார்கள். அவர்கள் அண்ணா சாலை என்றும், பெரியார் சாலை என்றும் போட்டால்தான் மிகச் சிறந்த மரியாதை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மூன்று கட்டம் அடங்கியிருக்கிறது. இருக்க வீடு, குடிக்க தண்ணீர், போய்வர போக்குவரத்து, 30 லட்சம் வீடுகள் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று, பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியளிக்கப்படுகிறது. அதேபோல் ஏராளமான வழித்தடங்கள், கணக்கில் அடங்காத வகையில் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் கிராமப்புறங்கள் பலனடைந்திருக்கின்றன. இது வரி போடாத பட்ஜெட், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை உயர்ந்தது, அடுத்த ஆண்டு இதைவிட சிறப்பான பட்ஜெட் போடப்படும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமருகிறேன், வணக்கம்.

திரு. அ. மயில்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைமீது சில கருத்துக்களைப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிற நாளான 17 ஆம் தேதி, தமிழகத்தில் இருக்கக்கூடிய 10½ லட்சம் ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் நல்ல அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்த நாளாகும். ஏனென்றால் கடந்த காலங்களில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்கிற நாளில் அவர்களுக்கு சில நல்ல அறிவிப்புகளைத் தந்து மகிழ்ச்சியடையச் செய்வார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் எந்த அறிவிப்பும் இருக்கவில்லை.

[திரு. அ. மயில்சாமி] [1986 மார்ச் 27

அதை எதிர்பார்த்த, அதாவது தொழில் வரி ரத்து, மருத்துவப் படி, கிராமப் புறங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு வீட்டு வாடகைச் சலுகை போன்ற அறிவிப்புக்கள் நிச்சயமாக வரும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அப்படி இந்த நிதிநிலை அறிக்கையில் வராத காரணத்தால், அவர்கள் மிகப் பெரிய ஏமாற்றத்திற்கு ஆளானார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அவையில் நாங்கள் குறைகளைச் சொல்கிறோம், பிரச்சினைகளைச் சொல்கிறோம் என்றால், அதற்குக் காரணம் இங்கே சொன்னால், அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும் என்பதுதான். ஆனால் சென்ற ஆண்டு எந்தக் குறைபாடுகளைச் சொன்னோமோ அதே குறைபாடுகளைத்தான் திரும்பவும் சொல்லவேண்டியிருக்கிறது. அவைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆகவே இந்த அவையில் பேசுவதால் என்ன பயன் விளையும் என்ற எண்ணத்தை அமைச்சர்கள் உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, இந்த அவையில் நாங்கள் பிரச்சினைகளைச் சொல்லி மாண்புமிகு அமைச்சர்கள் உறுதிமொழிகள் தருகிறார்கள்.

(பிற்பகல் 5-10)

ஆனால் அந்த உறுதிமொழி எல்லாம் நிச்சயமாக அரசாணை வடிவத்திலே வரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, ஒரு மிகப்பெரிய ஆபத்தும் கூட இப்போது வந்திருக்கிறது. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் 1985 ஏப்ரல் திங்களில் இந்த மன்றத்திலே மேற்படி உறுதிமொழியைத் தந்தார்கள். தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் 10 (ஏ) (1)-களாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்து வாதாடினோம்; போராடினோம். அப்போதுதான் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த உறுதிமொழியைத் தந்தார்கள். நிச்சயமாக ஓராண்டு பணி முடித்தவர்களையெல்லாம் நிரந்தரமாக்குகிறோம் என்று உறுதிமொழியைத் தந்தார்கள். அதை நாங்களும் ஆசிரியர்கள் மத்தியிலே எடுத்துச் சொன்னோம். ஆனால் இன்று என்ன நடக்கிறது? இந்த ஆண்டு தமிழ் நாடு தேர்வாணைக்குழு புதிதாக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க நேர்முகத் தேர்வு நடத்திக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே உறுதிமொழி தந்திருக்கிறார்கள். ஆனால் தேர்வாணக்குழு புதிதாக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க தேர்முகத் தேர்வு நடத்திக் கொண்டிருக்கிறது.



1986 மார்ச் 27] [திரு. அ. மயில்சாமி]

சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களில் மாண்புமிகு டாக்டர் நாவலர் உறுதிமொழியைத் தந்தார்கள். அதன்பின் 1985 டிசம்பர் 11 ஆம் தேதியன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தும்போது, 10 (ஏ) (1) ஆசிரியர்களை அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து நிரந்தரமாக்குவதாக உறுதிமொழியைத் தந்தார்கள். ஆனால் இன்றைக்குத் தேர்வாணைக்குழு புதிதாக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க தேர்வுகள் நடத்தி, தேர்முகத்தேர்வை நடத்திக்கொண்டிருக்கிறது. நேர்முகத் தேர்வை மார்ச் மாதம் 6 ஆம் நாளிலிருந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆசிரியர்கள் மத்தியிலே மிகப் பெரிய அச்சஉணர்வு ஏற்பட்டிருக்கிறது.

தேர்வாணைக்குழு தேர்வுகளை எப்படி நடத்துகின்றன என்பதைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. அவர்கள் எந்த அடிப்படையிலே ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்? இதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா? யாருக்கும் தெரியாது. முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை; பத்தாண்டுகள் பணி புரிந்தவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இவர்கள் என்ன விதிமுறைகள் வைத்திருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆகவே, தேர்வாணைக்குழு முன் நேர்முகத் தேர்வுக்குச் செல்கிறவர்களுக்கு மிகப் பெரிய அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிறது. தேர்வாணைக்குழு மிகப் பெரிய பிரச்சினையை ஆசிரியர்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கிறது.

சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியும், டிசம்பர் 11 ஆம் தேதியன்று மாண்புமிகு முதல்வர் தந்த உறுதிமொழியும் இன்றைக்கு வீணடிக்கப்பட்டிருக்கிறது. இது மூன்று இலட்சம் ஆசிரியர்கள் மத்தியில் மிகப் பெரிய அபாயநிலையை உருவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இங்கே நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துவதற்காக பல துறைகள் பணியாற்றுகின்றன. அவற்றுள் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையும் ஒன்று. அந்தத் துறையை நிர்வகிப்பவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. இரண்டாம் செயலாளர். எந்தத் துறை பணி தொடர்பாக எந்த ஆணை வெளியிட்டாலும், அது பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறைக்குச் சென்று அத்துறை பரிசீலித்த பிறகுதான் வெளிவரும். இதனால் மிகவும் காலதாமதமாகிறது. எனவே இந்தத் துறையிலேயே இன்னும் பல நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தாகவேண்டிய நிலையிலிருக்கிறோம். எந்தத் துறை அரசாணை வெளியிடுவதாக இருந்தாலும், அது பணியாளர்

மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்குச் சென்று அது சரி என்று சொன்னால்தான், பின் அரசாணை வெளிவரும். இதனால் எந்த நிர்வாகச் சீர்திருத்தத்தையும் உடனடியாகச் செய்ய முடியவில்லை. ஆசிரியர்கள் பிரச்சினையில் மட்டும் இந்த நிலைமை என்றில்லை. நான் பொதுவாகத்தான் சொல்கிறேன்.

Retrospective regularisation, declaration of probation, absorption என்று மூன்று நிலைகள் ஒவ்வொரு அரசு ஊழியர், ஆசிரியருக்கும் உண்டு. 'அப்சார்ப்ஷன்' என்பது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்தான் வரும். மற்றவை இருவருக்கும் பொதுவானது. இவையும்கூட இன்றைக்கு மிகவும் சரியாகச் செய்யப்படாமல் மோசமான நிலையில் இருக்கிறது. ஏனென்றால் இது தொடர்பான கோப்புகளை முதலில் சம்பந்தப்பட்ட துறை பார்த்து, பின் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை பார்த்து, பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. இதுபோன்று எந்தக் காலத்தில் விதிமுறைகள் வகுக்கப்பட்டதோ தெரியவில்லை. வெகு காலமாக இந்த நிலைமை இருந்து வருகிறது. இதன் விளைவு என்ன? நான்கு, ஐந்து ஆண்டுகளுக்குமேல் காலதாமதமாகிறது. உதாரணமாக இந்த ஆண்டு வருகிற 1986 மே மாதத்தில் ஓய்வு பெறுகிற ஆசிரியர் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் என்ன ஊதியம் வாங்கிக்கொண்டிருந்தாரோ அதையேதான் இன்றைக்கும் வாங்கிக் கொண்டிருக்கிறார். அவரைப் போன்றவர்களுக்கு 'அப்சார்ப்ஷன்' முடிந்தால் தான், ஊதியம் நிர்ணயம் செய்து அதன் தொடர்ச்சியாக மற்ற வசதிகளும் கிடைக்கும். இவர் மே மாதத்தில் ஓய்வு பெற்றுவிட்டால், அதன்பின் இவரை யாரும் கவனிக்கப்போவதில்லை. எனவே, நிர்வாக நடைமுறையில் காலத்திற்கு ஏற்றாற்போல பல்வேறு மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Retrospective regularisation, declaration of probation, absorption ஆகிய மூன்றையும் துறை அதிகாரிகள் உடனுக்குடன் செய்தால்தான், ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் இவற்றிற்காக பல ஆண்டுகளுக்குக் காத்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்காதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-15)

அடுத்ததாக, அரசு பல்வேறு அரசாணைகளை வெளியிடுகின்றது. ஆனால் இவற்றை அமல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. ஆண்டுக்கணக்காக அரசாணையை அமல்படுத்தாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.





அதுமாதிரி 10 (ஏ) (1) ஆசிரியர்களைப்பற்றி சுட்டிக்காட்டினேன். அவர்களையெல்லாம் அரசு நிரந்தரப்படுத்தும் என்று உறுதிமொழி தந்தும்கூட, அந்த உறுதிமொழி இன்றைக்கு ஒரு ஆபத்தான நிலைமைக்குக் கொண்டுசெல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. கன்னட மொழி ஆசிரியர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்குத்தான் இருப்பார்கள். அவர்களுக்குத் தேர்வாணைக்குழு 12 ஆண்டுகளாக நேர்முகத் தேர்வே வைக்கவில்லை. தேர்வாணைக் குழு 12 ஆண்டுகளாக நேர்முகத் தேர்வே அவர்களுக்கு நடத்தாத காரணத்தால், அவர்கள் எல்லாம் 10 (ஏ) (1) ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். எல்லோரையும் நேர்முகத் தேர்வுக்கு வாருங்கள் என்று தேர்வாணைக் குழு கேட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கன்னட மொழி ஆசிரியர்களை மாத்திரம், அவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தாலும், அழைக்கவில்லை. அதேமாதிரி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நகராட்சி ஆசிரியர்கள் பிரச்சினை என்று வரும்போது, அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னபோது, நகராட்சியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு எல்.டி.சி. இல்லை, அவர்களுக்கு ஓய்வுபெறும்போது ஐந்து ஆயிரம் ரூபாய் கிடைக்கவில்லை என்று கூறினோம். அமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழி தந்தார்கள். அந்தக் கோரிக்கைகள் நிச்சயமாக நியாயமானவை அவர்களுக்குத் தரவேண்டியது, என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுமாத்திரமல்ல, மற்றவர்களுக்கெல்லாம் எந்தத் தேதியிலிருந்து கொடுத்தார்களோ அந்தத் தேதியிலிருந்து கொடுப்போமென்று உறுதிமொழி தந்தார்கள். அவர்கள் உறுதிமொழி கொடுத்து ஓராண்டாகியும்கூட அந்த ஆசிரியர்களுக்கு எல்.டி.சி. கொடுக்கவில்லை, ஓய்வுகால ஊதியம் ரூபாய் ஐந்து ஆயிரம் கொடுக்கவில்லை; மற்றவர்களுக்கெல்லாம் தந்துவிட்டார்கள். இவர்களுக்குமட்டும் ஏன் இந்தக் காலதாமதம் ஆகிறது? நாங்கள் அந்தப் பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னாலும், அவைகளுக்குத் தீர்வு சொன்னாலும், அதற்கு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்தாலும்கூட, அந்த உறுதிமொழிகள் ஆணைகளாக வருவதில்லை. பின்னர் யார் சொல்லி, உறுதிமொழிகள் சொல்லி அவைகள் ஆணைகளாக வரப் போகின்றன என்ற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. நான் அந்த இரண்டைமாத்திரம் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உறுதிமொழி அளித்தும்கூட, இன்றைக்கு அது நிறைவேற்றப்படாமல், அரசாணையாக வராதது மிகப் பெரிய ஒரு கொந்தளிப்பான நிலையை அந்த ஆசிரியர்கள் மத்தியிலே உருவாக்கியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் தலைமைச் செயலக ஊழியர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நானும் ஒரு சங்கத்தைச் சார்ந்தவன்

தான். அந்த ஊழியர்கள் கடந்த டிசம்பர் 12 ஆம் தேதி வரைக்கும் ஒரு போராட்டத்தை நடத்தி, அவர்களாகவே அந்தப் போராட்டத்தை விலக்கிக் கொண்டு, பின்னர் பணியில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ, அந்த ஊழியர்கள் சங்கத்தினுடைய பொறுப்பாளர்கள் கிட்டத்தட்ட 35 பேர்கள், மூன்று மாத காலத்திற்கு மேலாகியும்கூட, இன்னும் தற்காலிகப் பணி நீக்கத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரைக்கும் மூன்று மாத காலத்திற்கு மேல் யாரையும் தற்காலிகப் பணி நீக்கம் வைத்தது கிடையாது. என்ன காரணம் சொன்னாலும்கூட, அவர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, அந்தப் போராட்டத்தை அவர்களாகவே முடித்துக்கொண்டு இப்படி ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்காக பலமுறை சொல்லியாகிவிட்டது. ஆனால் இன்னும் அந்த சங்கத்தினுடைய பொறுப்பாளர்களை தற்காலிக வேலை நீக்கத்தில் வைத்திருப்பது, அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களோடு பணிபுரிகிற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு நிச்சயமாக ஒரு மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல, அவர்களுடைய உள்ளத்திலே சுமையாக அமையும். அவர்கள் பணியாற்றுவதிலே ஒரு களங்கத்தை ஏற்படுத்தும். நிச்சயமாக அவர்களுடைய உள்ளத்திலே ஒரு வாட்டத்தை ஏற்படுத்தும். 1973-லே போராட்டம் நடத்தியபோது எனக்குத் தெரியும். அப்போது மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் வேலைக்கு வந்தோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி வந்தபோது, நாங்கள் அதைப்பற்றிச் சொன்னபோது மன்னிப்புக் கடிதத்தை ரத்து செய்தார்கள். ஆனால் இன்றைக்கு தலைமைச் செயலக ஊழியர்கள் ஒரு போராட்டத்தை ஏழு அல்லது எட்டு நாட்கள் நடத்தி மீண்டும் அவர்கள் பணிக்குச் சென்றதற்குப் பின்னாலே, மூன்று மாதங்களுக்கு மேலாகியும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்து பணியில் சேர முடியாமல் வெளியே இருக்கக்கூடிய ஒரு அவல நிலை தேவையா? . . .

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** அவைத் தலைவரவர்களே, நீங்களும் போராட்டத்தை நடத்தினீர்கள். அவர்களுடைய போராட்டமும் நாட்டிலே நடந்திருக்கிறது. ஆனால் தொழிற் சங்கங்கள் போராட்டங்களை நடத்தும் நேரத்தில், தங்களுடைய கோரிக்கைகளை வைத்துப் பேசி, பேச்சு வார்த்தை தோல்வியடைந்தால், பின்னர் படிப்படியான பல்வேறு நடவடிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. அது உங்களுக்கும் தெரியும். ஆனால் ஒரு நாட்டை ஆளும் இடத்திலிருந்து, நாட்டுக்குத் தேவையான சட்டங்களை அன்றாடம் பிறப்பிக்கக்கூடிய ஒரு இடத்திலிருந்து சென்னையில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள், நல்ல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள்,



பல்வேறு சலுகைகளைப் பெற்றிருக்கின்ற தலைமைச் செயலக ஊழியர்கள் திடீரென்று எதுவும் சொல்லாமல், எதற்கு என்றும் சொல்லாமல்—ஸ்பான்டேனியஸ் ஸ்ட்ரைக் என்று சொல்வார்களே—அப்படி திடீரென்று ஒரு புதிய வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தி, நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கக் கூடிய அளவுக்கு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கும், இதற்கும், எல்லாவற்றுக்கும் ஒரேமாதிரி நடவடிக்கை இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா? அப்படியானால் எதிர்காலத்திலே எப்படி நிர்வாகம் நடக்கும் என்பதையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. மயில்சாமி:** அவைத் தலைவரவர்களே, எப்படி நிர்வாகம் நடத்துவது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தலைமைச் செயலக ஊழியர்கள் 10 நாள் போராட்டம் நடத்தினார்கள். அது நாட்டை ஸ்தம்பிக்க வைக்கும் போராட்டமல்ல. அப்படியிருந்தால் அதன் முடிவுகளே வேறுவிதமாக இருக்கும். அது அப்படிப்பட்ட போராட்டமல்ல. எனக்குத் தெரியும். . . . .

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** அதை எங்களுடைய சாமர்த்தியத்தால் சமாளித்தோம்.

(பிற்பகல் 5-20)

**திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற அளவுக்கு நாட்டை ஸ்தம்பிக்க வைக்கிற போராட்டமல்ல இங்கே தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் மேற்கொண்ட போராட்டம். நான் கேட்க விரும்புவதெல்லாம், இப்படி தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களை வேலை நீக்கத்தில் வைத்துக் கொண்டிருந்தால், ஆட்சித் தரப்பில் இருக்கிறவர்களே எதிர்பார்க்கிற அளவுக்கு எப்படி மற்ற ஊழியர்கள் மன நிறைவோடு இங்கே பணியாற்ற முடியும்? போராட்டம் என்பது எல்லா இடத்திலும் நடைபெறுகிறது. அவகாசம் கொடுத்தும் போராட்டம் செய்கிறார்கள். அவர்களையும்கூட வேலை நீக்கம் செய்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் எங்கேயும் இத்தனை நாளுக்கு ஊழியர்களை வேலை நீக்கத்தில் தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்ததில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்கூட இங்கே அவையில் இருக்கிறார்கள். அருள்கூர்ந்து எப்படியாவது இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, இந்தப் பிரச்சினை குறித்து ஒரு நல்ல முடிவு உருவாக்கித் தர வேண்டும், அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அவரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையிலே அரசுத் தரப்பிலே பல அறிவிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. எந்த அறிவிப்பானாலும் சரி, அது உரிய நேரத்தில் அறிவிக்கப்பட்டால்தான், அதனாலே பயன் உண்டாகும். காலம் கடந்த பின்னாலே அறிவிப்புகளைச் செய்வதன் காரணமாக, பல பிரச்சினைகள்தான் உருவாகின்றன. நான் அதற்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை என்றாலும்கூட, ஒன்றை மட்டும் குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். 1985 ஆம் ஆண்டில் பல புதிய பள்ளிகளைத் திறந்தார்கள். எப்போது திறந்தார்கள் என்றால், டிசம்பர்-ஜனவரி மாதங்களில் திறந்தார்கள். உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் அப்போது தான் திறக்கப்பட்டன. இப்படி புதிய பள்ளிகளை டிசம்பர் அல்லது ஜனவரி மாதங்களில் துவக்கினால், எப்படி மாணவர்களுக்குப் பாடங்களை நடத்தி முடிக்க முடியும்? எப்படி அந்த மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்ய முடியும்? எப்படியும் அரசு புதிய பள்ளிகளைத் திறப்பதற்கான அறிவிப்பைச் செய்ய இருக்கிறது என்கிறபோது, அதை ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் அறிவித்துவிட்டால், எல்லோருக்கும் அது உதவியாக இருக்கும். மாணவர்களும் நன்கு பயன் பெற முடியும். ஆனால் என்ன காரணத்தாலோ தொடர்ந்து கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில்தான் இப்படிப்பட்ட புதிய பள்ளிகள் திறப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. அந்த நிலை ஏன் ஏற்படுகிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன். எனவே இத்தகைய அறிவிப்புகளை இனியாவது ஜூன், ஜூலைத் திங்களிலேயே அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் மற்ற மற்ற துறைகளில் வீடுகள் கட்டப் படுவதற்கான வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற நிலையைப் பார்க்க முடிகிறது. ஆனால் ஆசிரியர்களுக்கான வீட்டு வசதி வாரியத்திற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக எந்தக் குறிப்பையும் காணோம். சென்ற ஆண்டு எவ்வளவு ஒதுக்கினார்கள் என்றோ இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றோ எங்களுக்குத் தெரியவில்லை. அதிலே இன்னொரு கொடுமை என்னவென்றால், ஆசிரியர்கள் வீட்டு வசதி வாரியத்தில் கடன் பெறுவதற்கு ஆசிரியர்கள் இனி மாதந்தோறும் 20 ரூபாய் கட்டாயமாகக் கட்ட வேண்டும். அப்படிச் செய்தால்தான், அவர்கள் கடன் கேட்க முடியும் என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டு ஒரு ஆணை வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். தமிழ் நாட்டில் ஆசிரியர் வீட்டு வசதி வாரியத்தைத் தவிர குடிசை மாற்று வாரியம் இருக்கிறது. வீட்டு வசதி





வாரியம் இருக்கிறது. ஆனால் அங்கெல்லாம் இப்படிப்பட்ட நிபந்தனை வதுமில்லை. இருபது ரூபாய் கட்டினால்தான் ஆசிரியர்கள் 'லோன்' பெற முடியும் என்ற நிலைமை ஆசிரியர் வீட்டு வசதி வாரியத்தில் மட்டும்தான் இருக்கிறது. அதைக்கூட ஆசிரியர்களின் சங்கங்களைக் கலந்து ஆலோசித்து இதைச் செய்திருக்கிறார்களா என்றால், இல்லை. ஆசிரியர்களுக்கு என்று வீட்டு வசதி வாரியம் அமைப்பது என்பது ஒரு நல்ல திட்டம். நீண்டகாலமாக ஆசிரியர்கள் சங்கங்கள் எல்லாம் அரசை வற்புறுத்திக் கேட்டு வந்த திட்டம். அப்படி ஆசிரியர்களுக்காக என்றே வீட்டு வசதி வாரியம் வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இப்போது இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது என்கிற நிலையில் ஆசிரியர்கள் மாதம் ரூ. 20 கட்டாயமாகக் கட்ட வேண்டும் என்று சொல்வது எப்படி நியாயமாகும்? அவர்களிடத்திலே கண்டிப்பாக இப்போது வசூலிக்கப்படுகிறது. இப்படி நல்ல திட்டத்தையே கூட கட்டாயப்படுத்துவதன் காரணமாக குறை சொல்லுகிற அளவுக்கு ஆசிரியர்கள் மத்தியில் ஒரு எண்ணம் உருவாகியிருக்கிறது. இதற்காக எந்த ஒரு ஆசிரியர் சங்கத்தையும் அரசு கருத்து கேட்கவே இல்லை. அதுமட்டுமல்ல. அந்த வாரியத்திலே ஒரு ஆசிரியர் பிரதிநிதிகூட இடம் பெறவில்லை. மற்ற எல்லா வாரியங்களிலும் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் முழுக்க முழுக்க ஆசிரியர்களுக்காகவே என்று அமைக்கப்பட்ட இந்த வீட்டு வசதி வாரியத்தில் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் யாருமே இடம் பெறவில்லை என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு கோடி ரூபாய் பள்ளிக் கட்டிடங்களைப் பழுதுபார்க்கவும் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூபாய் ஒரு கோடி எந்த வகையில் பார்த்தாலும் போதாது, மிக மிகக் குறைவு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் ஏறத்தாழ 4,000 அரசுப் பள்ளிகள்—மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் குறிப்பிடுகிறேன்—இருக்கின்றன. தனியார் பள்ளிகளைச் சொல்லவில்லை. அந்த 4,000 பள்ளிகளிலே பெரும்பாலானவற்றில் கூரைகள் கூட சரியாக இல்லை. பல இடங்களில் கழிப்பிடங்கள் இல்லை. ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து படிக்கிற பள்ளிகளில்கூட சரியான தனித் தனியான கழிப்பிடங்கள் கிடையாது. பல இடங்களில் முறையான குடிநீர் வசதிகூட இல்லை. இந்த நிலைமையில் ஒரு கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கீடு செய்தால், அது ஒரு மாவட்டத்திற்குக்கூட

[திரு. அ. மயில்சாமி] [1986 மார்ச் 27

முழுமையாக ஒரு தன்னிறைவை ஏற்படுத்த முடியாது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் பள்ளி என்றாலேயே அங்கே மாணவர்கள் படிக்கிற ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். மாணவர்களும் மாணவிகளும் பள்ளிக்குச் சென்றால், அங்கே வீட்டை மறந்து பாடங்களை மட்டும் கற்றுக்கொள்கிற சூழ்நிலை இருக்க வேண்டும். அதைத் தான் அரசு உறுதி செய்ய வேண்டும். இப்படி கூரைகூட சரியாக இல்லாத பள்ளிகளில், சுற்றுச் சுவர்கூட சரியாக இல்லாத பள்ளிகளில் இருக்கிற சூழ்நிலையில் மாணவர்கள் எப்படி சரியாகக் கல்வி கற்க முடியும்? இப்படிப்பட்ட பள்ளிகளில் இருக்கிற சூழ்நிலையில் எப்படி மாணவர்கள் பாடங்களை நன்றாகப் படித்து தேர்வுகளில் எப்படி நன்றாக அதிகமான எண்ணிக்கையில் மார்க் பெற முடியும்? எனவே அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி, மாணவர்களுக்கு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு மேலும் அதிகமான நிதியை இதற்காக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாக வசதியைக் கருதி பல்வேறு பெரிய மாவட்டங்களை யெல்லாம் அரசு இன்றைக்குப் பிரித்திருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாக வசதியை நாம் அனைவரும் பெற வேண்டும். இதற்காகத்தான் பெரிய மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், என்ன நிலைமை இருக்கிறது என்றால், ஏற்கெனவே பரவலாக இருந்த நிர்வாகம்

(பிற்பகல் 5-25)

இன்றைக்கு ஒன்றுபடுத்தப்பட்டிருக்கிறது. இங்கே ஆட்சியில் இருக்கக் கூடியவர்கள் மாவட்டங்களைப் பிரிக்கிறார்கள்; வட்டங்களைப் பிரிக்கிறார்கள். ஆனால் கல்வித் துறையிலே மாவட்டத்திலே உள்ள அதிகாரங்களையெல்லாம் சென்னையில் உள்ள கல்வித் துறை இயக்குநருடைய அலுவலகத்திலே வைத்திருக்கிறார்கள். ஒரு சிறிய மாறுதல் என்றாலும், இங்கே வரவேண்டிய நிலை இருக்கிறது. ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று யாருக்கும் புரியவில்லை. கடந்த இரண்டாண்டுக் காலமாக இப்படிப் பட்டதொரு நிலை கல்வித் துறையிலே இருக்கிறது. எல்லோரும் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென்று கருதும் நேரத்தில், கல்வித் துறையில் மட்டும் அதிகாரங்களையெல்லாம் ஒரேயிடத்திலே குவிக்கும் நிலைமையைப் போக்கி, முன்பிருந்த மாதிரி அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 27] [திரு. அ. மயில்சாமி]

நீலகிரி மாவட்டத்தைப்பற்றி சென்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போதும் சொன்னேன். ஒரே கல்வி மாவட்டம்தான் இருக்கிறது. அது மிகப் பெரிய கல்வி மாவட்டம். அந்த மாவட்டத்தை இன்னுமொரு மாவட்டமாகப் பிரிக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னேன். இந்த நிதிநிலை அறிக்கையில் அது இடம் பெறவில்லை. ஆகவே நீலகிரி மாவட்டத்திலே இன்னுமொரு கல்வி மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றுக்கெல்லாம் பல்வேறு சலுகைகள் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் அதை வலியுறுத்தி யிருக்கிறோம். அதைப்பற்றி அதிகாரப் பெருமக்களைக் கேட்டால், ஒரு நபர் குழுவின் முடிவுகள் வரட்டும் என்று சொல்கிறார்கள். ஒரு நபர் குழுவின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவைகளைத்தான் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். நகராட்சிப் பள்ளிகளுக்கும், தனியார் பள்ளிகளுக்கும் பயண விடுப்புச் சலுகை போன்ற சில சலுகைகளைக் கேட்பது ஒரு நபர் குழுவின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவை. இதையெல்லாம் உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன். நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்கு இது பொருந்தும் என்று கருதுகிறேன். நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையர்கள் ஊதியம் வழங்குகிறார்கள். ஊதிய நாள் அன்று தாங்களாகவே அங்கே சென்று ஊதியத்தைப் பெற வேண்டிய நிலை இருக்கிறது. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு உள்ள சலுகையைப்போலவே அந்தத் தலைமை ஆசிரியர்களே ஊதியத்தைப் பெற்று மற்ற ஆசிரியர்களுக்குத் தரலாம். வைப்பு நிதிக் கடன் போன்றவற்றையும் அவர்களே வாங்கித் தரலாம். இந்த அதிகாரத்தை அவர்களுக்குத் தந்தால், பல்வேறு பிரச்சினைகள் தீரும். ஏற்கெனவே ஒரு அரசாணை இருக்கிறது. மாதக் கடைசியில் சம்பளம் பெறலாம் என்று அரசாணை இருந்தாலும், தமிழகத்தில் பல்வேறு பள்ளிகளில் பத்து மாதங்கள் ஆனாலும் ஊதியம் கிடைப்பதில்லை. இதற்குப் பல்வேறு சங்கடங்களைச் சொல்கிறார்கள். ஆகவே தலைமை ஆசிரியர்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் எதிர்காலத்திலே தோன்றாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ. மயில்சாமி] [1986 மார்ச் 27

சென்னையிலே தியாகராயர் கல்லூரி இருக்கிறது. இந்தக் கல்லூரியில் இருக்கக்கூடிய அவல நிலைமைகள் வேறு எங்கும் இருக்காது என்பது என்னுடைய கருத்து. இந்தக் கல்லூரியை அரசே ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் ஏற்கெனவே நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தாலும்கூட, அரசே இந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்வதற்குத் தடையேதும் கிடையாது. நிர்வாகத்தினர் நீதிமன்றம் சென்று தொடர்ந்த வழக்கெல்லாம் அவர்கள் சார்பாக இல்லாமல் போய்விட்டன. ஆகவே அந்தக் கல்லூரியை அரசாங்கம் எடுக்க முயற்சி எடுக்க வேண்டும். பிளஸ்-டூ தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களை டிகிரி வகுப்பில் சேர்த்திருக்கிறார்கள். யாரும் அதைக் கேட்க முடியாத நிலைமை அங்கே இருக்கிறது. ஒரு வகுப்பிற்கு இத்தனை மாணவர்களைத்தான் சேர்க்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்தின் விதி இருக்கிறது. அதற்கு அதிகமாகச் சேர்த்திருக்கிறார்கள். ஐம்பது மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று இருந்தால், 65, 75 என்று சேர்க்கிறார்கள், அதை யாரும் கேட்க முடியாது. எல்லா விதிகளிலும் முறைகேடு நடக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அந்தக் கல்லூரியின் முதல்வர் ஆறு முறை மாற்றப்பட்டிருக்கிறார். அதாவது ஆறு பேரை நியமனம் செய்திருக்கிறார்கள். கடந்த மூன்றாண்டுகளில் என்பதிலிருந்து அந்தக் கல்லூரியின் நிர்வாகம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இருக்கக்கூடிய சீர்கேடுகளைப் போக்க அந்தக் கல்லூரியை அரசே உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவது ஊதியக் குழுவைப்பற்றி ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போதே பேசியிருக்கிறோம். இப்போதும் பேசவேண்டிய நிலை இருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழுவில் இருந்த குறைபாடுகளையும், முரண்பாடுகளையும் களைவதற்காகத்தானே நான்காவது ஊதியக் குழு போடப்பட்டிருக்கிறது? நான்காவது ஊதியக் குழுவினால் ஒரு நன்மையும் கிடைக்கவில்லை என்பது நாம் எல்லாம் அறிந்த உண்மை. இன்றைக்கு ஓர் அரசாணை வந்திருக்கிறது. ஏற்கெனவே கல்வித் துறையிலே ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்பதாலே, பத்தாண்டுகள் பணி முடிந்தால் தேர்வு நிலை, இருபதாண்டுகள் பணி முடிந்தால் சிறப்பு நிலை என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணை 1974 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருக்கிறது. நான்காவது ஊதியக் குழுவின் அதிகாரப் பெருமக்கள் ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு நன்மை செய்வதைத் தவிர்த்து, இனிமேல் பத்தாண்டுகள் பணி பூர்த்தியாகி தேர்வுநிலை வேண்டுமென்றால், துறைத் தேர்வை எழுதி வெற்றி பெற வேண்டும் என்று



1986 மார்ச் 27] [திரு. அ. மயில்சாமி]

(பிற்பகல் 5-30)

பரிந்துரைத்திருக்கிறார்கள். நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் துறைத் தேர்வு எழுத வேண்டும் என்பது ஒன்று. அடுத்தது, பேனல் தயாரிக்கவேண்டும் என்கின்றார்கள். அது நடைமுறையில் சாத்தியமே கிடையாது. இன்றைக்கு நம்முடைய கல்வித் துறையிலே அரசுப் பள்ளியிலே தனியார் பள்ளியிலே எல்லாம் சேர்த்துப்பார்த்தால், பட்டதாரி ஆசிரியர்கள் 30 ஆயிரம் பேர்கள் இருக்கின்றார்கள். இடைநிலை ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 50 ஆயிரம், 60 ஆயிரம் பேர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்காக என்று ஒரு பேனலைத் தயாரித்து பிறகு தேர்வு நிலை கொடுப்போம் என்று சொல்கின்றார்கள். அது முடியுமா ?

இன்னொன்று, ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை, சிறப்பு நிலை கொடுப்பது பற்றிப் பார்த்தால், அரசு ஆசிரியர்களுக்கு நன்மை செய்ய விரும்பினாலும், கல்வித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் அதைச் செய்வதில்லை. அரசுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றார்கள். அதனால் ஆசிரியர்கள் மத்தியிலே பெருத்த கொந்தளிப்பு உருவாகின்றது. இப்போது கூட அரசாணை வந்ததுபற்றி எல்லோருக்கும் தெரியாது. நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலிருந்து ஆணை வந்துவிட்டது. தேர்வு நிலை, சிறப்பு நிலை அளிப்பதற்கான ஆணை வந்துவிட்டது. அதன் அடிப்படையிலே 10 ஆண்டுகள் ஆனால் தேர்வு நிலை, 20 ஆண்டுகள் ஆனால் சிறப்பு நிலை என்று ஆணையிலே இருக்கின்றது. ஆனால் இதிலே நான்காவது சம்பளக் குழு என்ன பரிந்துரை செய்திருக்கின்றது? பேனல் தயாரிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அருள்கூர்ந்து அரசு எடுத்துவிட வேண்டும். இல்லை என்றால், அவர்களுக்கு நன்மை கிடையாது. அது நடைமுறை சாத்தியமே இல்லாத ஒன்று. இப்போதுகூட கல்வித் துறையில் உள்ள அதிகாரிகள் பேனல் தயாரிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இப்போதுதான் அதைத் தந்திருக்கிறார்கள். மார்ச் திங்களில் தந்திருக்கின்றார்கள். இதனால் பயன் கிடையாது. இப்போதுகூட கல்வித் துறையிலே கல்வித் தகுதியை உயர்த்திக்கொண்டவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கின்றார்கள். பேனல் தயாரித்துத்தான் தருகின்றார்கள். பேனல் எல்லாம் தயாரித்து பதவி உயர்வு கொடுத்திருக்கின்றார்கள். அதையும் இப்போதுதான் தந்திருக்கின்றார்கள். மார்ச் கடைசியில் தந்திருக்கின்றார்கள். அதனால் ஆசிரியர்களுக்குப் பயன் இல்லை. இதனால் மாணவர்களுக்குப் பலன் இல்லை. அப்படித்தான் ஆகிக்கொண்டிருக்கின்றது. ஆண்டுக்கு ஒரு முறை பேனல் இதற்காகத் தயாரிப்பது என்பது முடியாததாகும்.

இன்னொன்று. கல்வித் துறையிலே பதவி உயர்வுகள் இடையாத காரணத்தினால், பல பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கேட்டால் பேனல் தயாரிக்கவில்லை என்று சொல்கின்றார்கள். பேனலைத் தயாரித்து அனுப்பி விட்டால், பணியாளர் நிர்வாகத் துறையிலே கோப்பு இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். பிறகு சட்டத் துறையிலே இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். ஆண்டுக்கணக்காக பேனல் தயாரிக்காததால், காலியிடங்கள் அப்படியே இருக்கின்றன. அப்படியே இருப்பதால், யாருக்கு நஷ்டம்? அங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. ஆண்டுக்கணக்காக இருந்துகொண்டிருக்கின்றன. இந்தத் துறையிலே பார்த்து, சட்டத் துறையிலே பார்த்து, பணியாளர் நிர்வாகத் துறையிலே எல்லாம் பார்த்து அந்தப் பேனல் தயாரித்து பதவியில் போட்டால், அடுத்த நாள் என்ன செய்கிறார்கள்? சென்னை உயர்நீதி மன்றத்திற்குப் போய் 'ஸ்டே' வாங்கிவிடுகிறார்கள். இதுதான் இன்று இருக்கக்கூடிய நிலை, கல்வித் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்து, உயர்நீதி மன்றத்திற்குச் சென்று ஆணை வாங்கிவிடுகின்றார்கள். இதுதான் அங்கேயும் நடந்துகொண்டிருக்கின்றது. 20 ஆண்டுகள் பணியிலிருந்தவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் ஆறு ஆண்டுக்காலம் பணியாற்றினால் அவர்களுக்கு, 'சினியர்' என்று சொல்லி பதவி உயர்வு வாங்கிவிடுகின்றார்கள். அதைக்கூட இயக்குநர் அலுவலகத்திலே பேசிக்கொள்கின்றார்கள். இனிமேல் நீதிமன்றத்திலேயே போய் எல்லோரும் எல்லாமே பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்கின்றார்கள். பதவி உயர்வு வேண்டுமானாலும் நீதிமன்றத்திலே போய் பெற்றுக்கொள்ளலாம் என்று பேசிக்கொள்கின்றார்கள். தேர்தலிலே கூட நிற்கவேண்டியதில்லை. நாம் அமைச்சராக வரவேண்டுமென்றால், ஏதாவது நீதிமன்றம் போய் வாங்கிக்கொண்டு வந்துவிடலாம். அப்படிப்பட்ட நிலைமைகள்கூட இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** நீதி மன்றத்திலே வழக்கு இருந்தால்தான், அங்கே போய் ஏதாவது பண்ணலாமே தவிர, கோர்ட்டிலே போய் எப்படி அமைச்சராக வரமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. அ. மயில்சாமி:** அதுமாதிரி ஆகிவிட்டது என்று சொல்கின்றார்கள். நினைத்தவர்கள் எல்லாம் நீதிமன்றம் போய் 'ஸ்டே' வாங்கி வந்துவிடுகிறார்கள். பதவி உயர்வும் வாங்குகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இன்றைக்கு இந்த இலாகாவிலே இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். பி. அன்ட் ஏ. ஆர்.ல் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள், பிறகு சட்டத் துறையிலே இருக்கிறது என்று சொல்கின்றார்கள்,





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் அந்த முறையில் வருவதாக இருந்தால், அவரே வருவாரே தவிர, உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல மாட்டார்கள். அதைப்பற்றிச் சொல்லிக் கொடுக்க மாட்டார்கள்.

**திரு. அ. மயில்சாமி:** அப்படி நான் வரப்போவதாகச் சொல்லவில்லை. அப்படி எல்லோரும் கேவலமாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் சொன்னேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக கோர்ட்டு மூலமாக ஆணை பெற்று வருவார் என்றால் நான் அதை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்பேன்.

**திரு. அ. மயில்சாமி:** அங்கே அவர்கள் அந்த அளவுக்கு நகைச்சுவையாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். பி. அண்ட் ஏ. ஆர். துறை, சட்டத் துறை எல்லாம் பார்த்த பிறகும் நீதி மன்றத்திற்குப் போகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதிலே குறைகள் இருப்பதால், நீதிமன்றத்தின் மூலம் அவர்கள் பதவி உயர்வு பெறுகின்றார்கள். மூத்தவர்கள் எல்லாம் அதனால் விரக்தியான நிலையிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதனாலே எப்படி அவர்கள் நன்மை பெற முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு பல மாவட்டங்களிலே மழை அதிகமாகப் பெய்யாமலும், குறைவாகப் பெய்தும் வறட்சி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. நான் சார்ந்துள்ள கோவை மாவட்டத்திலேகூட வறட்சிதான். குடிநீர் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, அது எந்தக் கடனாக இருந்தாலும் கூட்டுறவுக் கடனாக இருந்தாலும், அது நிலத் தீர்வையாக இருந்தாலும், தள்ளி வைத்தால்தான், அது விவசாயிகளுக்குச் செய்கின்ற நன்மையாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே குடிநீருக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 'ட்வாட்' போர்டில் இருக்கின்ற குறைகள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே பம்புசெட்டுகளைப் பராமரிக்கவில்லை. இந்தக் குறை பரவலாகச் சொல்லப்படுகின்றது. கிராமத்திலே ஹேண்ட் பம்ப், மோட்டார் பம்ப் போட்டிருக்கின்றார்கள். பழுது அடைந்தால் 2, 3 நாட்கள் அல்ல, மாதக் கணக்கிலேகூட அதைப் பழுதுபார்ப்பது கிடையாது. இதில்

[திரு. அ. மயில்சாமி] [1986 மார்ச் 27

(பிற்பகல் 5-35)

பொதுவான குற்றச்சாட்டு, அதில் திட்டமிட்டு செயலாற்றவில்லை என்பது தான். கோவையில் 17 பம்பு செட்டுகள் 1981-ல் வாங்கி 1984 வரை உபயோகிக்கவில்லை. கோவையிலே 1981-ல் வாங்கி 1984 வரை பயன்படுத்தவில்லை என்று பரவலாகக் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் 1983-84-ல் பவர் பம்ப்ஸ், ஹேண்ட் பம்ப்ஸ் கிட்டத்தட்ட 720 பழுதடைந்த நிலையில் இருந்தன. ஆண்டு முழுவதும் பழுது பார்க்கப்படாமல் இருந்தன. 1983-ல் ஆரம்பித்து 1984 வரைக்கும் பழுதடைந்த நிலையில் கிட்டத்தட்ட 720 பம்புகள் வைக்கப்பட்டிருந்தன. கோவை மாவட்டத்தில் இந்தப் பம்புகளை பழுது பார்க்க ஒரு 'மொபைல் வேன்' வைத்திருந்தார்கள். அந்த மொபைல் வேன் கோவைக்கு அருகாமையில் அன்னூரில் விபத்தில் சிக்கி, வேன் பழுதாகி விட்டது. மாற்று வேன் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இதுவரை வேறு 'வேன்' அங்கே கிடையாது. அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருப்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். வறட்சியால் பெரிய அளவில் குடிநீர்ப் பிரச்சினை பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் குடிநீரை விலைக்கு வாங்கும் நிலை இருக்கிறது. திருப்பூர் பெரிய நகரம். 7 நாட்களுக்கு ஒரு தடவைதான் அங்கே தண்ணீர் வருகிறது. அப்படிப்பட்ட பல நகரங்களில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இதையெல்லாம் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் போனஸ் தரவேண்டுமென்று கேட்டு, அதற்கு மாறாக ஒட்டுமொத்தத் தொகை என்று தந்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஒட்டு மொத்தத் தொகையை எல்லோருக்கும் தந்திருக்கிறார்களா என்றால், இல்லை. அனைவருக்கும் தரவில்லை. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி போதிக்கும் பகுதி நேர ஆசிரியர்களுக்கு அந்த ஒட்டுமொத்தத் தொகை வழங்கப்படவில்லை. அவர்கள் ஊதியம் மிகவும் குறைவானது. மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் அவர்களுக்கு ஊதியமாகத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கல்வித் தகுதியைப் பார்க்கும்போது, அவர்கள் எம்.காம்., எம்.எஸ்.சி. படித்திருக்கிறார்கள். அவர்கள், பகுதி நேர ஆசிரியர்கள் என்ற பெயரில் 300 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு ஒட்டு மொத்தத் தொகை கொடுக்கப்படடிருக்கிறதா என்றால், இல்லை. அவர்களுக்கு அது கொடுக்கப்படவேண்டுமென்று அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் என்ன காரணத்தாலோ



1986 மார்ச் 27] [திரு. அ. மயில்சாமி]

நம்முடைய நிதித் துறை அவர்களுக்கு இது பொருந்தாது என்று ஒரு விதியைச் சொல்லுகிறது. அரசு நல்லது செய்ய வேண்டுமென்று நினைத்தால்கூட, அதிகாரிப் பெருமக்கள் ஏதாவது ஒரு சட்டத்தை, விதியைச் சொல்லி, பொருந்தாது என்று சொல்லிவிடுகிறார்கள். இது பொருந்தாது என்று சுலபமாகச் சொல்லிவிடுகிறார்கள். இப்படி இருப்பவர்கள் 4,000 பேர்கள்தான். அவர்களுக்கு விதிகள் பொருந்தாதா? விதிகளை மாற்ற முடியாதா? அவர்களுக்கும் விதிகளை மாற்றிக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, ஓய்வு பெறக்கூடியவர்களுக்கு, அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, இது கிடையாது. அவர்களுக்கு 'இன்க்கிரிமென்ட்' எல்லாம் தருகிறார்கள். அவர்களுக்கு இது கிடையாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான விதிகளைத் தளர்த்தி அவர்களும் பயன்படும் நிலையை நிச்சயமாக அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஒரு நல்ல ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இறந்தால், அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அது அமுலில் இருக்கிறது. பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இருந்தாலும், சிலருக்கு 4, 5 ஆண்டுகளாகியும் கிடைக்கவில்லை. அவர்கள் தகப்பனார் அல்லது தாய் இறந்து, அவர்களுக்குப் போதிய கல்வித் தகுதி இருந்தும் வேலை வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. இப்போது புதிதாக ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஆசிரியரோ, அலுவலரோ இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு கிராஜுட்டி கிடைக்கிறது, பிராவிடன்ட் பண்ட் தொகை கிடைக்கிறது. இதை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் அதற்கு முன்னாலே அந்தத் துறையிடமிருந்து ஒரு அறிக்கை வருகிறது. இவர்கள் வேலை கேட்டிருப்பார்கள், வேலையும் கொடுத்திருப்பார்கள். அதற்குப் பின்னால் மெமோ வருகிறது. உங்களுக்கு கிராஜுட்டி கிடைத்திருக்கும், பி.எஃப். பணம் வந்திருக்கும். அவ்வளவு பெரிய தொகையை வைத்து ஏன் வேறு தொழில் செய்யக்கூடாது என்று கேட்டு மெமோ வரும். இது வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது. அரசு நல்ல உள்ளத்தோடு, நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், இறந்து போனவர் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு உண்டு என்று அரசாணை தந்திருக்கிறார்கள். இப்போது அதற்கு ஒரு விதி என்று சொல்லுகிறார்கள். வேலை கொடுத்தாலும், இந்தப் பணத்தை எல்லாம் பெற்றிருப்பார்களே, அதை வைத்து சுய தொழில் செய்யக்கூடாதா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5.40)

அதை நிச்சயமாக எடுத்து விட வேண்டும். இதனால் பலபேர் வேலையில் இருந்தாலும் கூட, அவர்கள் எல்லாம் வேலை நீக்கம் செய்யப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம்.

அடுத்து, இன்றைக்கு எவ்வளவோ கோப்புகள் வந்தாலும் கூட, பல கோப்புகளைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகள் கால தாமதம் ஆகிறது. என்ன காரணமோ தெரியவில்லை. அதற்கு ஏதாவது கால வரையறை செய்தாக வேண்டும். இத்தனை மாதங்களுக்குள் அல்லது இவ்வளவு நாட்களுக்குள் கோப்புகளை இறுதி முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற முறையில் திட்டவட்டமாக ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாங்கள் பல்வேறு பிரச்சினைகள் பற்றிச் சொல்கிறோம். சில சமயங்களில் பிரச்சினைகள் பற்றிக் கேட்டால், 'பைல்' வரவில்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக ஆசிரியர்கள், அலுவலர்கள் எல்லாம் மாவட்டங்களில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். அங்கேயுள்ள அதிகாரிகளிடம் கேட்டால், சென்னைக்கு கருத்துருவை அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். சென்னையில் இயக்குநர் அலுவலகத்தில் கேட்டால், தலைமைச் செயலகத்துக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். தலைமைச் செயலகத்தில் கேட்டால், மீண்டும் எங்கிருந்து வந்ததோ அங்கே போய் கேட்கச் சொல்கிறார்கள். இப்படியே தான் நிலைமை இருக்கிறது. ஆகவே எந்தக் கோப்பாக இருந்தாலும் அவைகளின் மீது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து முடிய வேண்டும் என்கிற வகையில் ஒரு திட்டவட்டமான ஆணையை நம்முடைய பி அன்ட் ஏ.ஆர். துறை வெளியிட்டால்தான், இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்பட முடியும்.

அடுத்து, எங்கே பார்த்தாலும் சிகப்பு நாடா முறை இருக்கிறது. பல விதமான பிரச்சினைகள் இதனால் ஏற்படுகின்றன. காலதாமதம் இல்லையென்றால் பிரச்சினையே இல்லை. ஆனால் 'டிலே' அல்லது காலதாமதம் இருப்பதால், நியாயம் நடைபெறவில்லை, அநியாயம் நடைபெற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து சொல்கிறேன்; பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை இதுசம்பந்தமாக பல மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். இத்துறை இதிலே தீவிரமாக ஈடுபட்டு பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தால்தான், 'ரெட் டேப்பிசம்' அடியோடு ஒழியும். இல்லை





யென்றால் நிச்சயமாக அதை அகற்ற முடியாது. ஆகவே இதற்கு பி அன்ட் ஏ. ஆர். துறை நிச்சயமாக ஒரு வழிவகை காண வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்து, இன்றைக்கு 4 ஆயிரம் அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. அது போல் தனியார் பள்ளிகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அதற்காக கல்வித் துறையிலே ஒரு தலைமைப் பொறியாளர் இருந்தால், பள்ளிக்கூடங்களில் பழுது பார்த்தல் போன்ற அவசரப் பணிகளைச் செய்ய வாய்ப்பாக இருக்கும். பொதுப் பணித் துறையிலிருந்து ஒரு சி.இ. யை டெப்யூட்டேசனில் கேட்டாவது, இதற்கு வழிவகை செய்ய வேண்டும். இதனையும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறைக்கு என்று தனியாக ஒரு சட்டப் பிரிவு தேவை. இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகள் கல்வித் துறை சம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் செல்கின்றன. கல்வித் துறையின் கருத்துக்களை நிச்சயமாக சரியாக உணர்த்துவது கிடையாது. அதனால் பல வழக்குகளில் அரசு சார்பான வழக்குகள் தோல்வியடைகின்றன. ஆகவே கல்வித் துறையிலே ஒரு சட்டப் பிரிவு அவசியம் என்கிற கருத்து பல முறை ஏற்கெனவேயே இந்த அவையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நிச்சயமாக கல்வித் துறையிலே ஒரு சட்டப் பிரிவை ஏற்படுத்தினால், கல்வித் துறையின் கருத்தைச் சரியான முறையில் நீதிமன்றத்திற்கு எடுத்துரைத்து வழக்குகளில் வெற்றி பெற வாய்ப்பு உண்டாகும். ஆகவே இதையும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பல பள்ளிகளுக்கு நாங்கள் செல்கிறபோது, சத்துணவுக் கூட அமைப்பாளர்களும் சரி, தலைமை ஆசிரியர்களும் சரி, பொதுவாக ஒரு குறையைச் சொல்கிறார்கள். காய்கறிகளை கூட்டுறவு விற்பனைக் கடையிலிருந்து வாங்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அந்த முறை நல்லதுதான். ஆனால் வெளி மார்க்கெட்டில் விற்பதை விட இங்கே காய்கறிகளின் விலை அதிகம். 600 பேர், 700 பேர் படிக்கின்ற பள்ளிக்கு 20 கிலோ காய்கறி தேவை என்றால், அதில் பாதிதான் இப்போது வழங்குகிறார்கள். இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறார்கள். கோவைக்கு அதிகாரிகள் வந்தபோதும், இதைத்தான் சொன்னார்கள். ஆகவே உள்ளூரிலேயே வாங்குகிற ஏற்பாடு இருந்தால், எந்த அளவுக்கு விலை குறைவாக வாங்க முடியுமோ அந்த அளவுக்கு விலை குறைவாகவும் வாங்கலாம், அதே நேரத்தில் 10 கிலோ வாங்குகிற இடத்தில் 20 கிலோ வாங்கி மாணவர்களுக்கு அதிகமாகக் காய்கறிகளைப் போடுவதன் மூலம் நல்ல

சத்துணவை அவர்கள் சாப்பிடுகின்ற நிலையும் ஏற்படும். ஆகவே வெளி மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்க அனுமதிக்க வேண்டும். அதையும் உள்ளூரிலேயே வாங்கிக்கொள்ள அனுமதிக்கும் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-45)

அடுத்ததாக, ஏற்கெனவே 10(ஏ)(1) ஆசிரியர்கள் பற்றிப் பேசியிருக்கிறோம். நிதியமைச்சர் அவர்களும் உறுதிமொழி கொடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசும்போது கூட, அவர்கள் 10(ஏ)(1) ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே அவர்களது பணி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு சர்வீஸ் கமிஷன் ஆசிரியர்கள் தேர்வுக்கு நேர்முகத் தேர்வு நடத்திக்கொண்டிருக்கிறது. என்ன காரணத்தாலோ மிகப்பெரிய. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் 40 நிமிடமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடித்தால் நலமாக இருக்கும்.

**திரு. அ. மயில்சாமி** : ஆகவே எப்படியாவது முயற்சியெடுத்து ஆசிரியர்கள் நியமனத்திற்கு தேர்வாணைக் குழுவுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்ல வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். ஆனால் சொல்வதோடு சரி, எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மார்ச் ஆறாம் தேதியிலிருந்து அங்கே தேர்வு நடந்துகொண்டிருக்கிறது. இது ஆசிரியர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே இதை உறுதியாகத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களை நியமிக்க தனியாக ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவின் மூலம் அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே கருத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் சொன்னார்கள். இன்னும் அது அமல்படுத்தப்பட முடியாமல் இருக்கிறது. இதை விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்** : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டாக, ரூ. 12 கோடியே 24 லட்சம் பற்றாக்குறை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஆண்டுதோறும் வரக்கூடிய பற்றாக்குறை பட்ஜெட்தான். இந்தியாவிலே, நமது மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும், மத்திய அரசு



உள்ளிட்ட அரசுகள் பற்றாக்குறை பட்ஜெட் போடுவது வழக்கம். அதனுடைய விளைவு, சுமை மக்கள் மீது தான் விழுகிறது. இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது மத்திய அரசு பல பொருட்களுடைய விலையை உயர்த்தியதன் காரணமாக, குறிப்பாக எரிபொருட்கள், பெட்ரோலியம், டீசல், நிலக்கரி போன்ற பொருட்களின் விலை உயர்ந்தால், நம்முடைய மாநில அரசுக்கு அதிகச் சுமை ஏற்படுகிறது என்பது. மத்திய அரசின் இத்தகைய கொள்கை மாநிலத்தின் வருவாயை வேறு வழியில் பாதிக்கிறது. ஒரு பக்கம் நமக்கு ஏற்படக்கூடிய வருவாய் போகிறது, நமது வருவாய் மீண்டும் மத்திய அரசுக்கே சென்று விடுகிறது என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம் மாதிரி நமது மாநில அரசுக்கு வருகிற வருமானம் மட்டுமல்ல, கூடுதலாக வருமானம் வந்தாலும் கூட, அது மீண்டும் மத்திய அரசுக்கே சென்று விடுகிற நிலை இந்த விலை உயர்வால் ஏற்படுகிறது. எரிபொருள் விலை உயர்வு தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்னொரு பிரச்சினை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில அரசுக்கு நிதிவசதிக் குறைவென்றாலும், தொடர்ச்சியாக நமது மாநிலத்தில் ஆட்சியில் உள்ள கட்சி உட்பட எல்லாக் கட்சிகளுமே மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் முன்பு, மாநில அரசுக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது கொள்கை அளவில் பல ஆண்டுகளாகக் கூறப்பட்டாலும் கூட, இந்த மாற்றத்தை, மாநில மத்திய அரசு உறவு மாற்றத்தை, நிதி ஆதார மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. இதனால் பல கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஃபெடரல் செட்டப் போன்ற கூட்டமைப்பு முறையை பாதிக்கக்கூடிய அளவில் இது இருக்கிறது. ஏழ்மையைப் போக்கும் சுமையை மாநில அரசே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அந்தச் சுமையைப் போக்க வேண்டிய நிதிவசதி இங்கே இல்லை. அதே நேரத்தில் நமக்கு வருவாய் கூடிக்கொண்டே வந்தாலும், மத்திய அரசின் சில கொள்கைகள் காரணமாக நமக்குக் கிடைக்கும் பணம் அங்கே சென்று விடுகிறது. அதனால்தான் இந்தக் கொள்கையிலேயே மாற்றம் செய்ய வேண்டுமென்று மாநில அரசு சர்க்காரியா கமிஷனுக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதனுடைய விபரம் நமக்குக் கொடுக்கப்பட

(பிற்பகல் 5-50)

வில்லை. இருப்பினும் கூட கொள்கை அளவிலே மாநில அரசுக்கு நிதி உதவி வேண்டும் என்பதிலே நாம் உறுதியாக இருக்க வேண்டும். இதில் மாநில அரசு மேற்கொண்டிருக்கும் நிலையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்ப

[திரு. ப. மாணிக்கம்] [1986 மார்ச் 27]

தோடு மட்டுமல்லாமல், நிதி வசதிகளைப் பெருக்குவதற்கு சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டாக வேண்டும். இந்தக் கருத்தை நான் முதலிலே வலியுறுத்தி விடுகிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் என்ன கூறப்படுகிறது என்று ஆராய்வோமானால், நம் மாநிலத்தில் இன்றைக்குள்ள சூழ்நிலையில் நமக்குள்ள கஷ்டங்களையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, மத்திய அரசு பின்பற்றக்கூடிய புதிய தொழில் கொள்கையினால், நமக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களை ஒரு பக்கம் சொல்லிவிட்டு நீண்ட கால பொருளாதாரக் கொள்கையின் பாதிப்புகள் எப்படி இருக்கும் என்பதை ஒரு பக்கத்தில் சொல்லிவிட்டு, இன்னொரு பக்கத்தில் அதற்கு முரண்பாடாகச் சொல்லியிருப்பதையும் காண முடிகிறது. நிதிநிலை அறிக்கையின் பத்தாவது பத்தியில், "நாட்டில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய ஊக்கம் கொடுக்கும் நோக்கதுடன், பல கொள்கைகளை புதிய கண்ணோட்டத்தில் அணுக, மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது. புதிய தொழில் கொள்கை, புதிய கல்விக் கொள்கை, நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கை போன்றவை பற்றி மத்திய அரசின் அறிவிப்புகள், மத்திய அரசு நிறைவேற்றக் கருதியுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையனவாகக் கருதப்பட வேண்டும்" என்றிருக்கிறது. அடுத்து 11-ஆவது பத்தியில் இப்படி "மேம்பாடு அடைந்துள்ள இந்த வளர்ச்சிச் சூழ்நிலையைத் தமிழ் நாடு அரசு முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கருதியுள்ளது" என்று சொல்லியிருப்பது மேலோட்டமாகப் பார்த்தால் முரண்பாடாகத் தெரியாது. ஆனால் சில காரணங்களினால் இதில் முரண்பாடு இருக்கிறது. இப்போது அந்த முரண்பாடு பற்றி அதிகம் விவாதிக்க விரும்பவில்லை. ஆனாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி இங்கே குறிப்பிட்டு விட்டு, வேறொரு இடத்தில் தமிழ் நாடு வளர்ச்சிப் பொருளாதார நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் அவர்கள் "தமிழ் நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழில் துறை, ஆண்டு ஒன்றுக்கு, சராசரி 8.1 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது" என்று மேற்கோள் காட்டுகிறார்கள். 8.1 விழுக்காடு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். அவற்றில் எவ்வளவு மூடப்பட்டிருக்கிறது? இந்தப் புள்ளி விவரத்தை நான் சரி என்றோ தவறென்றோ வாதிடவில்லை. தற்சமயம் சென்னையைச் சுற்றி ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் இயங்குகின்றனவா என்றால், அவற்றில் பல தொழிற்



1986 மார்ச் 27] [திரு. ப. மாணிக்கம்]

சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு பல்வேறு காரணங்கள். இருப்பினும் 8.1 விழுக்காடு "இண்டஸ்ட்ரியல் குரோத்" என்று காட்டுவது சரியல்ல என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரையில் நமக்கு பாதகமான இயற்கை நிலைமைகள் ஏற்பட்டன. "பருவ மழைப் பொய்த்ததன் காரணமாக இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், நியாயமான அளவுக்கு ற்பத்தி நிலை இருந்து வருகிறது," என்று உரையில் குறிப்பிடப்பட்டிருக் றது. அதிலே எந்தவிதமான சதவீத அளவும் குறிப்பிடப்படவில்லை. ரசுக்கு அது தொடர்பாகப் புள்ளிவிவரம் வராமல் இருக்க முடியாது. அதைப் பாடாததன் காரணம், உண்மையில் இந்தத் துறையில் குறைவு ஏற்பட் ருப்பது. 8.1 விழுக்காடு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தொழிற்சாலைகளைப் பற்றிக் கூறுகிறபோது, விவசாயத்தைப் பற்றிக் கூறுகிறபோது, நியாயமான அளவுக்கு உற்பத்தி நிலை இருந்து வருகிறது என்று சொன்னால், அது சரியல்ல. அதற்கான புள்ளி விவரம் இல்லை என்பதும் சரியல்ல. இதற்கு உண்மையான காரணம், பருவமழை பொய்த்ததேயாகும்.

மழை பொய்த்துவிட்டது. நீர்ப் பிடிப்பு நிலைகளில் நீர்ப் பிடிப்பும் இல்லை. அதனால் மின் உற்பத்தியும் இல்லை. பாசனப் பகுதிகளிலும் மழை இல்லாததால், விவசாயம் பாதிக்கப்பட்டது. மேலும் சொல்லப்போனால், காவிரி நீர்ப் பிரச்சினை இன்னும் தீராத பிரச்சினையாக இருப்பதால், தஞ்சாவூர் மாவட்டத்தில் பல லட்சம் ஏக்கராக்களில் பயிர்கள் நாசமாகப் போய்விட்டன. குறுவை நன்கு விளைந்தும், அறுவடை சமயத்தில் மழை பெய்ததால், அது சுத்தமாக அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. காவிரியில் தண்ணீர் இல்லாததால், பாசனப பாதிக்கப்பட்டது. தாளடி, சம்பா பாதிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அவரது பேச்சைத் திசைதிருப்ப முயலவில்லை. ஓரேயொரு சிறிய கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். காரணம் இவர் கூறும் கூற்று ஏற்கப்படுமானால், நம்முடைய காவிரிப் பிரச்சினையில் மாறுபடக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதற்காகத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. வழக்கமாக தமிழகத்தில் அறுவடை சிறப்பாக இருந்தது என்றும், மழையின் காரணமாக இப்போது சாகுபடி எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். அது சரியான தகவலாகாது. அந்தத்

[திரு. யா. சை. மு. யூசுப்] [1986 மார்ச் 27

(பிற்பகல் 5-55)

நகவலை நாம் ஏற்றுக்கொண்டோமென்று சொன்னால், இந்த முறை காவிரியிலே விடப்பட்ட தண்ணீர் போதுமானது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உருவாகும். குறுவை சாகுபடிக்குப் போதுமான தண்ணீர் காவிரியில் வரவில்லை. குறுவை சாகுபடி நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் தரவில்லை. வழக்கமான அளவுக்கு நாம் சாகுபடி செய்யவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. அ. மயில்சாமி தலைமை)

**திரு. ப. மாணிக்கம்:** குறுவையிலே முழுவதுமாக நாம் சாகுபடி செய்தோமென்று நான் சொல்லவில்லை. சாகுபடி செய்த இடத்தில் நன்றாக விளைந்திருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆர்வம் அதிலே எனக்குப் புரிகிறது. கர்நாடக அரசு இதைக் காரணம் காட்டி, இந்தப் பேச்சைக் காட்டி, தண்ணீரை மறுக்காது. இந்த அவையில் இப்படிப் பேசியிருக்கிறார்கள் என்ற காரணத்தை அது சொல்லப்போவதில்லை. திரும்பவும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். விளைந்திருந்த குறுவைப் பயிருக்குத் தண்ணீர் குறைவாக இருந்தது. முந்திய வருடம் கூட தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமான காரணத்தால், காய்ச்சல் என்று சொன்னார்கள். அதாவது விளைச்சல் அதிகமாக இருக்காது என்று சொல்வார்கள். தஞ்சாவூரில் அப்படிச் சொல்வது வழக்கம். அதைத்தான் சொன்னேன். விளைந்திருந்ததை அறுவடை செய்யும் நேரத்தில், மழைவந்து அடித்துக்கொண்டு போய்விட்டது என்று குறிப்பிட்டேனே தவிர, காவிரித் தண்ணீரைச் சம்பந்தப்படுத்தவில்லை. காவிரித் தண்ணீர் நமக்கு சம்பாப் பயிருக்கு அப்போது கிடைக்கவில்லை. காரணம் காவிரியில் தண்ணீர் இல்லை. அதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர வேறல்ல. கிடைக்கிற தண்ணீரை தகாத நேரத்தில் பெய்த மழை அடித்துச் சென்றுவிட்டது. ஒரு வாரம் கழித்துப் பெய்திருந்தாலும்கூட நமக்கு அந்தக் குறுவைப் பயிராவது கிடைத்திருக்கும். விவசாயிகள் பிழைத்திருப்பார்கள், அதுவும் பின்னர் தண்ணீர் இல்லாமல் சம்பாப் பயிர் பல இடங்களில் தீய்ந்து போய்விட்டது. சில விவசாயிகள் காய்கறித் தோட்டமே பிழைக்குமா என்று கேட்கிறார்கள். சில இடங்களில் அவைகளை அறுத்திருக்கிறார்கள். இன்னுமொன்று. காவிரிப் பிரச்சினையால் உண்மையிலேயே தஞ்சை ஜில்லா மட்டுமல்ல, தென்னாற்காடு மாவட்டமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பெரியார் மாவட்டமும் வேறு ஒரு விதத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறது. பவானித் தண்ணீர்; பவானி ஆற்றங்காலில் விடப்படாமல், காவிரியில்



986 மார்ச் 27] [திரு. ப. மாணிக்கம்]

ண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக, அந்தத் தண்ணீர் காவிரி ஆற்றுக்குள்
டப்பட்டது. அதனாலே பவானி பாசனம் பல இடங்களில் பாதிக்கப்பட்டது.
விவசாயிகள் அந்தத் தண்ணீரை பவானியில் விட வேண்டுமென்றும்,
காவிரியில் விடக்கூடாது என்றும் சொன்னார்கள். இதனால் அவர்களுடைய
பகுதியில் கிளர்ச்சி ஏற்பட்டது. இது அவர்களுடைய பகுதிக்கு நியாயம்
தான். அதற்காக அவர்கள் கிளர்ச்சி செய்யத்தான் செய்வார்கள். விவசாய
உற்பத்தி குறைந்திருக்கிறது. அதைக் குறிப்பிடுவதில் தப்பில்லை. தமிழ்
நாட்டின் பொருளாதாரம், தொழில் துறையில் முன்னேற்றம், விவசாயத்
துறையில் முன்னேற்றம் ஆகியவை இயற்கையின் சூழ்ச்சியால் பாதிக்கப்பட்
டிருக்கிறது. இந்த ஆண்டு துவங்கும்போது, தொழில் துறையில் பல
தொழில்கள் நடைபெறவில்லை. உண்மையிலேயே விவசாய உற்பத்தி மிகக்
குறைவாக இருக்கிறது. இந்த நிலையில்தான் இந்த ஆண்டு நிதிநிலை
அறிக்கையைத் துவக்குகிறோம் என்ற இந்தக் கருத்தை மட்டும் முதலில்
வலியுறுத்திக் கொள்கிறேன்; இதற்குக் காரணம் இயற்கை என்பது மட்டுமல்ல.
மத்திய அரசின் சில கொள்கைகளும் காரணம்; மாநில அரசு கையாளும் சில
கொள்கைகளும் காரணமாக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டத்தான்
சொல்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயம் சம்பந்தமாக இல்லையென்றாலும்கூட இதை
யொட்டியே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டின் பொருளா
தாரத்தில் காவிரி மிக முக்கியமான பிரச்சினை. இதுபற்றி பல முறை இந்த
அவையிலே நமக்குள்ளே தாவா நடந்திருக்கிறது; சர்வகட்சிக் கூட்டம் நடந்
திருக்கிறது. இதில் ஒன்றை மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். காவிரிப்
பிரச்சினையில் 1924 அக்ரீமெண்டு என்ன ஆயிற்று? இந்த அரசாவது மறு
பரிசீலனை செய்திருக்கிறதா? இப்போது சட்டத்தை யாரும் மதிப்பதில்லை.
நபரும் மதிப்பதில்லை, அரசும் மதிப்பதில்லை. நான் சொல்லும்போது,
யாரையும் குற்றம் சாட்டுவதாக நினைக்கக்கூடாது. அரசு விரும்பினாலும்,
அது அளிக்கக்கூடிய நிர்பந்தம் Compulsion of time "மதிக்கப்படுவதில்லை.
இன்று அந்தமாதிரி நிலைமை இருக்கிறது. இப்போது கர்நாடகத்தில் வறட்சி
ஏற்பட்டிருக்கிறது. காவிரிப் பிரச்சினையில் ஒரு முடிவிற்கு வருவதற்குரிய
நடவடிக்கைகளில் நாம் துரித கவனம் செலுத்த வேண்டும். இந்தப் பிரச்சினை
நமக்குள்ள 'ரைபேரியன் ரைட்ஸ்' பற்றியது. இப்போது இன்டர்நேஷனல்
பிரின்சிபிலே மாறிப் போயிருக்கிறது. பழைய பிரின்சிபிலில் யார் பாசன
உரிமையை முன்னால் பெற்றிருந்தார்களோ அதை யாரும் மீறக்கூடாது
என்பது சர்வதேச என்ஜினியரிங் கோட்பாடு. இப்போது அப்படி இல்லை.
ஏனென்று சொன்னால் பொதுவாக வளர்ச்சி பெறும் பல்வேறு நாடுகள் " ஒரு

ஆற்றை நாங்கள் முன்னால் பயன்படுத்தாமல் இருந்தோம்; இப்போது பயன்படுத்த விரும்புகிறோம்; முன்னால் நாங்கள் அடிமையாக இருந்தோம்; இப்போது சுதந்திரமாக இருக்கிறோம்; அதனால் அதைப் பயன்படுத்த விரும்புகிறோம்'' என்கிறார்கள். இப்போது இன்டர்நேஷனல் பிரின்சிபிலே மாறிப் போயிருக்கிறது.

(பிற்பகல் 6.00)

திரு. ப. மாணிக்கம் : தமிழர்களுடைய உரிமை என்பது 1924 ஆம் ஆண்டு முதலே இருந்து வருகிறது. அதுமட்டுமல்ல, தமிழர்களுடைய உணர்வு நியாயமானது. ஆனால் அந்த உணர்வு கன்னடியர்களின் நியாயமான உணர்வை மீறுவதாகவோ அல்லது அவமதிப்பதாகவோ இருக்கக்கூடாது. எனவே இந்தப் பிரச்சினையில் 'கிவ் அண்டு டேக்' என்கிற முறையில் தீர்வு காணப்பட வேண்டும். அதுவும் துரிதமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூறுகிற கருத்து நமது நியாயத்திற்கு எதிராகவும் புறம்பானதாகவும் இருக்கிறதே, இது சரிதானா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

திரு. ப. மாணிக்கம் : நம்முடைய நியாயத்திற்கு எதிரானது என்று நாமே கருதிக் கொண்டால் எப்படி? நம்முடைய நியாயத்தை வலுப்படுத்த வேண்டும் என்றுதான் நான் இதைச் சொல்லுகிறேன். இது காலத்தின் கட்டாயம் என்று ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இன்றைக்கு கருநாடகத்திலே வறட்சி நிலைமை நிலவுகிறது. ஏற்கெனவே நாம் இந்த ஆண்டு ஒரு முறை தண்ணீர் கேட்டோம். கொடுத்தார்கள். ஆனால் அக்ரிமென்ட்டில் அது வருகிறதா என்பதுதான் பிரச்சினை, நம்முடைய உரிமை இது என்று தமிழர்களாகிய நாம் ஒன்றைச் சொல்கிறோம். அதைப் போலவே கருநாடகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உரிமை என்று ஒன்றைச் சொல்லுகிறார்கள். இதிலே மத்திய அரசு தலையிட்டு இந்தப் பிரச்சினையை இதுவரை தீர்த்து வைத்திருக்கிறதா என்றால், இதுவரை இல்லை. இதுதான் இதிலே இருக்கிற கஷ்டம். எனவேதான் சொல்லுகிறேன், நதிநீர்ப் பிரச்சினையில் ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்கு ஏதாவது ஒரு கோட்பாடு உருவாக்கப்பட வேண்டும். பல ஆண்டுகளாகவே வடக்கில் நர்மதா போன்ற நதிகளைப்பற்றிய பிரச்சினைகள் உருவாகி தாவா நடந்து வந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் அந்தப் பிரச்சினைகளிலே ஒரு உடன்பாடு காண முடிந்ததே தவிர, மத்திய அரசின் தலையீட்டின் காரணமாக அல்ல. . .





திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "ஏற்கெனவே பாசன வசதி பெற்றவர்களுக்கு முன் சலுகை வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இல்லை'' என்று வாதிடுவதானது நாம் ஏற்கெனவே வைத்து வரும் கோரிக்கையையே பலவீனப்படுத்துவதாக ஆகும். மத்திய அரசோ மற்றவர்களோ தலையிடுவதைப்பற்றி நான் வரவேற்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சொன்ன வாதத்தை மீண்டும் வலியுறுத்த வேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம் : ரைப்பேரியன் ரைட் என்பது சர்வதேச பிரின்சிபிலாக இருந்து வருகிறது. ஆனால் அது இன்றைக்கு 'மாடிபை' ஆகி இருக்கிறது. அதைத்தான் சொன்னேனே தவிர, அது நியாயமானது என்று நான் வாதிடவில்லை. எனவே அதை நான் நியாயப்படுத்துவதாக தயவுசெய்து கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ரைப்பேரியன் ரைட்ஸ் என்பது ஏற்கனவே சர்வ தேசங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடு. ஆனால் இன்றைக்கு அந்த ஒப்புக்கொள்ளப்பட்ட பிரின்சிபிள்களோடு வேறு பல புதிய கூடுதலான பிரின்சிபிள்களும் வந்திருக்கின்றன. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். அதன் அடிப்படையில் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாக நதிநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில்தான் நமது இந்தியாவிற்குள்ளேயேகூட சமீபத்தில் கிருஷ்ணா மற்றும் நர்மதா நதிப் பிரச்சினைகள் மாநிலங்களுக்குள்ளேயே தீர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படிச் சொல்வதாலே நாம் நம் உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று சொல்வதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். நாம் நம் உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டாம். நான் அப்படிச் சொல்லவுமில்லை. நமக்கு இப்போது வருகிற காவிரி ஆற்றின் தண்ணீர் குறையவே வேண்டாம். ஆனால் இந்த தாவாவை எப்போது முடிப்பது? எப்போது முடிவுக்குக் கொண்டுவருவது? அதுதான் இன்றைக்குள்ள பிரச்சினை. கடைசியில் நிலைமை என்னவாயிற்று? தஞ்சை மாவட்டத்தில் எத்தனையோ மறியலும் போராட்டங்களும் எழுந்தன. மறியல் செய்ததால், என்ன நிலைமை ஏற்பட்டது? மறியலில் ஈடுபட்டவர்கள் ஜெயிலுக்குப் போனார்கள். அவ்வளவுதான். விவசாயிகளுக்கு இப்போது என்ன கவலை ஏற்பட்டிருக்கிறது என்றால், காவிரியில் மீண்டும் தண்ணீர் வருமா என்று ஏங்குகிறார்கள், பாசன முறையை மாற்றிக்கொள்ள வேண்டுமா என்று எண்ணுகிறார்கள். பருவ முறைகளையே மாற்றிக் கொள்ளவேண்டியிருக்குமோ என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகள் இன்றைக்கு எழுந்திருக்கின்றன. தஞ்சை மாவட்டம் சோழ நாடு என்பது

[திரு. ப. மாணிக்கம்] [1986 மார்ச் 27

கடந்த 3000 ஆண்டுகளாக நெல் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற பகுதியாகும். உலகத்திலேயே மிகவும் பழைமையான காலத்திலேயிருந்து இங்கே நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஏதோ வெள்ளைக்காரர்கள் ஆட்சியில்தான் இது உருவாக்கப்பட்டதல்ல. கடந்த 3,000 ஆண்டுகளாகவே இந்தப் பகுதிகளில் நாம் நெல் உற்பத்தி செய்து வருகிறோம். உலகத்திலேயே அந்த அளவுக்கு வளமையான பகுதி இது. ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? விவசாயிகள் இனி நாம் நெல்லுப் பயிரை வைப்பதா அல்லது வேறு ஏதாவது பயிர் போடலாமா என்று எண்ணுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் சொல்கிறேன் இது ஒரு கடினமான பிரச்சினை என்பது மட்டுமல்ல, ஒரு உண்மையான பிரச்சினை. இதற்கு நாம் விரைவில் தீர்வு கண்டாக வேண்டும். இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு நாம் இன்னும் தாமதம் செய்யாமல், தீர்வு காண முயல வேண்டும். இதிலே நாம் விட்டுக் கொடுக்கிறோமா அல்லது நாம் நம்முடைய உரிமையை நிலைநாட்டப் போகிறோமா என்று பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. அதன் விளைவாக என்ன ஏற்படுகிறது? தஞ்சை மாவட்டம் தென்னாற்காடு மாவட்டம் மட்டுமல்ல பாதிக்கப்படுவது. பெரியார் மாவட்டம் கூட பாதிக்கப்படுகிறது. பெரியார் மாவட்டம் கூட பவானி தண்ணீரை அனுபவிக்க முடியாமல், அந்தத் தண்ணீரை காவிரிக்குள் விட வேண்டியிருக்கிறது. எனவேதான் இந்தப் பிரச்சினையின் தன்மையை உணர்ந்து நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். காரணம் இப்போது தமிழகத்தின் நெல் உற்பத்தியே பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்திற்காகவாவது நாம் இந்தப் பிரச்சினையில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-05)

அதைத்தான் நான் வலியுறுத்துகிறேனே தவிர, தண்ணீரை விட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பல தடவை சர்வ கட்சிக் கூட்டத்தை நடத்தியாகிவிட்டது. எந்த அளவிற்கு உடன்பாடு வரலாம் என்று சொல்லிவிட்டோம். அந்தப் பிரச்சினைக்குள் நான் நுழைய விரும்பவில்லை. மீண்டும் காவிரிப் பிரச்சினையைப்பற்றி ஓய்வில்லாமல் பேசி, அப்பிரச்சினை வறட்டுப் பிரச்சினையாக மாறிவிடக்கூடாது. அதைப்பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை. ஏறக்குறைய நாம் முடிவிற்கு வந்துவிட்டோம். இதற்குமேல் நீடிக்கக்கூடாது. ஒரு பிரச்சினை தீராமல் இருந்தால், அதைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருந்தால், 'டாக்மா' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.



1986 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. யா. சை. மூ. யூசுப்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசும், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அதைத் தீர்க்க வேண்டும் என்பதில் மற்ற எல்லோரையும் விட அதிக அக்கறையோடுதான் இருப்பார்கள். குறைந்த அக்கறையோடு நிச்சயமாக இருக்கமாட்டார்கள். தொடர்ந்து பல்வேறு சமயங்களில் நாம் முயற்சி எடுத்ததன் விளைவாகத்தான் கடந்த ஒரு முறை பேச்சுவார்த்தையே நடந்தது. அடுத்து இவ்வருடம் சனவரியில் பேச்சுவார்த்தையை வைத்துக்கொள்ளலாம் என்று நாம் கூறியது கர்நாடக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. துரதிருஷ்டவசமாக அப்போது கர்நாடக மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டார்கள். பிறகு மாற்றுத் தேதி கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுபற்றி தமிழக அரசு திரும்பத் திரும்ப எழுதிக்கொண்டிருக்கிறது. அவர்கள் தேதி அளிக்காவிட்டால் என்ன செய்வது என்பது எங்களுக்குப் புரியவில்லை. நான் முன்பு சொன்னது போல, நிச்சயமாக இரண்டு பக்கமும் பேசினால் தான் பேச்சுவார்த்தையை நடத்த முடியும்.

**திரு. ப. மாணிக்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அரசுக்கோ, தனி நபருக்கோ உள்நோக்கம் கற்பிக்கவில்லை. இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அரசு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும். இந்தப் பிரச்சினையை நீடித்துக்கொண்டே இருந்தால், திரும்பத் திரும்ப இந்தப் பிரச்சினையை நாம் பேசிக்கொண்டேயிருந்தால் பயன் இல்லை. நடைமுறையில் இதைத் தீர்க்க முயலவில்லை என்றால், இதை வறட்டுவாதம் என்றுதான் சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் இதை 'டாக்மா' என்று சொல்லுவார்கள். இந்த ஆங்கில வார்த்தைக்குப் பொருத்தமான தமிழ் வார்த்தை எனக்குத் தெரியவில்லை. இந்தப் பொருளை வெளியிடக்கூடிய வார்த்தை என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே ஒரே பிரச்சினையைத் திரும்பத் திரும்ப பேசியும் அந்தப் பிரச்சினை தீரவில்லை என்றால் அதை வறட்டு வேதாந்தம் என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி நிலைமைக்கு விவசாயிகள் வந்துவிட்டார்கள். இந்தப் பிரச்சினை தீருமா தீராதா என்ற நிலையில் பாசனத்தில் புதிய முறையைக் கொண்டுவரப் போகிறோம் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால், பாசன முறையில் புதிய முறைகளைப் புகுத்தி மாற்றித் தருவதாக அரசு சொல்லியிருக்கிறது. அது வேறு பிரச்சினை. ஆகவே அந்தப் பிரச்சினையை இனியும் நீட்டிக்க வேண்டாம், இதற்குப் புதிய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

[திரு. ப. மாணிக்கம்] [1986 மார்ச் 27

இல்லாவிட்டால் காவிரிப் பாசனம் உள்ள தஞ்சையும், திருச்சியும் பெரிதும் பாதிக்கப்படும், மொத்த உணவு உற்பத்தியும் பாதிக்கப்படும். அதனால் தமிழ் நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்படும். இதிலே ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான விவசாயிகளுடைய வேலைவாய்ப்பும் பாதிக்கப்படும். இவ்வளவு பிரச்சினைகள் இதிலே உள்ளடங்கியிருப்பதால், காவிரிப் நீர்ப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து, அரசு அதைத் தீர்க்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 92 இலட்சம் டன் உணவு உற்பத்தி எதிர் பார்ப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இயற்கை ஒத்துழைத்தால், இது நடக்கும். இயற்கை கோளாறு செய்தால், இது மாறும். இந்த மாற்றத்திற்கு இந்த மாநில அரசுதான் ஜவாப்தாரி என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிதான மற்ற நிலைமைக்கு நான் வந்துவிடவில்லை. இயற்கை செய்யக்கூடிய கோளாறுக்கு மாநில அரசு மீது குற்றம் சாட்டமாட்டேன். 92 இலட்சம் டன் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் பாசன வசதிகள் என்ன இருக்கின்றன? அதற் கேற்ற 'இர்ரிகேஷன் பாலிசி' என்ன? இதற்காக தமிழ் நாடு வாட்டர் மேனேஜ் மெண்ட் இன்ஸ்ட்டியூட்டில் என்ன செய்கிறோம்? வாட்டர் மேனேஜ்மெண்ட் பற்றி பல்லாண்டுக் காலமாகப் பேசப்படுகிறது. நம்முடைய தண்ணீர் வசதியைச் சரியாக நிர்வகிக்க ஒரு உறுதியான கொள்கை இருக்கிறதா என்றால், இல்லை. பெரிய நீர்ப்பாசனங்கள் மட்டுமல்லாமல், சிறிய சிறிய அளவில் உள்ள பல குளங்கள்கூட அடைபட்டு வந்திருக்கின்றன. அதை எப்படி காப்பாற்றப் போகிறோம்? ஒன்று 'பெர்கொலேஷன் பாண்ட்'. மற்றொன்று கீழ் ஊற்று நீர். இவ்வருடம் மழை பெய்யாமல் இருந்திருந்தால், சென்னையில் தண்ணீர் பற்றாக்குறையில் நாம் இருந்திருப்போம். காவிரி பிரச்சினை முதல் விஷயம். நீர் பிடிப்பு நிலைகளைப் பாதுகாப்பது இரண்டாவது விஷயம். இதிலே நம்முடைய அரசுக்கு உறுதியான கொள்கை தேவை. ஏனென்றால் ஏற்கனவே பல வல்லுநர்கள்—ஈக்கோலாஜிக்கல் இன்டர் நேஷனல் எக்ஸ்பெர்ட்ஸ்—தமிழ் நாட்டில் கீழ் ஊற்றுநீர் குறைந்து வருகிறது. குட்டைகள் குறைந்து வருகின்றன என்றும், ஈக்கோலாஜிக்கல் டிஸ்டர்பன்ஸ் இருப்பதால், இயற்கை பாதிக்கப்பட்டிருப்பதால், தமிழ் நாடு எதிர்காலத்திலே கிட்டத்தட்ட பாலைவனமாக ஆகக்கூடிய நிலைமை இருக்கிறது என்றும்

(பிற்பகல் 6-10)

தெரிவித்திருக்கிறார்கள். நமக்கு மட்டுமல்லாமல் கேரளத்திலும் இந்த நிலைமை இருக்கின்றது. இது 'ஈக்கோலாஜிக்கல் எக்ஸ்பர்ட்ஸ்' கருத்து. அதை நாம் அறவே நிராகரிக்க முடியாது. காரணம் இந்த இயற்கை சூழ்நிலையைப்



1986 மார்ச் 27] [திரு. ப. மாணிக்கம்]

பாதுகாப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நீர்ப்பிடிப்புகளை, குறிப் பாக பல குளங்களை அநாவசியமாக எடுத்துக்கொள்கின்றார்கள். அதையெல் லாம் கருத்திலே கொண்டு 50 ஏக்கர், 30 ஏக்கர் பாசனம் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். 3 கிராமங்களுக்கு, சுற்று வட்டாரத்திற்கு அந்தக் குளங்கள் பயன் உள்ளவை என்று சொன்னால், அந்தக் குளங்களை அரசு உரிமையாக்க வேண்டும். கலெக்டர் சொன்னாலும் சரி, யார் சொன்னாலும் சரி, யாரும் அதைக் கேட்பதில்லை. பாசனம் என்று சொன்னால், பெரிய பாசனம் மட்டுமல்ல, சிறிய பாசனம் கொடுக்கக்கூடிய குளங்கள், குடிநீர் வசதிகளை நாம் காப்பாற்ற வேண்டும். இப்போது ஊரகக் குடிநீர்த் திட்டம் என்று போட்டு, அதற்காகக் கூட செலவு பண்ணுகின்றார்கள். அதிலேகூட ரிப்பேருக்காகவே 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. தனியாக ரூ. 45 லட்சம் அதற்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். இப்போது ரிப்பேருக்காக ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருக்கின்றார்கள். ஏனென்றால் இரும்புத் தொட்டி பாழாகிவிட்டது. இப்போது கான்கிரீட் தொட்டியாகக் கட்ட ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். ரிப்பேருக்குப் போட் டிருக்கின்றார்கள். இதைக் கழித்தால் ஊரகக் குடிநீர் திட்டத்தில் என்ன வரும்? பல இடங்களிலே கிராமங்களிலே கொடுக்கப்பட்ட மேல் தொட்டியில் ஓட்டை மாத்திரமல்ல, சரியாகப் பங்க்ஷன் பண்ணவில்லை. இதிலே சமாதானம் சொல்வதாக இருந்தால், அது வேறு விஷயம் ஆகிவிடும். அதனாலேதான் ஊரகக் குடிநீர் திட்டம் என்று போட்டாலும், அதைக் காக்க அரசு உறுதியான முடிவெடுத்து, அதை மேற்கொள்ள வேண்டும். இயற்கை வளத்தை, நம் செல்வத்தை விருத்தி செய்ய வேண்டும். இந்தத் துறையிலே அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான கொள்கை. ஆளுநர் அவர்கள் உரையிலே அறிவிக்கப்பட்டது. நான் இப்போது பேசியது நிதிநிலை அறிக்கையில். அதைப்பற்றிச் சொல்லும்போது, ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். வருகின்ற ஆண்டுகளிலே 30 லட்சம் வீடு கட்ட வேண்டும். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள். ஆதிதிராவிடர்கள், மலை ஜாதியினர் இவர் களுக்கு என்று ஒரு கொள்கை வகுக்கப்பட்டது. நல்ல கொள்கைதான், அது வரவேற்கக்கூடிய கொள்கை. இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை ரூ. 26 கோடி. அதுவும் என்.ஆர்.டி.பி. போன்ற திட்டங்கள் மூலம் கிராமங்களில் வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும். ஒன்றன்பின் ஒன்றாக அவைகளைச் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இந்தத் திட்டத்தையெல்லாம் இணைத்து, ஒதுக்கப்பட்ட 26 கோடி ரூபாயுடன், கூட்டுறவுத் துறை மூலமாகவும், வீடு கட்டும் திட்டங்களுக்கு நிதிவசதி செய்ய

[திரு. ப. மாணிக்கம்] [1986 மார்ச் 27

வேண்டும். நிதி ஸ்தாபனங்கள் மூலமாகவும் இவ்வளவு நிதிபெற்று இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்ல வேண்டும். இன்றைக்குள்ள நிதி நிலையிலே அந்தத் திட்டத்திற்கு 26 கோடி ரூபாய் ஒதுக்கி, மத்திய அரசு ஒதுக்கக்கூடிய பல்வேறு திட்டங்களோடு அதையும் இணைத்து, இன்னும் கடன் வசதி பெற்று அதன் மூலம் இந்தத் திட்டம் நிறைவேறுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

இப்போது வீடு கட்டும் திட்டம் என்பது சந்தேகமாகவே இருக்கின்றது. இந்த ஆண்டு ரூ. 26 கோடி ஒதுக்கீடு மட்டுமல்லாமல், கடன் வாங்குவது என்றால், இன்னொரு விஷயம் இருக்கின்றது. மதுவிலக்கை இங்கே 1987 லிருந்து கொண்டுவரப்போகிறோம். 1987 லேயிருந்து கொண்டுவந்தால், சொச்ச காலங்களில் நமக்கு 60 கோடி ரூபாய் நஷ்டம் வரும். 1987-88-லே அந்த நஷ்டம் 250 கோடியாகக்கூட மாறும். அதாவது இந்த 3 மாதத்திலே 60 கோடி ரூபாய் நஷ்டம் வரக்கூடிய அளவிலே இருக்கிறது. இப்படி நஷ்டம் வரும் என்றால், இவ்வளவு வருமாய்க் குறைவை வைத்துக்கொண்டு, சத்துணவுத் திட்டம், வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம், இப்படிப்பட்ட சமூக நலத் திட்டங்களை, ஏழ்மையைப் போக்கக்கூடிய திட்டங்களை எப்படி நாம் நிறைவேற்ற முடியும்? அதற்கான வருவாய் மூலங்களை எங்கே தேடுவது? எங்கே இருக்கின்றது? அதைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் காணவில்லை. மத்திய அரசு மாநில அரசுக்கு மான்யம் கொடுக்கும் என்று சொல்வார்கள். அட்மினிஸ்ட்ரேட்டிவ் முறையில் ஒரு பக்கம் மத்திய அரசு கொடுத்துவிட்டு, இன்னொரு பக்கம் இன்னொரு பாகத்தை எடுத்துக் கொள்கின்றது. 'புரோகிபிசன்' மூலமாக, நிர்வாகத் துறையின் மூலமாக இன்னொரு பக்கம் மத்திய அரசு எடுத்துவிடுகின்றது. நிதி மூலங்கள் என்பதிலே பலஹீனம் இருக்கின்றது. வரக்கூடிய காலங்களில் மதுவிலக்குக் கொள்கை வந்தால், மேலும் நஷ்டம் வரும். அதற்காக நான் மதுவிலக்கு வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழ் நாட்டிலே உள்ளவர் பலர் குடித்துவிட்டு ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கின்றார்கள். மதுவிலக்கு கட்டாயம் வேண்டும். கொள்கை ரீதியாகக் கொண்டுவர வேண்டும். இந்த ஆண்டு வரையில் ரூ. 60 கோடி நஷ்டம் வரக்கூடிய நிலை இருக்கும். அடுத்த ஆண்டில் ரூ. 250 கோடி

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(பிற்பகல் 6-15)

அளவில் நஷ்டம் ஏற்படும். இப்படி நம்முடைய நிதிக் குறைவை வைத்துக் கொண்டு, வரக்கூடிய காலத்தில் வீடு கட்டும் திட்டம், சத்துணவுத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற முடியுமா? அதனால் புதிய நிதி நிலைகள் அல்லது நிதி ஆதாரங்கள், நமக்குள்ள நிதிக் கஷ்டங்கள், நிர்ப்பந்தங்கள் இவைகளை



1986 மார்ச் 27] [திரு. ப. மாணிக்கம்]

எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதைப் பற்றி புதிய பரிசீலனை தேவை. நான் இவற்றைக் கைவிட வேண்டுமென்று சொல்லவில்லை. மது விலக்கு வேண்டாமென்று சொல்லவில்லை. மதுவிலக்கு வேண்டும். ஆனால் இந்த நிதிப் பற்றாக்குறை நமக்கு உண்மையானது. இந்த நிலையில் இதை எப்படி நிறைவேற்றப் போகிறோம்? அதற்கான கொள்கை நிதிநிலை அறிக்கையிலே இல்லை. அதனால் ஒரு புதிய நிதிக் கொள்கை தேவை. நிதிக் கொள்கை சம்பந்தமான இந்த விஷயங்களை இத்தோடு நான் நிறுத்தி, நிர்வாகத் துறையில் 2, 3 அம்சங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக மாநில அரசு காவல் துறை சம்பந்தமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். காவல் துறைக் கொள்கையில் சில மாறுதல்கள் வேண்டுமென்று சொல்லுகிறோம். போலீஸ் லாக்கப்பில் சாகிறார்கள். அதனால் மக்கள் கிளர்ச்சி ஏற்படுகிறது. அதில் ஷூட்டிங் நடந்து 4 பேர் சாகிறார்கள். இந்த மாதிரி நிலை ஏற்பட வேண்டுமா? லாக்கப்பில் ஒருவர், அதற்கு மக்கள் கிளர்ச்சி, அப்போது சுட்டத்தில் 4 பேர் அவுட். இது என்ன கொள்கை? இந்தக் கொள்கையை கொஞ்சம் மாற்றி யமைக்க வேண்டும். காரணம், லாக்கப்பில் இருக்கும்போது விசாரணைக் கைதி. சட்டத்தில், விசாரணைக் கைதி என்றால் குற்றமற்றவன் இப்போது. அவனைப்பற்றிச் சந்தேகம். அவனை நீதிமன்றத்தில் விசாரணை செய்து தண்டித்தால்தான் குற்றவாளி. அதற்குமுன் அவன் குற்றவாளியல்ல. அவன் கோர்ட்டுக்குப் போவதே இல்லை. காவல் நிலையத்திற்குப் போகும்போதே போய்விட்டால் என்னவாவது? சில குறிப்பிட்ட காவல் நிலையங்களில், சில குறிப்பிட்ட பேர் செய்யும் தவறுதான் இது. நான் எல்லோரையும் சொல்லவில்லை. இந்த இலாக்காவில் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். அதையெல்லாம் நான் மறந்துவிட்டுப் பேசவில்லை. லாக்கப்பில் என்னதான் செய்கிறார்கள்? வெள்ளைக்காரன் காலத்தில் 'தேர்ட் டிகிரி மெதாட்ஸ்' கூடாது என்று சொல்லி கிளர்ச்சி நடந்திருக்கிறது. திரும்ப அது வருகிறது. அப்படி அரசு கொண்டு வந்திருக்கிறது என்று சொல்லவில்லை. ஏன் இதைத் தடுக்க முடியவில்லை? லாக்கப்பில் நிறைய பேர்கள் சாகிறார்கள். இதை நம்மால் தடுக்க முடியாதா? அடுத்து, டிராபிக் ஆக்சிடென்ட்ஸ். இந்தியாவிலேயே அதிகமான 'டிராபிக் ஆக்சிடென்ட்ஸ்' தமிழ் நாட்டில்தான் என்று விவரம் வருகிறது. தமிழ் நாட்டில் ஜனங்கள் குறைந்தால் நல்லதுதான். 4 நாட்களுக்கு முன் செய்தித்தாளில் பார்த்தேன். ரிடையர்ட் ஐ.ஏ.எஸ். அதிகாரி, அண்ணா நகரிலிருந்து கே.எம்.சி. மருத்துவமனைக்கு வரும்போது

[திரு. ப. மாணிக்கம்] [1986 மார்ச் 27

லாரியோ, பஸ்ஸோ அடித்து, ஆள் அவுட். சைக்கிளில் போனால், ஏதாவது ஒன்றால் அடிபட்டு சாகிறார்கள். டிராபிக் ஆக்சிடென்ட் அதிகரித்துவிட்டது. நான் அரசியலில் இருப்பதால், தேர்தல் நேரங்களிலும், அவசர நேரங்களிலும் இரவு நேரங்களில் காரில் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நேரமும் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டுதான் போக வேண்டும். சென்னையிலிருந்து திருச்சிக்குப் போய்ச் சேர்ந்தால்தான் நிச்சயம். டிராபிக் ஆக்சிடென்ட் 'அன்லிமிடெட்' ஆக இருக்கிறது. ஏன் கன்ட்ரோல் செய்ய முடிய வில்லை? நான் சொல்ல விரும்புவது, இந்த மாதிரிப் பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்துவதே இல்லை என்பதுதான். லாரிக்கு ஒரு காலத்தில் நவீன எமன் என்று பெயர். 10 வருடங்களுக்கு முன்பு செங்கற்பட்டு ரயில்வே கேட்டிற்குப் பக்கத்தில்தான் ஆக்சிடென்ட்ஸ் நடக்கும். லாரிக்கு நவீன எமன் என்று எழுதினார்கள். அவ்வளவு ஆக்சிடென்ட்ஸ், அப்போது போக்கு வரத்து அமைச்சராக திரு. இராமையா அவர்கள் இருந்தார்கள். இரவு 11 லிருந்து காலை 4 மணி வரை லாரிகள் செல்லக்கூடாது என்று சொல்லி, அவர்கள் உடனே தூது கோஷ்டியாக வந்து, எங்கள் தொழிலே போய்விடு மென்று சொன்னார்கள். ஒன்று, நேரத்தைக் கட்டுப்படுத்துங்கள். அல்லது இந்த மாதிரி ஆக்சிடென்ட் என்றால் சிறிய பெனால்டி, லாரி லைசென்சை கேன்சல் செய்ய வேண்டும். அவர் பிழைப்பைக் கெடுக்கலாமா என்று கேட்கலாம். இதனால் எத்தனை உயிர்கள் காலியாகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். Life is a cheep Commodity அந்த அளவுக்குப் போக

(பிற்பகல் 1 20)

வேண்டுமா? போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதில் அரசு முதலில் கவனம் செலுத்த வேண்டும். காரணம் இன்றைக்கு லாரிகளின் மூலம் டிராபிக் ஆக்சிடென்ட் அன்லிமிட்டெட்டாக இருப்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையைத் தடுக்க வேண்டும். ஒன்று லாரியின் ஸ்பீடை ரெகுலேட் பண்ண வேண்டும். இல்லையென்றால் தவறு பவர்களுக்கு 'சிவியர் பனிஷ்மென்ட்' கொடுக்க வேண்டும். லாரிக்கான லைசென்சை ரத்து செய்ய வேண்டும். மேலும் இது சம்பந்தமாக காவல் துறையிலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டும். லாரி ஓட்டுகின்றவர்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள் இவர்களை எல்லாம் கூப்பிட்டு இதுபற்றிக் காவல் துறையினர் பேச வேண்டும். அப்படிச் செய்ய வில்லையென்றால், பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்பு மக்கள் இம் மாதிரி விபத்து ஏற்பட்டால், உடனே லாரியை மறித்து நிறுத்தி, டிரைவரை அடித்து நொறுக்கி, அங்கேயே 'காம்பென்சேஷன்' வாங்குகிற நிலை இருந்தது



1986 மார்ச் 27] [திரு. ப. மாணிக்கம்]

மாதிரி இப்போதும் செய்துவிடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு கொந்தளிப்பான நிலைமை ஜனங்கள் மத்தியில் இன்றைக்கு இருக்கிறது. நிறைய விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அரசு உடனடியாக இதிலே தலையிட வில்லையென்றால், நிலைமை விபரீதமாகப் போய்விடும். ஆகவே, இதற்கு உடனடியாக அரசு வழிவகை காண வேண்டுமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து சாதாரணமான வர்கள் வேலை வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. ஏழு வருடங்கள், 10 வருடங்கள், 15 வருடங்கள் ஆகியும் இன்னும் சாதாரணமானவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்று எழுதியா ஒட்டி யிருக்கிறது? ஆகவே சாதாரணமாக மக்கள் கூட்டத்தோடு நானும் எம்பி ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுக்குச் சென்று நிலைமையைப் பார்த்திருக்கிறேன். அங்கே ரொம்ப அநியாயம் நடைபெறுகிறது. வேலை கிடக்க வேண்டுமென் றால், யாராவது மினிஸ்டருடைய சிபாரிசு வேண்டும். அத்துடன் அங்கே வேலை செய்கிறவர்களுக்குப் பணமும் கட்ட வேண்டும். இந்த இரண்டும் சாதாரணமானவர்களால் செய்ய முடிகிற காரியமா? சாதாரணமாக, கோயி லுக்குப் போனால் உள்ளே பெரிய சாமி இருக்கும். பெரிய சாமியைத் தரிசிப் பதற்கு முன்பு வெளியே பல இடங்களில் தட்சணை கொடுக்க வேண்டும். அதுபோல் இங்கே எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் சாதாரண ஏழையெளிய வர்கள் தட்சணை கொடுக்க முடியாது. பதிவு செய்திருக்கும் அனைவருக்கும் வேலை தர முடியாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும் எம்பிளாய் மென்டைப் பொறுத்தவரையில் அவசியம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில திருத்தங்களைச் செய்துதான் ஆக வேண்டும். வேலைவாய்ப்பு குறைவாக இருக்கும் நிலையில் குறைந்தபட்சம் அடிக்கடி சர்பிரைஸ் செக்காவது பண்ண வேண்டும். மேலும் இதனை நல்ல முறையில் 'ரெகுலேட்' பண்ண வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரெவின்யூ டிப்பார்ட்மென்டைப் பொறுத்தவரையில், பலவிதமான கதைகள், வரலாறுகள் இருக்கின்றன. சில மாவட்டங்களில், வட்டாரங்களில் எல்லாம் சில குறிப்பிட்ட முக்கியமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பலவிதமான சலுகைகள் உண்டு. இங்கே ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். அதற்கான ஆதாரத்தை கையில் கொண்டு வந்திருக்கிறேன். பல்லாவரம் நகராட்சிக்கு வெளியே இருக்கின்ற ஒரு பகுதி நெமிலிச்சேரி என்கிற கிராமம். கிராமத்தின் எண் 159. பட்டா எண் 323. 12 சென்ட்

வீடு கட்டும் பிளாட் 1395 மற்றும் 1396 ஆகிய இரண்டு பசலிக்கு வரி 9 பைசா என்று அத்தாட்சிபூர்வமாக அதிகாரியால் கையெழுத்து மற்றும் சீல் போடப்பட்ட ரசீது இருக்கிறது. 1984-ல் வரி கட்டப்பட்டுள்ளது. 1986 என்றால், இரண்டு வருடம்தான் ஆகிறது. இப்போது 5 ரூபாய் வரி போட்டிருக்கிறார்கள். இதே கிராமம், இதே பிளாட், ஆனால் இரண்டு வருடத்திற்குள் வரி பல மடங்கு உயர்ந்திருக்கிறது. என்ன சமாச்சாரம்? அரசாங்கம் வரியை உயர்த்தியிருக்கிறதா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வரி ஏறியிருக்கும் அல்லவா?

**திரு. ப. மாணிக்கம்:** ஒன்பது பைசா என்பது 5 ரூபாய் அளவுக்கா ஏறியிருக்கும்? அப்படி உண்மையிலேயே அரசு வரியை உயர்த்தியிருக்குமே யானால் அரசுத் தரப்பிலிருந்து பதில் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன். இப்படியும் நிலைமை இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டவன் என்பதால், இதனைத் தெரிவித்தேன்.

அடுத்து, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. இப்போது வி.ஏ.ஓ. கிராமங்களில் இருக்கிறார். முன்பெல்லாம்

(பிற்பகல் 6-25)

கிராம முனிசிப்புகள் கிராமங்களில் இருந்து வந்தார்கள். முன்பு கிராமத்தில் உள்ள கிராம அதிகாரிகளிடம் ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் பெறவேண்டுமானால், ஐந்து ரூபாய் கொடுத்தால், போதும். அது அப்போது மரபாக இருந்தது. உடனே கொடுத்து விடுவார்கள். ஆனால் இப்போதுள்ள கிராம நிர்வாக அதிகாரிகளை சந்திப்பதற்கே ஒரு வாரம் ஆகிவிடுகிறது. அவர்கள் வாங்குவது மாமூல் அல்லது வேறு பெயர் சொல்கிறார்கள். அது வேறு விஷயம். அதை இங்கே நான் சொல்ல விரும்பவில்லை அந்த வி.ஏ.ஒ.க்களைப் பார்ப்பதே கஷ்டம். ஏன் இப்படி ஏற்படுகிறது என்று பார்க்க வேண்டும். நான் அதிகாரிகள் பிரச்சினையில் போக விரும்பவில்லை. சாதாரண விஷயங்களில் எல்லாம் அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்கள் தவறு செய்கிறார்கள். குறிப்பாக அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை வி.ஏ.ஓ.க்கள் திட்டமிட்டு, அங்குள்ள கட்சிக்காரர்களை வைத்துக்கொண்டு, 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்று விற்றுவிடுகிற நிலை இருக்கிறது. உதாரணமாக, தாம்பரம் எல்லையில் உள்ள சேலையூரில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை பிளாட் போட்டு விற்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்கத்திடம் உள்ள ரிக்கார்டு



களை சரிபார்த்து அரசாங்க நிலங்களை மீட்க வேண்டும். அப்படித் தேடிக் கண்டு பிடித்தால், பல பெருச்சாளிகள் மாட்டுவார்கள். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அந்தக் கட்சிக்காரர்களை சில பேர் கைக்குள் போட்டுக் கொண்டு, இந்த வேலையைச் செய்கிறார்கள். அவ்வளவு விவரம் தெரிந்தவர்கள். அவர்கள் அரசியல் கட்சியில் இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியாது. ஆனால் கவர்ண்மென்ட் இடங்கள் போய்விட்டன. நாம் நகரை நல்லபடியாக வைத்திருக்க எம்.எம்.டி.ஏ. போன்ற அமைப்புகளை வைத்திருக்கிறோம். ஆனால் அரசாங்கத்திற்கு என்று நிலம் வேண்டுமென்றால் கிடைக்காது. இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்துவிட்டோம். மாவட்டப் பிரிவினை பிரச்சினைக்குள் நான் போகவில்லை. அது வேறு விஷயம். ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் ஜமீன் இடங்களாக இருந்தவை. அங்கே தலைநகரம் அமைக்க அரசாங்கத்திற்கு இடம் கிடையாது. இதுதான் உண்மை. எப்படி இந்த இடங்கள் போயிற்று? கண்டுபிடிக்க வேண்டாமா? ரெவின்யூ இலாக்காவில் நடக்கும் தப்புகளைக் கட்டாயம் கண்டுபிடிக்க வேண்டும். பல இடங்களில் நிலத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால், பல்வேறு வகைகளில் இத்தகைய அதிகாரிகள் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து அந்த இடங்களை மீட்க வேண்டும். சாதாரண மக்களிடம் இந்த நிலங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

ஒரு பிரச்சினை. ஒரு இடத்தில் கிராம மக்கள் பட்டா வேண்டுமென்று கேட்டார்கள். சைதாப்பேட்டையில் ஒரு ஜமாபந்தியில் நானே நேரில் சென்று, நான் யார் என்று சொல்லிக்கொள்ளாமல், அதிகாரிகளைச் சந்தித்தேன். மனு கொடுத்தேன். அங்குள்ள இன்னொரு அதிகாரி இவர் எம்.எல்.சி. என்றார். நான் வாயில் விரலை வைத்து 'சொல்ல வேண்டாம்' என்றேன். அந்த மனுவைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள், "அதற்கான ரிக்கார்டுகளே இல்லை, சார்" என்று சொன்னார்கள். "நாங்கள் பார்த்து வைக்கிறோம்" என்றார்கள். இன்னும் அந்தப் பட்டா கிடைக்கவில்லை. இது ஒன்று. இன்னொன்று, "சம்பந்தப்பட்ட ஃபைல் எங்கேயிருந்தாவது கிடைத்தால், காரியம் செய்யுங்கள்" என்று கேட்டேன். "75 ரூபாய் செலவாகும், மேலும் 100 ரூபாய் சிறுசேமிப்புக்குப் பணம் கட்டி வாங்குங்கள்" என்றார்கள். சரி, 100 ரூபாய்க்கு சிறுசேமிப்பு பத்திரம் வாங்குவோம். 75 ரூபாய்க்கு என்ன செலவு என்று தெரியவில்லை. இப்படிப் பணம் வாங்கினாலும், சாதாரண மக்களை அலைக்கழித்து இந்த அதிகாரிகள் வாட்டுகிறார்கள். அதையெல்லாம் அரசு கண்காணிக்க வேண்டும். இதெல்லாம்

சேர்ந்துதான் கிராம மக்களிடம் எதிர்ப்பு பகிரங்கமாகிவிட்டது. நான் எலெக்‌ஷனுக்குள் போகவில்லை. அது வேறு இடம் இருக்கிறது. பிரச்சினையாகிவிடும். அதைப் பேச வேறு இடம் இருக்கிறது. இங்கே நான் சொல்கிற கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து தவறுகளைத் தடுக்க வேண்டும்.

சத்துணவுத் திட்டம்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நேரடியாக நானே பார்த்தது. மயிலாடுதுறைக்குப் பக்கத்தில், பூந்தோட்டம் என்ற இடத்தில் . . . . (குறுக்கீடு).

(பிற்பகல் 6-30)

* மாண்புமிகு திரு. அ. அருணாசலம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராம அதிகாரிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு கிராம நிர்வாக அலுவலர்களை, அரசாங்க அலுவலர்களாகப் போட்டிருக்கிறோம். பழைய நிலையினை மாற்றி இப்போது இவர்களை அரசு ஊழியர்களாக நியமித்திருக்கிறோம். அந்தக் காலத்திலே ஒரு சான்றிதழ் வாங்க வேண்டுமானால், எப்படி எல்லாம் கஷ்டப்பட்டோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்போதெல்லாம் 'ஈசி' யாகக் கிடைத்தது போல, பேசினார்கள். நான் மாணவனாக இருந்தபோது, ஒரு சான்றிதழ் வாங்குவதற்கு, ஒரு சாதிச் சான்றிதழ் வாங்குவதற்கு பழைய கிராம அதிகாரியிடம் எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்பதை இங்கே வேதனையோடு கூற விரும்புகிறேன். அன்றைக்கிருந்த கிராம அதிகாரி என்ன சொன்னார் என்றால், "உன்னுடைய தகப்பனார் என்னிடம் கடன்பட்டிருக்கிறார், அதைக் கொண்டு வந்து கொடு" என்று சொன்னார். அதுமட்டுமல்ல, நான் காலையிலே சான்றிதழ் வாங்கப்போனவன், மாலை வரை உட்கார்ந்திருக்க வேண்டியிருந்தது. மாலையில் அவர், "மேயச்சென்ற மாடு வந்து விட்டதா? வந்திருந்தால் அதைக் கட்டி, தீனி போட்டுவிட்டு வா" என்றெல்லாம் கூட சொன்னார். இப்படி இருந்த அவமானகரமான நிலைகளையெல்லாம் ஒழித்துக் கட்டியவர் எங்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவார்கள். கிராம அதிகாரிகளின் நிலையை கிராம நிர்வாக அலுவலர்களாக மாற்றி அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார். இவர்கள் ஏதாவது தவறு செய்திருந்தால், குற்றச்சாட்டுகள் இருந்தால், தவறு செய்தவர் யார் என்று சொன்னால், அவர்மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும். ஏனெனில்



ஆக்கப்பட்டுவிட்

அவர்கள் அனைவரும் இப்போது அரசு ஊழியர்களாக

அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தற்சமயம் முடியும்.

டார்கள். அவர்கள் தவறு செய்த கிராம நிர்வாக அலு

எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத்

வலர்களைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள் விவரமாகச் சொல்லவேண்டு

தயாராக இருக்கிறோம். எனவே அது குறித்து

மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் கடந்த காலத்திலிருந்த நிலையைச் சொன்னார்கள். அப்படிப் பட்ட கஷ்டங்கள், கசப்பான அனுபவங்கள் சில பேருக்கு உண்டு. இருந் தாலும் அந்தக் காலத்தில் சான்றிதழை ஒரே நாளிலே கொடுத்து விட்டார்கள். ஆனால் இப்போது ஒரு மாதமானாலும், சான்றிதழ்களை ஒருவர் வாங்கிவிட முடியாது. இதை நான் கேலிக்காகச் சொல்லவில்லை. இதுவெல்லாம் மூன் றாவது ஆள் சொல்லி நான் சொல்லவில்லை. நானே நேரில் அனுபவப்பட்டுத் தான் சொல்கிறேன். திருச்சி மாவட்டத்தில் ஒருவருக்கு உரம் வாங்குவதற் காக சான்றிதழ் தேவைப்பட்டது.

மாண்புமிகு மேலவைத். துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறு செய்கிறவர்களின் பெயர்களைக் கேட்பதால், அவர்களின் பெயர்களை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், அவர் நடவடிக்கை எடுப்பதற்கு முடியும்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னு டைய நோக்கம் ஒரு சில பேருக்குத் தண்டனை வாங்கித்தா வேண்டுமென்ப தல்ல. இந்த நிர்வாக அமைப்பிலே சீர்திருத்தம் வேண்டும் என்பதற்காகத் தான் இவற்றைக் கூறுகிறேன். நபர்களின் பெயர்களைச் சொல்ல வேண்டு மென்று எண்ணியிருந்தால், அன்றே அங்கேயே எழுதிக் கொடுத்திருப்பேன். இந்த நடைமுறையிலே திருத்தங்கள் வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே கூறுகிறேன். இதை அரசு கவனிக்க வேண்டும். எனக்கும் மாண்புமிகு அமைச்சருக்கு ஏற்பட்டதுபோல், கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டிருக் கின்றன. சான்றிதழ்கள் வாங்க நானும் எப்படி எப்படி எல்லாமோ கஷ்டப் பட்டிருக்கிறேன்; சங்கடப்பட்டிருக்கிறேன். ஆனால் அது வேறு, இது வேறு. இந்தத் துறையிலே திருத்தம் வேண்டுமென்பதற்காகத்தான் இவற்றை நான் சொல்கிறேன். இதற்கு மேல் இந்தப் பிரச்சினையில் நான் பேச விரும்ப வில்லை. எனவே, வருவாய்த் துறை நிர்வாகத்தில் நடைபெறுகிற தவறுகளைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ப. மாணிக்கம்] [1986 மார்ச் 27

அடுத்தபடியாகவும் கடைசியாகவும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வரி சம்பந்தமாக சிலவற்றைக் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே எட்டு சதவீதமாக இருந்த வரிவீதத்தை நான்கு சதவீதமாகப் போட்டிருக்கிறோம். பலமுனை வரியாக இருந்ததை ஒருமுனை வரியாகப் போட்டிருக்கிறோம். இது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கேட்டதையே நானும் கேட்க விரும்புகிறேன். "இதன் பலன் விலை வடிவத்தில் மக்களுக்குக் கிடைக்குமா? பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியதன் பலன் மக்களுக்குக் கிடைக்குமா?" என்று அவர் கேட்டதையே நானும் கேட்க விரும்புகிறேன். எனவே, வரிகளைக் குறைத்ததால் பொருள்களின் விலையையும் வியாபாரிகள் குறைக்கிறார்களா என்பதை அரசு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இவ்வாறு சொல்வதால், அதிகாரிகளை 'harass' செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. பங்காளிப் பகை மாதிரி . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் எப்போதும் குறைவாகப் பேசக்கூடியவர். அடுத்து ஓர் உறுப்பினர் பேச இருக்கிறார் . . .

**திரு. ப. மாணிக்கம் :** முடித்துவிடுகிறேன். இந்த வரிக்குறைப்பின் பலன் மக்களுக்கும் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயிர்க் காப்பு மருந்துகள் கிடைக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். இப்போது உள்ள அனுபவம் பல இடங்களில் போய் பொருள்கள் வாங்கும்போது, சில்லரை இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். சில பொருள்

(பிற்பகல் 6-35)

களுக்கு 7 ரூபாய் 70 பைசா என்று சொன்னால் அதற்கு மீதி சில்லரை 30 பைசா இல்லை என்று சொல்கிறார்கள். அப்போது 8 ரூபாய்க்குப் பொருள்கள் கொடுத்துவிடுவோமென்று சொல்கிறார்கள். சில பொருள்களுக்கு ரூ. 1.60 என்றால் 40 பைசா இல்லை என்கிறார்கள். சில பொருள்களுக்கு 5 பைசா இல்லை, மிட்டாய் வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார்கள். இல்லா விட்டால் பொருள் கிடையாது என்கிறார்கள். இல்லாவிட்டால், 60 பைசா கொடுத்து பொருளை வாங்கிக்கொள்ளுங்கள் என்கிறார்கள். சில்லரை மோசம் நிறைய இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு வகையிலும் சில்லரையைச் சேர்க்கிறார்கள். அதில் பங்கும் இருக்கிறது. ரிசர்வ் பாங்கு சில்லரை கொடுக்கிறது. அது வேறு விஷயம். மாநில அரசு இந்தமாதிரிப் பொருள்களிலே



1986 மார்ச் 27] [திரு. ப. மாணிக்கம்]

கூட அது அறிவித்த சலுகைகள் மக்களுக்குப் போய் சேருவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு வரி வசூலிப்பது மாத்திரம் வேலையல்ல. அந்தத் துறையில் மற்றொரு பிரிவையும் வைத்து இது சிங்கிள் பாயின்ட் டாக்ஸாக ஆனதால் விலையிலே என்ன ஆயிற்று என்று கண்காணித்து வரி வசூலுக்குப் போக வேண்டும். மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய ஒரு 'இன்டெலிஜென்ஸ் விங்' ஏற்படுத்தி உதவலாமென்று வலியுறுத்தி அமைகிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னர் பேசியவர்கள் தங்களுக்குத் தெரிந்த விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். இப்போது நான் பேச வந்துள்ளேன். இந்த அரசு முழுக்க முழுக்க ஏழைகளுக்காக விளங்குகிற அரசு. அந்த ஏழைகள் நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதற்காகவே மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய இந்த அரசு செயல்படுகிறது. இந்த அரசு முழுக்க முழுக்க ஏழைகளுக்காகவே இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறது என்பதை மனமுவந்து தெரிவித்துக்கொள்கிறேன். சிலர் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டவைகள் எல்லாம் நடக்குமா, நடக்கக்கூடுமா என்ற ஐயப்பாடுகளை எல்லாம் கூடத் தெரிவித்தார்கள். 1980-லே கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நாங்கள் பொறுப்புக்கு வருவோமே யானால், குடிசைக்கு மின்சார விளக்கு போட்டுத் தருவோம் என்று சொன்னவுடன், இது நடக்காது என்று எதிர்க் கட்சியினர் வாதிட்டார்கள். இன்றைக்கும் அந்த ஏழைகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குடிசைக்கும் மின்சார விளக்கு அரசு போட்டுத் தந்திருக்கிறது. அதுமட்டு மல்லாமல் குடிசைக்கு மின்சார விளக்கு இனாமாகவே தரப்படுகிறது. மின்சாரம் இனாமாகத் தரப்படுகிறது என்பதைச் சொன்னதிலும், அதிகமாகவே ஏழைகள் மீது கருணை காட்டி வருகிறார்கள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே குடிசைக்கு மின்சார விளக்குத் தந்தவர்கள், மின்சாரத்தை இனாமாகத் தந்திருப்பவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்ட வீடு கட்டும் திட்டத்தையும் நிறைவேற்றி குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக வீடு கட்டித் தருவார்கள். எனவே மற்றவர்கள் அதை மனதார நம்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சத்துணவு. சத்துணவு தரப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தைப் பார்த்து வேறு மாநிலங்களில் கூட சத்துணவுத் திட்டம் கொண்டு வர வேண்டுமென்று முயன்று பின்னர் அதை நிறுத்தியிருக்கிறார்கள். அண்டை மாநிலமான ஆந்திராவிலே சத்துணவு போடும் திட்டத்தை நிறுத்தி யிருக்கிறார்கள். இங்கே சத்துணவு தரப்படுகிறது. அதுமட்டுமல்ல, இதற்கு முந்திய அரசு இருந்தது போல் அல்லாது, வாரத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு உப்புமா போட வேண்டுமென்று இருந்த திட்டத்தை மாற்றி, வாரத்திலே ஐந்து நாட்களும் வயிறார சோறு போடப்படுகிறது. இப்படிப் பட்ட சத்துணவுத் திட்டம் இந்தப் பூமியிலே அற்புதமாக ஏழைகளுக்காக அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு திட்டம். அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியால் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டு மல்ல. தேங்கிக் கிடக்கக்கூடிய கைத்தறித் துணியை என்ன செய்வது, ஏது செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் தேங்கிக் கிடக்கக்கூடிய கைத்தறித் துணியை ஏழை விவசாயத் தொழிலாளி ஆணாக இருந்தால் அவனுக்கு ஒரு வேட்டி, துண்டு இனாம்; பெண்ணாக இருந்தால் அவர் களுக்கு ஒரு சேலை இனாம் என்று அறிவித்து, நாடு பூராவும் ஏழை எளிய தொழிலாளிகள் ஆண் பெண் இரு பாலருக்கும் அவைகளைத் தந்து உதவி யிருக்கிறது நம்முடைய அரசு. இப்படி ஏழைகள் மீது கருணை கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை முதலமைச்சராகக் கொண்டிருக்கிற இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் மேலும் பல ஏழைகளைக் காப்பாற்றுவதற்கென்று புதிய வரிகளைப் போடாமலும், போட்டிருக்கின்ற வரிகளைக் குறைத்தும் அறிவித்திருப்பது உள்ளபடியே மன மகிழ்ச்சியைத் தருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. எனக்கு முன்னர் பேசிய பெரியவர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்லும்போது, மத்திய அரசு பெட்ரோல், டீசல் வரிகளை எல்லாம் உயர்த்தி இருப்பது ஏழைகளைப் பாதித்து இருப்பதுபற்றி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அது மத்திய அரசுக்கு உள்ள நிலை என்றாலும் கூட, நம்முடைய மாநில அரசு இந்த பட்ஜெட் மூலம் ஏழைகள் பயன்படுத்துகின்ற பொருள்களுக்கு என்னென்ன அளவிலே வரியைக் குறைக்க வேண்டுமென்று தெளிவாகத் தந்திருக்கிறது.

(பிற்பகல் 6-40)

உதாரணத்திற்கு துத்தநாகம் பூசிய இரும்பு வாளி, வீடுகளில் பயன் படுத்தப்படும் கரி, மற்றும் நிலக்கரி, மரத் தவிடு உமி இப்படிப்பட்ட எரி பொருள்கள் மீது ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரி





இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. நாட்டுச் சர்க்கரை, மற்றும்
கற்கண்டு, இலவம் பஞ்சு மெத்தைகள் மீதான வரியும் குறைக்கப்
பட்டிருக்கிறது. பொதுவாக மெத்தையிலே படுத்து உறங்குகிறவன்
பணக்காரன். ஆனால் இலவம் பஞ்சு தலையணையில் படுத்து உறங்குகிறவன்,
ஏழை எளிய பாமரன். நம்முடைய தமிழ் மூதாட்டி கூட "இலவம் பஞ்சு
துயில்" என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையிலே
தான் மெத்தை, தலையணி மற்றும் இணைப்பு மெத்தைகளுக்குப் பயன்
படுத்தப்படும் இலவம் பஞ்சுக்கும் அதன் பொருள்களுக்கும் விற்பனை
வரியிலிருந்து விலக்குத் தந்திருக்கிறார்கள். மெழுகு வத்திக்கும் வரியில்லை
என்று சொல்லுகிறபோது, மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கிறது. குடிசையிலே
மின்சாரம் போனால் அங்கே இருள் கவியும். இருள் கவியுமானால் உள்ளே
எண்ணை விளக்கை வைத்துக் கொண்டு திக்குமுக்காடுவதைவிட அங்கே
மெழுகு வத்தியை வைத்துக் கொண்டு இருளை நீக்குகிற நிலை ஏற்படும்.
எனவே அதற்கும் விற்பனை வரியிலிருந்து அறவே விலக்குத் தரப்பட்டிருக்
கிறது. படச் சட்டங்கள் மற்றும் படங்கள். செல்வச் சீமான்களின் வீடுகளி
லெல்லாம் எப்படிப்பட்ட படங்கள் மாட்டப்படும் என்பதை நாம் அறிந்திருக்
கிறோம். ஆண்டவனின் படங்களையெல்லாம் கூட அவர்கள் வெள்ளியிலேயே
அமைத்துச் சட்டம் போட்டு வைத்திருப்பார்கள். ஆனால் பஞ்சைப் பராரியாக
வாழ்ந்து வருகிற ஏழையின் வீட்டிலே எல்லாம் காகிதத்திலேயே இருக்கும்.
அப்படிப்பட்ட படச் சட்டங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்
பட்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன், வரவேற்கிறேன்.

அடுத்து, வெள்ளி மெட்டியைப்பற்றி நேற்றையதினம் பேசிய மாண்புமிகு
உறுப்பினர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த நேரத்தில் நான் அரசை ஒன்று
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதாவது வெறும் மெட்டிக்கு மட்டும் வரி
விலக்குத் தந்தால் போதாது; வெள்ளி சம்பந்தப்பட்ட அத்தனை ஆபரணங்
களுக்குமே விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். காரணம் தங்கத்திலே ஆபரணங்களைச் செய்து
கொள்வது என்பது செல்வர்களுக்கே உரிய பாங்கு. ஏழை தங்கத்திலே
எதையும் செய்து கொள்ள முடியாததால்தான், தன்னுடைய குழந்தையைப்
பார்த்து தங்கமே, சொர்ணமே, கனகமே என்று தூக்கிக் கொஞ்சுகிறானே
தவிர வேறு ஒன்றுமில்லை. ஏழைக்குத் தங்கத்திலே எதையும் செய்து
கொள்ள முடியாத நிலை உள்ளது. அவனாலே மிஞ்சிப் போனால் வெள்ளியிலே
தான் அணிகலன் செய்து கொள்ள முடியும். எனவே வெள்ளி மெட்டிக்கு
மட்டும் விற்பனை வரியிலிருந்து விதிவிலக்குத் தருவதை விடுத்து வெள்ளியால்

[திரு. நெல்லை பாலாஜி] [1986 மார்ச் 27

செய்யப்படும் அனைத்து ஆபரணங்களுக்குமே விலக்குத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே வெள்ளி அரைஞாணுக்கும் வெள்ளித் தண்டைக்கும் வெள்ளி கொலுசுக்கும் வெள்ளி மோதிரத்திற்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டும். வெள்ளியிலே காதிலே ஒரு வளையம் அணிந்தால் அதற்கும் விதிவிலக்குத் தர வேண்டும். வெள்ளியிலே இன்னும் என்னென்ன அணிகலன்களை அணிகிறார்களோ அத்தனைக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போட்டி விளையாட்டுப் பொருள்களுக்கும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. மட்டற்ற மகிழ்ச்சி. அடுத்து, அனைத்து இசைக் கருவிகள் மீதிருந்த விற்பனை வரியும் நீக்கப்படுகிறது. ஏழையும் இசையில் ஈடுபாடு கொள்கிறான். எப்படியாவது கஷ்டப்பட்டாவது அவன் ஒரு இசைக் கருவியை வைத்துக்கொள்ள முடியும். செல்வச் சீமானோ அத்தனை இசைக் கருவிகளையும் வைத்துக்கொள்ள முடியும். ஏழையோ ஏதேனும் ஒரு இசைக் கருவியைத்தான் வைத்துக்கொள்ள முடியும். எனவே அந்த வகையில் இசைக் கருவியின் மீது போடப்பட்ட விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்ட விரும்புகிறேன்.

விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகள் மீதான விற்பனை வரியும் விலக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மக்களின் உயிர் காக்கும் 41 வகையான மருந்துகள் மீதும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த 8 சதவீத வரி 4 சதவீத வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் என்று சொல்லும்போது ஏழைகள்தான் அதிகம். எனவே மக்களின், அதாவது ஏழைகளின் உயிர் காக்கும் 41 வகையான மருந்துப் பொருள்களின் மீதுள்ள வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்காமல், அந்த வரி முழுவதையுமே எடுக்க வேண்டும் என்றும், முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் உண்ணும் பால் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பால் உணவுப் பொருள்களின் மீதான விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. நான் ஆன்மீகத்தில் நம்பிக்கை உள்ளவன். ஆன்மீகத்தில் ஒரு பாடல் உண்டு. உபமன்யு என்ற ஒரு குழந்தை தாய்ப்பால் கேட்டு அழுததாம். உடனே பரம்பொருள் என்ன செய்தானாம் தெரியுமா? திருப்பாற்கடலையே தந்தானாம். பாலுக்குப் பாலகன் ஏங்கி அழுதிட பாற்கடல் ஈந்த பிரான் என்று பரம்பரைப் பெரியவர்கள் பாடி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு



1986 மார்ச் 27] [திரு. நெல்லை பாலாஜி]

புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையாக இருந்தவர்கள். பால் பருக வேண்டிய பருவத்திலேயே, பள்ளிக்குச் செல்ல வேண்டிய பருவத்திலேயே வீடு வீடாகப் பிச்சை எடுத்துச் சாப்பிட்டவன் நான் என்று துணிந்து சொன்னவர்கள். வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையை பல மாடிப்படிக் கட்டிடங்களிலே ஏறி ஏறி இறங்கி இறங்கி அனுபவித்தவன் என்று சொன்னவர்கள். பள்ளிக்குச் சென்றுவிட்டு வந்த எனக்கு ஒரு கவளம் சோறு கூட கொடுக்க முடியாமல் என் தாய் பட்ட மனவேதனையை வேறு எந்தத் தாயும் படக்கூடாது என்ற உறுதி பூண்டவர்கள். இந்தப் பாலுக்கு உள்ள வரியை, பால் உணவுக்கு உள்ள வரியை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைக்காமல், அறவே வரியிலிருந்து விலக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-45)

அடுத்தபடியாக, இழுவை வண்டிகள். இழுவை வண்டிகள் என்று சொல்லும்போது வண்டியை மனிதனும் இழுக்கிறான், மாடும் இழுக்கிறது. அப்படி உயிரினம் எல்லாம் இழுக்கின்ற இழுவை வண்டிகள் மீதான 15 சதவீதம் வரியை 9 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். மனிதனும் இழுக்கிறான், மனிதனுக்குச் சரியான பங்காக மாடும் இழுக்கிறது. மனிதனுக்கும் பத்து மாத கர்ப்பம், மாட்டுக்கும் பத்து மாத கர்ப்பம். மனிதனும் முன்னால் வண்டியை இழுக்கிறான். மாடு இழுத்தால் மனிதன் பின்னால் உட்கார்ந்து ஓட்டிக் கொண்டிருக்கிறான். ஆகவே இழுவை வண்டிகள் மீதான வரியை 9 சதவீதமாகக் குறைப்பது என்ற நிலையிலிருந்து மாற்றி இதற்கும், அறவே வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பரிசுச் சீட்டு மீதான வரி 20 சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது தேவையில்லை. காரணம், பரிசுச் சீட்டு என்பது ஏழைகள் வாங்கி நாசமாவது. சில செல்வச் சீமான்களும் பரிசுச் சீட்டை வாங்குகிறார்கள். அது வேறு சமாச்சாரம். இன்றைக்கு ஒரு பெரியவர் என்னைப் பார்த்தார். "ஏதாவது விஷயம் உண்டா?" என்றேன். "ஒரு கோடி ரூபாய்க்கு வெளி மாநில பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்பனையாகிறதாமே! அது உங்களுக்குத் தெரியுமா?" என்றார். "ஐயா, எனக்கு இந்தக் கணக்கெல்லாம் தெரியாது" என்றேன். எனக்கு ஒரு அனுபவம் உண்டு. நான் பொதுக்கூட்டங்களில் பேசுகிறவன். ஏதாவது வெளியூரில் கூட்டம் என்று புறப்பட்டுப் போனால், பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு

[திரு. நெல்லை பாலாஜி] [1986 மார்ச் 27

செய்யப்படும் அனைத்து ஆபரணங்களுக்குமே விலக்குத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே வெள்ளி அரைஞாணுக்கும் வெள்ளித் தண்டைக்கும் வெள்ளி கொலுசுக்கும் வெள்ளி மோதிரத்திற்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டும். வெள்ளியிலே காதிலே ஒரு வளையம் அணிந்தால் அதற்கும் விதிவிலக்குத் தர வேண்டும். வெள்ளியிலே இன்னும் என்னென்ன அணிகலன்களை அணிகிறார்களோ அத்தனைக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போட்டி விளையாட்டுப் பொருள்களுக்கும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. மட்டற்ற மகிழ்ச்சி. அடுத்து, அனைத்து இசைக் கருவிகள் மீதிருந்த விற்பனை வரியும் நீக்கப்படுகிறது. ஏழையும் இசையில் ஈடுபாடு கொள்கிறான். எப்படியாவது கஷ்டப்பட்டாவது அவன் ஒரு இசைக் கருவியை வைத்துக்கொள்ள முடியும். செல்வச் சீமானோ அத்தனை இசைக் கருவிகளையும் வைத்துக்கொள்ள முடியும். ஏழையோ ஏதேனும் ஒரு இசைக் கருவியைத்தான் வைத்துக்கொள்ள முடியும். எனவே அந்த வகையில் இசைக் கருவியின் மீது போடப்பட்ட விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்ட விரும்புகிறேன்.

விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகள் மீதான விற்பனை வரியும் விலக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மக்களின் உயிர் காக்கும் 41 வகையான மருந்துகள் மீதும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த 8 சதவீத வரி 4 சதவீத வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் என்று சொல்லும்போது ஏழைகள்தான் அதிகம். எனவே மக்களின், அதாவது ஏழைகளின் உயிர் காக்கும் 41 வகையான மருந்துப் பொருள்களின் மீதுள்ள வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்காமல், அந்த வரி முழுவதையுமே எடுக்க வேண்டும் என்றும், முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் உண்ணும் பால் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பால் உணவுப் பொருள்களின் மீதான விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. நான் ஆன்மீகத்தில் நம்பிக்கை உள்ளவன். ஆன்மீகத்தில் ஒரு பாடல் உண்டு. உபமன்யு என்ற ஒரு குழந்தை தாய்ப்பால் கேட்டு அழுததாம். உடனே பரம்பொருள் என்ன செய்தானாம் தெரியுமா? திருப்பாற்கடலையே தந்தானாம். பாலுக்குப் பாலகன் எங்கி அழுதிட பாற்கடல் ஈந்த பிரான் என்று பரம்பரைப் பெரியவர்கள் பாடி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு



1986 மார்ச் 27] [திரு. நெல்லை பாலாஜி]

புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையாக இருந்தவர்கள். பால் பருக வேண்டிய பருவத்திலேயே, பள்ளிக்குச் செல்ல வேண்டிய பருவத்திலேயே வீடு வீடாகப் பிச்சை எடுத்துச் சாப்பிட்டவன் நான் என்று துணிந்து சொன்னவர்கள். வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையை பல மாடிப்படிக் கட்டிடங்களிலே ஏறி ஏறி இறங்கி இறங்கி அனுபவித்தவன் என்று சொன்னவர்கள். பள்ளிக்குச் சென்றுவிட்டு வந்த எனக்கு ஒரு கவளம் சோறு கூட கொடுக்க முடியாமல் என் தாய் பட்ட மனவேதனையை வேறு எந்தத் தாயும் படக்கூடாது என்ற உறுதி பூண்டவர்கள். இந்தப் பாலுக்கு உள்ள வரியை, பால் உணவுக்கு உள்ள வரியை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைக்காமல், அறவே வரியிலிருந்து விலக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-45)

அடுத்தபடியாக, இழுவை வண்டிகள். இழுவை வண்டிகள் என்று சொல்லும்போது வண்டியை மனிதனும் இழுக்கிறான், மாடும் இழுக்கிறது. அப்படி உயிரினம் எல்லாம் இழுக்கின்ற இழுவை வண்டிகள் மீதான 15 சதவீதம் வரியை 9 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். மனிதனும் இழுக்கிறான், மனிதனுக்குச் சரியான பங்காக மாடும் இழுக்கிறது. மனிதனுக்கும் பத்து மாத கர்ப்பம், மாட்டுக்கும் பத்து மாத கர்ப்பம். மனிதனும் முன்னால் வண்டியை இழுக்கிறான். மாடு இழுத்தால் மனிதன் பின்னால் உட்கார்ந்து ஓட்டிக் கொண்டிருக்கிறான். ஆகவே இழுவை வண்டிகள் மீதான வரியை 9 சதவீதமாகக் குறைப்பது என்ற நிலையிலிருந்து மாற்றி இதற்கும், அறவே வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பரிசுச் சீட்டு மீதான வரி 20 சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது தேவையில்லை. காரணம், பரிசுச் சீட்டு என்பது ஏழைகள் வாங்கி நாசமாவது. சில செல்வச் சீமான்களும் பரிசுச் சீட்டை வாங்குகிறார்கள். அது வேறு சமாச்சாரம். இன்றைக்கு ஒரு பெரியவர் என்னைப் பார்த்தார். "ஏதாவது விஷயம் உண்டா?" என்றேன். "ஒரு கோடி ரூபாய்க்கு வெளி மாநில பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்பனையாகிறதாமே! அது உங்களுக்குத் தெரியுமா?" என்றார். "ஐயா, எனக்கு இந்தக் கணக்கெல்லாம் தெரியாது" என்றேன். எனக்கு ஒரு அனுபவம் உண்டு. நான் பொதுக்கூட்டங்களில் பேசுகிறவன். ஏதாவது வெளியூரில் கூட்டம் என்று புறப்பட்டுப் போனால், பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு

முன்பெல்லாம், நான் கும்பகோணம் செல்வதாக இருந்தால், என் தங்கை அங்கே வாழ்ந்து வருகிறாள், "அவளுடைய கணவனைச் சந்தித்து குடும்ப நலம் கேட்டு வருவீர்களா ?" என்று கேட்பார்கள். இப்போது எங்கே போகிறீர்கள் என்று கேட்கிறார். "தஞ்சை பொதுக் கூட்டத்திற்குப் போகிறேன்" என்பேன். "கொஞ்சம் இருங்கள்" என்கிறார். "என்ன ஐயா, ஏதாவது காணிக்கை செலுத்தவிருக்கிறீர்களா ?" என்கிறேன். "மைசூர் லாட்டரிச் சீட்டுக்கு தஞ்சை மாவட்டத்தில்தான் பரிசு விழுகிறதாம், பத்து லாட்டரிச் சீட்டு வாங்கி வரக்கூடாதா ?" என்று ஒருவர் கேட்கிறார். இப்படி ஒருவர்தான் சொல்கிறார் என்று கருத வேண்டாம். திருச்சிக்குப் போனால், திருச்சி மாவட்டத்திலே லாட்டரிச் சீட்டு வாங்கி வாருங்கள் என்று ஒவ்வொருவரும் தன் பையிலிருந்து பத்து, பதினைந்து ரூபாய் என்று கொடுக்கிறார்கள். "நான் சாப்பிட்டுவிடுவேன், பரிசுச் சீட்டை உங்களுக்குக் கொண்டுவரமாட்டேன்" என்றேன் நான். (சிரிப்பு) முன்பெல்லாம் ஏதாவது ஊருக்குப் போனால், உண்டியலில் காணிக்கையைப் போடுங்கள் என்று சொல்லும் நிலை மாறி, இப்போதெல்லாம் பரிசுச் சீட்டு வாங்கி வாருங்கள் என்று சொல்லும் உணர்வு ஒவ்வொருவருக்கும் இருந்து கொண்டிருக்கிறது. பரிசுச் சீட்டு வாங்காதவனைப் பார்த்து சிரிக்கிறார்கள். பஸ் ஸ்டாண்டில் பிச்சைக்காரனைவிட லாட்டரி சீட்டு விற்பவர்கள் ரொம்ப அதிகமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு பஸ்ஸிலும் பத்து பேர் பரிசுச் சீட்டை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு லாட்டரிச் சீட்டு விற்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் பிச்சைக்காரர்கள் குறைவாக இருக்கிறார்கள். அந்த அளவிற்கு பரிசுச் சீட்டு அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இதற்கு அரசு முதலாவதாக ஒன்றைச் செய்ய வேண்டும்.

கள்ளுக்கடை சாராயக் கடைகளில் "குடி குடியைக் கெடுக்கும்" என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. சிகரெட் அட்டைகளில் 'புகை பிடிப்பது உடலுக்குப் புண் தரும்' என்று விளம்பரம் செய்யப்பட்டிருப்பதாக ஆங்கிலம் படித்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். "Cigarette smoking is injurious to health" என்று ஆங்கிலத்தில் போட்டிருப்பதாக ஆங்கிலம் படித்தவர்கள் படித்துச் சொல்லக் கேட்டிருக்கிறேன். 'குடி குடியைக் கெடுக்கும்' என்று தமிழக அரசு விளம்பரம் செய்திருப்பதைப் போல, லாட்டரிச் சீட்டின் முன் பக்கத்திலேயும், பின் பக்கத்திலேயும்—வேறு மாநில லாட்டரிச் சீட்டுகளில் இல்லாவிட்டாலும்—தமிழக அரசு அச்சடித்து விற்கும் லாட்டரிச் சீட்டுக்களில் முதல் பக்கத்தில் "அதிருஷ்டம் அறிவைக் கெடுக்கும்" என்றும் பின்பக்கத்தில் "லாட்டரிச் சீட்டு வாங்காதே, நாசமாகாதே !" என்று தமிழக அரசே விளம்பரம் செய்ய



வேண்டும். அதற்குப் பிறகும் ஒருவன் லாட்டரிச் சீட்டு வாங்கினால் 'குடி குடியைக் கெடுக்கும்' என்று தெரிந்ததற்குப் பிறகும் குடித்து உடல் வெந்து அழிவதைப் போல் அழியட்டும். லாட்டரிச் சீட்டின் மீதான 20 சதவீத வரியை 10 சதவீத வரியாகக் குறைப்பதாக தமிழக அரசு தன்னுடைய பட்ஜெட்டில் தெரிவித்திருக்கிறது. அப்படிக் குறைக்காமல் அந்த வரியை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும். அந்தத் தொழில் நாசமாகப் போனாலும் கவலையில்லை. ஏனென்றால் தெருவெல்லாம் விற்கிறார்கள். அவர்களை "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டால், "இலட்சாதிபதி யாக இருக்கிறேன்" என்று சொல்லுகிறார்கள். என்ன இலட்சாதிபதி என்றால் "லாட்டரிச் சீட்டு விற்றுக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லக்கூடிய அளவிற்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அதிகமாக விற்கிறது. ஆகவே இதற்கு வரியைக் குறைக்க வேண்டும் என்று இல்லாமல், 50 சதவீதமாக வரியைக் கூட்ட வேண்டும்.

(பிற்பகல் 6-50)

அடுத்தபடியாக, கோழி தீவனத்தின் மீதான 5 சதவிகிதம் வரி 2 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏழைகளின் மீது அக்கறை கொண்டிருக்கின்ற அரசு, ஏழைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, உலகத்தில் எங்கெல்லாம் ஏழைகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்களோ அந்த ஏழைகளுக்காக வக்காலத்து வாங்குகின்றது. அதிலே ஒன்றுதான் ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை. எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். நானும் என் கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஈழத்து விவகாரம் 40 ஆண்டுக்காலமாக நடந்துகொண்டிருக்கின்றது. இந்த 40 ஆண்டுக் காலத்திலே ஈழத்திலே ஏதாவது உணர்வுகள் உருவாகுமானால், அந்த உணர்வுகள் தமிழ் நாட்டிற்கு வரும். தமிழ் நாட்டிலே வந்து சில இயக்கங்களின் உணர்வுகளாக மட்டுமே நிற்கும். 1974-75 வரையிலே கூட அப்படிப்பட்ட நிலைதான். ஈழத்திலே அந்த உணர்வுகள் வரும்போது, இன்றைக்கு தமிழ் நாடு அரசு அந்த உணர்வைத் தீர்க்க வேண்டும், அந்த உணர்வை மதித்தாக வேண்டும் என்பதிலே முன்னணியிலே நின்றுகொண்டிருக்கின்றது. இதற்கு முந்தைய பாரத அரசாங்கம்; பண்டித ஜவஹர்லால் நேருவோ, லால்பகதூர் சாஸ்திரியோ, பெரியவர் மொரார்ஜி தேசாயோ அவர்கள் காலங்களில் எல்லாம் ஈழம்

விவகாரம் என்றால் "அது அண்டை அரசு, அடுத்த அரசு, அண்டை நாடு, நாம் அதிலே தலையிட முடியாது" என்ற தத்துவத்தைத்தான விடுவார்கள். ஸ்ரீலங்கா விவகாரத்திற்காக முன்னால் ஆர்ப்பாட்டம், அமளி, துமளி என்பதிலேயே நாம் நின்றுகொளவோம். ஆனால் இன்றைக்கு ஈழத்து விவகாரம் என்று பார்க்கின்றபோது, நம்முடைய பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஆகட்டும், மறைந்த பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஆகட்டும், அதை அடுத்த நாட்டுப் பிரச்சினை என்று சொல்லாமல், இந்திய அரசாங்கத்தின் பிரச்சினையாகவே ஏற்றுக் கொண்டு செயல்படுகின்றார்கள். நம்முடைய மைய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையிலே இதற்கு முன்னால் ஏதாவது தீர்மானம் கொடுத்திருக்கும் என்று சொன்னால், காஷ்மீரத்துப் பிரச்சினையைப் பேசும், நம்முடைய மைய அரசாங்கம் ஏதாவது பேசியிருக்கின்றதா என்றால், கோவா பிரச்சினையைப் பற்றிப் பேசும். நம்முடைய மைய அரசாங்கம் ஏதாவது எடுத்துரைக்கும் என்று சொன்னால் சீனத்து விவகாரத்தைப் பேசும். ஆனால் இப்போது மைய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையிலே ஸ்ரீலங்கா விவகாரத்தை எடுத்துப் பேசியிருக்கிறது என்றால், மைய அரசாங்கம் இந்த அளவுக்கு ஒத்துப்போக வந்திருக்கின்றது என்றால், அது நம்முடைய அரசு மைய அரசோடு சரி சமமாக நிற்குமளவுக்குத் தொடர்பு கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்தான், இந்த மாநில அரசால்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக மைய அரசை வைத்து நம்முடைய அரசினர் பிரச்சினையைத் தீர்க்கின்றார்கள். ஆனால் மற்றவர்கள் எப்படி தீர்க்கின்றார்கள்? போஸ்ட் ஆபிசுக்கு முன்னாலே போகின்றார்கள். அங்கே போய் தமிழ் ஈழம் கொடு என்று கோஷம் போடுகின்றார்கள். அங்கேயுள்ள போஸ்ட்மேன் பார்க்கிறான். "ஐயா, அங்கே உள்ளே கார்டு இருக்கிறது, கவர் இருக்கின்றது, ஸ்டாம்ப் இருக்கின்றது, மணியார்டர் பார்ம் இருக்கின்றது, இதெல்லாம் இருக்கிறது. நீங்கள் இப்படி ஒன்று கேட்கிறீர்களே. இருக்கா என்று போஸ்ட் மாஸ்டரிடம் போய் கேட்டு விட்டு வருகிறேன்" என்கின்றான் போஸ்ட்மேன். அவர்கள் "அதெல்லாம் இங்கே கிடையாது, அது டெல்லியிலே இருந்து வரவில்லை, வந்தால் பார்க்கலாம். முதலிலே அவர்களை அனுப்பு" என்கின்றார்கள்.

சிலர் "ஸ்ரீலங்கா மீது மைய அரசாங்கம் படையெடுக்கவில்லை. நாங்கள் படையெடுத்துப் போகிறோம்" என்கிறார்கள். எந்த அளவுக்கு இருக்கின்றது பார்த்தீர்களா உணர்ச்சி. இது 20 ஆம் நூற்றாண்டு. ஆனால் சிலர் 12 ஆம் நூற்றாண்டிலேயே இருக்கின்றார்கள். நாங்கள் ஸ்ரீலங்காவிற்குப் படை



யெடுத்துப் போகிறோம் என்று சொல்லி, மதுரையிலேயிருந்து ஒரு 400 பேர்களைக் கூட்டிக்கொண்டு, ஸ்ரீலங்கா மதுரைக்குக் கிழக்கே தானே இருக்கின்றது என்று சொல்லி, மதுரைக்குக் கிழக்கே இருக்கின்ற ஸ்ரீலங்காவைப் பார்த்து படையெடுத்துப்போகிறோம் என்று சொல்லிப் போகின்றார்கள். ஒரு 500 பேர்களைக் கூட்டிக்கொண்டு போகிறார்கள். வழியில் சாப்பாடு போடுகிறார்கள். அடுத்து ராமேஸ்வரத்திற்குப் போக வேண்டும். பாம்பனிலிருந்து ரெயில் ஏறுகின்றார்கள். அதோ தெரிகிறது ஸ்ரீலங்கா என்று எதையோ கடலுக்குள்ளே காட்டுகின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் வரும்போதெல்லாம், இப்படிப்பட்ட சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுக்களை எல்லாம் நம்முடைய தமிழக அரசு சாதுரியமாக சமாளிக்கிறது. அன்றைய சட்டப்பேரவையின் தலைவராக இருந்தவர்கள், இன்று அமைச்சராக இருக்கும் திரு. ராஜாராம் அவர்களை அனுப்பி அந்தப் பிரச்சினையைத் தீர்த்து அவர்களையெல்லாம் திருப்பி அனுப்பச்சொன்னார். திரும்பிப்போகின்றவர்கள் இராமேஸ்வரத்திலேயிருந்து மண்டபம் வர ரெயில். அத்தோடு மைய அரசு ரெயிலை நிறுத்திவிடுகிறது. கடலைக் கடக்க வேண்டும். "என் கடமை முடிந்துவிட்டது. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் போங்கள்" என்று சொன்னவுடனே, நம்முடைய தமிழ் நாடு அரசு கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட பாண்டியன் போக்குவரத்துக் கழகம், பி.ஆர்.சி.-யிலே இருந்து எட்டு பஸ்கள் பிடிக்கப்பட்டு, ஒவ்வொரு பஸ்க்கும் கண்டக்டரே கிடையாது. டிக்கெட்டு எடுத்தால்தானே கண்டக்டர்? ஒவ்வொரு பஸ்-க்கும் 60, 60 பேர்கள் என்று புகுத்தி எல்லா ஊரிலேயும் பஸ்-ஐ நிறுத்தி எந்த ஊர்க்காரன் படையெடுத்து வந்தான் என்று தெரியாது, அங்கு இப்படிப்பட்ட சிறுபிள்ளைத்தனமாக காரியங்களைத் தமிழ் நாட்டிலே மற்றவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய புரட்சித் தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசாங்கத்தையே உசுப்பி விட்டிருக்கின்றார்கள். அதை பட்ஜெட்டிலேயே நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே காட்டியும் இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஏழு மணியளவில் அவையை முடிக்கலாம் என்று இருக்கின்றோம். அதனால் உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்க இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் என்று கருதுகின்றார்கள்?

**திரு. நெல்லை பாலாஜி:** இன்னும் ஒரு 15 நிமிடங்கள் கொடுத்தால் முடித்து விடுகிறேன். எல்லோரும் ஒரு மணி நேரம் பேசியிருக்கின்றார்கள்,

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நேரம் அதிகமாகக் கொடுப்பது பற்றியில்லை. ஏழு மணிக்கு முடித்துவிட்டு, இன்னொரு நாளைக்குத் தொடரலாமா அல்லது இப்போதே முடிப்பதா என்றுதான் கேட்கிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி :** வேறு நாளைக்குப் பேசுவது என்றால், ஒரு வாரம் கழித்துப் பேசுவது என்றால் கருத்துக்கள் சொல்லும் வேகம் மாறி விடும். ஆக நம்முடைய தமிழக அரசு, மாநில அரசு இன்றைக்கு மைய அரசுடன் சேர்ந்து இந்த ஈழத்து விவகாரத்தைப் பொறுத்தமட்டிலே, என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதிலே கவனத்துடன் இருக்கின்றார்கள். பாரதப் பிரதமர் அவர்கள் அரசியல் முறையில் தீர்வு காண பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

(பிற்பகல் 6-55)

இனிக் காலத்தாழ்வுக்கு இடமில்லாமல் விரைவில் பிரச்சினையைத் தீர்க்க முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியப் பிரதமரை தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது—முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கை—அது என்ன நடவடிக்கை? அதுதான் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். இது ராஜதந்திரமாக அமைந்திருக்கிற நிதிநிலை அறிக்கை. ஒரு மாநில அரசு எவ்வளவு சொல்ல முடியுமோ, எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு மட்டும் சொல்லும். அவ்வளவு மட்டும்தான் செய்யும். முறைப்படி நடவடிக்கை எடுங்கள்—இது ஒரு பொருள் புரிந்த வாசகம், ராஜ தந்திரமான வாசகம். இந்த வாசகம் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. அப்படி முறைப்படி எடுக்கும் நடவடிக்கைக்கு இந்த மாநில அரசு பூரண ஒத்துழைப்பு கொடுக்கும். அதற்காக இப்படிப்பட்ட தமிழ் ஈழ விவகாரத்தில் நிதிநிலை அறிக்கையின் மூலமாக 4½ கோடி மக்களுக்கு, தமிழ் சமுதாயத்திற்கு உணர்த்த, தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, மாவட்டப் பிரச்சினை. இதை நான் பேசியாக வேண்டும். காரணம் பெரியதொரு மாவட்டத்திலிருந்து நான் வந்திருக்கிறேன். என்னுடையது நெல்லை மாவட்டம். பொதிந்த புனல் பெருகும் தண்பொருணை கரையாறு சேர் மாவட்டம். எங்கள் மாவட்டத்திற்கு இருக்கின்ற உரிமை தமிழ் நாட்டில் வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லை. தமிழில் அதிகமான மொழி உணர்வு உள்ளவர்கள். நிறைந்த மொழிப் பற்று உள்ளவர்கள். எங்கள் நெல்லை மாவட்டம் எப்படி அமைப்பிலே இருக்கிறது என்றால், தமிழ் மொழிக்கு இருக்கக்கூடிய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தமிழன் எப்படி வாழ வேண்டும், தமிழ் நிலம் எப்படி இருந்தது





என்பதை அமைத்துத் தந்திருக்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தமிழ் மண் இருந்ததாக, தமிழ் மண் இருப்பதாக மரியாதைக்குரிய பழம் புலவர் தொல்காப்பியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். இப்படி 5 திணையும் அமைந்திருக்கிற ஒரு மாவட்டம், ஒரே மாவட்டம் நெல்லை மாவட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சில மாவட்டங்களில் 5 திணை பாகுபாடு கிடையாது. முல்லை, மருதம், நெய்தல் இருக்கும்; பாலை, குறிஞ்சி இருக்காது. 5 திணை பாகுபாடும் அமைந்துள்ள மாவட்டம் எங்கள் மாவட்டம். தமிழிலே கூறப்பட்டுள்ள தொல்காப்பியத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் அந்த மாவட்டத்தை தயவு செய்து பிரிக்க வேண்டாம். அதைப் பிரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் வ. உ. சி. அவர்களின் பெயரை எங்கு வைப்பது என்று பலர் எண்ணலாம். செக்கிழுத்த செம்மல் வ. உ. சி. அவர்களை நான் கெஞ்சித்தும் குறைத்துப் பேசுபவன் அல்ல. பாரதியார், வ. வெ. சு. ஐயர், வாஞ்சிநாதன், சுப்பிரமணிய சிவா ஆகியோரை தன் செல்வத்தால் உருவாக்கியவர் அந்த செக்கிழுத்த செம்மல் சிதம்பரம் பிள்ளை அவர்கள். புதிய மாவட்டங்கள் அமையும்போது, அவர் பெயரை எங்காவது வைக்கலாம். நெல்லை மாவட்டத்திற்கு உள்ள பெருமை, திணை பாகுபாட்டிற்கு எடுத்துக் காட்டாக இருப்பது என்பதுதான். எனவே அதைப் பிரிக்க வேண்டாம்.

அடுத்து, மாவட்டங்களின் தலைநகர் அந்த மாவட்டத்தின் மையத்திலே இருக்க வேண்டும். அப்படி இயற்கையிலே அமைந்திருப்பது எங்கள் திருநெல்வேலி மாவட்டம் ஒன்றுதான். மற்ற மாவட்டங்களில் தலைநகர் ஒரு பகுதியில் இருக்கும், மாவட்ட மக்கள் பெரும் பகுதியினர் வேறு ஒரு பகுதியில் இருப்பார்கள். திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகராகிய திருநெல்வேலி 35 மைல் சுற்றளவுக்கு மையப் பகுதியாக இருக்கிறது. இது இயற்கையிலேயே அமைந்துள்ள அம்சம். எனவே அந்த மாவட்டத்தைப் பிரிக்க வேண்டாம். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, மாவட்டங்களுக்கு தலைவர்கள் பெயர்களை வைக்கும் போது, பல தலைவர்கள் பெயர்கள் சூட்டப்படுகின்றன. பெரியார் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக கர்மவீரர் காமராசர் அவர்கள் பெயர், பசும்பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பெயர் என்று நாமகரணம்

[திரு. நெல்லை பாலாஜி] [1986 மார்ச் 27

சூட்டப்பட்டுக் கொண்டிருக்கிற இந்தத் தமிழ் நாட்டிலே தமிழனுடைய புகழை ஆன்மீகம் மூலமாக உலகமெல்லாம் பரவச் செய்தவர்கள் எத்தனையோ பேர் பிறந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசி முடிக்கும்வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

**திரு. நெல்லை பாலாஜி :** தமிழ் உணர்வை உலகம் எல்லாம் அந்தக் காலத்திலேயே பெரியவர்கள் பரப்பியிருக்கிறார்கள். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வு மற்றும் தீண்டாமையை ஒழிக்க பாடுபட்ட இராமானுஜர் போன்றவர்களுக்கு எல்லாம் அவர்கள் பெயராலே ஏதாவது மாவட்டங்களுக்கு பெயர் சூட்ட வேண்டும் என்கிற என்னுடைய ஆதங்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இல்லையென்றால் தாலுக்காவிற்காவது அவர்களுடைய பெயர்களை சூட்ட வேண்டும்.

**திரு. க. சுப்பு :** இராமானுஜர் அவர்களுடைய பெருமையை எல்லாம் சொல்லிவிட்டு அப்படிப்பட்டவர்களுடைய பெயரை தாலுக்காவிற்காவது வைக்க வேண்டுமென்று சொல்லி, கரம் தாழ்த்தி கேட்க வேண்டாம், மாவட்ட அளவிலாவது அவர்களுடைய பெயர்கள் இருக்கட்டும்.

**திரு. நெல்லை பாலாஜி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் வைணவர் என்பதை நான் அறிவேன். நான் அவர்களைத் தாழ்த்தவில்லை. அவர்கள் பெயரிலும் மாவட்டங்கள் அமைய வேண்டும் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 63 நாயன்மார்களுடைய மற்றும் 12 ஆழ்வார்களுடைய பெயர்களையும் மாவட்டங்களுக்கு சூட்ட வேண்டுமென்று சொல்கிறாரா ?

**திரு. நெல்லை பாலாஜி :** 63 நாயன்மார்கள் இருந்தார்கள் என்பது உண்மை. ஆனாலும் கூட "அடி போற்றி, தாழ்போற்றி, பதம் போற்றி" அவர்களின் திருநாமங்கள் போற்றப்படுகிற அளவுக்கு 63 நாயன்மார்களில் 4 பேர்களுடைய பெயர்தான் நாட்டுக்குத் தெரியும். இவர்களுடைய பெயர்களை நான் சொன்னதுமாதிரி மாவட்டங்களுக்கு வைத்துவிட்டு, திருநீலகண்டன் நாயனார் போன்றவர்களின் பெயர்களை வேண்டுமானால் தாலுக்காக்களுக்கு வைக்கலாம்.



1986 மார்ச் 27]

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** 63 நாயன்மார்களின் திருவிழா அண்மையில் தான் மைலாப்பூரில் நடைபெற்றது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் சொன்னதுபோல், அண்மையில்தான் 63 நாயன்மார்களின் விழா திருமயிலையில் இருக்கிற கபாலீஸ்வரர் கோயிலில் நடைபெற்றது. மேலும் அந்த ஆலயம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இவ்விழா நடைபெற்று வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு புரட்சித் தலைவர் கொள்கையை உறுப்பினர் அவர்கள் ஆதரிக்க வேண்டுமே தவிர, அதுபற்றி விளக்கம் சொல்ல முடியாது. மேலும் உறுப்பினர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்பதை நான் அவருக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நான் விளக்கம் தருகிறேன். அரசின் முடிவை நான் எதிர்க்கவில்லை. இப்படி எல்லாம் மாவட்டங்களுக்குப் பெயர்களை சூட்டுவதோடு கூட அல்லாமல், இப்படிப்பட்டவர்களுடைய பெயர்களையும் வருங்காலத்தில் மாவட்டங்களுக்குப் பெயர் சூட்டும்போது சூட்டலாம் என்கிற ஆலோசனையைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நாட்டு மக்களுக்கு மகத்தான தொண்டு புரிவதன் மூலம் அவர்களுடைய மனதை விட்டு நீங்கா இடத்தைப் பெற்றார்கள் என்றால், அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் வந்தால், நான் அப்போது சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தால், அவசியம் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களுடைய பெயரால் மாவட்டம் அமைய வேண்டுமென்ற உணர்வைத் தெரிவிப்பேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவருக்குப் பிறகும் நீங்கள் இருப்பீர்கள் என்று சொல்கிறீர்கள். அப்படித்தானே. (சிரிப்பு).

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** என் காலத்திற்குப் பிறகும் உறுப்பினர் இருந்தார் என்றால், என் பெயரையும் அதுபோல் செய்ய பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. நெல்லை பாலாஜி :** இப்போதே மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அதற்கான உத்தரவாதத்தை எனக்குத் தந்திருப்பதற்கு நன்றி. பெரியவர்கள் பெயர்களை எல்லாம் மாவட்டங்களுக்கு சூட்டிக் கொண்டிருப்பதால் நான் சொல்லிய பெரியவர்கள் பெயரிலும் மாவட்டங்களின் பெயர்கள் வருங்காலத்தில் அமைய வேண்டுமென்ற உணர்வை வெளிப்படுத்துகிறேன்.

அடுத்து, மதுவிலக்கு சில காலமாக தமிழ் நாட்டிலே இருந்து வருகிறது. ஆனால் எல்லோருமா குடிக்கிறார்கள் என்றால் இல்லை. இப்போதும் நான் சொல்வேன் குடிக்காதவர்களுடைய எண்ணிக்கைதான் அதிகம். சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு குடிக்காதவன் இருக்கிறான், எந்தக் காலத்திலும் குடிக்காதவன், பிறந்த வாழ்வாங்கு வாழ்ந்து குடிக்காதவன், நிறை வாழ்வு வாழ்பவன், தமிழ் பெண்டிர் இவர்கள் எல்லாம் பூரணமாக மதுவை குடிக்காமல், பூரணமாக மதுவிலக்கை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கண்டதை எல்லாம் குடித்து குட்டிச்சுவர் ஆகாமலிருக்க இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் கூட என்னிடம் தானாகவே 'ஜாரிகானா' என்றோ என்னவோ பெயரில் பீடா இருப்பதாகவும் அதைப் போட்டால் தட்டுத் தடுமாற்றம் தானாகவே ஏற்படுமென்றும் சொல்வதாகக் குறிப்பிட்டார். ஆக, போதை என்பது எந்த அளவுக்கு என்பதல்ல பிரச்சினை.

**திரு. க. சுப்பு:** மதுவுக்கு மாற்றுப் பொருளாக இருக்கலாம் அது (சிரிப்பு).

**திரு. நெல்லை பாலாஜி:** ஏதோ பெயரில் பீடாவின் பெயரை அவர்கள் சொன்னார்கள். அதற்கு தமிழில் என்ன பெயர் என்று எனக்குத் தெரி

(பிற்பகல் 7-05)

யாது. அதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். போதை எந்த அளவுக்குப் போகிறது என்பதற்காகச் சொல்கிறேன். மதுவிலக்கு மீண்டும் வரவேண்டுமென்பதை மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். மீண்டும் வர வேண்டும். இது திருவள்ளுவர் பிறந்த தெய்வ மண். குடிக்கக் கூடாது என்று சொன்னவர் அவர். திருவள்ளுவர் படம் இல்லாத இடமே இல்லை. பேருந்துகளிலும், சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் பிற இடங்களிலும் திருவள்ளுவரின் படம் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் உளப்பூர்வமாகக் குடிப்பதில்லை. குடித்துக் 'கொல்கிறவர்கள்' என்பவர்கள் வேறு, எவனும் குடிக்கக் கூடாது என்று அரசு சட்டம் கொண்டுவர வேண்டும். மதுவிலக்குப்பற்றி நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மதுவிலக்கு கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மதுவிலக்கைக் கொண்டுவரும்போது, மகாத்மா காந்தி பிறந்த நாளிலேயிருந்து கொண்டுவர வேண்டுமென்று விரும்பக்கூடிய காங்கிரஸ் தோழர்களும், அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலேயிருந்து கொண்டு வரவேண்டுமென்று சொல்கிற உணர்வுள்ளவர்களும் இந்த நாட்டிலேதான்





வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த உணர்வு எல்லோருக்கும் இல்லை. திருவள்ளுவர் பிறந்த பூமி இது. அவர் பிறந்த தினத்திலிருந்து மதுவிலக்குக் கொள்கையை தீவிரமாகக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வரும்போது, ஒன்றை மட்டும் இந்த அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். பர்மிட் வாங்கிக் குடிப்பவர்களுக்கும் பர்மிட் கொடுக்கக் கூடாது. அவர்கள் வசதி படைத்தவர்கள், பொருளாதார வசதி படைத்தவர்கள் எப்படியாவது யாராவது ஒரு டாக்டரிடம் போய், குடித்தால்தான் இவரால் நடக்க முடியும். குடித்தால்தான் தூங்க முடியும் என்று கடிதம் தரவேண்டுமென்று கேட்டு, டாக்டரிடம் சன்னத்து வாங்கி பர்மிட் வைத்துக்கொண்டு குடிப்பார்கள். ஆனால் அவர்களுடைய நண்பர்களுக்குக் கிடைக்காது. ஆனால் அப்படிக் குடிப்பவர்களே, கம்பெனியை 'கீப்' பண்ணுவோம் என்று குடிப்பார்கள். என்னிடமே அப்படிச் சொன்னவர்கள் உண்டு.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** துணைத் தலைவர் அவர்களே, அரசு அறிவித்திருப்பது, கள், சாராயத்திற்கு மட்டும்தான் என்பதை திரு. நெல்லை பாலாஜி அவர்களுக்கு தகவலுக்காகச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. நெல்லை பாலாஜி:** நான் அதைத் தெரிந்துதான் பேசுகிறேன். கள்ளும் சாராயமும் மட்டும் குடிக்கக் கூடாது என்று சொன்னால், கற்புடைய விபச்சாரம் என்றுதான் கருதப்படும். எனவே அப்படி இருக்கக்கூடாது. பரிபூரண மதுவிலக்கு இருக்க வேண்டும். இந்தத் தமிழ் மண்ணிலே திருத்தணி முதல் கன்னியாகுமரி, திருவிதாங்கூர் வரையிலும் நம்மிடம் எந்த விதத்திலும் எந்த ஒரு போதைப் பொருளும் இருக்கக்கூடாது, எவனும் உட்கொள்ளக் கூடாது என்று இருக்க வேண்டும். நான் குடிக்காவிட்டால் இறந்துபடலாம் என்று சொன்னால், நீங்கள் இறந்துபடலாம், இருக்கிற தலைமுறையாவது நிம்மதியாக இருக்கும் என்று சொல்லி, பர்மிட்டே வழங்க மாட்டோம் என்று கூறி சம்பூரண போதை விலக்குக் கொண்டு வந்து தமிழ் நாட்டை மேலும் முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்ல வேண்டுமென்று விழைந்து, நேரம் கருதி, இது வரை பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 2—4—1986 புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 7-08)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

86. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

87. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

88. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை (1985-86) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 27-3-1986 அன்று பேரவையில் நிறைவேறுவதற்கும் அங்கிருந்து மேலவைக்கு வருவதற்கும் உட்பட்டது.

இணைப்பு—

(106ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் இதில் தக்க பரித்துறைகள் அனுப்பியுள்ளார்.

2. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளரது வேண்டுகோள் குறித்து அரசு கல்வித்துறையிடமும், நிதித்துறையிடமும் கலந்தாலோசித்து தீவிரமாக பரிசீலித்து வருகின்றது. தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உதவி பேராசிரியர்களின் ஊதிய நிர்ணயம் குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.



## இணைப்பு II.

107 ஆம் பக்கத்தில் (இனம் 4(1) க்கான அடிக்குறிப்பைக் காண்க).

*L. A. Bill No. 28 of 1986.*

*(As passed by the Assembly)*

*A Bill to provide for the withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for the services of a part of the financial year commencing on the 1st April 1986.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1986.

2. *Withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for a part of the financial year commencing on the 1st April 1986.*—The State Government may withdraw from and out of the Consolidated Fund of the State sums not exceeding eight hundred and fifty-four crores seventy eight lakhs and thirteen thousand rupees, being moneys required to meet—

(*a*) the grants made in advance by the Tamil Nadu Legislative Assembly for a part of the financial year commencing on the 1st April 1986 as set forth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for the same part of the same financial year, as set forth in column (4) of the Schedule.

3. *Appropriation.*—The sums authorized to be withdrawn from and out of the Consolidated Fund by this Act shall be appropriated for the services and purposes expressed in the Schedule in relation to the said year.

THE SCHEDULE.

| Demand number. | Services and purposes. | Sums not exceeding — Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department .. | 4,71,80,000 | .. | 4,71,80,000 |
| 2 | State Excise Department .. | 1,31,61,000 | .. | 1,31,61,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. .. | 87,22,000 | .. | 87,22,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 4 | General Sales Tax and other Taxes and Duties—Administration .. .. | 4,24,80,000 | 3,000 | 4,24,83,000 |
| 5 | Stamps—Administration .. | 29,90,000 | .. | 29,90,000 |
| 6 | Registration .. .. .. | 1,87,91,000 | 1,000 | 1,87,92,000 |
| | *Debt Charges* .. .. | .. | 46,31,29,000 | 46,31,29,000 |
| 7 | State Legislature .. .. | 45,32,000 | 1,09,000 | 46,41,000 |
| 8 | Elections .. .. .. | 14,47,000 | .. | 14,47,000 |
| 9 | Head of State, Ministers and Head-quarters Staff .. | 8,74,73,000 | 51,08,000 | 9,25,81,000 |
| 10 | Milk Supply Schemes .. | 45,47,000 | .. | 45,47,000 |
| 11 | District Administration .. | 10,87,09,000 | 17,000 | 10,87,26,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. | 98,05,000 | 6,000 | 98,11,000 |
| 13 | Administration of Justice .. | 4,06,64,000 | 47,20,000 | 4,53,84,000 |
| 14 | Jails .. .. .. .. | 2,64,99,000 | 1,000 | 2,65,00,000 |
| 15 | Police .. .. .. .. | 26,55,88,000 | 25,000 | 26,56,13,000 |
| 16 | Fire Services .. .. .. | 2,08,52,000 | 1,000 | 2,08,53,000 |
| 17 | Education .. .. .. | 1,37,66,60,000 | 2,000 | 1,37,66,62,000 |
| 18 | Medical .. .. .. | 32,49,68,000 | .. | 32,49,68,000 |
| 19 | Public Health .. .. | 17,12,59,000 | .. | 17,12,59,000 |
| 20 | Agriculture .. .. .. | 28,89,20,000 | 2,000 | 28,89,22,000 |
| 21 | Fisheries .. .. .. | 1,53,03,000 | 3,000 | 1,53,06,000 |
| 22 | Animal Husbandry .. .. | 7,40,67,000 | 1,000 | 7,40,68,000 |
| 23 | Co-operation .. .. | 3,73,43,000 | .. | 3,73,43,000 |
| 24 | Industries .. .. .. | 85,94,000 | .. | 85,94,000 |
| 25 | Cinchona .. .. .. | 97,07,000 | .. | 97,07,000 |
| 26 | Handlooms and Textiles .. | 4,84,11,000 | .. | 4,84,11,000 |
| 27 | Khadi .. .. .. .. | 82,68,000 | .. | 82,68,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. | 44,33,15,000 | 1,000 | 44,33,16,000 |
| 29 | Labour including Factories .. | 3,62,52,000 | .. | 362,52,000 |
| 30 | Social Welfare .. .. | 19,01,06,000 | .. | 19,01,06,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc .. | 11,97,36,000 | 1,000 | 11,97,37,000 |



| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. .. | 3,22,40,000 | 1,000 | 3,22,41,000 |
| 33 | Housing .. .. .. | 7,97,94,000 | .. | 7,97,94,000 |
| 34 | Urban Development .. | 10,00,71,000 | .. | 10,00,71,000 |
| 35 | Civil Supplies .. .. | 36,30,86,000 | 1,000 | 36,30,87,000 |
| 36 | Irrigation .. .. .. | 16,21,58,000 | 3,000 | 16,21,61,000 |
| 37 | Public Works—Buildings .. | 1,01,13,000 | 13,000 | 1,01,26,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant. .. | 5,69,66,000 | .. | 5,69,66,000 |
| 39 | Roads and Bridges .. .. | 22,09,22,000 | .. | 22,09,22,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. | 1,29,61,000 | 1,000 | 1,29,62,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. .. .. | 10,17,000 | 2,18,75,000 | 2,28,92,000 |
| 42 | Pensions and other Retirement Benefits .. .. | 18,73,71,000 | 34,52,000 | 19,08,23,000 |
| 43 | Miscellaneous .. .. | 26,10,48,000 | 3,43,000 | 26,13,91,000 |
| 44 | Stationery and Printing .. | 4,73,99,000 | 60,000 | 4,74,59,000 |
| 45 | Forest Department .. .. | 3,74,62,000 | 1,000 | 3,74,63,000 |
| 46 | Compensation and Assignments .. .. .. | 6,85,89,000 | 5,63,000 | 6,91,52,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 76,93,000 | .. | 76,93,000 |
| 48 | Rural Industries .. .. | 2,94,63,000 | .. | 2,94,63,000 |
| 49 | Water Supply .. .. | 31,78,49,000 | .. | 31,78,49,000 |
| 50 | Capital Outlay on Agriculture. | 57,03,000 | 1,000 | 57,04,000 |
| 51 | Capital Outlay on Industrial Development .. .. | 3,41,29,000 | 1,000 | 3,41,30,000 |
| 52 | Capital Outlay on Irrigation. | 15,97,28,000 | .. | 15,97,28,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings .. | 10,59,55,000 | 1,01,000 | 10,60,56,000 |
| 54 | Capital Outlay on Roads and Bridges .. .. | 6,35,91,000 | 1,000 | 6,35,92,000 |
| 55 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. .. | 72,21,000 | .. | 72,21,000 |
| 56 | Capital Outlay on Forests .. | 4,54,03,000 | .. | 4,54,03,000 |
| 57 | Capital Outlay on Rural Industries .. .. .. | 40,75,000 | 1,000 | 40,76,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 4 | General Sales Tax and other Taxes and Duties—Administration .. .. | 4,24,80,000 | 3,000 | 4,24,83,000 |
| 5 | Stamps—Administration .. | 29,90,000 | .. | 29,90,000 |
| 6 | Registration .. .. .. | 1,87,91,000 | 1,000 | 1,87,92,000 |
| | *Debt Charges* .. .. | .. | 46,31,29,000 | 46,31,29,000 |
| 7 | State Legislature .. .. | 45,32,000 | 1,09,000 | 46,41,000 |
| 8 | Elections .. .. .. | 14,47,000 | .. | 14,47,000 |
| 9 | Head of State, Ministers and Head-quarters Staff .. | 8,74,73,000 | 51,08,000 | 9,25,81,000 |
| 10 | Milk Supply Schemes .. | 45,47,000 | .. | 45,47,000 |
| 11 | District Administration .. | 10,87,09,000 | 17,000 | 10,87,26,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. | 98,05,000 | 6,000 | 98,11,000 |
| 13 | Administration of Justice .. | 4,06,64,000 | 47,20,000 | 4,53,84,000 |
| 14 | Jails .. .. .. .. | 2,64,99,000 | 1,000 | 2,65,00,000 |
| 15 | Police .. .. .. .. | 26,55,88,000 | 25,000 | 26,56,13,000 |
| 16 | Fire Services .. .. .. | 2,08,52,000 | 1,000 | 2,08,53,000 |
| 17 | Education .. .. .. | 1,37,66,60,000 | 2,000 | 1,37,66,62,000 |
| 18 | Medical .. .. .. | 32,49,68,000 | .. | 32,49,68,000 |
| 19 | Public Health .. .. | 17,12,59,000 | .. | 17,12,59,000 |
| 20 | Agriculture .. .. .. | 28,89,20,000 | 2,000 | 28,89,22,000 |
| 21 | Fisheries .. .. .. | 1,53,03,000 | 3,000 | 1,53,06,000 |
| 22 | Animal Husbandry .. .. | 7,40,67,000 | 1,000 | 7,40,68,000 |
| 23 | Co-operation .. .. | 3,73,43,000 | .. | 3,73,43,000 |
| 24 | Industries .. .. .. | 85,94,000 | .. | 85,94,000 |
| 25 | Cinchona .. .. .. | 97,07,000 | .. | 97,07,000 |
| 26 | Handlooms and Textiles .. | 4,84,11,000 | .. | 4,84,11,000 |
| 27 | Khadi .. .. .. .. | 82,68,000 | .. | 82,68,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. .. | 44,33,15,000 | 1,000 | 44,33,16,000 |
| 29 | Labour including Factories .. | 3,62,52,000 | .. | 362,52,000 |
| 30 | Social Welfare .. .. | 19,01,06,000 | .. | 19,01,06,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc .. | 11,97,36,000 | 1,000 | 11,97,37,000 |



| Demand number. | Services and purposes. | Sums not exceeding | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. .. | 3,22,40,000 | 1,000 | 3,22,41,000 |
| 33 | Housing .. .. .. | 7,97,94,000 | .. | 7,97,94,000 |
| 34 | Urban Development .. | 10,00,71,000 | .. | 10,00,71,000 |
| 35 | Civil Supplies .. .. | 36,30,86,000 | 1,000 | 36,30,87,000 |
| 36 | Irrigation .. .. .. | 16,21,58,000 | 3,000 | 16,21,61,000 |
| 37 | Public Works—Buildings .. | 1,01,13,000 | 13,000 | 1,01,26,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant. .. | 5,69,66,000 | .. | 5,69,66,000 |
| 39 | Roads and Bridges .. .. | 22,09,22,000 | .. | 22,09,22,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. | 1,29,61,000 | 1,000 | 1,29,62,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. .. .. | 10,17,000 | 2,18,75,000 | 2,28,92,000 |
| 42 | Pensions and other Retirement Benefits .. .. | 18,73,71,000 | 34,52,000 | 19,08,23,000 |
| 43 | Miscellaneous .. .. | 26,10,48,000 | 3,43,000 | 26,13,91,000 |
| 44 | Stationery and Printing .. | 4,73,99,000 | 60,000 | 4,74,59,000 |
| 45 | Forest Department .. .. | 3,74,62,000 | 1,000 | 3,74,63,000 |
| 46 | Compensation and Assignments .. .. .. | 6,85,89,000 | 5,63,000 | 6,91,52,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 76,93,000 | .. | 76,93,000 |
| 48 | Rural Industries .. .. | 2,94,63,000 | .. | 2,94,63,000 |
| 49 | Water Supply .. .. | 31,78,49,000 | .. | 31,78,49,000 |
| 50 | Capital Outlay on Agriculture. | 57,03,000 | 1,000 | 57,04,000 |
| 51 | Capital Outlay on Industrial Development .. .. | 3,41,29,000 | 1,000 | 3,41,30,000 |
| 52 | Capital Outlay on Irrigation. | 15,97,28,000 | .. | 15,97,28,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings .. | 10,59,55,000 | 1,01,000 | 10,60,56,000 |
| 54 | Capital Outlay on Roads and Bridges .. .. | 6,35,91,000 | 1,000 | 6,35,92,000 |
| 55 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. .. | 72,21,000 | .. | 72,21,000 |
| 56 | Capital Outlay on Forests .. | 4,54,03,000 | .. | 4,54,03,000 |
| 57 | Capital Outlay on Rural Industries .. .. .. | 40,75,000 | 1,000 | 40,76,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 58 | Miscellaneous Capital Outlay. | 2,01,02,000 | 1,000 | 2,01,03,000 |
| 59 | Loans and Advances by the State Government .. | 1,00,30,73,000 | .. | 1,00,30,73,000 |
| | *Public Debt—Repayment* .. | .. | 74,67,33,000 | 74,67,33,000 |
| | GRAND TOTAL .. | 7,30,15,31,000 | 1,24,62,82,000 | 8,54,78,13,000 |

I certify that this is a Money Bill.

Fort. St. George,
Madras,
27-3-1986.

P. H. PANDIAN,
*Speaker,*
Tamil Nadu Legislative Assembly.

இணைப்பு III.

(108 ஆம் பக்கத்தில் இனம் 4(2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

*L. A. Bill No. 29 of 1986.*

(*As passed by the Assembly*)

*A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April* 1985.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 3) Act, 1986.

2. *Supplementary Appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April* 1985.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1985, a further sum not exceeding four hundred and thirty-six crores forty-nine lakhs and eighty-five thousand rupees, being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the supplementary expenditure *charged* on the Consolidated Fund of the State for the period, as set forth in column (4) of the Schedule.





THE SCHEDULE.

(*See* section 2.)

| Demand number. | Services and purposes. | Sums not exceeding | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department. | 2,11,50,000 | .. | 2,11,50,000 |
| 2 | State Excise Department | 65,89,000 | .. | 65,89,000 |
| 3 | Motor Vehicles Acts Administration .. | 31,72,000 | .. | 31,72,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. .. | 4,06,98,000 | .. | 4,06,98,000 |
| 5 | Stamps—Administration | 7,33,000 | .. | 7,33,000 |
| 6 | Registration . .. | 93,31,000 | .. | 93,31,000 |
| | *Debt Charges* | .. | 6,07,45,000 | 6,07,45,000 |
| 7 | State Legislature .. | 21,88,000 | 2,20,000 | 24,08,000 |
| 8 | Elections .. .. | 75,80,000 | .. | 75,80,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. | 6,36,68,000 | 42,46,000 | 6,79,14,000 |
| 10 | Milk Supply Schemes .. | 30,68,000 | .. | 30,68,000 |
| 11 | District Administration | 12,40,21,000 | 97,000 | 12,41,18,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. .. .. | 54,43,000 | 5,000 | 54,48,000 |
| 13 | Administration of Justice | 2,16,70,000 | 35,66,000 | 2,52,36,000 |
| 14 | Jails .. .. .. | 4,05,33,000 | .. | 4,05,33,000 |

| Demand Number. | Services and purposes. | Sums not exceeding | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 15 | Police .. .. | 12,77,20,000 | 1,53,000 | 12,78,73,000 |
| 16 | Fire Services .. | 20,95,000 | .. | 20,95,000 |
| 17 | Education .. .. | 1,09,46,21,000 | .. | 1,09,46,21,000 |
| 18 | Medical .. .. | 15,47,71,000 | .. | 15,47,71,000 |
| 19 | Public Health .. | 1,76,03,000 | .. | 1,76,03,000 |
| 20 | Agriculture .. .. | 17,36,35,000 | .. | 17,36,35,000 |
| 21 | Fisheries .. .. | 20,75,000 | .. | 20,75,000 |
| 22 | Animal Husbandry .. | 30,07,000 | .. | 30,07,000 |
| 23 | Co-operation .. | 4,36,59,000 | .. | 4,36,59,000 |
| 24 | Industries .. .. | 7,04,18,000 | .. | 7,04,18,000 |
| 5 | Cinchona .. | 54,49,000 | .. | 54,49,000 |
| 26 | Handlooms and Textiles | 15,55,43,000 | .. | 15,55,43,000 |
| 27 | Khadi .. .. | 1,05,64,000 | .. | 1,05,64,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. .. | 1,000 | .. | 1,000 |
| 29 | Labour including Factories | 1,09,35,000 | .. | 1,09,35,00 |
| 30 | Social Welfare .. .. | 37,57,000 | .. | 37,57,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 6,77,61,000 | 34,10,000 | 7,11,71,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. .. | 25,81,000 | .. | 25,81,000 |
| 33 | Housing .. .. | 2,04,35,000 | .. | 2,04,35,000 |
| 34 | Urban Development .. | 28,56,43,000 | .. | 28,56,43,000 |
| 35 | Civil Supplies .. .. | 2,89,99,000 | 1,000 | 2,90,00,000 |
| 36 | Irrigation .. .. .. | 6,32,18,000 | .. | 6,32,18,000 |
| 37 | Public Works—Buildings .. | 94,55,000 | 27,84,000 | 1,22,39,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant .. | 3,50,78,000 | .. | 3,50,78,000 |
| 39 | Roads and Bridges .. | 4,45,20,000 | .. | 4,45,20,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. .. | 99,77,000 | 60,000 | 1,00,37,000 |
| 41 | Relief on Account of Natural Calamities .. | 47,24,000 | .. | 47,24,000 |
| 42 | Pensions and other Retirement Benefits .. .. | 22,89,72,000 | 33,01,000 | 23,22,73,000 |
| 43 | Miscellaneous .. .. | 1,000 | 14,62,000 | 14,63,000 |
| 44 | Stationery and Printing .. | 2,29,87,000 | .. | 2,29,87,000 |
| 45 | Forest Department .. | 1,20,70,000 | .. | 1,20,70,000 |
| 46 | Compensation and Assignments .. .. .. | 59,74,000 | .. | 59,74,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. | 81,21,000 | . | 81,21,000 |
| 48 | Rural Industries .. | 1,39,08,000 | .. | 1,39,08,000 |
| 49 | Water-Supply | 2,000 | | 2,000 |
| 50 | Capital Outlay on Agriculture | 81,97,000 | | 81,97,000 |
| 51 | Capital Outlay on Industrial Development .. | 69,67,000 | .. | 69,67,000 |
| 52 | Capital Outlay on Irrigation. .. | 3,97,05,000 | | 3,97,05,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings .. | 3,000 | .. | 3,000 |
| 54 | Capital Outlay on Roads and Bridges | 3,70,000 | .. | 3,70,000 |
| 55 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. | 2,74,25,000 | .. | 2,74,25,000 |
| 56 | Capital Outlay on Forests | 2,000 | .. | 2,000 |
| 57 | Capital Outlay on Rural Industries .. .. | 34,92,000 | .. | 34,92,000 |
| 58 | Miscellaneous Capital Outlay | 13,56,06,000 | .. | 13,56,06,000 |
| 59 | Loans and Advances by the State Government. | 97,30,45,000 | .. | 97,30,45,000 |
| | **GRAND TOTAL ..** | **4,28,49,35,000** | 8,00,50,000 | **4,36,49,85,000** |

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
27-3-1986

P. H. PANDIAN,
*Speaker.*
Tamil Nadu Legislative Assembly.

14 3545
D
V2.11,32 'NRG
N86.222.1-2